செம்மொழித் தமிழ்

அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–1

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்



முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி I

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-768-9 (Vol-1)

தனிப்பிரதி விலை ரூ. 520/–
(தொகுதி-1)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

“**எ**த்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா!” என்று வியந்து பாடி மகிழ்ந்தான், இருபதாம் நூற்றாண்டு எழுச்சிக் கவிஞன், பாரதி!

ஆம்! உலகெங்கும், உற்று நோக்கும் பொருளெங்கும் இன்பங்கள் கோடி கோடியாய்த் ததும்பி வழிகின்றன!

மலரிலும் வான்வெளியிலும் நிலவிலும் நீள்கடலிலும் சிறுபுல்லிலும் சிறகடித்துப் பறந்து செல்லும் வண்ணத்துப் பூச்சியிலும் எத்துணை இன்பங்கள் பொங்கி வழிகின்றன!

அவ்வின்பங்கள் யாவும் யாருக்கு?

மனிதருக்கு! மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும்!

❖ ❖ ❖

மாலை நேரம். கடற்கரையோரம். காலாற நடந்து செல்கிறோம்.

அலையோடு தவழ்ந்து, மெதுவாய் வந்து மேனியை வருடுகிறது, கடற்காற்று.

உடனே நாம், ‘ஆகா! என்ன சுகம்! எவ்வளவு பேரின்பம்!’ எனக் கூறி, இனமறியா இன்பத்தில் மனம் முற்றும் மகிழ்ந்து திளைக்கிறோம்.

காற்று அளித்த இப்பேரின்பத்தினை எதன்மூலம் பெற்றோம்?

வாயின் வழியிலா? மூக்கின் மூலமா? கண் வழியிலா? செவியின் வழியிலா? அல்ல, அல்ல!

‘மெய்’ என்னும் புலன்மூலம்!

மேலும் நடக்கிறோம்.

பகலவன் தன் அன்றைய பயணத்தை முடித்துக்கொண்டு மேலைத்திசையில் மெல்லச் சாய்கிறான். அப்போது அவன் எண்ணற்ற வண்ணங்களை வாரி இறைத்து மேற்குத்திசையை ஓர் ஓவியக்கூடமாக்கிக்கொண்டிருக்கிறான். அவற்றைக் காணும் நம் உள்ளத்தில் இன்பம் கரை புரண்டு ஓடுகிறது. வைத்த கண் பெயர்க்காமல் நமை மறந்து பார்த்து மகிழ்கிறோம்.

வண்ணக்கலவைகள் எத்தனை, எத்தனை! நொடியில் மாறும் காட்சிகள்தாம் எத்தனை!

வியப்பிலும் இன்பத்திலும் இவ்வாறு நம்மை ஆழ்த்திய புலன் எது? மெய்யா, மூக்கா, செவியா, வாயா? இவற்றுள் எதுவும் அன்று. 'கண்' என்னும் புலனே ஆகும்!

மேலும் நடக்கிறோம். அப்பொழுது பூ விற்கும் பெண் ஒருத்தி, வண்ணமலர் பலவற்றைக் கூடையில் இட்டு, வாகாய்க் கைவீசி வந்துகொண்டிருக்கிறாள். நம்மருகில் வந்ததும், அவள், 'பூ வேண்டுமா, ஐயா!' எனக் கேட்டவாறு தன் தலையில் உள்ள கூடையை இறக்கி, அதில் உள்ள பூக்களை நம் கண்ணில் படுமாறு காட்டுகிறாள்.

ஆகா! பூக்கூடையா அன்றிச் சிறு பூஞ்சோலையா என நாம் மதிமயங்கும்வண்ணம் அக்கூடையில் மல்லிகை ஒரு புறம், முல்லை மறுபுறம், சம்பங்கி இன்னொரு புறம், தாழம்பூ நடுப்புறம் என அழகுற அமர்ந்து மணத்தைச் சிதறிக் கொண்டிருக்கின்றன. அந்த மணம் நம் சிந்தையை மயக்கி இன்பத்தில் மூழ்கச்செய்கிறது.

இப்படி மலர்களின் மணத்தோடு நம்மைப் பிணிக்கச் செய்தது எது? மெய்யா, வாயா, கண்ணா, செவியா? இவை அல்லவே அல்ல.

'மூக்கு' என்னும் புலனே ஆகும்.

மேலும் சற்று நடக்கிறோம்.

எங்கிருந்தோ ஓர் இனிய பாடலைக் காற்றுச் சுமந்து வருகிறது.

அப்பாடலைக் கேட்டதும், உடலெங்கும் ஒருவித உணர்வு பொங்கி, உள்ளத்தில் இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்கிறது.

சுருங்கச் சொல்வதென்றால், அப்பாட்டோடு இணைந்து நம் உடல் கரைந்துவிடுகிறது எனலாம்.

இவ்வாறு அவ்வினிய பாட்டோடு பிணித்துப் பேரின்பம் கொள்ளச் செய்தது எது?

மெய்யா, வாயா, கண்ணா, மூக்கா? அல்ல!

செவிப்புலனே ஆகும்.

வீட்டிற்கு வருகிறோம். வீட்டினுள் நுழைந்ததும் நறுமணம் கமழும் அறுசுவை உணவுகள் நம்மை ஈர்க்கின்றன.

அருமை மனைவி ஆக்கிப் படைத்த அறுசுவை உணவுகள் ஆவி பரக்க வைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டதும் எச்சில் ஊற்றெடுக்கிறது. பேராவலோடு உணவுகளை எடுத்து வைத்து, வாயிலிட்டுச் சுவைத்து உண்டு பெருமகிழ்வு கொள்கிறோம்.

இங்கு உணவுச்சுவையோடு ஒன்றிணைந்து ஒப்பிலா இன்பத்தைப் பெறச்செய்தது எது?

மெய்யா, கண்ணா, மூக்கா, செவியா?

இவற்றுள் எதுவும் அன்று.

வாய் என்னும் கருவியே ஆகும்.

இவ்வாறு ஒரு பொருளிலுள்ள இன்பத்தை மனிதன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களுள் ஒன்றன்மூலம் மட்டுமே இன்பம் துய்க்க இயலும்.

ஆனால், ஒரே ஒரு பொருளில் மட்டும் தன் ஐம்புலன்களை ஒருசேரச் செலுத்திப் பேரின்பம் பெற இயலும்.

அதுதான், பெண்ணோடு காதலுறவு கொண்டு பெறுகின்ற காம இன்பமாகும்.

அதனால்தான் வள்ளுவர்,

> “கண்டுகேட்டு உண்(டு)உயிர்த்து உற்(று)அறியும் ஐம்புலனும்
> ஒண்தொடி கண்ணே உள”

என்றார்.

உலகிலுள்ள இன்பங்கள் எல்லாவற்றினும் மேலானது காம இன்பமேயாகும்.

பெற்றோர் கொண்ட காம உறவால்தான் பிள்ளைகள் பிறந்தனர். அப்பிள்ளைகள் கொள்ளும் காம உறவால்தான் அவர்களுக்குப் பிள்ளைகள் பிறப்பர்.

இது சுற்றிச் சுழன்று வரும் இயற்கை நியதி.

அக்காம உறவை அருவருப்போடு கண்டு முகம் சுளிப்பதும் தவறு; அருவருப்புக் கொள்ளுமளவுக்குக் கொச்சைப்படுத்திப் பேசுவதும் தவறு.

புனிதமான இவ்வுறவை நளினமாகக் கையாள வேண்டும்.

அவ்வாறே காமம் நல்கும் காதலுறவைப் புனிதமாய்க் கருதி, நயத்தக்க நாகரிகத்தோடு எழுதப்பட்டவையே, சங்க இலக்கிய அகப்பாடல்கள்.

இச்சங்க அகப்பாடல்களையே சிலம்பொலி நூல்களாய்த் தொகுத்து அளித்துள்ளார்.

இப்போது இங்கு ஒரு வினா எழும்.

'ஏற்கெனவே, சங்க அக இலக்கியப்பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, நாலைந்திணை, இன்னிலை, கைந்நிலை என்னும் பெயரில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அம்முறையிலே 'சிலம்பொலி'யும் தொகுத்துத் தருவதால் என்ன பயன்?' என்னும் ஐயம் எழலாம்.

சங்க அக இலக்கியப்பாடல்கள் நற்றிணை முதலான நூல்களில் தொகுத்துத் தரப்பட்டுள்ள முறை வேறு; சிலம்பொலி இந்நூலில் தொகுத்துத் தந்துள்ள முறை வேறு.

சங்க அக இலக்கியப்பாடல்கள் யாவும் அகத்துறையைச் சார்ந்தவையாகும். அந்த அகத்துறைக்கென்று ஒரு வரிசை முறை உள்ளது. அந்த வரிசை முறையில் அமைந்தால்தான், அப்பாடல்கள் நாடகப்பாங்கோடு அமைந்து இலக்கியப் பேரின்பத்தை நல்கும். பெருமழைப்புலவர் திரு. பொ.வே. சோமசுந்தரனார், 'அகநானூறு' என்னும் நூலுக்கு அளித்த

முன்னுரையில் "அகப்பொருட்செய்யுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடகத்துணுக்கு" என்கிறார்.

துணுக்குத்துணுக்காய் அமைந்த அகப்பாடல்கள் யாவற்றை யும் தொகுத்து, "தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் எதிர்பாராது சந்தித்தல், காதல் கொள்ளுதல், குறித்த ஓர் இடத்தில் பிறர் அறியாதவாறு சந்தித்து இன்பம் துய்த்தல், அவர் உறவை ஊரார் அறிந்து பழி கூறல், அதனால் பிறர் அறியா வண்ணம் தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துச் செல்லல், அங்கு அவளை அவன் ஊரறிய மணமுடித்து இல்லறம் நடத்துதல்," எனக் காட்சி வரிசைப்படுத்திப் படிப்போர்க்குக் காட்சியின்பம் நல்கும் ஒரு நாடகம் நிகழ்வது போன்ற ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளார், சிலம்பொலி.

பண்டு தொகுக்கப்பட்டுள்ள அகநூல்கள் இவ்வாறாகவா நாடகப் பாங்கோடு காட்சி வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன?

எடுத்துக்காட்டாய், 'நற்றிணை' என்னும் அகப்பாடல் நூல் தொகுக்கப்பட்டுள்ள முறையைக் காண்போம்.

இந்நூலின் முதல் பாடல், தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து செல்லவிருப்பதைத் தலைவி தன் தோழியிடம் கூறுவதாய் அமைந்துள்ளது.

இரண்டாவது பாடல், பிறர் அறியாவாறு தலைவியைத் தலைவன் தன்னூருக்கு அழைத்துச் செல்லும் வழியில், அவர்களைக் காண்போர் கூறும் காட்சியினைக் கொண்டதாய் உள்ளது.

மூன்றாவது பாடலோ, பொருள் தேடும்பொருட்டுப் பிரியக் கருதிய தலைவன் தன் நெஞ்சத்தை நோக்கிக் கூறும் காட்சியினைக் கொண்டதாய் உள்ளது.

1, 2, 3 என வரிசைப்படுத்தப்பட்டுள்ள இப்பாடல்களுக் கிடையே காட்சி இயைபு ஏதேனும் இருக்கிறதா? இல்லை அன்றோ!

முறை பிறழ்ந்து வரிசைப்படுத்தப்பட்டுள்ள போக்கைக் களையும் நோக்கில் சிலம்பொலி, சங்க அகப்பாடல்கள்

யாவற்றையும் தொகுத்து, நாடகப்பாங்கோடு துறைவாரியாக ஒழுங்குபடுத்தி, இந்தப் புதிய அகத்துறைப் பேழையை உருவாக்கி யுள்ளார். அவற்றோடு செம்மொழி இலக்கிய அகத்துறை என்பதால் திருக்குறள் காமத்துப்பால், சிலப்பதிகாரம், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார்நாற்பது, நாலடியார் போன்றுள்ள நூல்களையும் இணைத்து

எத்தனை பாடல்களை அவர் இவ்வாறு தொகுத்துள்ளார்?

ஒன்று, பத்து, நூறு அல்ல! 2,586 பாடல்களை!

ஏறத்தாழ 400 துறைகளை (நிகழ்ச்சிகளை) உள்ளடக்கிய பாடல்களைத் துறைவாரியாய்த் தொகுத்து, நாடகப்பாங்கோடு இந்நூலை அமைத்திடுதல் என்பது என்ன எளிய செயலா?

எளிய செயலன்று!

ஆனால், சிலம்பொலி செய்திருக்கிறாரே!

ஆம்! ‘செயற்கரிய செய்வர் பெரியர்!’ என்கிறார், வள்ளுவர்.

அரிய இச்செயலை ஆற்ற அவருக்கு உதவியாய் இருந்தோர் எத்தனை பேர்?

எவருமிலர்!

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி.

இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது?

நாம் திகைத்து நிற்கையில் ‘குறுந்தொகை’ (3) நமக்குக் கை கொடுக்கிறது.

“நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்று.”

சிலம்பொலியின் இந்நூல் எவரெவருக்குப் பயன்படும்?

ஊரின் நடுவே உள்ள பயன்மரத்தில் பழங்கள் பழுத்திருந்தால் எவரெவருக்குப் பயன்படும்?

ஊரிலுள்ளார் எல்லாருக்கும் பயன்படும்.

அதுபோல, சிலம்பொலியின் இந்தச் செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம் கற்றுத்துறைபோகிய பேராசிரியப் பெருமக்களுக்கும், கல்லூரியில் கால்தடம் பதிக்கும் புதிய தலைமுறையினருக்கும், ஆர்வத்தால் தமிழ்க்கடலில் மூழ்கி முத்தெடுக்க முனைவோர்க்கும் உறுதுணையாய் இருந்து உதவும்.

❖ ❖ ❖

பெரும்பாலும், இன்றைய இளைஞர்கள் சங்க இலக்கியப் பாடல்களைப் படித்திடத் தயங்குகின்றனர். காரணம், அவை 'பல்லுடைக்கும் பண்டித நடையில்' அமைந்துள்ளன என்கின்றனர்.

அஃதாவது, உண்பதற்கேற்ப, உரித்து எடுக்கப்பட்ட பலாச்சுளைகள் வரிசையாய் ஒரு தட்டில் வைக்கப்பட்டது போல அன்றி, சங்கப்பாடல்களில் உள்ள சொற்கள் புணரியல் முறையில் ஒன்றோடு ஒன்று இணைந்து அமைந்திருப்பதால் அப்பாடல்களைச் சரளமாய்ப் படித்திட இயலவில்லை என்கின்றனர்.

உண்மைதான். பண்டைய பாடல்களில் உள்ள சொற்கள் கண்ணி கண்ணியாய் இணைக்கப்பட்டுள்ள சங்கிலிபோல், புணரியல் முறையில் பிணைந்துள்ளன. அத்தகைய பாடல் களைத் தமிழ் இலக்கணம் நன்கு கற்றவர்களால்தாம் எளிதில் பிரித்துப் படிக்க இயலும்.

இதற்கு எடுத்துக்காட்டாய் 'திணைமாலை நூற்றைம்பது' என்னும் நூலில் உள்ள ஒரு பாடலைக் (127) காண்போம்.

> "மென்கட் கலிவய லூரன்றன் மெய்ம்மையை
> யெங்கட் குரையா யெழுந்துபோ – யிங்கட்
> குலங்கார மென்றனுகான் கூடுங்கூர்த் தென்றே
> யலங்கார நல்லார்க் கறை"

நான்கே அடி கொண்ட இப்பாடலைப் படிக்கவே இன்றைய மாணவர்கள் தடுமாறுவர் என்றால், நான்கடிகளுக்கு மேற்பட்ட

பிற சங்கப் பாடல்களைப் படிக்க எப்படி முன் வருவர்? வர மாட்டார்கள் என்பதை நன்குணர்ந்த சிலம்பொலி, தம் நூலிலுள்ள அகப்பாடல்களைச் சொற்பிணைப்பை நீக்கித் தந்துள்ளார். மேற்குறித்த 'திணைமாலை நூற்றைம்பது' என்னும் நூலில் உள்ள பாடலை (127) எவ்வாறு அவர் தந்துள்ளார் என்று பாருங்கள்.

> "மென்கண் கலிவயல் ஊரன்தன் மெய்ம்மையை
> எங்கட்(கு) உரையாய் எழுந்துபோய் – இங்கண்
> குலங்காரம் என்(று)அணுகான் கூடும்கூர்த்(து) என்றே
> அலங்கார நல்லார்க்கு அறை."

இவ்வாறு சொற்களைப் பிரித்துப் படிப்பதற்கு எளிமையாக்கி, அதே சமயம், சீர் அமைப்பு முறையும் சிதையாவண்ணம் அமைத்துள்ளார், சிலம்பொலி.

இனி, அடுத்து வரும் ஓர் இடர்ப்பாடு, 'பொருள் விளங்காச் சொற்கள்' ஆகும். இந்த இடர்ப்பாட்டையும் 'சிலம்பொலி' எவ்வாறு விலக்குகிறார் என அறிவோம்.

சங்க இலக்கிய அகத்துறை நூல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்தவையாகும். அவற்றில் உள்ள பல சொற்களுக்கான பொருள்கள் காலவோட்டத்தில் கரைந்து விட்டனபோலும்! அதனால் அச்சொற்கள் எப்பொருள்களில் கையாளப்பட்டுள்ளன என அறிய இயலாது திகைத்து நிற்க வேண்டியுள்ளது.

'ஆம்' என்னும் சொல் 'நீர்' என்னும் பொருளில் கையாளப் பட்டுள்ளது. இன்று நாம் 'உணவு' எனக் குறிப்பிடுவதை அன்று 'வல்சி' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பொருள் அறிய இயலாத இத்தகைய பழஞ்சொற்கள் பல, பாடலின் பொருளை அறிய இயலாதவாறு தடுத்து நிறுத்துகின்றன.

இந்தத் தடையைத் தகர்க்கும் நோக்கில், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், 'சொற்பொருள்' என்னும் தலைப்பில், அந்தந்தப் பாடலில் இடம் பெறும் பொருள் விளங்காச் சொற்களைத்

தொகுத்து, அவற்றிற்கு எல்லாரும் புரிந்துகொள்ளும் வகையில் பொருள் விளக்கம் தந்துள்ளார், சிலம்பொலி.

அச் 'சொற்பொருள்' விளக்கத்தை ஒரு முறை படித்துவிட்டுப் பாடலைப் படித்தால் 'ஓரளவிற்கு'ப் பாட்டின் பொருளை அறிய இயலும்!

ஓரளவிற்குத்தான் அறிய இயலுமா?

ஆம், ஓரளவிற்குத்தான்!

ஏன்?

சங்கத்தமிழ் அகப்பாடல்களில் மிகுந்த அளவில் 'குறிப்புப் பொருள்' பயன்படுத்தப்படுகின்றது. அதனைப் புரிந்து கொண்டால்தான் பாடலின் முழுப் பொருளையும் அறிய இயலும்.

குறிப்புப் பொருள் என்றால் என்ன?

குறிப்புப் பொருள் இரு வகைப்படும். அவை உள்ளுறை உவமம், இறைச்சி ஆகும்.

'உள்ளுறை உவமம்' என்பது யாது?

"கவிஞன் உள்ளுறை உவமையை அமைக்கும்போது, அந்தந்த நாட்டிலுள்ள கருப்பொருள்களைக் கூறும்முகத்தான் அதனை அமைப்பான். கேட்போருக்கு அப்பொருள்களின் தன்மைகளை வெளிப்படையாக எடுத்து வருணித்துச் சொல்வதுபோல் இருக்கும். ஆனால், அப்படிச் சொல்லும்போது வருணனையின் **உள்ளே அடிப்படையாக வேறு ஒரு கருத்து உறைந்திருக்கும்.** *வருணனையில் வரும் பொருள்கள் அவற்றுக்கு ஒப்பான வேறு ஒரு கருத்தை அறிவதற்குப் பயன்படும் உவமைபோல் இருக்கும்" என விளக்கம் தருகிறார், திரு. ந. சுப்பு ரெட்டியார் அவர்கள், தம் 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்னும் நூலில் (பக். 220).*

புரிகிறதா? புரியவில்லை எனில் மேற்கொண்டு படியுங்கள், தெளிவு பிறக்கும்.

தலைவன் ஒருவன், ஊரறிய மணந்த தன் தலைவியைப் பிரிந்து பரத்தையரோடு இழிவான ஒழுக்கத்தை மேற்கொண்டுள்ளான். அதனால் வருந்திய தலைவி, தன் தலைவனின் நிலையை,

"செங்கண் கருங்கோட்(டு) எருமை சிறுகனையால்
அம்கண் கழனிப் பழனம்பாய்ந்(து) – அம்கண்
குவளையம் பூவொடு செங்கயல்மீன் சூடித்
தவளையும்மேற் கொண்டு வரும்"

என்று வருணித்துக் கூறுகிறாள். (திணைமாலை நூற்றைம்பது - 147).

இப்பாட்டில் குறிப்பிடப்படும் எருமை, சேறு நிறைந்த நீர்நிலையில் ஆடியது. அதனால் அதன் உடலில் சேறு படிந்தது. அது தன் கொம்புகளால் சேற்றினைக் குத்தியதால், அச்சேற்று நீரில் பூத்த குவளையும், அந்நீரில் வாழும் மீனும் குத்துப்பட்டுக் கொம்புகளில் மாட்டிக்கொண்டன. சேற்றுநீரில் வாழும் தவளையோ, எருமையின் முதுகிலே ஏறிக்கொண்டது. அந்நிலை யில் அவ்வெருமை எழுந்து நடக்கத் தொடங்கியது.

உடல் முழுதும் சேறு; கொம்பிலோ குவளைப் பூவும் மீனும்; முதுகிலோ தவளை! இத்தோற்றத்தில் காட்சியளிக்கும் எருமையைக் காணும் மக்கள் அருவருப்புக் கொள்வரா, ஆவலோடு பார்ப்பரா? அருவருப்புக் கொள்வர்.

ஆனால், அதே எருமை, சேறில்லாக் குளத்தில் இறங்கி நீராடியிருந்தால் அதன்மீது அருவருப்பை ஏற்படுத்தும் சேறோ குவளைப்பூவோ மீனோ தவளையோ படிந்திட வாய்ப்பில்லை. அன்றோ?

தூய்மையான நீர்நிலையில் இறங்கி நீராடிடாது, சேறு நிரம்பிய நீர்நிலையில் இறங்கி எருமை நீராடியதால் அஃது அருவருப்பான காட்சியினைப் பெற்றது.

அதுபோலத் தலைவன், குலமகளான தலைவியோடு கூடி மகிழாது, பலரும் உறவு கொள்ளும் பரத்தையினை நாடியதால் அவன் ஊரார் பழிப்புக்கு ஆளானான் என்னும் கருத்துப் பெறப் படுகிறது.

இப்பொழுது இவ்வருணனையின் உட்பொருள் விளங்கு கிறது அன்றோ!

ஆம்; தலைவி கூறும் வருணனைமூலம், எருமையாகிய தலைவன், கரும்பாகிய தலைவியை விலக்கிவிட்டு, குவளைப்பூ, மீன், தவளை ஆகியவையாகிய பரத்தையரோடு வாழ்கிறான் என்னும் உவமேயப் பொருளைப் பெறுகிறோம்.

இனி, மற்றொரு குறிப்புப் பொருளான இறைச்சியைப்பற்றி அறிவோம்.

'இறு' என்பதன் பொருள் 'தங்குதல்' ஆகும். அந்த 'இறு' என்னும் சொல்லின் அடியிற்பிறந்தது 'இறைச்சி' என்பதாகும் என்று விளக்கம் தருகிறார், புலவர் திரு. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள்.

இந்த இறைச்சி, உள்ளுறை உவமத்தினைவிட நுட்பமானது.

இறைச்சி என்பது யாது என இனி அறிவோம்.

"சொற்களின் பொருள் வழியாகச் சொற்றொடரின் (வாக்கியத்தின்) பொருள் தோன்றும். அதுபோல, சொற் பொருளின் வாசக அடியாய்க் குறிப்புப் பொருள் தோன்றும். அஃதாவது, விளக்கினால் பிற பொருள் தோன்றுவதுபோலச் சொற்பொருளால் வேறு பொருள் தோன்றும்" என்கிறார், திரு. ந. சுப்புரெட்டியார் அவர்கள், தம் 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்னும் நூலில் (பக். 236).

இங்கே ஒரு சிறு விளக்கம் பெறுவோம்.

'ஒரு சிங்கம் வருகிறது' என்று சொன்னால் அச்சொற் றொடரின் பொருள் யாது?

காட்டில் வாழ்கின்ற மிருகமாகிய சிங்கம் வருகிறது என்பதாம். ஆனால், இளைஞன் ஒருவன் வருவதை 'ஒரு சிங்கம் வருகிறது' என்று குறிப்பிட்டால் அதன் பொருள் யாது?

சிங்கம் போன்ற வலிமை கொண்ட ஒருவன் வருகிறான் என்பது அதன் பொருள் ஆகும்.

முதலில் கூறப்பட்ட 'ஒரு சிங்கம் வருகிறது' என்னும் சொற்றொடரில், அச்சொற்றொடரில் உள்ள 'ஒரு', 'சிங்கம்',

'வருகிறது' ஆகிய சொற்கள் மூன்றும் சேர்ந்து ஒரு பொருளைத் தருகின்றன.

ஆனால், ஒருவனைப் பார்த்து, 'ஒரு சிங்கம் வருகிறது' என்னும்போது அச்சொற்றொடரிலுள்ள மூன்று சொற்களும் சேர்ந்து வேறு பொருளைத் தரவில்லை, **அச்சொற்றொடரின் பொருளே வேறு பொருளைத் தருகிறது. இதுபோல் அமைவதே இறைச்சியாகும்.**

இனி, இறைச்சிப் பொருள் அமைந்த அகப்பாடலின் ஒரு பகுதியைக் காண்போம்.

தலைவன், தலைவி ஆகிய இருவரும் எதிர்பாரா வகையில் ஒருவரையொருவர் சந்தித்து, ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்கின்றனர். பின், தலைவிக்குத் தோழியாய் உள்ள ஒருத்தி மூலம், இரவில் குறித்த இடத்தில் சந்தித்து, தலைவியும் தலைவனும் களவின்பம் பெற்று மகிழ்கின்றனர்.

நாள்கள் பல கழிகின்றன. தலைவனோ களவின்பம் பெறுவதிலே கருத்தாய் உள்ளானே அன்றித் தலைவியை ஊரறியத் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்த விரும்புகிறவனாய்த் தோன்றவில்லை. 'இனியும் நாள் கடத்தாதே; என்னை மணந்துகொள்' என்று தலைவனிடம் தலைவி கேட்பது முறையன்று. எனவே, அவள் வருந்தி வாடுகிறாள். தலைவியின் நிலையறிந்த தோழி, மறுநாள் இரவில் தலைவியைச் சந்திக்க வந்த தலைவனிடம் 'இனி நீ தலைவியைச் சந்திக்க, இன்னல்கள் பல நேர வாய்ப்புள்ள இரவுப்போதில் வரவேண்டா. நாளைமுதல் பகலில் வந்து தலைவியைச் சந்திப்பாயாக!' என்கிறாள். பகலில் எவ்விடத்தில் சந்திப்பது? அதை, (அகநானூறு - 18)

"................................ எம் படப்பைக்
கொடுந்தேன் இழைத்த கோடுஉயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பின்காந்தளம் பொதும்பில்
பகல்நீ வரினும் புணர்குவை"

என்று குறிப்பிடுகிறாள், தோழி.

அஃதாவது, "எம் வீட்டுத் தோட்டத்தை அடுத்து ஒரு மலையுள்ளது. அங்குத் தேனீக்கள் தேன்கூட்டினைக் கட்டியிருக்கும். அத்தேனினைப் பெறப் பகலில் பலர் வருவர். மரங்களில் பழங்கள் பழுத்துத் தொங்கும். அவற்றைப் பறிக்கப் பலர் வருவர். வாசமிகு வண்ண மலர்கள் எங்கும் பூத்துக் குலுங்கும். அவற்றைக் கொய்யப் பலரும் வருவர். இவ்வாறு பலரும் வந்து செல்லும் அம்மலையில் காந்தள் புதர் ஒன்று உள்ளது. அவ்விடத்திற்குப் பகற்போதில் நீ வந்தால் தலைவியைச் சந்தித்து மகிழலாம்!" என்கிறாள்.

'ஈதென்ன, தோழி இவ்வாறு உரைக்கிறாளே!'

இன்னல் பல நேரும் என்பதால் தலைவனை இரவுப்போதில் வாராதே என்றாள், தோழி. அஃது ஏற்புடைத்து. ஆனால், பழம் பறிக்கவும், தேன் எடுக்கவும், பூக்கொய்யவும் பலரும் வரும் மலைப்பகுதிக்குத் தலைவியைச் சந்திக்கப் பகலில் வா என்கிறாளே! அவள் கூறியபடி வந்து பகலில் தலைவியைச் சந்தித்தால், மலைக்கு வருவோர், அவர்கள் களவு மணத்தை அறிய நேருமே! அச்செய்தி ஊரெங்கும் பரவி அவர்களுக்குப் பழியினை உண்டாக்கிவிடுமே!

இதனை நன்கு உணர்ந்த தலைவன் தலைவியைச் சந்திக்கப் பகலில் வர எப்படி விரும்புவான்?

இரவிலும் சந்திக்க இயலாது, பகலிலும் சந்திக்க இயலாது எனில், இனித் தலைவன் தலைவியைச் சந்தித்து இன்பம் துய்க்க வழி ஏது?

ஒரே ஒரு வழிதான் உள்ளது!

அது -

இதுவரை பிறர் அறியாவண்ணம் களவின்பத்தை நுகர்ந்து காலத்தைக் கடத்தி வந்த தலைவன், உற்றாரும் பெற்றோரும் உவந்து மனம் களிக்கும்வண்ணம், ஊரறிய மணம் முடித்து, ஒப்பில்லா இல்லறத்தைத் தலைவியோடு நடத்துதலேயாகும்.

இதுதான் தோழியின் நோக்கமாகும். அதனால்தான் அவள், தலைவன் பகலிலும் சந்திக்க இயலாத ஒரு சூழலைச் சுட்டிக்

காட்டி, அதன்மூலம் தலைவனை, ‘இனி நாம் இரவிலும் பகலிலும் தலைவியைச் சந்திக்க இயலாது; அவளை மணந்து கொள்வதன் வழியேதான் நாம் மகிழ்ந்து இன்பம் பெறக் கூடும்’ என உணரச்செய்கிறாள்.

தோழியின் கூற்றாய் அமைந்துள்ள இப்பாடல் எத்துணை நுட்பமாய் நாடகப் பாங்கோடு அமைந்துள்ளது!

இதுபோன்று கலை நுட்பத்தோடும் அறிவு நுட்பத்தோடும் அமைந்த பாடல்கள் பற்பலவாய்ப் பரந்துள்ளன. கணுத்தோறும் இனிக்கும் கரும்பாய் அவை திகட்டாது இனிக்கும்.

அந்த இன்பத்தை எல்லோரும் பெற வேண்டும் என்னும் நோக்கில்தான் சிலம்பொலி இந்நூலை ஆக்கியுள்ளார்.

சிலம்பொலியின் இந்நூல்

தமிழறிவைத் தழைத்திடச் செய்யும்.

பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும்.

ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும்.

மாணவர்க்கு மாங்கனியாகும்.

ஆசிரியருக்கு உரை நூல் ஆகும்.

இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று,

“பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில்
பிறந்தத னால்மிகச் சிறந்தவன் நான்என்று”

மகிழ்ந்திட வேண்டுகிறேன்.

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

உலக இலக்கியங்களில் இரு பாடுபொருள்களே சிறப்பு வாய்ந்தவை. ஒன்று காதல், மற்றொன்று வீரம் என்று ஹோமர் குறிப்பிடுவர். அவை இரண்டுமே சிறப்பு வாய்ந்தவை என்பதோடு முதன்மை வாய்ந்தவையுமாகும். வாழ்க்கைக்குக் காதலே அடிப்படை என்று உளவியல் தந்தை சிக்மெண்ட் பிராய்டு சுட்டிக்காட்டுவர். உலகப் பேரிலக்கியங்களான காப்பியங்களில் அறமே அடிப்படையாக இருப்பினும், காதலும் வீரமுமே காப்பியத்தை இயக்கிச் செல்வதை உலகக் காப்பிய மரபில் காணலாம்.

காதல் இல்லாத இலக்கியமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அதன் பெருமை உணரக்கிடக்கிறது. அது பேரண்டத்தையும் வளைக்கக்கூடியது; உலக உயிர்களைத் தளிர்ப்பிக்கச் செய்வது; யாரிடத்தும் அனுமதிச்சீட்டு இல்லாமல் நெஞ்சில் நுழைந்து நேயவிளையாட்டையும் மாயக் கூத்தையும் நிகழ்த்துவிப்பது; அன்பின் வயமாவது.

இப்படிக் காதலுக்குரிய சிறப்பைத் தமிழ் மொழி அகம் என்றே கண்டது. தமிழ் இலக்கியத்தில் - குறிப்பாகச் சங்க இலக்கியத்தில் - செம்பாகத்திற்கு மேலாகக் காதலே பாடுபொருளாக இருந்துள்ளது. காதலைக்கூட அறமாகக் கொண்டாடியது தமிழிலக்கியம். மனம் சார்ந்த அதனை அகம் என்றது, தமிழ் இலக்கணம். அச்சொல்லால் சுட்டியிருப்பது மிகவும் பொருத்தப் பாடுடையது. அகம் என்பதற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் உளவியலை உட்படுத்தியே அதற்குப் பொருள் கண்டனர். காதல்

இனியது; தூயது; மனத்தைப் பக்குவப்படுத்தவல்லது என்ற உளவியல் அடிப்படையிலேயே அதற்கு விளக்கம் கண்டனர்.

தமிழில் அகத்திணைக் கோட்பாடு ஆழமானது. தமிழில் அமைந்திருப்பதுபோல, அதன் நுட்பத்தை உலக இலக்கியங் களில் காண்பதரிது. தமிழ்க்காதல் தற்சாரா நிலையில் (impersonal) உலகப் பொதுநோக்கை (universal outlook) அடிப்படையாகக் கொண்டது. தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம் அகப்பொருளுக்கே கூடுதலான இயலை வரைச்சட்டமாக (treatise) வகுத்துள்ளது. அந்நூல் வழியே அகப்பொருளுக்குரிய பொருண்மைகளைச் செவ்வியல் இலக்கியம் உள்வாங்கிக்கொண்டது.

அகப்பொருள் மரபில் கைகோள் என்பது களவும் கற்புமாகும். களவின்றிக் கற்பு அமையாது. களவியலில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப்பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு முதலியன இடம்பெறும். கற்பியலில் பரத்தையிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, போர்வயிற் பிரிவு முதலானவை இடம்பெறும். இவை செவ்வியல் இலக்கியத்தின் காதல் நாடகம். இந்த நாடகத்தை அகப்பொருள் நாடகம் என்றே நவிலலாம். இந்தக் களவும் கற்பும் அக நாடகத்தின் அரங்கேற்றக் களம். இந்நாடகத்தைக் கூற்று வழியே திறம்பட நடத்தும் கதைமாந்தராகத் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலானோர் விளங்குவர். செவ்வியல் இலக்கியத்தின் பெருமையும் செழுமையும் அகப்பொருள் சுவைகளில்தாம் செறிந்துகிடக்கின்றன.

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது

இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். அகப்பொருள் இலக்கணத்தை நூலின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தி, யாவரும் மிகவும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் தந்திருப்பது போற்றுதற்குரியது.

இந்நூல், கூற்று, கூற்று விளக்கம், தெளிவுரை, கருத்து, விளக்கம், குறிப்பு, சொற்பொருள் விளக்கம் போன்றவற்றை நிரலாகக் கொண்ட கட்டமைப்புடையது. அகத்திணைக்குரிய நிகழ்வுகளைத் தொல்காப்பிய வழிநின்று விளக்கியுள்ளார். இயற்கைப் புணர்ச்சி தொடங்கிப் பரத்தையிற்பிரிவு ஈறாக, பதினான்கு தொகுதிகளில் இந்நூலினை உருவாக்க முனைந்திருப்பது நூலாசிரியரின் தமிழ்க்காதலின்பத்தினைக் காட்டுகிறது. 'பேசுதற்கே தேமதுரத் தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ?' என்ற பாவேந்தரின் கூற்று நினைவுக்கு வருகிறது.

ஆங்கில இலக்கியத்தில் எஃ.டி. பால்கிரேவ் (Francis Turner Palgrave) என்பவர் தொகுத்த Golden Treasury of English Songs and Lyrics என்ற நூல் உலகப் புகழ்பெற்ற நூலாகும். ஆங்கிலத்தில் சிறந்த கவிஞர்களின் கவிதைகள் அதில் இடம் பெற்றுள்ளன. அந்நூல் சில தொகுதிகளைக் கொண்டது. அதுபோல் சிலம்பொலியாரும் செவ்வியல் இலக்கியத்தின் அகப்பொருளை மட்டும் தொகுத்துப் பதினான்கு தொகுதிகளாகப் படைத்தளித்திருக்கிறார்.

செவ்வியல் இலக்கியத்தில் காணப்படும் அகத்திணைக் கூறுகளை நுட்பமாக ஆழ்ந்தும் ஆய்ந்தும் படைத்தளித்துள்ள நூலாசிரியர், காட்சியை முதலாக வைத்தே தொடங்குகிறார். காட்சியை வழங்குவது கண்ணன்றோ? காதலுக்கு அதுதானே நுழைவாயில். கண் நடத்தும் - நிகழ்த்தும் நாடகம்தானே காதல். காட்சியை வழங்கும் கண்ணும் கண்வழிச் செல்லும் மனமும் இணைந்து செயற்படும்போது காதல், விழி திறக்கும்; மனம், வழி வகுக்கும். எனவே, கண்ணை முதலாவதாகச் சொல்லித் தொடங்கியிருப்பது எண்ணி மகிழக்கூடியது. கொல்லவரும் படையாய், கூற்றுவனாய், கண்டார் உயிர் உண்பதாய், கொடும் புருவம் நடுங்கஞர் தருவதாய், ஒண்ணுதற்கு உடைவதாய், காதல்

நோய்க்குக் கண்கண்ட மருந்தாவதாய் விளங்கவல்லது, காதலால் கனல் பாய்ச்சும் கண்கள் அல்லவா! வில்லியம் பாஸ்கல் (William Baskal) என்பவர் குறிப்பிடுவார், உலகில் கொடுங்கோன்மை களுள் கொடுங்கோன்மையானவை பெண்ணின் கண்கள் என்று (The most tyranny in the world is the tyranny of an young woman's eyes). 'கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்பது பாவேந்தரியம். அந்த அளவிற்குக் காதலில் சிறப்பிடம் பெறுவது கண்ணாகும்.

தலைவனின் பார்வை தலைவி பக்கம் செல்ல அஃது இன்பமும் துன்பமும் விளைவிக்கக்கூடிய கூற்றுக்குரிய பாடல் 'கண்ணோ? பிணையோ?' என்று தொடங்கும் குறட்பாவாகும். இதற்குரிய விளக்கத்தை நூலாசிரியர்,

> வருந்தி நிற்கும் தன்மையால் கூற்றமும், அன்பு நோக்கினால் கண்ணும், மருண்ட பார்வையால் மானும் ஆகிய மூவகை இயல்புகளும் அவள் பார்வையில் படிந்துள்ளன

என நயவுரையால் விளக்குவர்.

தலைவன் தலைவியை ஐயுற்று நோக்கும் பாடலான 'அணங்குகொல் ஆய்மகள் கொல்' என்று வரும் குறட்பாவிற் குரிய விளக்கமாக,

> அழகொழுக நிற்கும் உருவத்தைக் கண்டவுடன் அணங்கோ என்றான்; பிறகு சாயலைப் பார்த்து மயிலோ என்றான். அதன் பின் கண்ணிமைத்தல், புன்னகை புரிதல் முதலிய செயல்நலம் கண்டு மானிடப்பெண்ணோ என மயங்கி நின்றான்

என எழுதிச் செல்கிறார், நூலாசிரியர்.

'நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்' என்று வரும் குறட்பாத் தொடருக்கு, 'பார்வைக்குப் பார்வை செலுத்தினாள் என்பதால் அவள் அவனைப் புறக்கணிக்கவில்லை என்பது தெளிவாகிறது' எனக் குறிப்பிட்டிருப்பது கருத்தாழம் மிக்கது. இங்குப் பொருள் மயக்கம் இல்லாத புலமை நயத்தை ஆசிரியர்பால் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும்

'கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதி' என வரும் பாடலில், தலைவியின் முக அழகைக் கண்டு தலைவன் 'வானத்து முழுமதி மண்ணில் வந்து நிற்கிறதோ' என வியக்கிறான். இப்பாடலின் நயத்தைப் பின்வருமாறு சுட்டுகிறார், ஆசிரியர்.

> முகத்தைத் திங்கள் என்கிறான். திங்கள் வானத்திலிருந்து பாம்புக்கு அஞ்சி மண்ணுலகிற்கு இறங்கிவந்துவிட்டதாம். பாம்புகள் தெரிந்துகொள்ளாமல் இருப்பதற்காகவே கயலையும், வில்லையும், முகிலையும் முறையே கண்களாகவும், புருவங்களாகவும், கூந்தலாகவும் எழுதிக்கொண்டதாம்

என உரைத்திருப்பது அழகிய நுட்பம் செறிந்த சொல்லோவியம்.

'கடாஅக் களிற்றின்மேல்' என்று தொடங்கும் குறட்பாவின் குறிப்புரையில்,

> பாகன் தவிர வேறு எவரும் யானையின் முகபடாத்தைத் தொட முடியாதது போலக் காதலன் தவிர வேறு எவரும் காதலியின் முலைக் கச்சினைத் தொட முடியாது என்னும் குறிப்புடையது

எனச் சொல்லியிருப்பதை அறிந்து சுவைத்து இன்புறலாம்.

இலக்கியத்தில் கள்ளும் காமமும் இணைத்தே பேசப்படுவன வாகும். இரண்டுமே மயக்கம் தருவனவெனினும் இரண்டும் ஒன்றாகிவிடா. கள் விற்கும் இடத்தைப் பார்த்த மாத்திரத்தில் நெஞ்சில் மகிழ்ச்சி தோன்றிவிடாது. காண்பதால் உள்ளம் களிகொள்ளாது. உண்டால் மட்டுமே அது மயக்கவின்பம் தரும். பையில் பணம் இருந்தால்தான் கள்பற்றிய அவ்வெண்ணம் வரும். காமம் அப்படிப்பட்டதன்று. மெய்யில் மனம் நினைத்த மாத்திரத்திலேயே மகிழ்ச்சி தரும். நினைத்தாலே இனிப்பது அது. எனவே, கள்ளைவிடக் காமமே இனிது. எனவேதான் 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்லை காமத்திற்கு உண்டு' என்று திருவள்ளுவர் குறிக்கலானார்.

'தலைமகன், தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது' என வரும் குறட்பாவின் கூற்றுப்பற்றி எண்ணிய நூலாசிரியர், அப்பாடலுக்குரிய விளக்கத்தைப் பின்வருமாறு விளக்குவர். 'மது, உண்ட பிறகே மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால்,

காமமோ காதலியைக் கண்ட அளவிலேயே மகிழ்ச்சியைத் தருகிறது' என்று சொல்லிவிட்டு, 'தன்னை அவள் நோக்கிய தாலும், நோக்கிய பின்னரும் நின்றிருந்தமையாலும் தலைவி விரும்புகிறாள் என்பதைத் தலைவன் உணர்ந்துகொண்டான்' என எழுதிச் செல்வது அழகிய குறிப்பு.

தலைவன் தன்னைவிட்டு எங்கே பிரிந்துவிடுவானோ என்று எண்ணிய தலைவி பிரிவச்சம் கொள்ளத் தலைவன் வன்புறையாகக் கூறிய குறுந்தொகைப் பாடல் ஒன்று, 'குவளை நாறும் குவையிருங்கூந்தல்' என்று தொடங்கும். இப்பாவின் இறுதி ஈரடிகள் 'கடல்சூழ் மண்டிலம் பெறினும், விடல் சூழலனால் நின்னொடு நட்பே!' என முடியும். இதன் கருத்துரை யில் 'கடல் சூழ்ந்த இவ்வுலகையே நான் பெறுவதாய் இருந் தாலும் உன்னைக் கைவிடேன்' என்று பொருள் விளக்கி யிருப்பதை அன்டனியும் கிளியோபாட்ராவும் என்ற நாடகத்தில் அன்டனி கிளியோபாட்ராவிடம், 'ரோம் நகரை டைபர் நதியே மூழ்கடித்தாலும் நான் உன்னைக் கைவிடேன்' (Let Rome in Tiber melt; I will not leave thee) *என்று கூறுவதோடு ஒப்புநோக்கத்தக்கது.*

இக்குறுந்தொகைப் பாடலுக்குரிய குறிப்புரையாக ஆசிரியர்,

> அன்னம் தனக்குத் தகுந்த வெண்மணல் குவியலை விரும்பி அங்கேயே உறைவது போன்று, நானும் உன்னிடத்திலேயே தங்கியிருப்பேன் என்னும் குறிப்புப் பொருள் கொள்ளலாம்

எனச் சுட்டிக்காட்டியிருப்பது பொருள் பொதிந்த விளக்கமாகும்.

குறுந்தொகைப் பாடல் எண் 70, தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லியதாக வரும் கூற்றாகும். இதற்குரிய குறிப்பினை இந்நூலாசிரியர் அணுகியிருப்பதைப் பின்வருமாறு காணலாம்.

> இயற்கைப் புணர்ச்சியில் தலைவியோடு அளவளாவிப் பிரியும் தலைவன் தலைவியின் உருவையும் பண்பையும் எண்ணி இன்பமடைந்து அவள் அழகைத் தன்னுள்ளேயே சொல்லிக் கொள்வது

எனக் கூற்றுக்குரிய விளக்கத்தைத் தெளிவுபடுத்திவிட்டு, குறிப்புரையில்,

> ஒளி பொருந்திய நெற்றி என்பதால் காட்சி இன்பமும், பேசும் சொற்கள் சில என்பதால் கேள்வி இன்பமும், மென்மையானவள் என்பதால் ஊற்றின்பமும், நறுமணம் உடையவள் என்பதால் உயிர்த்தல் இன்பமும், தழுவும்போது என்னும் குறிப்பினால் சுவைக்கும் இன்பமும் என ஐம்புலன்களுக்கும் அவள் இன்பம் தருபவளாய் இருப்பதை நினைக்கிறான்

என எழுதிச் சென்றிருப்பது சுவை பயப்பதாகும். இதன் தொடர்பாக, ‘கண்டு கேட்டு உண்டு உயிர்த்து’ எனத் தொடங்கும் குறட்பாவும் சிந்திக்கத்தக்கதாய் உள்ளது. இதன் விளக்கவுரையில்,

> வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களால் துய்க்கப்படு கின்ற இன்பத்தை இவள் ஒரே காலத்தில் கொடுக்கக்கூடியவளாய் உள்ளாள். ஆதலால், இப்பெண் காணப்படும் எல்லாப் பொருள்களை யும்விட மிக உயர்ந்தவள் என்று எண்ணிக் காதலன் மகிழ்கிறான்

என்று அழகியதொரு விளக்கத்தை நயம்பட எடுத்துரைக் கின்றார், ஆசிரியர். இதனை, ‘தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்’ என வரும் குறட்பாவிற்குரிய கருத் தோடும் எண்ணிப்பார்த்து, ‘ஐம்புல இன்பத்தையே சிறந்தது எனக் காதலன் எண்ணுகிறான். அது, தான் விரும்பும் பெண் ணிடத்தில்தான் கிடைக்கிறது. ஆதலால், அந்த இன்பந்தான் உயர்ந்தது என்று எண்ணி மகிழ்கிறான்’ எனக் கூறியிருப்பதும் ஒருபுடை ஒப்புமை உடையது. காதலின்பத்திற்கு ஈடு இணை யில்லை என்பதனைக் கருதியதால் தலைவன் தலைவியைக் கூடிய முதல் நாளின் முடிவில் தன்னுள் இவ்வாறு சொல்லிக்கொள் கிறான் போலும்! இந்தக் காதல் இன்பத்திலும் சிறந்த ஒன்றை இணைத்துக்காட்டும் பாவேந்தரின் பாடல் அடிகள் நினைவுக்கு வருகின்றன. அதை இங்குப் பொருத்திப் பார்ப்பதுகூட நன்று. காதலின்பத்தைக்காட்டிலும் மொழியின்பத்தை மங்கையோடு சார்த்திப் பார்த்து, ‘மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்’ என்று பாவேந்தர், இரண்டையும் இணைத்துக் கண்டிருப்பது எண்ணுதற்குரியது. ‘கண்டு கேட்டு உண்டு உயிர்த்து’ என வரும் குறளைச் சற்றே மாற்றி,

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
தண்டமிழ் கண்ணே உள

என்று கூறலாமா எனத் தோன்றுகிறது. ஏனெனில், தண்டமிழின் தகவறிந்து காதலின்பத்தைச் சொல்லோவியமாகத் தீட்டி மொழியின்பத்தோடு சுவைபடத் தந்துள்ளாரே செல்லப்பனார். அதற்காக இக்குறளை மொழியோடு தொடர்புபடுத்திக் காணத் தூண்டுகிறது.

நற்றிணை 155ஆவது பாடல். 'ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்' என்று தொடங்கும். 'தலைவியை எதிர்ப்பட்டுத் தலைமகன் சொல்லிய கூற்றாக வரும் அப்பாடலில் வரும் 'சொல்இனி மடந்தை என்றனென்; அதனெதிர்முள்எயிற்று முறுவலும் திறந்தன; பல்இதழ் உண்கணும் பரந்தவால் பனியே' என்ற அடிகளுக்கான விளக்கத்தைப் பின்வருமாறு குறிக்கிறார், இந்நூலாசிரியர்.

இவள் சொல் ஒன்றும் பேசவில்லை; ஆயினும் கண்ணோக்கும்
முறுவல் குறிப்பும் இவள் காதலைப் புலப்படுத்துவன.

அயர்லாந்துக்கவிஞன் ஒருவன், காதல் என்பது கண்களால் இசைவுகாட்டும் மௌனமொழி என்பான் (Love is the tacit approval of eyes). கண் பேசும் மொழிதான் காதல்! கண்ணால் பேசும் கவிதை அன்றோ காதல்! 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல' என்று நம் திருவள்ளுவர் சொல்லவில்லையா? கண்டு கேட்டு உண்டு உயிர்த்து என்ற குறளுக்கு இந்நூல் ஆசிரியர் எழுதும் குறிப்புரையில்கூட, 'கண்கள் ஒன்றுபட்ட பின், வாய்ப்பேச்சுக்கு இடமில்லை' என்று எழுதிச் செல்வர்.

காதலில் கட்டுண்ட நெய்தல் நிலத்தலைவன் ஒருவன் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துவதைச் சிலப்பதிகாரம், 'கடல் புக்கு உயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்; உடல்புக்கு உயிர் கொன்று வாழ்வை நீயும்' என்று கூறும். இதற்குரிய கருத்தினைக் கவிநயத்தோடு விளக்குகிறார்.

உன் தமையன்மார் கடலில் புகுந்து உயிரைக் கொல்கின்றனர். நீ என் உடலில் புகுந்து உயிரைக் கொல்கிறாய்

என்று எழுதிவிட்டு அப்பாடல் முழுமைக்குமான விளக்கத்தை,

என் உயிரை வாங்கும் உன் கொடிய செயலை விட்டு உன் முலைச் சுமையை என் தோளில் ஏற்றி உன் இடை முரிந்துவிடாமல் காத்துக்கொள்

என நயம்பட எடுத்துரைக்கிறார். இதற்கு அடுத்து வரும் 'கொடுங்கண் வலையால்' என்று தொடங்கும் பாடலின் விளக்கத்தையும் கவிநயம் தோய,

கயிற்றுவலையில் உள்ள கண்களால் உன் தந்தை உயிர்களைக் கொல்ல, நீயோ உன் கண்வலையால் என்னைக் கொல்கிறாய்

என்று சுட்டுகிறார். கயிற்றுவலை, கண்வலை ஆகிய சொல் லாட்சி கவித்துவமாக விளங்குகிறது.

தலைவன் தன் காதலியைக் கூடி நீங்கியபோது தன் காதல் மிகுதியைக் கூறும் கூற்றாக வரும் 'கருமணியில் பாவாய்' என்ற குறட்பாவிற்கு விளக்கம் தரும்போது,

மனித உறுப்புகளுள் சிறந்தது, கண்; அதில் உள்ள கருமணி அதனினும் சிறந்தது. கருமணி இன்றேல் எதையும் காண இயலாது. காதலன் கண்ணின் கருமணி இடத்தில் காதலியை வைக்கிறான். அவள் காண்பதே தான் காண்பதாய் இருக்க வேண்டும் எனக் கருதுகிறான்

என எழுதுகிறார். பாரதியின் கோவிந்தன் பாட்டு இதனோடு ஒப்புமை காண்பதற்குரியதாய் விளங்குகிறது.

என்கண்ணை மறந்துனிரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக்கொண்டு
நின்கண்ணாற் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு...

என்ற பாடல் கோவிந்தனை விளித்துப் பாடியிருப்பது வேறொரு சூழல் என்றாலும், கண்கள்பற்றிய ஒற்றைப் பரிமாணத்தைக்

காதல் உலகில் காட்டுவதாகவே தோன்றுகிறது. கண்கள் நிகழ்த்தும் பத்திக்காதல் இது. காதல் பத்தி!

'குன்றநாடன் குன்றத்துக்கவான்' என வரும் ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று (299) தலைவன், தலைவியைப் பாராட்டும் படியான கூற்றில் அமைந்தது. தலைவன், தலைவியின் கண்ணைக் குவளை மலரோடும், சாயலை மயிலோடும் எண்ணிப் பார்த்து அவற்றினும் மேம்பட்ட தலைவியைப் பாராட்டுகிறான். இப் பாடலுக்குரிய குறிப்பில்,

> காதற்குறிப்பை உணர்த்தும் தன்மை குவளைக்கு இல்லையாதலின், அது தலைவியின் கண்ணுக்கு ஒப்பாகாது. கண்ணும் குவளையும் தோற்றத்தால் ஒன்றாயினும் தன்மையால் வேறுபட்டவை. மயிலின் சாயல், காட்சி இன்பம் மட்டுமே கொண்டது. இவள் சாயலோ உயிரைத் தளிர்க்கச் செய்யும் தன்மை கொண்டது

என எழுதியிருப்பது அழகிய சொற்சிற்பம்.

நற்றிணைப் பாடலின் (13) தெளிவுரையும், கருத்தும், குறிப்பும் அருமையான முறையில் காட்டப்பட்டுள்ளன. ஒரு செய்யுளை எவ்வாறு அணுக வேண்டும் என்பதற்குரிய அடையாளம், இது. இதில் தம் நுண்மாண் நுழைபுலத்தை ஆசிரியர் அழகுற வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடலின் கூற்றை நன்கு விளக்கியிருப்பதோடு அதனை எடுத்துரைக்கும் பாங்கும் சுவைபட அமைந்துள்ளது. தலைவி தன் காதலைத் தன்னிடம் மறைத்தாளாயினும் அதனைக் கண்டும் காணாமல் அறிந்து வைத்திருக்கும் தோழி கூற்றாக வரும் இப்பாடலின் கருத்தைப் பின்வருமாறு தெரிவிப்பர்.

> கிளிகள் தினை கவர்தலை மயில்கள் அறியும். ஆனால், தாம் தினை கவர்வதை மயில் அறியும் என்பதைக் கிளிகள் அறிய மாட்டா. அதேபோல, உன் களவொழுக்கத்தை நானறிவேன். ஆயினும், நான் அறிவேன் என்பதை நீ அறியாததால் என்னிடம் உண்மையை மறைக்க முயல்கிறாய் என்னும் தொனிப்பொருள்படும்படி தோழியின் பேச்சு உள்ளது

என விளக்கியிருக்கும் பாங்கு அருமைப்பாடுடைய அழகிய சொல்லோவியம். இப்பாடலுக்குரிய குறிப்புரையில் ஆசிரியர்,

> மயில் அறிந்திருப்பது கிளியின் செயலுக்கு இடையூறு ஆகாதவாறு தான் அறிந்திருப்பது தலைவியின் ஒழுக்கத்திற்கு இடையூறாகாது என்ற குறிப்புப்பொருள் தரும்படி தோழி பேசுகிறாள்

என்று மேலும் ஒரு விளக்கத்தை எண்ணிப் பார்த்திருப்பது இலக்கியச்சுவை ஊட்டுகிறது.

குறுந்தொகைப் பாடல் 204, 'காமம் காமம் என்ப' எனத் தொடங்கும். இப்பாடற்கூற்று விளக்கம், இளமகள் ஒருத்தியிடம் காமுற்று, வேறுபட்ட தலைவனைத் தோழன் கடிந்து கூறியதாகும். இப்பாடற்குரிய விளக்கம், குறிப்பு ஆகிய இரண்டனையும் இந்நூலாசிரியர் வெளிப்படுத்தியிருப்பது உளவியல் அடிப்படையிலானது.

காமம், நிலைத்த இன்பம் தருவதன்று. நமது அறிவுதான் காமத்தை இன்பமாய்க் கருதுகிறது. காமம் இன்பந்தருவதாய் இருப்பதற்கும் துன்பம் தருவதாய் இருப்பதற்கும் நம் நினைப்புத் தான் காரணம் என்று கூறிவிட்டு, இதற்குரிய குறிப்பில்,

> கிழட்டுப்பசு புல்லைக் கடித்துச் சுவைத்து நுகர முடியவில்லை. நாக்கால் தடவுகின்ற அளவிலேயே இன்பம் அடைகின்றது. இதற்குக் காரணம் அப்புல்லின் சுவையன்று. அந்தப் பசுவின் ஆசைதான். அப்பசுவின் ஆசையின் அளவாய்ப் புல்லின் சுவை அமைகிறது. அதுபோலவே காமமும் நம் நினைப்பின் அளவிலேயே நமக்கு இன்பத்தை அளிக்கிறது. நம் அறிவால் அதை அடக்கிக்கொள்ள முடியும். நீ இந்த உண்மையை உணர்ந்துகொள் என்று தலைவனிடம் தோழன் கூறினான்

என்றது உளவியல் நுட்பமாகும். இந்தக் குறுந்தொகைப் பாடலுக்கு மறுதலையாகக் குறுந்தொகை 136ஆவது பாடல் விளங்குகிறது. இப்பாடல், பாங்கற்குத் தலைவன் உரைக்கும் கூற்று. இப்பாடற்குரிய கருத்தாவது:

> காமம் ஒவ்வொருவரிடமும் அடங்கிக்கிடக்கிறது. வாய்ப்புக் கிட்டும்போது அது வெளிப்படுகிறது. அது தோன்றும் செவ்வி பெற்று

வெளிப்படும்போது அதன் வழிச் செல்வதன்றி அதனைக் கட்டுப்படுத்த இயலாது

என்று கூறியிருப்பதும்கூட உளவியல் நுட்பம் சார்ந்தது. கழற்றெதிர்மறைக் கூற்றாக வரும் குறுந்தொகைப் பாடலொன்றில் தலைவன் பாங்கனிடம் தன் கருத்தை,

பாறைமீது வெண்ணெய். வெப்பமோ சுட்டெரிக்கிறது. வெண்ணெய் உருகுவதை அங்கே நிற்கும் கையில்லாத ஊமையனால் தடுக்க வியலாது. வெண்ணெயை எடுத்து நிழலிலே வைக்கலாமென்றால் அவனுக்குக் கைகளில்லை. பிறரிடம் கூறி அகற்றச் சொல்லலா மென்றாலோ அவன் பேச இயலாத ஊமை. இந்நிலையில் வெண்ணெய் உருகுவதை அவனால் தடுக்க இயலாது. அதுபோன்றே காமநோய் தாக்குதலால் என் உடல் உருகுவதை உன் இடித்துரையால் தடுக்க இயலாது

எனக் கூறுமிடம் உளவியல் சார்ந்ததாய் உள்ளது. இதனை இந்நூலாசிரியர் விளக்கமாக இவ்வாறு எடுத்துரைப்பர்.

ஐங்குறுநூற்றுப் பாடல் 185 தோழிக்குத் தலைவன் சொல்லியதாக வரும் கூற்றாகும். இப்பாடலில் இடம்பெறும் ‘எயிறுகெழு துவர் வாய், அரம்போலும் கைவளை, தீங்கிளவி’ ஆகிய சொற்றொடர்களுக்கு விளக்கம் தந்திருப்பது நயம் உடையது.

தலைவி தலைவனை விரும்புவதால், தான் புன்முறுவல் பெற்றதையும், இதழ் உண்டமை காட்டத் துவர்வாயினை வியந்தும், தழுவியதைச் சொல்லக் கைவளை காட்டியும், உரையாடி இன்புற்றமை புலப்படத் தீங்கிளவியவள் என்னும் நயம் பொருந்தத் தலைவன் சுட்டினான்

என்றுரைத்திருப்பது அழகியதாய் உள்ளது.

இனிமை தருவது இன்னாததாகவும், இன்னாத ஒன்று இனியதாகவும் ஆவது உண்டு. இஃது இயற்கை இயல்பு. காதலுலகிலும் இந்நிலை உண்டு. வெள்ளியந்தின்னனார், நற்றிணைப் பாடல் ஒன்றில் (பாடல் 101) இக்கருத்தினை மையப் படுத்திக் காதலுலகிலும் இஃது உண்டு என எடுத்துக்காட்டுகிறார். ‘பரதவர் மடமகளின் மான் போன்ற மருண்ட பார்வையைக்

காணாமுன் கடற்சார்ந்த துறையும் ஊரும் இனியனவாய் இருந்தன. இப்போது அந்த இனிமை நீங்கி இரங்கத்தக்க நிலை அடைந்தது. இதற்கு என் செய்வேன்' எனத் தலைவன் புலம்புகிறான். இப்பாடலுக்குரிய கூடுதலான கருத்தினை,

> பாக்கம் முன்பு இனிமையாயிருந்தது. இவளைக் கண்ட பின்பு அவ்வினிமை இல்லை என ஆயிற்று. இனி இப்பரதவர் மடமகள் பெண்மான் போன்ற கண்ணினால் இனியன செய்தால்தான் பாக்கமும் இனியதாகும்

எனக் குறிப்புரையில் தெளிவுபட எடுத்துக்காட்டுவர்.

காதலால் உடைபடும் உள்ளம் தடை மீறிச் செல்வதுகூட ஒருவகையில் உளவியல் சார்புடையதெனலாம். காதல் மிகுதி யானால் காவலும் மிகுதியாகும் போலும்! சங்க இலக்கியத்தில் தலைவி, வீட்டினுள் காவல் வைக்கப்பட்டிருப்பதை இற்செறிப்பு என அகவிலக்கணம் கூறும். இது காதல் உள்ளங்களுக்கு விதித்த கட்டுப்பாடு. இந்தக் கட்டுப்பாடு தலைவிக்கே ஒழியத் தலைவனுக்கு அன்று. இந்தக் கட்டுப்பாட்டைத் தலைவிக்காக உடைத்தெறியும் உபாயம் தோழிக்குத் தெரியும். காதலைச் சொல்லி மிரட்டுவதைவிடக் காவலைச் சொல்லி மிரட்டும் தோழியின் நாடகம் அகப்பொருள் காட்சியில் சுவைநலம் பயப்பதாகும்.

கண்ணஞ்சேந்தனார் இயற்றிய திணைமொழி ஐம்பதில் உள்ள இரு பாடல்கள் இந்நூலில் காவல் மிகுதிக்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சங்க இலக்கியச்சாயலில் உள்ளது போன்றே இவ்விரு பாடல்களும் உள்ளன. காவல் மிகுதியைத் தலைவனுக்குத் தோழி எடுத்துரைத்துத் தலைவியைக் காண வருதல் வேண்டா என அறிவுறுத்துகிறாள். 'பின்னின்ற தலைமகனைக் காவல் மிகுதி சொல்லிச் சேட்படுத்தியது' என்ற கூற்றில் அமைந்த இவ்விருபாடல்கள் இதில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. அவற்றுள் ஒரு பாடலுக்குரிய கருத்தைப் பின்வருமாறு விளக்குகிறார், இந்நூலாசிரியர்.

> நாங்கள் எளிய வேட்டுவ மகளிர். நீயோ மேற்குடி மகன். எங்களை விரும்ப வேண்டா. மேலும் இங்குக் காவல் மிகுதி. உனக்குத் தீமை நேரும். ஆதலின் இவ்விடமிருந்து அகன்று செல்க

என்று சொல்லித் தலைவன் வருகையைத் தோழி விலக்க முயல்கிறாள். காதல் தலைவன் வாராதிருப்பானா? மேற்குடி கீழ்க்குடி பார்த்தா காதல் முகிழ்க்கிறது? அது மண் பார்த்து வளர்வதில்லை, மரம் பார்த்துச் செழிப்பதில்லைதானே! தலைவியைக் காணத் தோழியை இறைஞ்ச வேண்டியுள்ளது, தலைவனுக்கு. எனவே, அவளிடத்துத் தன் கருத்தைச் சொல்லி அருள் செய்ய வேண்டுகிறான். 'சேட்படுத்தப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தோழி கேட்பச் சொல்லிய' நற்றிணை 75ஆவது பாடற்கருத்தைத் தெளிவுற விளக்குகிறார்.

> தன்னை அகன்று செல்லுமாறு கூறிய தோழியிடம் தலைவன், தலைவியை அடையேனாயின் நான் இறந்துபடுவேன். என்னை எள்ளி நகையாடாது இரங்கி அருள் செய் என வேண்டுகிறான்

எனக் கருத்துரைத்த பின் அப்பாடலில் இடம் பெறும் உவமையைக் குறிப்புரையில் விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

> என்னை நகையாடிப் பேசி அகற்ற முனைவது, ஒரு பாம்பு தன் அழகிய படத்தை விரித்துச் சீறி நஞ்சை உமிழ்ந்து உயிர்களைக் கொல்வது போன்ற கொடுமையான செயலாகும். உன் தலைவியிடம் சென்று என் குறையினை எடுத்துச் சொல். அங்ஙனம் நீ செய்யாவிடில் வருத்தமுற்றுள்ள என் உள்ளம் உடைந்துபோக நானும் அழிந்து படுவேன்

என்பதைத் தலைவன் கூறுவதாகச் சுட்டியுள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது.

தொல்காப்பியர் பெண்ணுக்கு நாணத்தை உரித்தாக்கியது போல, ஆணுக்கு நாணத்தை உரித்தாக்கவில்லை. ஆயின், காதல் மயக்கத்தில் ஆணும் நாணமுறுவான் என்று தெரிகிறது. அஃறிணையாகிய உயிரினத்திற்கும் நாணம் உண்டு என்பதை முத்தொள்ளாயிரப்பாடலொன்றிலிருந்து அறியலாம். போருக்கு முன், வீரம் வெளிப்படப் பெருமிதத்தோடு சென்ற ஆண்யானை, போரில் வென்று திரும்பியதும் அது, தன் தோற்றம் பொலிவிழந்தது கண்டு பெண்யானை என்ன நினைக்குமோ என்றெண்ணிப் பொல்லாமை நாணிப் புறங்கடை நின்று விட்டதை அந்நூல் காட்டும். போரிடைத் தோற்றுவிட்டு

வந்ததை எண்ணி நகைப்பாளே சீதை என்று நாணத்தால் இராவணன் சாம்பியதைக் கம்பர் காட்சிப்படுத்துவார். எனவே சில சூழலில் ஆணுக்கும் நாணம் உண்டு எனத் தெரிகிறது. காதலால் வரும் மோகம் இது. ஆண், நாணம் கொள்ளும் சூழலைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. நற்றிணை 160ஆவது பாடலுக்கு இந்நூலாசிரியர் தரும் குறிப்புப் பின்வருமாறு:

> முலையும் சுணங்கும் கூந்தலும் நெற்றியும் ஆகியவற்றால் பொலிந்த குளிர்ந்த அவள் கண்களைக் காணா முன்பு நயன், நாண் முதலாயின நற்பண்புகள் உன்னைவிட மிக்கு உடையவனா யிருந்தேன். இப்போது அனைத்தும் நீங்கியவன் ஆயினேன் என்று தலைவன் தோழனிடம் கூறினான்

என்பதிலிருந்து ஆணிடமும் நாணம் உண்டு என்பதறிகிறோம். மற்றும் மடலேறுதல் என்று வரும் கூற்றில் பொதுவாக நாணத்தை வெளிப்படுத்துவான், தலைவன். நாணொடு நல்ஆண்மை இழந்தேன் எனவும், காமக்கடும்புனல் உய்க்குமே எனவும் இலக்கியம் பேசும். காம இன்பத்தில் உழல்பவர் நாணத்தை இழப்பர் எனவும், ஆற்றைக் கடக்கப் பயன்படும் படகுகளைப் பெருவெள்ளம் அடித்துச் செல்வதுபோல, என் நாணத்தையும் ஆண்மையையும் காமம் அடித்துச் சென்று விட்டது எனவும் வரும் செய்திகளைச் சுவைபட இந்நூலாசிரியர் விளக்கிச் செல்கிறார்.

காதல் கொண்ட நெஞ்சம் உறங்குவதில்லை. எப்போதும் அதே சிந்தனையில் ஆழும். பொய்யாக் காமம் பொழுதறியாது. காலை, பகல், மாலை, இரவு என்பதை ஆராக்காதலர் உலகம் அறியாது. இரவில் உறங்கவிடாது, காதல். இரவில் தூக்கம் அற்ற மூவருள் காதலரை இணைத்துக்காட்டுவர், சேக்ஸ்பியர். நம் செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றான நான்மணிக்கடிகை தூக்கம் துறந்த நால்வரைச் சுட்டுமிடத்து, 'காதலிமாட்டு உள்ளம் வைப்பார்க்குத் துயில் இல்லை' என்று குறிப்பிடும். ஊர் துஞ்சினும் தான் துயிலாத நிலையைக் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி குறிப்பிடுவாள். இது தொடர்பாக அள்ளூர்

நன்முல்லையார் குறுந்தொகைப் பாடல் ஒன்றிற்கு (பாடல் 32) விளக்கம் கூறும் சிலம்பொலியார்,

> பொழுதுகள் கழிவதைக் காதலர் உணர்வதில்லை. அவை உணரப்படுமாயின் அவர் காமம் கொண்டுள்ளார் என்பது பொய்யாகும். காதலர் எப்பொழுதும் இணைந்திருப்பதால் இஃது இன்ன பொழுது என அறியார்

என விளக்குவர்.

ஐங்குறுநூறு 172ஆவது பாடலுக்குரிய விளக்கமும் இது தொடர்பாக எண்ணக்கூடியதாகும்.

கடலலை எழுந்து தாழ்வதுபோல, அவளைக் கூடுவதுபோல் எண்ணம் எழும்போது மன எழுச்சியும், கூட இயலவில்லை என்னும்போது மனத்தளர்ச்சியும் அடைகிறான், தலைவன். கடலலை இரவு, பகல் இடையறாது ஒலித்தல்போல அவனும் இரவு பகல் எப்பொழுதும் அவளையே நினைந்து தூங்காது உள்ளான்.

திருக்குறள் தலைவனும் 'மடல் ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன்' (குறள் 1130) என்பதற்குக் கூடுதலான விளக்கத்தைச் சிந்தித்து வெளிப்படுத்தும் ஆசிரியர்,

> எல்லோரும் உறங்கும் இரவில் மடலூரும் அவனைக் காண்பார் இரார். இந்நேரத்தில் மடலூர்ந்தும் பயனில்லை. ஆனால், நடு இரவிலும் அவளைப்பற்றியும் அவளை அடையும் வழியைப்பற்றியுமே எண்ணித் தலைவன் உறக்கமுமின்றி வாடுகிறான். ஆதலால், 'அவளை அடைய நேரம் பொழுது என்பன எனக்கில்லை' என்று கூறுகிறான்

எனக் காட்டியிருப்பது நல்லதொரு விளக்கமாகும்.

செவ்வியல் இலக்கியத்தில், குறிப்பாக, அகப்பொருளில் நோய் என்பது காதல் நோயையே சுட்டும். கண்கள் புரியும் மாய வித்தை இது. தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லியதாக வரும் நற்றிணைப் பாடல்கள் இரண்டில், காதல் நோய்க்கு உற்ற மருந்து தலைவியே எனத் தலைவன் வலியுறுத்துவதை இந்நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். 'அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து பிறிது இல்லை, யான் உற்ற நோய்க்கே' (நற். 80) என்பதும்,

'பெருந்தோள் குறுமகள் அல்லது மருந்து பிறிதில்லை யான் உற்ற நோய்க்கே (நற். 140), என்பதும் அவ்விரு பாடல்களின் ஈற்றடிகளாகும். திருக்குறளில் இக்கருத்துக்கொப்ப இடம் பெறும் 'இருநோக்கு இவள்உண்கண் உள்ளது' என்று தொடங்கும் குறட்பாவிற்குரிய விளக்கம் ஆசிரியரால் தரப்படு கிறது. இதன் கூற்றான, 'தலைவி என்னை நோக்குவது என்மீது அன்பு செய்தற்பொருட்டே எனத் தலைவன் உய்த்துணர்ந்து கூறியது' என இக்கூற்றினை விளக்கியுரைப்பார்.

> இதுவரை தலைவனின் ஒருதலைக்காதல் மட்டுமே கொண்டு கைக்கிளையாயிருந்த காம நிலை, இருதலைக் காதலாகிய ஐந்திணையாய்ப் பெயரத் தொடங்கியது

என்ற விளக்கம் ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடு. இச் கூடுதலான விளக்கத்தை அகப்பொருள் கண்ணோட்டத்தோடு அழகுறச் சுட்டுவது எண்ணி மகிழக்கூடியது. இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் எழுதும் குறிப்புரையாவது:

> நோய் செய்யும் நோக்கு அவள் மனத்தினாய காமக்குறிப்பினை வெளிப்படுத்துகின்ற நோக்கு. மருந்தாய நோக்குத் தன்கண் நிகழ்கின்ற அன்பு நோக்கு. நோய் செய்யும் நோக்கினைப் பொதுநோக்கென்பாருமுளர். அது செயிற் கைக்கிளையாவதல்லது அகமாகாமை அறிக. இவ்வருத்தம் தீரும் வாயிலும் உண்டாயிற் றென்பதாம்

என்ற கருத்தினை உள்ளிறுத்தி இதற்கு இந்நூலாசிரியர் பொருள் பொதிந்த விளக்கத்தை அளித்திருப்பது எண்ணுதற் குரியது.

தலைவன் பார்ப்பன மகனைப் பார்த்து, 'வேதத்தில், நான் உற்ற நோய்க்கு மருந்து உண்டாயின் கூறு' எனக் கேட்பதும் (குறுந். 156), தோழி தலைவியைப் பார்த்து, 'தலைவனின் நோய் தீர்க்கும் மருந்து நீதான் (கலி. 63)' என்றுரைப்பதும், காதல் நோய்க்கு மருந்து எது, யார் என்ற உரையாடலை அகப்பொருள் சூழலில் விளக்கியிருப்பது அருமைப்பாடுடையது.

காதல் நாடகத்தில் தோழியே முதன்மையான பங்கு வகிப்பவள். அவளையன்றி அக நாடகம் சிறவாது. தலைவி தன்

காதலைத் தன்னிடத்துச் சொன்னாலும் சொல்லாது விட்டாலும் அதனைக் குறிப்பில் அறிபவளும், தலைவி உற்ற நோய்க்கு ஆறுதல் சொல்பவளும், தலைவனிடம் சென்று தலைவியின் ஆற்றாமையை எடுத்துரைப்பதோடு அவனைச் சில சமயம் எள்ளி நகையாடுபவளும், தலைவனிடம் சென்று விரைந்து தலைவியை மணமுடிக்கக் கோருபவளும், செவிலியிடம் அறத்தொடு நிற்பவளும் அவளே!

தலைவனை எள்ளி நகையாடும் காட்சி ஒன்றை இந் நூலாசிரியர், ஐங்குறுநூறு பாடல் (பா. 117) வழி விளக்குவார். தான் செய்த தவறென்ன என்று தலைவன் தோழியைக் கேட்க, எள்ளி நகையாடியதான கூற்றமைந்த பாடலிது.

> நீர் சூழ்ந்த மணல்மேட்டில் முண்டகம் மலர்ந்து மணம் கமழும். அதுபோலத் தலைவி, கட்டுக்காவல் அமைந்த வீட்டில் பெருவளம் திகழப் பொலிவோடு வாழ்கிறாள். முண்டக மலரின் நறுமணம் உள்ளத்தைக் கவர்ந்தாலும் அது முள்ளைக் கொண்டிருத்தலால் அதனைக் கைக்கொள்ளவும் முடியாதது போலத் தலைவியை அடையப் பெரிதும் விரும்பினாலும் தலைவன் அவளைக் கைக்கொள்ள முடியாது என்று தோழி குறிப்பால் கூறினாள்

என்று எழுதும் இடம் இப்பாடற்கருத்தைத் தெளிவாக விளங்க வைக்கிறது.

தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டான காதலைத் தான் அறிந்து வைத்திருப்பினும் தோழி, அக்காதல் தனக்கு நேர்ந்ததைப் போலப் படைத்துமொழியால் தலைவிக்கு உரைக்கிறாள். (படைத்து மொழிதல் - தானாய் ஒன்றைக் கற்பனை செய்து கூறல்). தலைவனுக்குரிய குறையைக் கேட்டு அதனை முடித்து வைப்பதான கூற்றில் அமைந்த நற்றிணைப் பாடல் (128) ஒன்றற்குக் கூடுதலான குறிப்பும் விளக்கமும் தேவைப்படுவதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று விழைந்து ஆசிரியர் அதனைக் குறிப்புரையில் கீழ்க்காணுமாறு சுட்டுகிறார்.

தோழி தன்னை வந்து ஒருவன் தழுவியதாய்க் கூறியமையும் பிறவும் படைத்து மொழிதலே. அது தலைவிக்கு இயற்கைப்

புணர்ச்சியில் நடந்த நிகழ்ச்சி. ஆயினும், அதனைத் தனக்கு நேர்ந்ததுபோலத் தோழி கூறினாள்.

> இவ்வாறு கூறுவது குற்றமே ஆயினும், தலைவி மறைத்த நிகழ்ச்சியைத் தான் அறிந்துள்ளதாய்க் காட்டத் தோழி இவ்வுத்தியைக் கையாண்டுள்ளாள்

என எழுதிச் செல்கிறார்.

தலைவி கூற்றாக வரும் கலித்தொகை 55ஆவது பாடலுக்குரிய கூற்றைத் தெளிவுபட விரித்துரைத்து, குறிப்புரையில் அகப் பொருள் நுகர்ச்சி விளங்குமாறு நிரலாக எடுத்துரைத்திருப்பது போற்றக்கூடியதாக உள்ளது. அதனை,

1) தலைவி தலைவனோடு இயற்கைப் புணர்ச்சி கொண்டதைத் தோழி அறிந்தவள்தான் என்றாலும் அறியாதவள்போலவே நடந்துகொண்டாள்.

2) வலையர் என்றும், புலையர் என்றும் கூறிய உவமையால், தலைவன் தன் பெருமிதத் தன்மையைவிட்டு எளியன் ஆனான் என்பதைக் குறிக்கிறது.

3) பெண்ணிடம் பண்பாடு இன்றி நடந்துகொள்வது அறியாமை. ஆனால், அன்பு காரணமாய் அவ்வாறு தலைவன் நடந்துகொண்டான்.

4) 'பல பாராட்டி' என்னும் தொடர், மெய்தொட்டுப் பயிறலுக்குப் பின் பொய்ப் பாராட்டலையும், 'சோர்பதனொற்றி' என்னும் தொடர் நெஞ்சு நெகிழ்ந்து கூடுதலையும், 'புலையர்போல நோக்கி' என்பது இடம்பெற்றுத் தழாஅலையும், 'தொடலும் தொட்டான்' என்பது மெய்தொட்டுப் பயிறலையும் குறிப்பதாய் அகப்பொருளுடையார் கொள்வர்

என்று விளக்கியிருப்பது, ஒரு பாடலைத் திறனாய்வு நோக்கில் நுட்பம் அறிந்து எவ்வாறு கூறுவது என்பதற்குரிய அடையாள மாகும்.

இப்படிப் பக்கந்தோறும் அகப்பொருள் சுவையை அழகுறத் தந்து நம்மை அள்ளிப் பருக வைத்துள்ளார், சிலம்பொலி.

இலக்கியத்தேனைத் தெவிட்டாது மாந்திக் களிக்கச் செய்துள்ள அன்னாரின் ஈடுபாட்டுணர்வினைப் பாராட்ட வார்த்தைகள் போதா. நானிலம்தோறும் நற்றமிழைப் பரப்பி வரும் நயனுடைய நாவன்மைக்கு உடைமையாளரான அவரது கைவண்ணத் தூரிகை, செவ்விலக்கியக் காட்சிகளை அழகுற வண்ண ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளமை மிகுந்த பாராட்டுக் குரியது. கற்றறிந்தோரும், இலக்கியம்பற்றிய ஆர்வங்கொண் டோரும், பாமரரும் படித்துணர்ந்து தமிழின்பம் காண்பதற்குரிய முறையில் அரிதின் முயன்று இந்நூலினைப் படைத்திருப்பதை நாம் கொண்டாட வேண்டும். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும்.

தமிழ்க்களஞ்சியத்திற்கு
ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகத் தமிழ்ச்சான்றோர்கள் பலர் தமிழிலக்கியங்களையும் இலக்கணத்தையும் பரப்பு முகத்தான் பல வகுப்புகள் நடத்தியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் பணியாற்றியமையை மறந்துவிட முடியாது. வள்ளலாரின் தலைமயனார் தொடக்கமாகப் பல சான்றோர்கள் இவ்வகையில் எண்ணத்தக்கவர்கள். மறைமலையடிகள், பண்டித மணி கதிரேசனார், கோ. வடிவேல்செட்டியார், குருவராயப் பேட்டை மங்கலங்கிழார், இராய. சொக்கலிங்கனார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பேராசிரியர் சி. இலக்குவனார், இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை என்று இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

அவ்வாறு வகுப்புகள் நடத்தியும் பொழிவுகள் நிகழ்த்தியும் அவர்கள் உருவாக்கிய தமிழ் மறுமலர்ச்சி, அரசியல் மாற்றத்திற்கும் மக்களின் தமிழார்வத்திற்கும் தூண்டுகோலாக இருந்தது என்பது உண்மை.

அந்தத் தலைமுறையின் மிச்சசொச்சமாக நம்மிடையே இருக்கும் தமிழறிஞர் இருவர், என் ஆசான்கள், புலவர்மணி இரா.இளங்குமரனாரும் சிலம்பொலி செல்லப்பனாருந்தாம் என்பதை இங்கு நினைவூட்ட விழைகிறேன். இளங்குமரனார் தம் பரப்புரையைத் தமிழ்ச் செவ்விலக்கியங்களாகிய சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், திருக்குறள் என்னுமளவில் வரையறுத்துக்கொண்டுள்ளார். சிலம்பொலி செல்லப்பனார் தமிழின் அனைத்து இலக்கியங்களையும் தம் அகத்தே கொண்டு வேண்டியோர்க்கு வேண்டிய இலக்கியக்கொடை வழங்கும் கற்பகத்தருவாய்ச் செயற்படுகிறார்.

சிலம்பொலி என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டதனால் சிலப்பதிகாரத்தைப் பரப்புவதுடன் தம் பணி நிறைவுற்றதாகக்

கருதாமல் ஏனைய அனைத்துக் காப்பியங்களையும் ஆழ்ந்து கற்றுச் சுவைத்து அச்சுவையை நமக்குப் பகிர்ந்தளிக்கும் வள்ளலாகத் திகழ்கிறார், சிலம்பொலி செல்லப்பனார்.

குறுந்தொகையோ நற்றிணையோ எந்தத் தொகை நூலானாலும் இவர், நலன் பாராட்டிப் பொழிவு நல்கினால் நமக்குப் புதுப்புதுச் செய்திகள் கிட்டும்; தெரிந்த பாக்களுக்குத் தெரியாத விளக்கங்கள் பெறுவோம். அவ்வகையில் சங்க இலக்கியம் முழுமையும் மட்டுமன்று, தமிழிலக்கியம் முழுவதையும் தம்முள் பதிந்து வைத்துள்ள மானிடக் கணினியாகச் சிலம்பொலி செல்லப்பனார் விளங்குகிறார்.

இப்போது உங்கள் கைகளில் தவழும் அகப்பொருள் களஞ்சியம் சிலம்பொலி செல்லப்பனாரின் நூல்களுள் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நூல் வரிசையாகும்.

அக இலக்கியங்களை நேரினமணியை நிரல்படவைத்தாங்கு தொகுத்து வழங்கியுள்ள சிலம்பொலி செல்லப்பனாரின் வியத்தகும் ஒப்பற்ற இத்தமிழ்ப்பணி தனிமனித ஆற்றலுக்கு மீறிய செயல். ஆமாம், ஒரு பல்கலைக்கழகத்தில் குழு ஒன்றை அமைத்து, திறமை வாய்ந்த தமிழ்ப்பேராசிரியர் ஒருவரையும், தமிழில் நல்ல புலமை பெற்ற உதவிப் பேராசிரியர்கள் பலரையும் பணியமர்த்தி இரண்டு மூன்று ஆண்டுகள் காலம் வழங்கினால் பெறக்கூடிய ஒரு நூல்வரிசையை மிக எளிமையாகவும், இனிய எழில் நடையிலும், பாடல்களின் கருத்துகளையும் சிறப்புகளையும் மிக்க சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் வழங்கியுள்ளார்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமொழி நூற்றைம்பது, திருக்குறள்-காமத்துப்பால், கார்நாற்பது, கைந்நிலை, சிலப்பதிகாரம் (கானல்வரி, குன்றக்குரவையில் உள்ள அகத்துறைப்பாடல்கள்) நாலடியார் (அகத்துறைப்பாடல்கள்) எனப் பதினான்கு நூல்களில் உள்ள அகப்பாடல்கள் துறைவாரியாகத் தொகுக்கப் பட்டுத் தெளிவுரை, கருத்து, இறைச்சி, சொற்பொருள், சிறப்புக் குறிப்புகள், உள்ளுறை முதலானவற்றுடன் மிகவும் போற்றத்தக்க வகையில் வழங்கப்பட்டுள்ளன.

அக இலக்கிய வகையின் செறிவையும் விரிவையும் விளங்கிக் கொள்ள இப்படைப்புப் பெரிதும் பயன் நல்குகின்றது. அகத்திணை இலக்கணத்தை ஐயம் திரிபு அறப் புரிந்து கொள்ளவும் இத்தொகுப்பு வழிகாட்டுகின்றது.

பெருந்திணைபற்றிய மடலத்தில் முதற்பாடலாக விளங்கும் கபிலர் பாடல் (குறிஞ்சிக்கலி-62) காதலனும் காதலியும் உறழ்ந்து பேசிக்கொள்ளும் ஊடல்நடையில் அமைந்தது என்பார், வ.சுப. அவர் விளக்கத்தை வழிமொழிவது போன்றே ஒரு காதல் நாடகமாக இப்பாடலை உரை வடிவில் வழங்கியுள்ளார், சிலம்பொலி செல்லப்பனார்.

ஐந்திணைத் தலைவியின் காமம் கையிகந்த நிலையே மிக்க காமத்து மிடல் என்னும் உண்மையை விளக்குவது போன்றே இம்மடலத்தின் ஏனைய அனைத்துப் பாடல்களும் தலைவியின் வரம்புமிகுந்த காமத்தைச் சொல்லோவியப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

தொழிலாளர் காதல் என்னும் மடலம், சிலம்பொலி செல்லப்பனார் தொன்மை வாய்ந்த சங்க இலக்கியங்களுக்கு அண்மைக்கால விளக்கமளிக்கும் சீரிய முயற்சியாக விளங்கு கிறது. சமுதாயத்தின் உயர்நிலைகளில் உள்ளோருக்கே முதன்மை வழங்கி விளிம்பு நிலையில் உள்ளோரைப் புறக்கணிக்கும் ஓரச் சார்பு சங்கச் சான்றோரிடம் இல்லை என்பதற்கும், அவர்கள் விளிம்புநிலை இலக்கியம் படைத்துள்ளனர் என்பதற்கும் சான்றாக இம்மடலம் அமைந்துள்ளது.

ஏறு தழுவுதல் என்னும் மடலத்தை நான் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் தமிழ் இளைஞர்களின் தைத் திருநாள் புரட்சியாகிய சல்லிக்கட்டுப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. தமிழர்களின் தொன்மரபுப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றாக அமைந்த இந்த வீர விளையாட்டுப்பற்றிய சிறந்த பாடல்களின் தொகுப்பாக அமைந்த இந்த மடலத்தைப் படிப்போர் அனைவருமே சல்லிக்கட்டுக்காக அமைந்த போராட்டத்தின் வெற்றி, தமிழ்ப் பண்பாட்டு மீட்சிக்குக் கிடைத்த வெற்றி என மனமகிழ்வர்.

இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் ஆகியனவெல்லாம் தமிழ் அகப்பொருளிலக் கணம் பயிலும் மாணவர்களுக்கே உரியன என்னும் தவறான கண்ணோட்டத்தைப் போக்கும்வண்ணம் இத்தலைப்பில் அமைந்துள்ள மடலங்கள் சுவைமிகுந்த பாடல்களின் தொகுப் பாக அமைந்து, களவுக்காதலின் படிநிலைகளைத் தமிழார்வலர் அனைவரும் அறிந்துகொள்ளும்வண்ணம் திகழ்கின்றன.

மடலங்களுள்ளே மிகப்பெரிய மடலம் உடன்போக்கு என்னும் தலைப்பிலமைந்த மடலமேயாகும். இதனைப் பார்த்தாலேயே அகப்பாக்களுள் உடன்போக்குக் குறித்த பாக்களின் மிகுதி புலனாகிவிடும். களவொழுக்கம் கற்பு என்னும் பெருமிதநிலை எய்தற்கு நாடறி நன்மணம் காணவேண்டிய காதலர்களுக்கு அத்தகு சூழல் தம் குடும்பப் பெரியவர்கள்மூலம் வாய்க்கப்பெறாத வேளையில் உடன்போக்கு மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாகிறது. ஆயினும், இதனால் ஏற்படும் பல்வேறு மன உளைச்சல்கள் சங்கப் புலவர்களால் உணர் வோவியங்களாகப் படைக்கப்பெற்றுள்ளன. அவையனைத்தும் இம்மடலத்தில் விளக்கமான உரையுடன் வழங்கப்பெற்றுள்ளன. (கௌரவக் கொலை என்னும் பெயரில் ஆணவக் கொலைகள் மலிந்து வரும் இன்றைய தமிழகத்தில் இம்மடலம் ஒரு நல்ல மனமாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதுகிறேன்.)

தமிழ்ப்பண்பாட்டிற்கே தனிச்சிறப்பு வாய்ந்த அறத்தொடு நிற்றல் எவ்வகையில் அமைந்திருந்தது என்பதை விளக்கும் ஆவணமாக அத்தலைப்பில் அமைந்த மடலத்தை அமைத் துள்ளார். காதல் என்னும் நுண்ணுணர்வை நயமுற விளக்கும் பாக்கள் நம் கருத்தைக் கவரும் இலக்கிய விருந்தாக வழங்கப் பட்டுள்ளன.

தலைவனும் தலைவியும் துயரத்தைப் பெரிதும் அனுபவிக்கும் பிரிவு என்னும் நிகழ்ச்சி, பிரிந்தோர்க்கு மட்டுமன்றி அவர்தம் பிரிவுத் துயரைக் கண்டோர்க்கும் கேட்டோர்க்கும்கூடத் துன்பம் நல்குவதாகும். இந்நிலையில் மூன்று நிலைக்களன்களில் அமைந்த அத்தகைய பிரிவுகளைத் தொகுத்துரைக்கும் பரத்தையிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, போர்வயிற்பிரிவு

என்னும் தலைப்புகளிலமைந்த மூன்று மடலங்களை வழங்கி யுள்ளார்.

பரத்தையிற்பிரிவு என்பது மட்டும் கேட்ட மாத்திரத்திலே நம்மை முகஞ்சுளிக்க வைக்கிறது. ஆனால், இம்மூன்று பிரிவு களுமே தலைவனுக்கும் தலைவிக்குமான காதலை மேலும் வைரம் பாயச்செய்யும் வினை ஊக்கிகள் என்பதனை இப்பாடல் களையும் சிலம்பொலி செல்லப்பனாரின் விளக்கத்தையும் படித்தவுடன் புரிந்துகொள்கிறோம்.

தலைவனும் தலைவியும் களவுக்காலத்தில் சந்தித்துக் கொள்ளும் குறியிடங்கள் பகற்குறி, இரவுக்குறி என இருவகைப் படும். தலைமகன் தோழியிடம் குறிநேர்தலும், குறியிடத்தைத் தோழி தலைவிக்கு அறிவுறுத்தலும், தலைவன் அல்லகுறிப்பட்டு ஆற்றாது வருந்துதலும், தலைவன் குறியிடத்து வாராது காலந்தாழ்க்கும்போது தலைவி வருந்துதலும் எனப் பல்வேறு களவுக்காலச் சூழல்களை நயமுற விளக்கும் பாடல் தொகுப்பாக குறியிடம் என்னும் தலைப்பிலமைந்த மடலம் அமைந்துள்ளது.

நிறைவாக 'மங்கல மனையறம்' என்னும் தலைப்பிலமைந்த மடலம் தலைவனும் தலைவியும் இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்தும் பாங்கினை விளக்கும் பாடல் தொகுப்பாக விளங்கு கிறது.

இம்மடலத்தைத் திருமணப்பரிசாக மணமக்களுக்கு வழங்க வேண்டும். குடும்பம் என்னும் சமூக அமைப்பு வலிவுபெற்று வழிவழிச் சிறத்தற்கு வழிகாட்டும் பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பு, அனைவரும் பயில வேண்டிய நூல் என்பதில் ஐயமில்லை.

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் என்னும் புதினத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது சோழர் வாழ்ந்த காலத்திற்கே சென்றுவிடுவோம்; ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்நாட்டில் நாம் உலாவிக்கொண்டிருக்கும்போது திடீரெனக் கல்கி வந்து முகங்காட்டுவார். அதனைப் போன்றே இம் மடலங்களைப் படித்துக்கொண்டு நாம் கற்பனையுலகத்தில்

உலாவிக்கொண்டிருக்கும்போது சிலம்பொலி செல்லப்பனார் முகம் காட்டுகிறார்; தம் அகம் காட்டுவதற்காகத்தான்!

இத்தகைய சுவையான குறுக்கீடுகளைத் தொகுத்துப் பட்டியலிட விரும்பவில்லை. ஒரே ஓர் எடுத்துக்காட்டை வழங்குகிறேன்:

பெருந்திணை என்னும் தலைப்பிலமைந்த மடலத்தின் மூன்றாவது பக்கத்தில் தாகம் கொண்டவன் தண்ணீரைப் பருகுவதைப் போலக் காமம் கொண்டவன் கன்னியை நுகரலாம் என்பது அந்நாளைய ஆணாதிக்கச் சிந்தனை ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளமை நம் சிந்தனையைத் தூண்டுகின்றதன்றோ?

மொத்தத்தில் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம்.

மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாக வும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது.

அருமையிலும் அருமையான இப்படைப்பை வழங்கிய இச்சான்றோருக்குப் பல்கலைக்கழகங்கள் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கித் தங்கள் மதிப்பை மேம்படுத்திக்கொள்ளலாம்.

தமிழ் மாணவர்கள் அனைவரும் தவறாது பயிலவேண்டிய பாட நூல்; தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் இந்நூலின்மூலம் தமிழ்ச் செவ்வியல் அக இலக்கியத்தின் பிழிவைப் பருகிக் களிக்கலாம்.

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் - சிலம்பொலி சு. செல்லப்பன்	iii
அகத்திணை அஞ்சிறைத் தும்பி - கவிமாமணி தேனி திருமாவளவன்	viii
ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம் - பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்	xxii
தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல் - பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்	xlii
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம் - பதிப்புரை	xlviii
அகத்திணை	1 - 16

இயற்கைப் புணர்ச்சி

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 171	திரைஇமிழ்	அம்மூவனார்	55
ஐங்குறுநூறு 299	குன்ற நாடன்	கபிலர்	56
குறுந்தொகை 2	கொங்குதேர்	இறையனார்	45
குறுந்தொகை 40	யாயும்	செம்புலப்பெயனீரார்	38
குறுந்தொகை 70	ஒடுங்கூஎர்	ஓரம்போகியார்	44
குறுந்தொகை 116	யான்நயந்து	இளங்கீரனார்	47
குறுந்தொகை 137	மெல்இயல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	39
குறுந்தொகை 142	சுனைப்பூ	கபிலர்	49
குறுந்தொகை 300	குவளை	சிறைக்குடி ஆந்தையார்	41
சிலப்பதிகாரம், கானல்வரி 11	கயல்எழுதி	இளங்கோவடிகள்	26

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
சிலப்பதிகாரம், கானல்வரி 12	எறிவளைகள்	இளங்கோவடிகள்	25
சிலப்பதிகாரம், கானல்வரி 13	புலவுமீன்	இளங்கோவடிகள்	20
திருக்குறள் 1081	அணங்குகொல்	திருவள்ளுவர்	19
திருக்குறள் 1082	நோக்கினாள்	திருவள்ளுவர்	21
திருக்குறள் 1083	பண்டறியேன்	திருவள்ளுவர்	22
திருக்குறள் 1084	கண்டார்	திருவள்ளுவர்	23
திருக்குறள் 1085	கூற்றமோ	திருவள்ளுவர்	24
திருக்குறள் 1086	கொடும்புருவம்	திருவள்ளுவர்	27
திருக்குறள் 1087	கடாஅக்	திருவள்ளுவர்	28
திருக்குறள் 1088	ஒண்ணுதற்(கு)	திருவள்ளுவர்	29
திருக்குறள் 1089	பிணைஏர்	திருவள்ளுவர்	30
திருக்குறள் 1090	உண்டார்கண்	திருவள்ளுவர்	31
திருக்குறள் 1091	இருநோக்(கு)	திருவள்ளுவர்	32
திருக்குறள் 1092	கண்களவு	திருவள்ளுவர்	33
திருக்குறள் 1093	நோக்கினாள்	திருவள்ளுவர்	35
திருக்குறள் 1094	யான்நோக்கும்	திருவள்ளுவர்	36
திருக்குறள் 1095	குறிக்கொண்டு	திருவள்ளுவர்	37
திருக்குறள் 1101	கண்டு,கேட்டு	திருவள்ளுவர்	50
திருக்குறள் 1111	நல்நீரை	திருவள்ளுவர்	51
திருக்குறள் 1121	பாலொடு	திருவள்ளுவர்	52
திருக்குறள் 1122	உடம்பொ(டு)	திருவள்ளுவர்	42
நற்றிணை 8	அல்குபடர்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	53
நற்றிணை 13	எழாஅய்	கபிலர்	57

இடந்தலைப்பாடு

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 197	இலங்குவளை	அம்மூவனார்	62
குறுந்தொகை 62	கோடல்	சிறைக்குடி ஆந்தையார்	61
சிலப்பதிகாரம், கானல்வரி 17	கடல்புக்கு	இளங்கோவடிகள்	70
சிலப்பதிகாரம், கானல்வரி 18	கொடுங்கண்	இளங்கோவடிகள்	71
சிலப்பதிகாரம், கானல்வரி 19	ஓடும்	இளங்கோவடிகள்	72
திருக்குறள் 1102	பிணிக்கு	திருவள்ளுவர்	63
திருக்குறள் 1112	மலர்காணின்	திருவள்ளுவர்	65
திருக்குறள் 1123	கருமணியில்	திருவள்ளுவர்	74
நற்றிணை 155	ஒள்இழை	பராயனார்	66
நற்றிணை 39	சொல்லின்	மருதனிளநாகனார்	68

பாங்கற் கூட்டம்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 130	அம்ம வாழி	வெண்கண்ணனார்	105
அகநானூறு 140	பெருங்கடல்	அம்மூவனார்	87
அகநானூறு 390	உவர்விளை	அம்மூவனார்	89
ஐங்குறுநூறு 172	ஒண்தொடி	அம்மூவனார்	92
ஐங்குறுநூறு 173	இரவி	அம்மூவனார்	133
ஐங்குறுநூறு 174	அணங்குடைப்	அம்மூவனார்	140
ஐங்குறுநூறு 175	எமக்குநயந்	அம்மூவனார்	143
ஐங்குறுநூறு 191	கடல்கோடு	அம்மூவனார்	112
ஐங்குறுநூறு 255	குன்றக்	கபிலர்	114
குறுந்தொகை 58	இடிக்கும்	வெள்ளிவீதியார்	103
குறுந்தொகை 72	பூஒத்து	மள்ளனார்	78
குறுந்தொகை 78	பெருவரை	நக்கீரனார்	130
குறுந்தொகை 95	மால்வரை	கபிலர்	84
குறுந்தொகை 100	அருவிப்	கபிலர்	85
குறுந்தொகை 119	சிறுவெள்	சத்திநாகனார்	77
குறுந்தொகை 129	எலுவ	கோப்பெருஞ்சோழன்	82
குறுந்தொகை 132	கவவுக்	சிறைக்குடி ஆந்தையார்	102
குறுந்தொகை 136	காமம்	மிளைப்பெருங்கந்தனார்	132
குறுந்தொகை 156	பார்ப்பன	பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்	110

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 184	அறிகரி	ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்	100
குறுந்தொகை 204	காமம்	மிளைப்பெருங்கந்தனார்	129
குறுந்தொகை 206	அமிழ்தத்	ஐயூர் முடவனார்	127
குறுந்தொகை 272	தீண்டலும்	ஒருசிறைப் பெரியனார்	123
குறுந்தொகை 280	கேளிர்	நக்கீரர்	122
குறுந்தொகை 291	சுடுபுன	கபிலர்	115
சிலப்பதிகாரம், கானல்வரி 8	துறைமேய்	இளங்கோவடிகள்	138
சிலப்பதிகாரம், கானல்வரி 9	நிணம்கொள்	இளங்கோவடிகள்	107
சிலப்பதிகாரம், கானல்வரி 10	வலைவாழ்நர்	இளங்கோவடிகள்	109
சிலப்பதிகாரம், கானல்வரி 14	பொழில்தரு	இளங்கோவடிகள்	80
சிலப்பதிகாரம், கானல்வரி 15	திரைவிரி	இளங்கோவடிகள்	79
சிலப்பதிகாரம், கானல்வரி 16	வளைவளர்	இளங்கோவடிகள்	81
திணைமாலை நூற்றைம்பது 9	வஞ்சமே	கணிமேதாவியார்	117
திணைமாலை நூற்றைம்பது 28	மேகந்தோய்	கணிமேதாவியார்	136
திணைமாலை நூற்றைம்பது 30	திங்களுள்	கணிமேதாவியார்	93

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 32	பானல்அம்	கணிமேதாவியார்	94
திணைமாலை நூற்றைம்பது 33	பெருங்கடல்	கணிமேதாவியார்	96
திணைமாலை நூற்றைம்பது 45	தாழை	கணிமேதாவியார்	134
திணைமாலை நூற்றைம்பது 47	பண்ணாது	கணிமேதாவியார்	137
திணைமாலை நூற்றைம்பது 60	திரையலறிப்	கணிமேதாவியார்	113
திணைமொழி ஐம்பது 49	மயில்கொல்	கண்ணஞ்சேந்தனார்	76
திருக்குறள் 1103	தாம்வீழ்வார்	திருவள்ளுவர்	101
திருக்குறள் 1104	நீங்கின்	திருவள்ளுவர்	142
திருக்குறள் 1114	காணின்	திருவள்ளுவர்	141
நற்றிணை 160	நயனும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	98
நற்றிணை 95	கழைபாடு	கோட்டம்பலவனார்	118
நற்றிணை 185	ஆனா	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	125
நற்றிணை 201	மலைஉறை	பரணர்	120
நாலடியார் 395	கண்கயல்	சமணப்புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	97

பாங்கியிற் கூட்டம்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 32	நெருநல்	நல்வெள்ளியார்	310
அகநானூறு 180	நகைநனி	கருவூர்க் கண்ணம்பாளனார்	301
அகநானூறு 200	நிலாவின்	உலோச்சனார்	344
அகநானூறு 230	உறுகழி	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	350
அகநானூறு 250	எவன்கொல்?	செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்	288
அகநானூறு 268	அறியாய்	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	285
அகநானூறு 310	கடுந்தேர்	நக்கீரர்	341
அகநானூறு 330	கழிப்பூக்	உலோச்சனார்	313
அகநானூறு 356	மேல்துறைக்	பரணர்	304
அகநானூறு 380	தேர்சேண்	மதுரை மருதனிளநாகனார்	278
அகநானூறு 392	தாழ்பெருந்	மோசிகீரனார்	281
ஐங்குறுநூறு 91	நெறிமருப்பு	ஓரம்போகியார்	192
ஐங்குறுநூறு 176	பண்பும்	அம்மூவனார்	153
ஐங்குறுநூறு 177	தவறுஇலர்	அம்மூவனார்	155

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 178	தோளும்	அம்மூவனார்	161
ஐங்குறுநூறு 185	அலங்கிதழ்	அம்மூவனார்	163
ஐங்குறுநூறு 187	நொதும	அம்மூவனார்	243
ஐங்குறுநூறு 211	நெய்யொடு	கபிலர்	320
ஐங்குறுநூறு 256	குன்றக்	கபிலர்	194
ஐங்குறுநூறு 298	மழைவரவு	கபிலர்	346
ஐந்திணை ஐம்பது 14	புனைபூந்	மாறன் பொறையனார்	252
ஐந்திணை ஐம்பது 47	பெருங்கடல்	மாறன் பொறையனார்	160
கலித்தொகை 37	கயமலர்	கபிலர்	316
கலித்தொகை 47	ஒன்று	கபிலர்	291
கலித்தொகை 55	மின்ஒளிர்	கபிலர்	332
கலித்தொகை 59	தளைநெகிழ்	கபிலர்	323
கலித்தொகை 60	சுணங்குஅணி	கபிலர்	271
கலித்தொகை 61	எல்லா	கபிலர்	267
கலித்தொகை 63	நோக்குங்கால்	கபிலர்	337
கலித்தொகை 64	அணிமுகம்	கபிலர்	357
கலித்தொகை 76	புனைஇழை	மருதனிளநாகனார்	328
குறுந்தொகை 1	செங்களம்	திப்புத்தோளார்	241
குறுந்தொகை 13	மாசுஅறக்	கபிலர்	353

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 14	அமிழ்துபொதி	தொல்கபிலர்	214
குறுந்தொகை 17	மாஎன	பேரெயின் முறுவலார்	212
குறுந்தொகை 32	காலையும்	அள்ளூர் நன்முல்லையார்	238
குறுந்தொகை 81	இவளே	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	348
குறுந்தொகை 165	மகிழ்ந்ததன்	பரணர்	183
குறுந்தொகை 173	பொன்நேர்	மதுரைக் காஞ்சிப்புலவர்	216
குறுந்தொகை 176	ஒருநாள்	வருமுலையாரித்தியார்	263
குறுந்தொகை 182	விழுத்தலைப்	மடல்பாடிய மாதங்கீரனார்	211
குறுந்தொகை 212	கொண்கன்	நெய்தற்கார்க்கியன்	262
குறுந்தொகை 222	தலைப்புணைக்	சிறைக்குடி ஆந்தையார்	147
குறுந்தொகை 230	அம்ம வாழி	அறிவுடை நம்பி	259
குறுந்தொகை 276	பணைத்தோள்	கோழிக் கொற்றன்	221
குறுந்தொகை 286	உள்ளிக்	எயிற்றியனார்	186
குறுந்தொகை 298	சேரி	பரணர்	265
குறுந்தொகை 337	முலையே	பொதுக்கயத்துக் கீரந்தையார்	195
சிலப்பதிகாரம், கானல் வரி 28	தீங்கதிர்	இளங்கோவடிகள்	245
சிலப்பதிகாரம், கானல் வரி 31	புணர்துணை	இளங்கோவடிகள்	258

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
சிலப்பதிகாரம், கானல் வரி 43	கைதை	இளங்கோவடிகள்	255
சிலப்பதிகாரம், கானல் வரி 44	கானல்	இளங்கோவடிகள்	256
சிலப்பதிகாரம், கானல் வரி 45	அன்னம்	இளங்கோவடிகள்	257
திணைமாலை நூற்றைம்பது 1	நறைபடர்	கணிமேதாவியார்	152
திணைமாலை நூற்றைம்பது 8	அவட்காயின்	கணிமேதாவியார்	167
திணைமாலை நூற்றைம்பது 16	நாள்நாகம்	கணிமேதாவியார்	209
திணைமாலை நூற்றைம்பது 17	அறி(கு)அவளை	கணிமேதாவியார்	164
திணைமாலை நூற்றைம்பது 19	பாலொத்த	கணிமேதாவியார்	169
திணைமாலை நூற்றைம்பது 20	நாள்வேங்கை	கணிமேதாவியார்	244
திணைமாலை நூற்றைம்பது 21	பொன்மெலியும்	கணிமேதாவியார்	247
திணைமாலை நூற்றைம்பது 23	பெருமலை	கணிமேதாவியார்	166
திணைமாலை நூற்றைம்பது 24	நறுந்தண்	கணிமேதாவியார்	185

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 31	தன்குறையி(து)	கணிமேதாவியார்	254
திணைமாலை நூற்றைம்பது 40	தன்துணை	கணிமேதாவியார்	260
திணைமாலை நூற்றைம்பது 42	கவளக்	கணிமேதாவியார்	159
திணைமொழி ஐம்பது 5	விரைகமழ்	கண்ணஞ்சேந்தனார்	197
திணைமொழி ஐம்பது 6	யானை	கண்ணஞ்சேந்தனார்	198
திணைமொழி ஐம்பது 8	வேங்கை	கண்ணஞ்சேந்தனார்	199
திருக்குறள் 1096	உறாஅ	திருவள்ளுவர்	231
திருக்குறள் 1097	செறாஅச்	திருவள்ளுவர்	232
திருக்குறள் 1098	அசைஇயற்(கு)	திருவள்ளுவர்	233
திருக்குறள் 1099	ஏதிலார்	திருவள்ளுவர்	157
திருக்குறள் 1100	கண்ணொடு	திருவள்ளுவர்	156
திருக்குறள் 1105	வேட்ட	திருவள்ளுவர்	354
திருக்குறள் 1106	உறுதோறு	திருவள்ளுவர்	355
திருக்குறள் 1113	முறிமேனி	திருவள்ளுவர்	235
திருக்குறள் 1131	காமம்	திருவள்ளுவர்	223
திருக்குறள் 1132	நோனா	திருவள்ளுவர்	224

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1133	நாணொடு	திருவள்ளுவர்	225
திருக்குறள் 1134	காமக்	திருவள்ளுவர்	226
திருக்குறள் 1135	தொடலைக்	திருவள்ளுவர்	228
திருக்குறள் 1136	மடல்ஊர்தல்	திருவள்ளுவர்	229
திருக்குறள் 1137	கடல்அன்ன	திருவள்ளுவர்	230
நற்றிணை 25	அவ்வளை	பேரிசாத்தனார்	299
நற்றிணை 32	மாயோன்	கபிலர்	276
நற்றிணை 45	இவளே	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	187
நற்றிணை 75	நயன்இன்	மாமூலனார்	200
நற்றிணை 77	மலையன்	கபிலர்	170
நற்றிணை 80	மன்ற	பூதன்தேவனார்	207
நற்றிணை 101	முற்றா	வெள்ளியந்தின்னனார்	177
நற்றிணை 128	பகல்எரி	நற்சேந்தனார்	307
நற்றிணை 140	கொண்டல்	பூதங்கண்ணனார்	179
நற்றிணை 146	வில்லாப்	கந்தரத்தனார்	217
நற்றிணை 152	மடலே	ஆலம்பேரி சாத்தனார்	219
நற்றிணை 190	நோஇனி	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	205
நற்றிணை 204	தளிர்சேர்	மள்ளனார்	202

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 209	மலைஇடம்	நொச்சி நியமங்கிழார்	173
நற்றிணை 213	அருவி	கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்	149
நற்றிணை 220	சிறுமணி	குண்டுகட்பாலியாதனார்	250
நற்றிணை 245	நகையா	அல்லங்கீரனார்	248
நற்றிணை 265	இறுகுபுல்	பரணர்	181
நற்றிணை 301	நீள்மலைக்	பாண்டியன் மாறன் வழுதி	239
நற்றிணை 342	மாஎன	மோசிகீரனார்	296
நற்றிணை 349	கடுந்தேர்	மிளைகிழான் நல்வேட்டனார்	175
நற்றிணை 359	சிலம்பின்	கபிலர்	321
நற்றிணை 377	மடல்மா	மடல் பாடிய மாதங்கீரனார்	236
நற்றிணை 379	புன்தலை	குடவாயிற் கீரத்தனார்	190

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தியிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

இயற்கைப் புணர்ச்சி

பக். 19 முதல் 59 வரை

இடந்தலைப்பாடு

பக். 60 முதல் 74 வரை

பாங்கற் கூட்டம்

பக். 75 முதல் 144 வரை

பாங்கியிற் கூட்டம்

பக். 145 முதல் 362 வரை

இயற்கைப் புணர்ச்சி

தலைவன், தலைவியை எதிர்ப்பட, அவ்விருவரும் மனம் இயைந்து தாமே கூடுதல் இயற்கைப் புணர்ச்சி.

தலைவன் கூற்று

திருக்குறள் 1081 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

(தான் கண்ட) தலைமகள் உருவு முதலியன முன் கண்டறிவன அன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றுக் கூறியது.

கூற்று விளக்கம்

தனியே நின்ற தலைவியைக் கண்ணுற்ற தலைவன் அவள் வனப்பு, தான் முன் கண்டறிந்தவற்றினும் சிறந்திருத்தலின், 'இவள் தெய்வ மகளாயிருப் பாளோ' என ஐயுற்றுக் கூறியது.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.

தெளிவுரை

'அதோ என் முன்னே காணப்பெறும் உருவம் தெய்வப் பெண்ணோ, அழகே உருவான மயிலோ, பெருமை பொருந்திய காதணிகள் பூண்ட அழகிற்சிறந்த மானுடப்பெண் ஒருத்தியோ? என் மனம் இவளை இன்னாளென்று துணிய இயலாது மயங்கு கின்றது.'

கருத்து

இங்கு நிற்பவள் தெய்வ மகளா, மானுடப்பெண்ணா?

விளக்கம்

அழகொழுக நிற்கும் உருவத்தைக் கண்டவுடன் அணங்கோ என்றான்; பிறகு, சாயலைப் பார்த்து மயிலோ என்றான்; அதன் பின் கண்ணிமைத்தல், புன்னகை புரிதல் முதலிய செயல்நலம் கண்டு மானுடப்பெண்ணோ என மயங்கி நின்றான்.

சொற்பொருள்

1. அணங்கு - வருத்தும் தெய்வம்; ஆய்மயில் - ஆராய்ந்து நோக்கத்தக்க மயில்; கனம் குழை - பெருமை பொருந்திய காதணி (அணிந்துள்ள).
2. மாதர் - பெண்; மாலும் - மயங்குகின்றது.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 13 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வியந்து கூறுதல்.

கூற்று விளக்கம்

தனிமையில் எதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன், "இவள் காண்பாரை வருத்தும் அணங்கோ?" என்று அவளழகை வியந்து கூறுதல்.

புலவுமீன் வெள்உணங்கல் புள்ஓப்பிக் கண்டார்க்கு
அலவநோய் செய்யும் அணங்குஇதுவோ காணீர்!
அணங்குஇதுவோ காணீர்! அடும்புஅமர்தண் கானல்
பிணங்குநேர் ஐம்பால்ஓர் பெண்கொண் டதுவே.

தெளிவுரை

புலால் நாறும் வெள்ளிய மீன் வற்றலைக் கவர வரும் பறவைகளை ஓட்டி, தன்னைக் கண்டார் மனம் தடுமாற வருத்தம் செய்யும் அணங்கோ இவள்! அணங்குதான் அடும்ப மலர்கள் பொருந்திய குளிர்ந்த கானலிலே, அடர்ந்த ஐம்பாலான கூந்தலுடன் பெண் வடிவம் கொண்டு வந்துள்ளதோ?

கருத்து

இவள் பெண் அல்லள், கண்டாரை வருத்தும் அணங்கு; அவ்வணங்கு அழகிய பெண் வடிவம் கொண்டு இங்கு வந்து நிற்கிறது.

சொற்பொருள்

1. புலவு - புலால் மணம்; வெள் உணங்கல் - வெள்ளிய வற்றல்; புள் - பறவைகள்; ஓப்பி - ஓட்டி.
2. அலவ - மனம் தடுமாற.
3. அடும்பு அமர் - அடும்ப மலர்கள் பொருந்திய.
4. பிணங்கல் - நெருங்குதல்; ஐம்பால் - ஐந்தாய்ப் பகுத்துப் பின்னப்பட்ட கூந்தல்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1082 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினாலாய வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

அவள் தன்னைப் பார்த்த பார்வை, அழகு ஒரு படை கொண்டு தன்னைத் தாக்குவது போன்று இருந்தது என அவன் வியந்து கூறியது.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்(கு)அணங்கு
தானைக்கொண் டன்ன(து) உடைத்து.

தெளிவுரை

அழகிய தோற்றம் கொண்டவளை நான் நோக்கினேன்; அவளும் என்னை எதிர்நோக்கினாள். அந்தப் பார்வை, தாக்க வரும் தெய்வப்பெண் ஒருத்தி, தனக்குத் துணையாய் ஒரு படையையும் சேர்த்துக்கொண்டு வந்தது போன்றிருக்கிறது.

கருத்து

அவள் பார்வை என்னைத் தாக்க வந்த படையாய் இருக்கிறது.

விளக்கம்

இவன் பார்த்தபோது அவள் இவனைப் பாராதிருந்தால் இவனைப் புறக்கணித்தாள் என்பதாகும். பார்வைக்குப் பார்வை செலுத்தினாள் என்பதால் அவள் இவனைப் புறக்கணிக்கவில்லை என்பது தெளிவாயிற்று.

சொற்பொருள்

1. நோக்கினாள் - (இத்தகைய) அழகினைக் கொண்டவள்; நோக்கு - என் நோக்கிற்கு; எதிர் நோக்குதல் - நேரே எதிர்த்துப் பார்த்தல்; தாக்கு அணங்கு - தாக்கி வருத்தும் தெய்வ மகள்.
2. தானை - (தன்னுடன் ஒரு) சேனையையும்; கொண்டன்னது - கொண்டு வந்தாற்போன்றதொரு (கொடுமை); உடைத்து - உடையது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1083 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

மானுட மாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினாலாய வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

'பெண்ணின் கண்தான் கூற்றுவன்' என்பதை இவளைப் பார்த்ததும் அறிந்துகொண்டேன் எனத் தலைவன் கூறியது.

பண்டறியேன் கூற்றென் பதனை, இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு.

தெளிவுரை

கூற்று என்று சொல்லப்படுவதை முன்பு கேட்டறிந்தல்லது நேரில் பார்த்ததில்லை; இப்போது கண்டறிந்தேன்; அது பெண் தன்மையுடன் போரிட்டுத் தாக்கும் பெரிய கண்களைக் கொண்டதாய் இருக்கிறது.

கருத்து

இவள் கண்கள் காலனாய் நின்று என்னைக் கொல்கின்றன.

விளக்கம்

முன்பு அவள் பார்வை, படையைப் போன்று இருந்த தென்றவன், இப்போது அப்பார்வையைத் தன்னைக் கொல்ல வந்த கூற்றுவன் என்கிறான்.

சொற்பொருள்

1. பண்டு - இதற்கு முன்பு; கூற்று - கூற்றுவன், இயமன்; இனி - இப்போது.
2. பெண் தகையால் - பெண் தன்மையோடு; பேர் - பெரிய; அமர் - போர் (செய்யும்); கட்டு - கண்களைக் கொண்டது (என்பது தெரிந்தேன்).

தலைவன் கூற்று

திருக்குறள் 1084 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன், தலைமகள் பார்வையினாலான வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

'பெண்மை நலமிக்க இத்தலைவியின் கண்கள் காண்பார் உயிரைப் பறிப்பனபோல் தோன்றுகின்றனவே' எனத் தலைவன் தன் வருத்தம் கூறியது.

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்(கு) அமர்த்தன கண்.

தெளிவுரை

பெண்தன்மை கொண்டவள், இவ்விளம்பெண். இவள் கண்கள், தம்மைக் கண்டவரைக் கொல்லும் தோற்றத்தைக் கொண்டு கொடியனவாயிருக்கின்றனவே!

கருத்து

அழகிய இப்பெண்ணின் கண்கள் கொலை செய்யும் இயல்பினவாய் உள்ளனவே! இஃது ஏன்?

விளக்கம்

இப்பெண்ணின் கண்கள் தம்மைக் காணும் ஆடவரின் உயிரையே குடித்துவிடும் ஆற்றல் வாய்ந்த தோற்றம் கொண் டனவாய் அமைந்துள்ளன.

சொற்பொருள்

1. கண்டார் - தம்மைப் பார்த்தவர்; உயிர் உண்ணும் - உயிரைக் குடிக்கும்; தோற்றத்தால் - உருவப்பொலிவுடன்; பெண்தகை - பெண்மைத் தன்மை கொண்ட.
2. பேதைக்கு - இளமகளுக்கு; கண் அமர்த்தன - கண்கள் பொருந்தி யிருக்கின்றன.

தலைவன் கூற்று

திருக்குறள் 1085 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன், தலைமகள் பார்வையினாலான வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் கண்கள் இன்பமும் துன்பமும் ஒருங்கே விளைவிக்கின்றனவே எனத் தலைவன் கூறியது.

கூற்றமோ? கண்ணோ? பிணையோ? மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

தெளிவுரை

இந்த இளம்பெண்ணின் பார்வை என்னைக் கொல்வதுபோல வருத்துவதால் கூற்றமோ? இடையிடையே மருண்டு பார்ப்பதால் பெண்மானோ? இயல்பான மானுடக் கண்தானோ? இப்பெண்ணின் பார்வை இம்மூவகைத் தன்மையையும் கொண்டதாயிருக்கிறது.

கருத்து

இவள் கண்கள் உயிர் பறிக்கும் கூற்றத்தின் விழிகளா? மருண்டு நோக்கும் பெண் மானின் விழிகளா? இயல்பாய்ப் பார்க்கும் மானுட விழிகளா? இம்மூன்றுமாய்த் தோன்றுகின்றனவே!

விளக்கம்

வருத்தி நிற்கும் தன்மையால் கூற்றமாயும், அன்பு நோக்கினால் மானுடக் கண்களாகவும், மருண்ட பார்வையால் மானின் கண்களாகவும் அவள் பார்வை அமைந்துள்ளது.

சொற்பொருள்

1. கூற்றமோ - கூற்றுவனோ?; கண்ணோ - மானுடக் கண்தானோ?; பிணையோ - (மருண்டு நோக்குதலால்) பெண் மானோ?; மடவரல் - இவ்விளம் பெண்ணின்.
2. நோக்கம் - பார்வை; இம்மூன்றும் உடைத்து - இம்மூன்று தன்மைகளையும் கொண்டது.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 12 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வியந்து கூறுதல்.

கூற்று விளக்கம்

தனிமையில் எதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் அவள் கண்ணழகினை வியந்து கூறியது.

எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
கறைகெழுவேல் கண்ணோ கடுங்கூற்றம் காணீர்!
கடுங்கூற்றம் காணீர்! கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயல் மகள்ஆ யதுவே.

தெளிவுரை

சங்கினை அறுத்துச் செய்யப்பட்டவையும் கைகளில் ஒலி யெழுப்புபவையுமான வளையல்களையும், குருதிக்கறை படிந்த வேல் போன்று செவ்வரி படர்ந்து இருபுறமும் ஓடுகின்ற கண்களையும் கொண்ட இவள் கொடிய கூற்றமோ? காணீர்! அக்கூற்றந்தான் கடல்வளம் கொண்டு வாழ்பவர் சிற்றூரிலே அழகு பொருந்திய மெல்லிய இயல்பு கொண்ட பெண் ஒருத்தி யின் உருவிலே வந்துள்ளதோ? காணீர்!

கருத்து

இவள் பெண் அல்லள்; கூற்றமே பெண் உருக்கொண்டு இங்கு வந்து நிற்கிறது.

சொற்பொருள்

1. எறிவளைகள் - சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்கள்; ஆர்ப்ப - ஒலிக்க; இருமருங்கும் - இருபக்கங்களிலும்.
2. கறை கெழு வேல் - குருதிக்கறை படிந்த வேல்; கடும் கூற்றம் - கொடிய கூற்றுவன்.
3. சீறூர் - சிற்றூர்.
4. மடம் கெழு - அழகு பொருந்திய; சாயல் - மெல்லிய இயல்பு கொண்ட; மகள் - பரதவர் மகள்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 11 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வியந்து கூறுதல்.

கூற்று விளக்கம்

தனிமையில் நேர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் அவள் முக அழகை வியந்து கூறுதல்.

கயல்எழுதி வில்எழுதிக் கார்எழுதிக் காமன்
செயல்எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!
திங்களோ காணீர்! திமில்வாழ்நர் சீறூர்க்கே
அம்கண்ஏர் வானத்து அரவுஅஞ்சி வாழ்வதுவே.

தெளிவுரை

கண் எனக் கயலையும், புருவம் என வில்லையும், கூந்தல் எனக் கார்மேகத்தையும் எழுதி, அவற்றுடன் மற்றவரை வருத்தும் காமன் தொழிலையும் எழுதி முடித்துள்ள திங்கள்தான் இவள் முகமோ? வானில் இருந்தால் பாம்புகள் (இராகு, கேது) கவரும் என்று அஞ்சி, படகு கொண்டு வாழ்க்கை நடத்தும் பரதவர்கள் வாழும் இந்தச் சிறிய ஊரில் வந்து மறைந்து வாழ்கிறதோ?

கருத்து

வானத்து முழுமதிதான் இங்கு வந்து நிற்கிறதோ?

விளக்கம்

முகத்தைத் திங்கள் என்கிறான். திங்கள் வானத்திலிருந்து பாம்புக்கு அஞ்சி மண்ணுலகிற்கு இறங்கி வந்துவிட்டதாம். பாம்புகள் தெரிந்துகொள்ளாமலிருப்பதற்காகவே கயலையும், வில்லையும், முகிலையும் முறையே கண்களாகவும், புருவங் களாகவும், கூந்தலாகவும் எழுதிக்கொண்டதாம்.

குறிப்பு

திங்களை இராகு, கேது ஆகிய பாம்புகள் விழுங்குவதால், ‘நிலவு மறைப்பு’ (சந்திர கிரகணம்) தோன்றுகிறது என்னும் தொன்மக்குறிப்பு இங்கே கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கயல் எழுதி - கயல் மீனைக் கண்ணாய் வரைந்துகொண்டு; வில் எழுதி - வில்லைப் புருவமாய் எழுதிக்கொண்டு; கார் எழுதி - மேகத்தைக் கூந்தலாய் வரைந்துகொண்டு.
2. காமன் செயல் எழுதி - காமவேளின் (மன்மதனின்) வருத்தும் செயலையும் எழுதிக்கொண்டு; தீர்ந்த - முடித்துள்ள.
3. திமில் வாழ்நர் - படகு கொண்டு வாழ்க்கை நடத்திவரும் பரதவர்கள்; சீறூர் - சிறிய ஊர்.
4. அரவு - பாம்பு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1086 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகளது புருவத்தினாலான வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் புருவ வில், காமன் அம்பை எய்து தன்னைக் கலங்கச் செய்வதாய்த் தலைவன் கூறியது.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்(கு)அஞர்
செய்யல மன்இவள் கண்.

தெளிவுரை

வளைந்த இவள் புருவங்கள் வளையாது நேராய் நின்று தடுத்து மறைத்திருக்குமாயின் இவள் கண்கள் நான் நடுங்கும் படியான துன்பத்தைச் செய்ய மாட்டா.

கருத்து

இவள் வளைந்த விற்புருவமே என்னை நடுங்கச்செய்கிறது.

விளக்கம்

கண்ணினும் மேலான இடத்தில் புருவம் அமர்ந்திருப்பதால், கண்ணை இடித்து மொழியவும் தடுத்து நிறுத்தவும் அது வல்லமை கொண்டது; ஆனால், செய்யவில்லையே!

சொற்பொருள்

1. கொடும் புருவம் - வளைந்த புருவங்கள்; கோடா - வளையாது, நேராய் நின்று; மறைப்பின் - தடுப்பின்; நடுங்குஅஞர் - நடுங்கும் படியான துன்பம்.
2. செய்யல - செய்ய மாட்டா.

தலைவன் கூற்று

திருக்குறள் 1087 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகளின் முலைகளினாலான வருத்தங்கூறியது.

கூற்று விளக்கம்

'கொங்கைகளை அவள் மறைத்து வைக்காவிடில், அவை மதயானைபோல் பாய்ந்து கொல்லும் தன்மையன' எனத் தலைவன் கூறியது.

கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

தெளிவுரை

இப்பெண்ணின் சாயாத முலைகளின்மேல் அமைந்துள்ள கச்சு, மதயானையின்மேல் போர்த்த முகபடாம் போன்றிருக்கிறது.

கருத்து

சாயாத இவள் முலைமேல் இட்ட துகில், மதயானையின் மத்தகத்தின் மேலிட்ட முகபடாம் போன்று இருக்கிறது.

குறிப்பு

பாகன் தவிர வேறு எவரும் யானையின் முகபடாத்தைத் தொட இயலாததுபோல, காதலன் தவிர வேறு எவரும் காதலியின் முலைக் கச்சினைத் தொட இயலாது என்னும் குறிப்புடையது.

விளக்கம்

'மதயானையின் முகத்தை முகபடாம் மூடியிருப்பதுபோல் இவள் முலைகளைத் துகில் மூடியுள்ளது; இது தடையாய் இல்லையேல் அவை என்னை உடனே கொல்லும்' என்று உள்ளமுடைந்து தலைவன் சொல்லுகின்றனன். 'முலைமேல் துகில், களிற்றின்மேல் கண்படாம்.'

சொற்பொருள்

1. கடாஅக் களிறு - மத யானை; (கடாம் - யானை மதம்); கண்படாம் - கண்ணை மறைக்கும்படி இடுகின்ற முகபடாம் (முகபடாம் - யானையின் நெற்றிப்பட்டம்); மாதர் - பெண்.
2. படாமுலை - சாயாத முலை; துகில் - கச்சு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1088 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகளின் நுதலினாலாய வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

'தலைவியின் சிறிய நெற்றி என் பெரும் வலிமையை அழித்துவிட்டதே' எனத் தலைவன் கூறியது.

ஒள்நுதற்(கு) ஓஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

தெளிவுரை

போர்க்களத்தில் என் பகைவர்களும் எதிர்க்க அஞ்சுகின்ற என் பெருவலிமை, இப்பெண்ணின் ஒளிபொருந்திய சிறு நெற்றியைக் கண்டவுடன், ஐயகோ! அழிந்துவிட்டதே.

கருத்து

பகைவரும் அஞ்சி நடுங்கும் என் பெருவலிமையை, இப்பெண்ணின் சிறிய நெற்றி அழித்துவிட்டதே!

விளக்கம்

வல்லவர் எவரையும் வெல்லவல்ல என் வலிமை, இம் மெல்லியலாளுக்கு மெலிந்து தொலைந்ததே!

சொற்பொருள்

1. ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; உடைந்தது - அழிந்தது; ஞாட்பு - போர்க்களம்.
2. நண்ணார் - பகைவர்; உட்கும் - அஞ்சும்; பீடு - பெருமிதம், பெரு வலிமை.

தலைவன் கூற்று

திருக்குறள் 1089 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகளின் அணிநலத்தாலாய வருத்தம் கூறியது.

கூற்று விளக்கம்

'இவள் தன் இயற்கை அழகினைச் செயற்கையழகால் சிதைப்பதேன்?' எனத் தலைவன் கூறியது.

பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்(கு)
அணிஎவனோ ஏதில தந்து.

தெளிவுரை

புறத்தே பெண்மான் ஒத்த பார்வையழகையும் அகத்தே நாணத்தையும் கொண்ட இவளுக்கு, (பார்வையும் நாணமும்) இயற்கையிலேயே அணிகளாய் அமைந்திருக்க, செயற்கையான பிற அணிகளை அணிவதால் என்ன பயனோ?

கருத்து

இவள் இயற்கை அழகைச் செயற்கை அணிகள் சிறக்கச் செய்யா. அவ்வாறிருக்க அவற்றை ஏன் அணிவிக்கின்றனர்?

விளக்கம்

இவளுக்கு உடற்சுமையையும் எனக்குப் பெருவருத்தத்தையும் தருதலன்றி இப்புறவணிகளால் எப்பயனுமில்லை என்கிறான் தலைவன்.

சொற்பொருள்

1. பிணைஏர் - பெண்மானை ஒத்த; மடநோக்கு - அழகிய மருண்ட பார்வை.
2. ஏதில - வேறான (சில அணிகளை); தந்து - கொண்டுவந்து; அணி எவனோ? - அணிவதால் என்ன பயனோ? (ஏதும் இல்லை என்றபடி).

தலைவன் கூற்று

திருக்குறள் 1090 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னை விரும்புகிறாள் என்பதுணர்ந்த தலைவன் கூறியது.

உண்டார்கண் அல்ல(து) அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

தெளிவுரை

காய்ச்சப்படும் இனிய மது, தன்னை உண்பவர்களுக்கு மட்டுமேயல்லாது, காதலிக்கப்பட்ட பெண்போலத் 'தன்னைக் கண்டவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தல் இல்லை.'

கருத்து

கள்ளை உண்டால்தான் மகிழ்ச்சி; பெண்ணையோ கண்டாலே மகிழ்ச்சி.

விளக்கம்

மது, உண்ட பிறகே மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால், காமமோ காதலியைக் கண்ட அளவிலேயே மகிழ்ச்சியைத் தருகிறது.

குறிப்பு

தன்னை அவள் நோக்கியதாலும், நோக்கிய பின்னரும் நின்றிருந்தமை யாலும் தலைவி தன்னை விரும்புகிறாள் என்பதைத் தலைவன் உணர்ந்து கொண்டான்.

சொற்பொருள்

1. அடுநறா - காய்ச்சிய கள்; உண்டார்கண் அல்லது - தன்னை உண்டவர்க்கு அல்லது; காமம் போல் - காமத்தைப்போல்.
2. கண்டார் - காண்பவரிடத்து; மகிழ்செய்தல் - மகிழ்ச்சியை உண்டாக்குதல்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1091 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினால் அறிந்தது.

கூற்று விளக்கம்

'தலைவி என்னை நோக்குவது என்மீது அன்பு செய்தற்பொருட்டே' எனத் தலைவன் உய்த்துணர்ந்து கூறியது.

இருநோக்(கு) இவள்உண்கண் உள்ள(து); ஒருநோக்கு
நோய்நோக்(கு),ஒன்(று) அந்நோய் மருந்து.

தெளிவுரை

மையூட்டப்பெற்ற இவள் கண்கள் என்மீது இருவகையான பார்வைகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் ஒரு பார்வை என்னிடத்தில் காமநோயை உண்டாக்குகிறது; இன்னொரு பார்வை அந்நோய்க்கு மருந்தாய் அமைகிறது.

கருத்து

இவளின் ஒரு நோக்குக் காமநோயை உண்டாக்குகிறது; இன்னொரு நோக்கோ அந்நோய்க்கு மருந்தாய் அமைகிறது.

விளக்கம்

இதுவரை தலைவனின் ஒருதலைக்காதலை மட்டுமே கொண்டு கைக்கிளையாயிருந்த காமநிலை, இருதலைக் காதலாகிய ஐந்திணையாய்ப் பெயரத் தொடங்குகிறது.

சொற்பொருள்

1. நோக்கு - பார்வை; உண்கண் - மையூட்டப் பெற்ற கண்.
2. நோய் நோக்கு - காமநோய் உண்டாக்கும் பார்வை.

தலைவன் கூற்று

திருக்குறள் 1092 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள் நோக்கினால் அறிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னை நோக்கும்போது நாணி நிற்கும் தலைவி, அவன் நோக்காதபோது அவனறியாமல் அவனை நோக்கும் அந்தக் கள்ளப் பார்வையால், அவள் தன்மீது காதற்குறிப்புக் கொண்டுள்ளதைத் தலைவன் அறிந்து கூறியது.

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

தெளிவுரை

இவள் தன் கண்களால் நான் அறியாவண்ணம் என்னை மறைவாய்ப் பார்க்கும் இடுகிய (சிறிய) பார்வை என் காதலை அரைகுறையாய் ஏற்பதன் அறிகுறி அன்று; முழுமையாய் ஏற்பதன் அறிகுறி; அறிவிப்பு.

கருத்து

கண்ணைச் சுருக்கி அரைகுறையாய்ப் பார்த்தும் பார்க்காததுபோலும் இருப்பது, என் காதலை அவள் முழுமையாய் ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாம்.

விளக்கம்

உள்ளப் புணர்ச்சி மெய்யுறு புணர்ச்சியாய் மாறும் எனத் தலைவன் உறுதி கொள்கிறான்.

உள்ளப் புணர்ச்சி என்பது, தலைவன், தலைவி ஆகிய இருவர் கருத்தும் ஒத்து நிற்பது. மெய்யுறு புணர்ச்சி என்பது, உடலைத் தொட்டுப் புணரும் புணர்ச்சி.

சொற்பொருள்

1. **கண் களவு கொள்ளும் - நான் அறியாவண்ணம் என்னைக் காண்கிற; சிறு நோக்கம் - அரைகுறைப் பார்வை.**
2. **செம்பாகம் - சரி பாதி; பெரிது - முழுமையானது.**

தலைவன் கூற்று

திருக்குறள் 1093 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் காதலை அவள் நோக்கினானும் நாணினானும் தலைமகன் அறிந்தது.

கூற்று விளக்கம்

'அவள் பார்வை எங்கள் அன்புப்பயிரை வளர்க்கும் நீராயிருப்பதை அறிந்தேன்' என்று தலைவன் கூறியது.

நோக்கினாள், நோக்கி இறைஞ்சினாள்; அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

தெளிவுரை

நான் அவளைக் காணாத நிலையில் அவள் என்னை அன்புடன் நோக்கினாள்; அங்ஙனம் நோக்கியவள், உடனே மனத்தில் ஒன்றை நினைந்து நாணத்துடன் தலைகுனிந்து நின்றாள்; அச்செயலின் குறிப்பு, எங்கள் இருவரிடையே தோன்றிய காதல்பயிர் வளர அவள் ஊற்றிய நீராய் இருந்தது.

கருத்து

எங்கள் காதல்பயிர் வளர, அவள் பார்வை, நீராய்ப் பாய்ந்தது.

விளக்கம்

'அவள் என்னைப் பார்த்தாள்; பார்த்தவள் உடனே நாணி நிலம் நோக்கித் தலைகவிழ்ந்தாள். அந்நிலை எங்கள் அன்புப் பயிர் வளர வார்த்த இன்பநீராயிருந்தது. பயிர் வளரப் பாத்தியுள் நீர்வார்த்தல்போல், என் உயிர் வளரக் காதல் பாத்தியுள் அவள் அன்புநீரை வார்த்து நிற்கிறாள்.'

சொற்பொருள்

1. நோக்கினாள் - (நான் அவளைப் பார்க்காதபோது அவள் என்னைப்) பார்த்தாள்; நோக்கி - (அப்பொழுது அவளை நான் பார்த்ததைப்) பார்த்து; இறைஞ்சினாள் - தலைகுனிந்தாள்; அஃது - அவ்வாறு அவள் பார்த்தது.

2. யாப்பினுள் - இருவரிடையேயும் தோன்றிய காதல் பிணிப்பாகிய பாத்தியுள்; அட்டிய நீர் - (அன்புப்பயிர் வளர்வதற்காகப்) பெய்த நீர்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1094 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் காதலை அவள் நோக்கினானும் நாணத்தினானும் தலைமகன் அறிந்தது.

கூற்று விளக்கம்

'அவள் கள்ளப் பார்வையும் புன்முறுவலும் அவள் என்மீது கொண்டுள்ள காதலைத் தெரிவிக்கின்றன' எனத் தலைவன் கூறியது.

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

தெளிவுரை

நான் அவளை உற்று நோக்கும்போது அவள் என்னை நேருக்கு நேர் பார்க்காமல் தலைகுனிந்து நிலத்தையே பார்த்திருப்பாள். அதைக் கண்டு, நான் அவளைப் பார்க்காதபோது அவள் என்னை முழுமையாய்ப் பார்த்து, தனக்குள்ளேயே மகிழ்ந்து புன்னகை கொள்வாள்.

கருத்து

அவள் புன்னகை, அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதற்கான அறிகுறி.

விளக்கம்

புன்னகையால் புணர்ச்சி விருப்பம் புலனாயிற்று. தலைவியின் அன்பான பார்வையினாலும் நாணத்தினாலும் அவளது உள்ளக் குறிப்பினைத் தலைவன் அறிந்துகொள்கிறான்.

சொற்பொருள்

1. யான் நோக்கும் காலை - நான் பார்க்கும்பொழுது; நிலன் நோக்கும் - அவள் நிலத்தைப் பார்த்துக் கவிழ்ந்து நின்றாள்; நோக்காக்கால் - பார்க்காத பொழுது.
2. தான்நோக்கி - அவள் என்னைப் பார்த்து; நகும் - சிரிப்பாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1095 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் காதலை அவள் நாணத்தினாலும் மகிழ்ச்சியினாலும் தலைமகன் அறிந்தது.

கூற்று விளக்கம்

'தலைவி நேருக்கு நேர் நோக்காது கடைக்கண்ணால் என்னைப் பார்த்து மகிழ்வது, அவள் என்னை விரும்புவதை அறிவிக்கிறது' எனத் தலைவன் கூறியது.

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

தெளிவுரை

அவள் என் முகத்தை நேருக்குநேர் பார்க்கவில்லை; ஆனால், ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்ப்பதுபோல, கடைக்கண்ணால் என்னைப் பார்த்துத் தனக்குள்ளே மகிழ்ந்தாள்.

கருத்து

என்னைக் கடைக்கண்ணால் நோக்கி மகிழ்வதால், இனி இவளை யடைதல் உறுதி.

விளக்கம்

அந்த அழகிய பெண், என் முகத்தை நேர்முகமாய்ப் பார்க்க வில்லையே அல்லாமல், ஒரு கண்ணைச் சிறிது சுருக்கி ஒருபுறஞ்

சாய்த்து, எதையோ பார்ப்பவள்போல் கடைக்கண்ணினால் என்னைப் பார்த்து மகிழ்ந்தாள்.

சொற்பொருள்

1. குறிக்கொண்டு நோக்காமை - (என்னைக்) குறியாய்க்கொண்டு பார்க்கவில்லை; அல்லால் - அவ்வளவே அல்லாமல்.
2. ஒருகண் சிறக்கணித்தாள் - ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்த்தாள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 40 **செம்புலப்பெயனீரார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், 'பிரிவர்' எனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்புவேறுபாடு கண்டு தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

முதல் நாள் தலைவனும் தலைவியும் கூடியிருந்தனர். தலைவி, 'இவர் பிரிவரே' என்று கருதி அஞ்சினாள். அவள் குறிப்புவேறுபாடு கண்டு தலைவன் கூறியது.

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

தெளிவுரை

என் தாயும் உன் தாயும் என்ன தொடர்புள்ளவர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவினர்? நானும் நீயும் இதற்கு முன் எந்த வகையில் அறிந்துள்ளோம்? இவ்வாறு உறவு எதுவும் இல்லாதிருந்தும் நம் இருவரின் அன்பு நெஞ்சங்கள், செம்மையான நிலத்துப் பெய்த மழைநீர் அந்நிலத்தால் உறிஞ்சப் பட்டு, அவற்றின் நிறமும் சுவையும் ஒன்றாய்க் கலந்துவிடுவது

போலத் தாமாகவே ஒன்றுபட்டன. நாம் இனிப் பிரியோம்; அஞ்ச வேண்டா.

கருத்து

நான் உன்னை எந்நாளும் பிரியேன்; அஞ்ச வேண்டா.

சொற்பொருள்

1. யாய் - (என்) தாய்; ஞாய் - (உன்) தாய்; யார் ஆகியரோ - என்ன தொடர்புள்ளவர்?
2. எந்தை - என் தந்தை; நுந்தை - உன் தந்தை; எம்முறை - எந்த வகையில்; கேளிர் - உறவினர்.
3. எவ்வழி - எம்முறையில்; அறிதும் - அறிந்துள்ளோம்.
4. செம்புலம் - செம்மையாக்கப்பட்ட நிலம், நன்செய்; பெயல்நீர் - பெய்யும் மழை.
5. கலந்தன - ஒன்றுபட்டன.

தலைவன் கூற்று

குறுந்தொகை 137 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சம் உணர்த்தியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கண்டு அளவளாவிய தலைவன், 'உன்னை நான் பிரியேன்' என்று கூறி, பிரிவு என்பது ஒன்று உண்டெடன அவள் உணரச் செய்தது.

மெல்இயல் அரிவை!நின் நல்அகம் புலம்ப,
நின்துறந்து அமைகுவென் ஆயின் என்துறந்து
இரவலர் வாரா வைகல்
பலஆ குக!யான், செலவுறு தகவே.

தெளிவுரை

மென்மைத்தன்மை வாய்ந்த அரிவையே! உன் நல்ல நெஞ்சம் தனிமைத்துயரால் வருந்துமாறு உன்னைப் பிரிந்து சென்று

தங்கேன். அங்ஙனம் பிரிந்துபோய்ச் சென்ற இடத்திலேயே மனம் பொருந்தித் தங்கியிருப்பேனாயின், அவ்வாறு நான் செய்த முடிவு காரணமாய், இரவலர் என்னைக் கைவிட்டு நீங்கி, என்னிடம் அவர்கள் வாராத நாள்கள் பல ஆகுக.

கருத்து

உன்னைப் பிரிந்தால் அறநெறி நிற்றலும் எனக்கு வாய்க்காமல் போகட்டும்.

விளக்கம்

காதலர் முதன்முதலில் சந்தித்துக்கொண்டனர்; நீண்ட நேரம் கூடியிருந்தபின் தலைவன் பிரிந்து செல்ல எண்ணினான். அதை அறிந்தால், தலைவி மிகவும் அஞ்சுவள்; ஆதலால், 'நான் பிரிந்து சென்று மீண்டும் வந்து சந்திக்கிறேன்' என்று கூறாமல், 'நான் பிரியமாட்டேன்' என்று கூறினான். இதன்மூலம் பிரிவு என்பது ஒன்று உண்டு என்பதை நினைவூட்டினான்.

குறிப்பு

இரப்போரைக் காணாமலும், இரப்போர்க்கு ஈயாமலும் இருக்கும் நாள், நல்ல நாள் அன்று என்று பண்டு கருதியிருந்தனர்.

சொற்பொருள்

1. இயல் - தன்மை; அரிவை - பெண்; அகம் - நெஞ்சம்; புலம்ப - வருந்த.
2. துறந்து - நீங்கி; அமைகுவென் - பொருந்தியிருப்பேன்.
3. வைகல் - நாள்.
4. செலவுறு தகவே - பிரிய நினைத்த தன்மை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 300 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிவச்சமும் வன்புறையும் கூறியது.

(வன்புறை - ஐயம் அகலும்வண்ணம் வற்புறுத்திக் கூறுவது.)

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன், 'உன்னைப் பிரியேன்' என்று கூறியது கேட்டு, 'பிரிவென்பது ஒன்று உண்டு' என அஞ்சியவளை, 'நீ அஞ்சற்க! உலகையே பெறுவதாயினும் உன்னைக் கைவிடேன்' என வற்புறுத்திக் கூறி, அவள் அச்சத்தைப் போக்கியது.

குவளை நாறும் குவைஇரும் கூந்தல்,
ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கின் அன்ன,
நுண்பல் தித்தி மாஅ யோயே!
நீயே,'அஞ்சல்' என்றஎன் சொல்அஞ் சலையே;
யானே, குறுங்கால் அன்னம் குவவுமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்,
விடல்சூ ழலனால், நின்னுடை நட்பே.

தெளிவுரை

குவளை மலர்களின் மணம் வீசுகின்ற அடர்ந்த கரிய கூந்தலினையும், ஆம்பல் மலரின் மணம் வீசுகின்ற தேன் பொதிந்த பவளம் போன்ற வாயினையும், ஆழமான நீரில் மலர்ந்துள்ள தாமரைப் பூந்தாது போன்ற நுண்ணிய பல தேமல் புள்ளிகளையும் கொண்டு, மாமை நிறத்துடன் விளங்குபவளே! 'பிரியேன், அஞ்சாதே' என்ற என் சொற்களைக் கேட்டு, (பிரிவு என்பது ஒன்று உண்டு என) அஞ்ச வேண்டா.

குவிந்த மணல்மேடுகளில் குறுகிய கால்களைக் கொண்ட அன்னப்பறவைகள் தங்கியிருக்கும் கடல் சூழ்ந்த இந்நிலவுல

கத்தையே பெறுவதாய் இருந்தாலும் நான் உன்னுடன் கொண்ட நட்பை ஒருபோதும் கைவிடக் கருதமாட்டேன். (இஃது உறுதி; நம்பு.)

கருத்து

கடல் சூழ்ந்த உலகையே நான் பெறுவதாய் இருந்தாலும் உன்னைக் கைவிடேன்; அஞ்சாதே!

குறிப்பு

'அன்னம் தனக்குத் தகுந்த வெண்மணல் குவியலை விரும்பி அங்கேயே உறைவது போன்று, நானும் உன்னிடத்திலேயே தங்கியிருப்பேன்' என்னும் குறிப்புப் பொருளும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. நாறும் - மணம் வீசும்; குவை - அடர்த்தி; இரு - கரிய.
2. தேம் - தேன்; துவர் - சிவப்பு, பவளம்.
3. குண்டு - ஆழம்; கொங்கு - பூந்தாது.
4. தித்தி - தேமல்; மாஅயோயே - மாமை நிறம் கொண்டவளே!
5. அஞ்சல் - அஞ்சாதே.
6. சேக்கும் - தங்கியிருக்கும்.
7. கடல்சூழ் மண்டிலம் - கடலால் சூழப்பட்டுள்ள நிலவுலகம்.
8. சூழலன் - கருதமாட்டேன் (சூழ்தல் - கருதுதல்).

தலைவன் கூற்று

திருக்குறள் 1122 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவச்சம் கூறியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவன் தன்னை விட்டுப் பிரிவனோ எனும் அச்சம் தலைவியிடம் ஏற்பட, அவளைத் தேற்றுமுகத்தான் தலைவன் சொல்லியது.

உடம்பொ(டு) உயிரிடை என்னமற்(று) அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

தெளிவுரை

உடம்பொடு உயிருக்கு உள்ள தொடர்பு எத்தகையதோ அத்தகையதே இம்மங்கையோடு எனக்கு உள்ள தொடர்பு.

கருத்து

இவளும் நானும் உடலும் உயிரும்.

விளக்கம்

உடலொடு உயிர் இணைந்திருந்தால்தான் வாழ்வு அமையும்; பிரிவு ஏற்பட்டால் இரண்டுக்குமே வாழ்வில்லை. அதுபோல, தலைவன் தலைவியரிடையே பிரிவு ஏற்படின் இருவர்க்குமே வாழ்க்கையில்லாததாகிவிடும். ஒருவர் உடல் எனில் மற்றவர் உயிர். எனவேதான் உடல் யார், உயிர் யார் என்பது சுட்டிக் காட்டப்படவில்லை.

குறிப்பு

யார், எவர் என அறியாத நிலையில் இயற்கைப் புணர்ச்சி ஏற்பட்ட பிறகு இவன் யாவன், என்னிடம் அன்புள்ளவனா, இனியும் இவனைக் காண இயலுமா எனும் ஐயங்கள் தலைவியிடம் ஏற்பட்டன. அவற்றைக் குறிப்பாலுணர்ந்த தலைவன் அவள் ஐயம் தீரக் கூறியது இது.

சொற்பொருள்

2. மடந்தையொடு - இப்பெண்ணுடன் (தலைவியுடன்); எம்மிடை நட்பு - எமக்குள்ள தொடர்பு.
1. உடம்பொடு - உடம்போடு; உயிரிடை என்ன - உயிருக்குள்ள தொடர்பு எத்தகையதோ?; மற்று அன்ன - அது போன்றது, அத்தகையது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 70 **ஓரம்போகியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியோடு அளவளாவிப் பிரியும் தலைவன் தலைவியின் உருவையும் பண்பையும் எண்ணி இன்பமடைந்து அவள் அழகைத் தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வது.

ஒடுங்குஈர் ஓதி ஒண்நுதற் குறுமகள்
நறுந்தண் நீரள்; ஆர்அணங் கினளே;
இனையள் என்றுஅவள் புனைஅளவு அறியேன்;
சிலமெல் லியவே கிளவி;
அணைமெல் லியள்யான் முயங்குங் காலே.

தெளிவுரை

கொண்டையாய் முடித்த நெய்ப்புள்ள கூந்தலினையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் கொண்ட இவ்விளைய மகள், நறுமணத்தினையும் குளிர்ந்த தன்மையினையும் கொண்டவளாய் இருக்கிறாள்; ஆயினும், பிரியும்போது பொறுத்தற்கரிய வருத்தத்தைச் செய்கிறாள்; அவள் இத்தகைய அழகுள்ளவள் எனப் புனைந்துகூறும் எல்லை அறியேன். மென்மையனவாய் அவள் பேசும் சொற்களோ மிகச் சில. நான் அவளைத் தழுவும் போது பஞ்சணைபோல மென்மைத் தன்மையவளாய் இருக்கின்றாள்.

கருத்து

என் காதலி ஐம்புல இன்பங்களையும் எனக்குத் தருகிறாள்.

குறிப்பு

‘ஒளி பொருந்திய நெற்றியினள்’ என்பதால் காட்சி இன்பமும்,

‘பேசும் சொற்கள் சில’ என்பதால் கேள்வி இன்பமும்,

'மென்மையானவள்' என்பதால் ஊற்றின்பமும்,

'நறுமணம் உடையவள்' என்பதால் உயிர்த்தல் இன்பமும்,

'தழுவும்போது' என்னும் குறிப்பினால் சுவைத்தல் இன்பமும் என ஐம்புலன்களுக்கும் அவள் இன்பம் தருபவளாய் இருப்பதை நினைக்கிறான்.

சொற்பொருள்

1. ஒடுங்கு - ஒடுக்கிக் கட்டிய; ஈர் - எண்ணெய் பூசிய, நெய்த்த; ஓதி - கூந்தல்; ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
2. தண்நீரள் - குளிர்ந்த தன்மை வாய்ந்தவள்; ஆர் - மிகுதி; அணங்கினள் - வருத்தும் அணங்கு போன்ற அழகுள்ளவள்.
3. இனையள் - இத்தகையவள்; புனை அளவு - புனைந்துரைக்கும் எல்லை.
4. கிளவி - சொற்கள்.
5. அணை - பஞ்சணை; மெல்லியள் - மென்மைத் தன்மையள்; முயங்குங்கால் - தழுவும்போது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 2 **இறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளின் நாணினை நீக்குதற்பொருட்டு, மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்பு தோன்ற நலம் பாராட்டியது.

(இடையீடு - தடை; மெய் - உடல்; பயிறல் - பழகுதல், சொல்லுதல்; அவள்மாட்டு - அவளிடம்.)

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை முதன்முதல் கூடுவது இயற்கைப் புணர்ச்சி. தலைவியது வெட்கத்தால் அது தடைபட்டு நின்றபோது, அவள் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தை நீக்கிக் கூடி மகிழ்ந்த தலைவன், அவள் அழகைப் புனைந்து பாராட்டியது.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்,
செறிஎயிற்று, அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ,நீ அறியும் பூவே?

தெளிவுரை

பூந்தாதுகளைத் தேடி உண்பதையே வாழ்க்கையாய்க் கொண்டுள்ளதும், அழகிய சிறகினைக் கொண்டிருப்பதுமான தும்பியே! உன்னையொன்று கேட்பேன். உன் விருப்பத்தைச் சொல்லாமல், நீ நேரடியாய்க் கண்டறிந்த உண்மையைச் சொல்.

என்னுடன் நெருங்கிப் பழகிய நட்பினையும், மயில் போன்ற சாயலையும், நெருங்கிய பற்களையும் கொண்ட இவள், என் காதலி. இவள் கூந்தலைப்போல நறுமணம் கொண்ட பூ நீ அறிந்தவற்றுள் உண்டோ?

கருத்து

வண்டே! தலைவியின் கூந்தலைப் போல நறுமணம் கமழும் மலரை நீ அறிந்ததுண்டா?

விளக்கம்

ஒருவனும் ஒருத்தியும் ஒரு மலைச்சாரலில் இயற்கையாய் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். அவர்களை யாரும் சேர்த்து வைக்கவில்லை. இருவர் உள்ளங்களும் ஒன்றுபட்டன; ஒருவர் விரும்புவதை - காதலிப்பதை - மற்றவர் உணர்ந்தனர். தலைவன் தலைவிக்கு அருகில் சென்று அவளைத் தொட முற்படுகின்றான். அவன் கை தன்மேல் படுமே என்னும் நாணத்தால் அவள் தலைகுனிகிறாள். தலைவன் நேரடியாய் அவள் உடலைத் தொடாமல், தலையை மட்டும் தொட முற்பட்டு, அதற்கு ஒரு காரணமாய், அவள் கூந்தலிலுள்ள மலரில் தேன் உண்ணும் வண்டு ஒன்றனிடம், 'இக்கூந்தல்போல மணமுள்ள மலர் ஏதேனும் உண்டோ?' என்று கேட்கிறான். 'இக்கூந்தல்' என்று சொல்லும்போது கூந்தலைத் தொட்டுத் தடவுகிறான். அதனால் தலைவியின் நாணம் சிறிது குறைகிறது. இவ்வாறு படிப்படியான

செயல்களால் தலைவன் தலைவியைத் தழுவுகிறான். தலைவன் வண்டினைக் கேட்பதன்வழி அவளைத் தொடுவதற்கான ஒரு வாய்ப்பினை உண்டாக்கிக்கொள்கிறான்.

குறிப்பு

இச்செய்யுள் தருமி, பாண்டியனிடம் பொற்கிழி பெறுவதற்காக அவனுக்கு ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமானால் செய்தருளப்பெற்றது என்றும், இப்பாடலில், பொருள் குற்றம் உள்ளது என நக்கீரர் கூறியதால், சிவபெருமானே நேரில் தோன்றி நக்கீரருடன் வாதிட்டதாகவும், ‘நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே’ என நக்கீரர் கூறியதாகவும் ஒரு கதை உண்டாக்கப்பட்டு, அது திருவிளையாடற்புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

சொற்பொருள்

1. கொங்கு - பூந்தாது; தேர் - ஆராயும்; அஞ்சிறை - அழகிய இறகு; தும்பி - வண்டுகளுள் ஓர் இனம்.
2. காமம் செப்பாது - நீ விரும்பியதைச் சொல்லாமல்; கண்டது - உண்மையில் நீ கண்டறிந்ததை; மொழி - சொல்.
3. பயிலியது கெழீஇய - பழக்கம் பொருந்திய; இயல் - சாயல்.
4. செறி - நெருங்கிய; எயிறு - பல்; அரிவை - பெண்.
5. நறிய - நறுமணம்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 116 **இளங்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை முதல் நாள் கண்டு அளவளாவிப் பிரியும் தலைவன், அவளது கூந்தல் சிறப்பைப் பாராட்டித் தன் நெஞ்சத்தினிடம் கூறுவது.

யான்நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்,
வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்வார்ந் தன்ன,
நல்நெறி யவ்வே; நறுந்தண் ணியவே.

தெளிவுரை

நான் விரும்பி, என் நெஞ்சத்தில் மகிழ்ந்து உறைகின்ற தலைவியின் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலில், செல்வங்கள் நிறைந்த சோழ மன்னரின் தலைநகராகிய உறையூரில் உள்ள காவிரிப் பெருந்துறையில் காணப்படும் நுண்ணிய கருமணல் அற்றற்றுப் படிந்திருப்பதுபோல அழகிய சுருள்கள் அமைந்துள்ளன; நறுமணமும் குளிர்ச்சியும் உள்ளன.

கருத்து

தலைவியின் அறல்போலும் நெளிந்த கூந்தல் குளிர்ச்சியும் நறுமணமும் கொண்டது.

விளக்கம்

காதலியைக் கூடுவதைக் கூந்தற்பாயில் துயில்வதாய்க் கூறுவது ஒரு மரபு. அதனால் முதன்முதல் கூடிய தலைவன், அவள் கூந்தலைப் பாராட்டுகிறான்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தலைவியின் கூந்தல் மெல்லணையில் துஞ்சி இன்புற்றவன்; ஆதலின், அக்கூந்தல் இயல்பை நினைந்து, அதனால் பெறும் இன்பத்தை இடையறாமல் நுகரும் பேறு கிட்டவில்லையே என இரங்கித் தன் நெஞ்சத்திடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. நயந்து - விரும்பி; உறைவோள் - தங்குபவள் (தலைவி); தேம் - தேன் - வண்டுகள்; பாய் - மொய்க்கின்ற.
2. கெழு - பொருந்திய; உறந்தை - உறையூர், சோழர் தலைநகர்.
3. அறல் - நெளிநெளியாய் உள்ள கருமணல்; வார்தல் - ஒழுகுதல், படிதல்.
4. நெறி - நெளி; தண்ணிய - குளிர்ச்சி வாய்ந்தது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 142 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கூடி நீங்கும் தலைவன், 'என்னால் ஏதும் செய்ய இயலாமல் என் உள்ளம் தலைவியிடத்திலேயே தங்கி உள்ளது' எனக் கூறியது.

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ,
புனக்கிளி கடியும் பூங்கண் பேதை
தான்அறிந் தனளோ இலளோ, பானாள்
பள்ளி யானையின் உயிர்த்து,என்
உள்ளம் பின்னும் தன்உழை யதுவே!

தெளிவுரை

நான் அவளோடு கூடிவிட்டுவந்த பின்பு, நடுயாமத்தில் தூங்கும் யானையினைப்போல வெப்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறேன். இதனை, சுனைப்பூக்களைக் கொய்து மாலை தொடுத்துக் கொண்டே தினைப்புனத்தில் படியும் கிளிகளை ஒட்டும் மலர் போன்ற கண்களைக் கொண்ட அப்பேதைப்பெண் அறிந்தனளோ, அன்றோ? என் உள்ளம் மீண்டும் அவளிடமே தங்கியுள்ளது. (செல்வதாயுள்ளது).

கருத்து

என் உள்ளம் என்னிடம் இல்லை; தினைப்புனத்தில் கிளிகளை ஓட்டும் அவளிடமே தங்கியுள்ளது.

குறிப்பு

தான் தலைவியோடு கூடிவிட்டு வந்த பின்னரும் அவள் பூக்கொய்தும், மாலை தொடுத்தும், கிளிகளை விரட்டியும் இருத்தலால், அவள் தன்னை நினைந்திலளோ எனக் கருதுகிறான், தலைவன். தான் எதையும் செய்ய இயலாதவாறு தன் உள்ளம் அவளிடமே தங்கி உள்ளதையும் அவன் எண்ணுகிறான்.

சொற்பொருள்

1. குற்று - கொய்து, பறித்து; தொடலை - மாலை; தைஇ - தொடுத்து, கட்டி.
2. புனம் - தினைப்புனம்; கடியும் - ஓட்டும்.
3. இலஙோ - அன்றோ; பானாள் - பால் + நாள் - நடு இரவு (பால் - பாதி).
4. பள்ளி யானை - தூங்கும் யானை; உயிர்த்து - பெருமூச்சு விட்டு.
5. தன் உழையது - அவளிடமே தங்கியுள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1101 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடிய முதல் நாளின் முடிவில் தன்னுள் சொல்லியது.

கண்டு,கேட்டு உண்(டு),உயிர்த்து உற்(று)அறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

தெளிவுரை

கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும், மூக்கால் முகர்ந்தும், உடம்பால் தீண்டியும் நுகரப்படுகின்ற ஐம்புல இன்பங்களும், ஒளி பொருந்திய வளையல்களை அணிந்துள்ள இவ்வழகிய பெண்ணிடம் ஒருங்கே அமைந்துள்ளன.

கருத்து

ஐம்புல இன்பங்களை இவள் ஒருத்தியிடமே அடையலாம்.

விளக்கம்

மனிதன் ஒவ்வொரு புலனின்பத்தையும் வெவ்வேறு பொறிகள்மூலம் அனுபவிக்கின்றான். ஆனால், அந்த ஐம்புல இன்பங்களையும் ஒரே காலத்தில் கொடுக்கக் கூடியவளாய் இவள் உள்ளாள். ஆதலால், இப்பெண், காணப்படும் எல்லாப் பொருள்களையும்விட மிக உயர்ந்தவள் என்று எண்ணிக் காதலன் மகிழ்கின்றான்.

சொற்பொருள்

1. கண்டு - (கண்ணாலே) கண்டும்; கேட்டு - (செவியாலே) கேட்டும்; உண்டு - (நாவாலே) உண்டும்; உயிர்த்து - (மூக்காலே) மோந்தும்; உற்று - (மெய்யாலே) தீண்டியும்; அறியும் - துய்க்கப்படுகின்ற; ஐம்புலனும் - ஐம்புல இன்பங்களும்.
2. ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல் (அணிந்துள்ள இப் பெண்); கண் - இடத்தில்; உள - உள்ளன.

தலைவன் கூற்று

திருக்குறள் 1111 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சியின் இறுதிக்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியோடு கூடிய முதல் நாளின் முடிவில் தன்னுள் சொல்லியது.

நல்நீரை வாழி அனிச்சமே! நின்னினும்
மெல்நீரள் யாம்வீழ் பவள்.

தெளிவுரை

அனிச்ச மலரே! நீ வாழ்க! நீ எல்லா மலர்களையும்விட மென்மையாய் உள்ளாய்; என்றாலும், நான் விரும்பும் என் காதலி உன்னினும் மென்மையள்.

கருத்து

என் காதலி அனிச்ச மலரினும் மென்மையள்.

விளக்கம்

மலர்கள் எல்லாவற்றினும் மென்மையானது அனிச்ச மலர். ஆனால், என் காதலியோ அம்மலரினும் மென்மையள். (என் காதலியைவிட மென்மையான பொருள் உலகில் எதுவுமில்லை.)

சொற்பொருள்

1. அனிச்சமே - அனிச்ச மலரே!; வாழி - நீ வாழ்க!; நல் நீரை - (நீ எல்லாப் பூக்களையும்விட) சிறந்த மென்மைத் தன்மை கொண்டுள்ளாய்; நின்னினும் - உன்னைவிட.
2. யாம் வீழ்பவள் - என்னால் விரும்பப்பட்டவள்; மெல்நீரள் - மென்மைத் தன்மை கொண்டவள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1121 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன்னயப்பு உணர்த்தியது.

(நயப்பு - அன்பு, காதல் மிகுதி.)

கூற்று விளக்கம்

காதலியை முதல் நாள் புணர்ந்து நீங்கும் தலைவன் தன் காதல் மிகுதியைப்பற்றிக் கூறியது.

பாலொடு தேன்கலந் தற்றே, பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

தெளிவுரை

இம்மென்மொழியாளின் வெண்மையான பல்லில் ஊறிய நீர், பாலொடு தேன் கலந்த கலவைபோலும் இனிமை வாய்ந்தது.

கருத்து

காதலியின் பல்லில் ஊறும் நீர், பாலும் தேனும் கலந்த இனிமை பொருந்தியது.

விளக்கம்

பாலின் குறைந்த இனிமையும், தேனின் நிறைந்த இனிமையும் கலந்தால் பருகக்கூடிய சிறந்த இனிமை பெறப்படும். அதை, 'வாலெயிற்று நீர்க்கு' உவமையாக்கினான்.

குறிப்பு

புணர்ச்சிக்கு முன் எச்சில் என்று கருதப்பட்ட உமிழ்நீரே, காதலியைப் புணரும்போது வெளிப்பட்டால் பாலும் தேனும் கலந்த சுவைப்பொருளாய்க் கருதப்படுகிறது எனக் காதலின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கலந்து அற்று - கலந்தது போன்றது; பணிமொழி - மென்மொழியாள் (காதலி).
2. வால் - வெண்மையான; எயிறு - பல்; ஊறிய - சுரக்கும்.

தலைவன் கூற்று

நற்றிணை 8 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகளை ஆயத்தொடுங் கண்ட தலைமகன் சொல்லியது.

(ஆயம் - தலைவிக்குத் தோழியர் கூட்டம்.)

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவி தலைவனை நீங்கிச் சென்று தன் தோழியருடன் கலந்துகொள்கின்றாள். அவளை, அவரிடத்தே காணும் தலைவன் உள்ளத்தில் உவகை பொங்கச் சொல்லியது.

அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்,
பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்,
திருமணி புரையும் மேனி மடவோள்
யார்மகள் கொல்இவள்? தந்தை வாழியர்!
துயரம் உறீஇயினள் எம்மே; அகல்வயல்
அரிவனர் அரிந்தும் தருவனர் பெற்றும்
தண்சேறு தாஅய் மதனுடை நோன்தாள்
கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி
தன்திறம் பெறுகஇவள் ஈன்ற தாயே!

தெளிவுரை

"செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்கள், பல்நிறப் பூக்களுடனே மாறுபடத் தொடுக்கப்பட்ட தழை யுடையின்மேல் கிடந்தசையும் மேகலை, நீலமணியொத்த மேனி ஆகிய இவற்றைக் கொண்ட இவ்விளையவள் யார் மகளோ? நான் இதுவரை உணர்ந்தறியாத துன்பத்தை இவள் எனக்குத் தந்து விட்டாள். இவள் தந்தை வாழ்க! அகன்ற வயலில் நெற்பயிர் அரிவோர், அந்நெல்தாளிடையே வளர்ந்துள்ள நெய்தல் தண்டினையும் சேர்த்து அரிந்து கொண்டுவந்து அடுக்கிய நெற்போரில், கண்போல் அழகிய நெய்தல் மலர்கள் பூத்திருக்கும், திண்ணிய பொறையனுடைய தொண்டி நகர் போன்ற சிறப்பினை இவள் தாயும் பெறுக" என்று சொல்லித் தலைவன் இன்புற்றான்.

கருத்து

'எனக்கென இவ்வழகுத் திருமகளை ஈன்றெடுத்துள்ள இவள் தாயும் தந்தையும் வாழ்வார்களாக' எனத் தலைவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறான்.

சொற்பொருள்

1. அல்கல் - மிகுதல்; அல்கு படர் - நிலைத்த துன்பம்; உழத்தல் - செய்தல்; அரி - செவ்வரி.
2. பகைத்தழை - மாறுபட்ட தழை; நுடங்கும் - அசையும்.
3. மணி - நீலமணி; மடவோள் - இளையவள்.

4. வாழியர் - வாழ்க!
5. உறீஇயினள் - உண்டாக்கிவிட்டனள்; எம்மே - எனக்கே.
6. அரிவனர் - அரிவோர்.
7. தாஅய் - பரந்து; மதன் - அழகு; நோன்தாள் - வலிய தண்டு.
8. போர்வில் - (நெற்)போரில்.
9. திண்மை - வலிமை; பொறையன் - சேரன்; தொண்டி - சேரனுடைய துறைமுகப்பட்டினம்.
10. திறம் - சிறப்பு.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 171 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், ஆயத்தோடு செல்லும் தலைமகளைக் கண்டு சொல்லியது,

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைவன், தலைவி தன் தோழியரோடு செல்வதைக் கண்டு மகிழ்ந்து தன்னுள்ளே சொல்லியது.

திரைஇமிழ் இன்னிசை அளைஇ அயலது
முழவுஇமிழ் இன்னிசை மறுகுதொறும் இசைக்கும்
தொண்டி அன்ன பணைத்தோள்
ஒண்டொடி அரிவை,என் நெஞ்சுகொண் டோளே!

தெளிவுரை

கடல் அலையின் இனிய முழக்கத்தோடு முரசங்கள் முழங்கும் இனிய ஓசையும் கலந்து தொண்டி நகரத் தெருத்தோறும் ஒலிக்கும். பருத்த தோள்களையும் ஒளிமிக்க வளையல்களையும் கொண்ட அரிவை அந்நகரின் செழுமையைப் போன்றவள்; அவள் என் நெஞ்சைக் கவர்ந்துகொண்டு தன் தோழியரோடு செல்கிறாள். அவள் என் நெஞ்சத்தினைத் தன்னிடத்ததாக்கிக் கொண்டாள்.

கருத்து

என் நெஞ்சை இவள் கவர்ந்துகொண்டாள்.

சொற்பொருள்

1. திரை - அலை; இமிழ் - ஒலிக்கின்ற; அளைஇ - கலந்து.
2. முழவு - முரசம்; மறுகு - வீதி, தெரு; இசைக்கும் - ஒலிக்கும்.
3. தொண்டி - சேர நாட்டிலுள்ள ஒரு சிறந்த துறைமுகப்பட்டினம்; பணை - பருத்த.
4. ஒண்டொடி - ஒள்தொடி - ஒளிமிக்க வளையல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 299 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய நிலைமைக்கண் தலைமகள் ஆய வெள்ளத்தோடு கூடி நிற்கக் கண்ட தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தனாய்த் தன்னுள் சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைவி தன் விளையாட்டுத் தோழியருடன் கூடி நிற்கக் கண்டு மகிழ்ந்த தலைவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது;இவள்
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.

தெளிவுரை

குன்ற நாடனின் மலைச்சாரலில் ஒரு பசிய சுனை; அதில் அகன்று விரிந்த இதழ்களைக் கொண்ட குவளை மலர் ஒன்று

பூத்துள்ளது. அம்மலரால் அழகிய கூந்தலும் அசைந்த நடையும் வாய்ந்த தலைவியின் கண் போன்று மலர இயலாது; இவளைப் போல இனிய சாயலை அங்கே வாழும் மயிலும் பெற இயலாது.

கருத்து

இவள் கண்ணுக்குக் குவளை மலரும், சாயலுக்கு மயிலும் ஈடாகா.

குறிப்பு

காதல் குறிப்பை உணர்த்தும் தன்மை குவளைக்கு இல்லையாதலின், அது தலைவியின் கண்ணுக்கு ஒப்பாகாது; கண்ணும் குவளையும் தோற்றத்தால் ஒன்றாயினும் தன்மையால் வேறுபட்டவை. மயிலின் சாயல் காட்சி இன்பம் மட்டுமே கொண்டது; இவள் சாயலோ உயிரைத் தளிர்க்கச் செய்யும் தன்மை கொண்டது.

சொற்பொருள்

1. கவாஅன் - மலைச்சாரல்.
2. பகுவாய் - அகன்ற வாய்.
3. அம்சில் - அழகிய சிலவாகிய; ஓதி - கூந்தல்; கொடிச்சி - குறமகள் (தலைவி).
5. மஞ்ஞை - மயில்; அரிது - இயலாது.

தோழி கூற்று

நற்றிணை 13 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சியின் பிற்றைஞான்று தலைமகளின் வேறுபாடு கண்ட தோழி, தலைமகள் மறைத்தற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன், தலைவியோடு கொண்ட காதலுறவாகிய இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்ததனைத் தலைவி பெருநாணத்தால் மறைத்தொழுகுகின்றாள். தன் உயிர்த்தோழிக்கும் அதனைத் தெரிவிக்க வில்லை. ஆனால், சில குறிப்புகளைக்கொண்டு அதனை அறிந்துகொண்ட

தோழி, 'நான் அறியேன் என்று தலைவி கருதியிருப்பினும் நான் அதை அறிவேன்' என்பதை, மறைமுகமான சில பேச்சுகளால் தலைவிக்குத் தெரிவிப்பது.

எழாஅய் ஆகலின் எழில்நலந் தொலைய
அழாஅ தீமோ, நொதுமலர் தலையே!
ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக்கண்
நல்ல பெருந்தோ ளோயே! கொல்லன்
எறிபொன் பிதிரின் சிறுபல் காய
வேங்கை வீஉகும் ஓங்குமலைக் கட்சி
மயில்அறிபு அறியா மன்னோ;
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே.

தெளிவுரை

"தினைப்புனம் காப்போர், பன்றி முதலிய விலங்குகளைக் கொன்று, அவற்றின் உடம்பிலிருந்து பிடுங்கிய அம்பு போன்ற செவ்வரி படர்ந்ததும் குளிர்ச்சி பொருந்தியதுமான கண்களையும், நல்ல பெரிய தோள்களையும் கொண்ட தலைவியே! கொல்லன் உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினை அடிக்கும்போது சிதறும் தீப்பொறிகளைப்போல, வேங்கை மரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் உயர்ந்த மலையிலே மரங்களில் மயில்கள் அமர்ந்திருக்கும். அம்மயில்கள் அறியாவென்று கருதிக் கிளிகள் தினைக்கதிர்களைக் கவர்ந்து செல்லும். அக்கிளிகளை ஓட்ட நீ எழவில்லை என்றாலும் உன் அழகிய நலம் கெடும்படியாக அழாமலாவது இரு" எனத் தலைவியிடம் கூறுகிறாள், தோழி.

கருத்து

'கிளிகள் தினை கவர்தலை மயில்கள் அறியும். ஆனால், தாம் தினை கவர்வதை மயில்கள் அறியும் என்பதைக் கிளிகள் அறியமாட்டா. அதே போல, உன் களவொழுக்கத்தை நானறிவேன்; ஆயினும், நான் அறிவேன் என்பதை நீ அறியாததால் என்னிடமே உண்மையை மறைக்க முயல்கிறாய்' என்னும் தொனிப்பொருள்படும்படி, தோழியின் பேச்சு உள்ளது.

குறிப்பு

மயில் அறிந்திருப்பது கிளியின் செயலுக்கு இடையூறு ஆகாதவாறு, தான் அறிந்திருப்பது தலைவியின் ஒழுக்கத்திற்கு இடையூறாகாது என்ற குறிப்புப் பொருள் தரும்படியும் தோழி பேசுகிறாள்.

உள்ளுறை

தினைக்கதிர்களைக் கிளிகள் கவர்ந்துகொண்டு செல்வதனை மயில் அறியும். எனினும், தாம் கொய்துகொண்டு செல்வதனை அம்மயில் அறியாது எனக் கருதிக் கிளிகள் கவர்ந்து செல்லும். அதுபோலத் தலைவி, தன் களவொழுக்கத்தைத் தோழி அறியாள் எனக் கருதி அவ்வொழுக்கத்தை மறைத்து மேற்கொண் டிருந்தாள். தலைவி தன் களவொழுக்கத்தைத் தன்னிடம் கூற வில்லையென்றாலும், தான் அதனை அறிந்திருப்பதைத் தோழி உள்ளுறைப் பொருளாய் உரைக்கின்றாள்.

சொற்பொருள்

1. எழாஅய் - எழவில்லை; தொலைய - நீங்க, கெட.
2. நொதுமலர் தலை - (இஃது) அயலார் இருக்குமிடம்.
3. ஏனல் - தினைப்புனம்; மா - விலங்கு; வீழ்த்து - கொன்று.
4. பகழி - அம்பு; சேயரி - சேஅரி - சிவந்த வரிகள் பொருந்திய.
6. எறிபொன் - அடிக்கப்படும் இரும்பு; பிதிர் - சிதறிப் பறக்கும் தீப்பொறி.
7. வேங்கை - வேங்கை மரம்; வீ - மலர்; உகும் - உதிரும்; கட்சி - சேருமிடம் (கூடு).
8. மயில்அறிபு - மயில்கள் அறிவதை.
9. குரல் - கதிர்; பைம்புறம் - பசிய முதுகு.

இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் தலைவியை மறுநாள் அவ்விடத்திலேயே சந்தித்தல்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 62 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது.

(இடந்தலைப்பாடு - இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் தலைவியை மறுநாள் அவ்விடத்திலேயே சந்தித்தல்; கூடலுறும் - கூட விரும்பும்.)

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியோடு கூடிக் களித்த தலைவன், அடுத்த நாளிலும் முதல்நாள் கண்ட இடத்திலேயே அவளைக் கூட விழையும் தன் நெஞ்சிற்குத் தலைவியின் நலன் உரைத்தது.

கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறுஇதழ்க் குவளையொடு இடைப்பட விரைஇ,
ஐதுதொடை மாண்ட கோதை போல,
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது, முயங்கற்கும் இனிதே!

தெளிவுரை

நெஞ்சமே! காந்தள் மலரையும், அரும்பி மலர்ந்த பசிய முல்லையின் முதிர்ந்த மலரையும், மணம் வீசும் இதழ்களைக் கொண்ட குவளை மலர்களுடன் இடையிடையே கலந்து அழகு பெறத் தொடுத்தலால் சிறப்பாய்க் காணப்படும் மாலையைப் போல, நறுமணம் பொருந்திய தலைவியின் மேனி, தளிரைக் காட்டிலும் மென்மையும் நிறமும் பொருந்தியது; தழுவுதற்கும் இனியது.

கருத்து

'தலைவியை முன்பு கூடி இன்புற்றேன்; நறுமையும், மென்மையும், நன்னிறமும் கொண்ட அவளை மீண்டும் தழுவி இன்புறுவேன்' என்று சொல்லித் தலைவன் மகிழ்கிறான்.

சொற்பொருள்

1. கோடல் - காந்தள்; எதிர்தல் - தோன்றுதல்; முகை - அரும்பு; வீ - மலர்.
2. இடைப்பட - இடையிடையே; விரைஇ - கலந்து.
3. ஐது - அழகு; தொடை மாண்ட - தொடுத்தலில் மாட்சிமைப்பட்ட; கோதை - மாலை.
4. நறிய - நறுமணம் பொருந்திய.
5. முறி - தளிர்; வாய்வது - (மென்மையும் நிறமும்) பொருந்தியது; முயங்குதல் - தழுவுதல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 197 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் தலைமகளது நிலைமை கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் முதல்நாள் கூடிப் பிரிந்த பின்னர், மறுநாளும் தலைவி அதே இடத்தில் வந்து தலைவனுக்காகக் காத்து நின்றாள். அவளைக் கண்டு மகிழும் தலைவன் தனக்குள்ளே சொல்லியது.

இலங்குவளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி
முகம்புதை கதுப்பினள் இறைஞ்சிநின் றோளே
புலம்புகொள் மாலை மறைய
நலங்கேழ் ஆகம் நல்குவள் எனக்கே!

தெளிவுரை

கடற்கரைச்சோலையில் தலைவி, ஒளி பொருந்திய வளையல்கள் கலகலென ஒலிக்குமாறு நண்டுகளைக் காலால் அலைத்து விளையாடுகிறாள்; முகத்தைத் தன் கூந்தலுக்குள் புதைத்து மறைத்து, நாண மிகுதியுடன் என்னை எதிர்பார்த்து

நிற்கிறாள். தனிமைத் துயரத்தை மிகுவிக்கும் மாலைப்பொழுது மறைந்தவுடன் இன்பம் பொருந்திய தன் மார்பினை இவள் எனக்குத் தருவாள்.

கருத்து

மாலை மறைந்தவுடன் இவள் தன் மார்பை எனக்குத் தருவாள்.

குறிப்பு

தலைவி, தான் குறித்தவாறே குறியிடம் வந்தது, தன்னைக் கண்டது, நாணி முகம் புதைத்து நின்றது ஆகியவற்றைக் கொண்டு தலைவி தன்னைக் கூடி முயங்குவது உறுதி எனத் தலைவன் உணர்ந்தனன்.

சொற்பொருள்

1. இலங்குதல் - (ஒளியுடன்) விளங்குதல்; வளை - வளையல்; தெளிர்ப்ப - (கலகலென) ஒலிப்ப; அலவன் - நண்டு; ஆட்டி - அலைத்து ஓட்டி.
2. புதைத்தல் - மறைத்தல்; கதுப்பு - கூந்தல்; இறைஞ்சி - கவிழ்ந்து.
3. புலம்பு - தனிமை.
4. நலம் கேழ் - இன்பம் பொருந்திய; ஆகம் - மார்பு; நல்குதல் - வழங்குதல், கொடுத்தல்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1102 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

காதலனும் காதலியும் முதன்முதல் ஒருநாள் கூடி மகிழ்ந்து பிரிந்தனர்; காதலன் அவளை, 'இன்று காண்பேன்' என முன் நாளில் அவளைக் கண்ட இடத்திற்கே வந்தான். அவளும் அவ்விடத்தே வந்து மகிழ்வுடன் நின்றாள். அப்போது காதலன் தன்னுள் சொல்லியது.

பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

தெளிவுரை

நோய்களுக்கு மருந்துகள் அவற்றினின்றும் வேறுபட்ட பொருள்களாய் இருக்கின்றன. ஆனால், அழகிய அணிகலன்களை அணிந்துள்ள இப்பெண்ணால் உண்டாகிய காதல் நோயை நீக்க இவளே மருந்தாய் இருக்கிறாள்.

கருத்து

இவள் தந்த நோய்க்கு இவளே மருந்து; பிற இல.

விளக்கம்

நோய்களுக்கு மருந்துகள் வேறேயுண்டு; ஆனால், இவள் தந்த காமநோயை இவளால் மட்டுமே போக்க இயலும்; வேறு மருந் தில்லை.

சொற்பொருள்

1. பிணிக்கு - நோய்களுக்கு; மருந்து - மருந்தாவன; பிற - பெரும்பாலும் அவற்றிற்கு மாறான பிற பொருள்களாம்; அணியிழை - அழகிய அணிகலன்களை அணிந்துள்ள இப்பெண்.
2. தன் நோய்க்கு - தான் உண்டாக்கிய நோய்க்கு; தானே மருந்து - மருந்து தானே ஆயினாள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1112 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

காதலியை முதல் நாள் கூடிப் பிரிந்த தலைவன், மறுநாளும் அவளைக் காணச் சென்றான்; முதல் நாள் சந்தித்த இடத்திலேயே அவளும் வந்து நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் மகிழ்ச்சியால் தலைவன் தன்னுள்ளே சொல்லிக்கொண்டது.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

தெளிவுரை

என் நெஞ்சமே! நான் காணும் காதலியின் கண், பலராலும் காணப்படும் மலருக்கு ஒப்பாய் இருக்கிறது என்று கருதி, நீ மலரைக் கண்டபொழுது இவள் கண்ணோ என்று மயங்கு கிறாய். (உன் அறிவு இருந்தவாறு என்னே!)

கருத்து

மலர்களைவிட என் காதலியின் கண்கள் சிறந்தன.

விளக்கம்

என் காதலியின் கண்கள் எனக்கு மட்டும் விருப்பத்தைக் கொடுக்கக்கூடியன. ஆனால், மலர்களோ காணுகின்ற பலருக் கும் இன்பத்தைக் கொடுக்கின்றன. எனவே, என் காதலியின் கண்களை மலரோடு ஒப்புமைப்படுத்துவது பொருந்தாது. மலரைவிட இவள் கண்கள் சிறந்தன.

சொற்பொருள்

1. இவள் கண் - (நான் காணும்) இவள் கண்களை.
2. பலர் காணும் - பலராலும் காணப்படுகின்ற; பூ ஒக்கும் - மலர்களை ஒக்கும் என்று நினைத்து.

1. மலர்காணின் - (தாமரை, குவளை) முதலிய மலர்களைக் கண்டால்; மையாத்தி - மயங்கி நிற்கிறாய். (உன் அறிவு இருந்தவாறு என்னே!) (மையாத்தல் - ஒவ்வாதவற்றை ஒக்கும் என்று கொள்ளல்).

தலைவன் கூற்று

நற்றிணை 155 **பராயனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரண்டாங் கூட்டத்துத் தலைமகளை எதிர்ப்பட்டுத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன் நாள் கண்ட இடத்துச் சென்றால் தலைவியைக் காணலாம் என்ற கருத்தால் தலைவன் மறுநாள் அத்தனியிடத்திற்குச் சென்றான்; அக் கருத்துடனே அவளும் அங்கு வந்தாள். இருவர் கண்களும் கலந்தன. அவள் மிகவும் நாணமுள்ளவளாதலின் வாய்திறந்து ஒன்றும் உரையாமல் ஓவியத்தெழுதிய மென்கொடிபோல் நின்றாள். தலைவன் அவளை அணுகிப் பேசியது.

'ஒள்இழை மகளிரொடு ஓரையும் ஆடாய்,
வள்இதழ் நெய்தல் தொடலையும் புனையாய்,
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்!
யாரை யோநின் தொழுதனம் வினவுதும்;
கண்டோர் தண்டா நலத்தை தெண்திரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்துஉறை அணங்கோ?
இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ?
சொல்இனி மடந்தை!' என்றனென்; அதன்எதிர்
முள்எயிற்று முறுவலும் திறந்தன;
பல்இதழ் உண்கணும் பரந்தவால் பனியே.

தெளிவுரை

"ஒளி பொருந்திய அணிகலன்களைக் கொண்ட உன் ஆயமகளிரொடு விளையாடாமலும், வளவிய நெய்தல்

பூக்களைத் தொடுத்து மாலை புனையாமலும், பூக்கள் விரிந்த கடற்கரைச்சோலையின் ஒரு பக்கத்தே நிற்கும் மங்கையே! காண்போர் கண்களினின்று அகலாத அழகுமிக்கோய்! நீ தெளிந்த அலைகளைக் கொண்ட விரிந்த கடற்பரப்பில் விரும்பி உறைகின்ற தேவமகளோ? கரிய உப்பங்கழியிடத்தே நிலை பெற்று உறைகின்ற மகளோ? நீ யார் என்று சொல்" என்றதும் அதற்கு மறுமொழியாய் முள்போன்ற அவள் கூரிய பற்களில் முறுவல் தோன்றியது; பூப்போலும் மையுண்ட கண்களில் உவகை மிகுதியால் நீர்த்துளிகள் தோன்றின.

கருத்து

இவள் சொல் ஒன்றும் பேசவில்லை; ஆயினும், கண்நோக்கும் முறுவற் குறிப்பும் இவள் காதலைப் புலப்படுத்தின.

சொற்பொருள்

1. ஒள்இழை - ஒளி பொருந்திய அணிகலன்; ஓரை - மகளிர் விளையாட்டு.
2. வள் - வளவிய; தொடலை - மாலை; புனைதல் - தொடுத்தல்.
3. கானல் - கடற்கரைச்சோலை; ஒரு சிறை - ஒரு பக்கம்.
4. யாரையோ - நீ யார்?
5. தண்டா நலம் - (காண்போர் கண்களிலிருந்து) நீங்காத அழகு; தெண்திரை - தெளிந்த அலை.
6. அமர்ந்து - விரும்பி; உறை - தங்குகின்ற; அணங்கோ? - தெய்வ மகளோ?
7. மருங்கு - அருகே, பக்கத்தே.
8. அதன் எதிர் - அதற்கு மாறாய்.
9. முள் - கூரிய; எயிறு - பல்; திறந்தன - (முறுவல்) தோன்றியது.
10. உண்கண் - மையுண்ட கண்; பனி - நீர்த்துளி.

தலைவன் கூற்று

நற்றிணை 39 **மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரண்டாங் கூட்டத்து எதிர்ச்சியில் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை முதல் நாள் கண்ட இடத்திலேயே மறுநாளும் கண்டான். காதல் மிகுதியால் தலைவி, பெருநாணத்தால் முகங்கவிழ்ந்து தன் இரு கண்களையும் தன் கைகளால் புதைத்துக்கொண்டாள். அதுகண்ட அவன் இனிய சொற்களைச் சொல்லியபோதும் அவள் மாற்றம் ஏதும் தாராது, கண்புதைத்த தன் கைகளை எடாமலே நாணித் தலைகவிழ்ந்து நின்றாள். அவள் நாணத்தைத் தெளிவிப்பதற்காகத் தலைவன் கூறியது.

சொல்லின் சொல்எதிர் கொள்ளாய், யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமென;
காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப்பு ஏய்ப்ப, கடைமணி சிவந்தநின்,
கண்ணே கதவ அல்ல; நண்ணார்
அரண்தலை மதில ராகவும் முரசுகொண்டு
ஓம்புஅரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே.

தெளிவுரை

"யாழிசை போன்ற இனியவளே! நான் சொல்லும் சொல்லுக்கு எதிர் ஒன்றும் சொல்லாமல், உன் அழகிய முகத்தைத் தாழ்த்தி, நாணம் மிக்குக் கண் புதைத்து நிற்கின்றாயே! காதலன்பு கைகடந்து செல்லுமாயின் அதனைத் தாங்குதல் அரிது. வளைந்த கரிய நிறம் வாய்ந்த தன் தந்தத்தால் புலியின் பெரிய முதுகில், அது நடுங்குமாறு குத்திக் கொன்றது, ஓர் ஆண்யானை. அதன் தந்தத்தின் நுனிபோல, கடை சிவந்து நிற்கும் உன் கண்கள்

என்னை வருத்தும் எனக் கருதி அவற்றை மறைக்கின்றாய்; ஆயினும், என்னை வருத்துவன உன் கண்கள் மட்டும் அல்லவே! பாண்டியனுடைய புகழ்மிக்க கூடல் நகரைப் போன்ற சிறப்பு வாய்ந்த கரும்பெழுதப்பெற்ற நின் தோள்களும் என்னைத் தாக்கி வருத்துகின்றனவே! என் செய்வேன்?" எனத் தலைவன் மொழிந்தான்.

கருத்து

உன் கண்களைப் பொத்திக்கொண்டாய்; ஆனால், உன் தோள்களும் என்னை வருத்துகின்றனவே! அவற்றை எப்படி மறைப்பாய்?

குறிப்பு

கண்ணும் தோளும் வருத்தாவாறு கண்ணால் நயந்து, தோளால் அணைத்து என் துன்பம் தீர்ப்பாய் என்று தலைவியைத் தலைவன் வேண்டிக்கொள்கிறான்.

சொற்பொருள்

1. எதிர்கொள்ளாய் - மறுமொழி சொல்லாய்; யாழ - யாழிசை போன்ற இனியவளே!
2. இறைஞ்சி - வணங்கி; கதுமென - விரைவாய்.
3. கைம்மிகின் - கை கடந்து (எல்லை கடந்து) சென்றால்.
4. கொடு - வளைவு; கேழ் - நிறம்; இரும்புறம் - பெரிய முதுகு.
5. விளையாடிய - கொன்ற; புலவு - ஊன்; வேழம் - ஆண்யானை, களிறு.
6. தலைமருப்பு - நுனித் தந்தம்; ஏய்ப்ப - போன்ற.
7. கதவ - வருத்துவன; நண்ணார் - பகைவர்.
8. அரண்தலை மதிலராகவும் - தமது கோட்டை மதிலிலிருந்து காவல் புரிந்தாராயினும்; முரசு கொண்டு - அவர்களுடைய முரசுகளைக் கைக்கொண்டு.
9. ஓம்பு அரண் கடந்த - அவர்கள் பாதுகாத்த கோட்டையையும் வென்று; அடுபோர் - போரினை வெல்லும்; செழியன் - பாண்டியன்.
10. பெரும் பெயர் - புகழ் மிக்க; கூடல் - மதுரை.
11. அணங்குதல் - வருத்துதல்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 17 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தல் உறுபவன் தன் ஆற்றாமையைக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவியை முதல் முறை சந்திப்பது, இயற்கைப் புணர்ச்சி. அடுத்த நாள் காண்பது, இடந்தலைப்பாடு. இடந்தலைப்பாட்டில் தலைவியைக் கூடிய தலைவன், தன் ஆற்றாமையை அவளிடம் கூறியது.

கடல்புக்கு உயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக்கு உயிர்கொன்று வாழ்வைமன் நீயும்!
மிடல்புக்கு அடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கு இடுகும் இடைஇழவல் கண்டாய்!

தெளிவுரை

உன் தமையன்மாரோ கடலில் சென்று உயிரினங்களைக் கொன்று வாழ்பவர்; நீயோ என் உடலிலே புகுந்து என் உயிரைக் கொன்று வாழ்கிறாய்! கச்சினுள்ளே புகுந்தும் அடங்காது திமிர்ந்து நிற்கும் வெம்மையான உன் முலைகளோ மிகவும் சுமையானவை! அதனால் வலிமையற்று மெலிந்துள்ள உன் இடை முரிந்துவிடவும் கூடும்.

கருத்து

உன் தமையன்மார் கடலில் புகுந்து உயிரைக் கொல்கின்றனர்; நீ என் உடலில் புகுந்து உயிரைக் கொல்கிறாய்.

விளக்கம்

என் உயிரை வாங்கும் உன் கொடிய செயலை விட்டுவிட்டு, உன் முலைச்சுமையை என் தோளில் ஏற்றி, உன் இடை முரிந்து விடாமல் காத்துக்கொள்.

சொற்பொருள்

1. புக்கு - புகுந்து; உயிர்கொன்று - மீனைப் பிடித்து அதன் உயிர் கொன்று; ஐயர் - தமையன்மார்.
2. வாழ்வை - வாழ்கின்றாய்.
3. மிடல் - கச்சு; பாரம் - சுமை.
4. இடுகும் - மெலியும்; இழவல் - இழத்தல் (முரிதல்).

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 18 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தல் உறுபவன் தன் ஆற்றாமையைக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவியை முதல் முறை சந்திப்பது, இயற்கைப் புணர்ச்சி. அடுத்த நாள் காண்பது, இடந்தலைப்பாடு. இடந்தலைப்பாட்டில் தலைவியைக் கூடிய தலைவன், தன் ஆற்றாமையை அவளிடம் கூறியது.

கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை
நெடுங்கண் வலையால் உயிர்கொல்வை மன்நீயும்!
வடம்கொள் முலையால் மழைமின்னுப் போல
நுடங்கி உகும்மென் நுசுப்புஇழவல் கண்டாய்.

தெளிவுரை

உன் தந்தையோ வளைந்த கண்களைக் கொண்ட வலையினால் உயிர்களைக் கொல்லுகின்றான். நீயோ உன் நீண்ட கண் எனும் வலையால் என் உயிரைக் கொல்கிறாய்! முத்துவடத்தைத் தாங்கியுள்ள நின் முலைகளின் சுமையால், மேகத்தில் தோன்றும் மின்னலைப்போல் அசைந்து தளர்கின்ற உன் இடையை இழந்து விடாதே!

கருத்து

கயிற்று வலையில் உள்ள கண்களால் உன் தந்தை உயிர்களைக் கொல்ல, நீயோ உன் கண்வலையால் என்னைக் கொல்கிறாய்.

விளக்கம்

என் உயிரை வாங்கும் கொடிய செயலை விட்டுவிட்டு, உன் முலைச்சுமையை என் தோளில் ஏற்றி, உன் இடை முரிந்துவிடாமல் காத்துக்கொள்.

சொற்பொருள்

1. கொடுங்கண் - வளைந்த கண்கள்; நுந்தை - உன் தந்தை.
3. வடம்கொள் முலை - முத்துவடத்தைத் தாங்கியுள்ள உன் முலை; மின்னுப் போல - மின்னலைப் போல.
4. நுடங்கி - வளைந்து; உகும் - (ஒடிந்து) கெடும்; மென் நுசுப்பு - மெல்லிய இடை; இழவல் - இழத்தல்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 19 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தல் உறுபவன் தன் ஆற்றாமையைக் கூறுதல்.

கூற்று விளக்கம்

தலைவியை முதல் முறை சந்திப்பது, இயற்கைப் புணர்ச்சி. அடுத்த நாள் காண்பது, இடந்தலைப்பாடு. இடந்தலைப்பாட்டில் தலைவியைக் கூடிய தலைவன், தன் ஆற்றாமையை அவளிடம் கூறியது.

ஓடும் திமில்கொண்டு உயிர்கொல்வர் நின்ஐயர்
கோடும் புருவத்து உயிர்கொல்வை மன்நீயும்!
பீடும் பிறர்எவ்வம் பாராய் முலைசுமந்து
வாடும் சிறுமென் மருங்குஇழவல் கண்டாய்.

தெளிவுரை

உன் தமையன்மாரோ ஓடுகின்ற படகினைக்கொண்டு கடலில் உயிரினங்களைக் கொன்று வாழ்கின்றனர். நீயோ வளைந்த உன் புருவங்களைக்கொண்டு என்னைக் கொல்கிறாய்! பிறரது பெருமையினையும் துன்பத்தினையும் நீ எண்ணிப் பாராய்! முலையின் பாரத்தைச் சுமந்து வாடுகின்றதே சிறிய மென்மை யான உன் இடை, அதை நீ இழந்துவிடாதே!

கருத்து

உன் தமையன்மார், ஓடும் படகுகொண்டு உயிர் கொல்கின்றனர். நீயோ வளையும் புருவம்கொண்டு என்னைக் கொல்கிறாய்.

விளக்கம்

என் உயிரை வாங்கும் கொடிய செயலை விட்டு, உன் முலைச் சுமையை என் தோளில் ஏற்றி, உன் இடை முரிந்துவிடாமல் காத்துக்கொள்.

சொற்பொருள்

1. திமில் - படகு; ஐயர் - தமையன்மார்.
2. கோடும் புருவம் - வளையும் புருவம்.
3. பீடும் பிறர் எவ்வம் - பிறரது பெருமையையும் துன்பத்தையும்; பாராய் - நீ எண்ணிப் பாராய்.
4. சிறுமென் மருங்கு - சிறிய மெல்லிய இடை; இழவல் - இழந்து விடாதே.

தலைவன் கூற்று

திருக்குறள் 1123 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரண்டாம் நாள் புணர்ச்சி முடிந்து தலைவி நீங்கியபோது தலைவன் தன் காதல் மிகுதியைக் கூறியது.

கருமணியில் பாவாய்,நீ போதாய்;யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

தெளிவுரை

என் கருவிழியில் இருக்கும் பாவையே! நீ அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து போ. ஏனெனில், என்னால் விரும்பப்படும் அழகிய நெற்றியைக் கொண்டவளுக்கு இருக்க வேறிடம் இல்லை.

கருத்து

கண்ணின் கருமணியைவிட என் காதலி சிறந்தவள்.

விளக்கம்

மனித உறுப்புகளுள் சிறந்தது, கண்; அதில் உள்ள கருமணி அதனினும் சிறந்தது. கருமணி இன்றேல் எதையும் காண இயலாது. காதலன், கண்ணின் கருமணி இடத்தில் காதலியை வைக்கிறான். அவள் காண்பதே தான் காண்பதாய் இருக்க வேண்டுமெனக் கருதுகிறான்.

சொற்பொருள்

1. கருமணியில் பாவாய் - என் கண்ணின் கருமணியில் தங்கும் பாவையே; நீ போதாய் - நீ அவ்விடத்தைவிட்டு அகன்று செல்; வீழும் - விரும்பப்படும்.
2. திரு நுதல் - அழகிய நெற்றியைக் கொண்டவள் (காதலி); இடம் இல்லை - இருக்க வேறு இடம் இல்லை.

பாங்கற் கூட்டம்

மூன்றாம் நாள், தலைவன் தலைவியைப் பாங்கனால் கூடும் கூட்டம்.

பாங்கனால் தலைவியின் இருப்பிடத்தை அறிந்து, தலைவியைத் தலைவன் கூடும் கூட்டம்.

பாங்கற் கூட்டம் ஏழு வகைப்படும் என நம்பி அகப்பொருள் கூறுகிறது.

1. சேர்தல் – தலைவன் தன் தோழனைச் சென்றடைதல்.
2. கேட்டல் – தோழன் தலைவனது வாட்டத்திற்குக் காரணம் கேட்டல்.
3. சாற்றல் – தலைவன் காரணம் கூறல்.
4. எதிர்மறை – தோழன், தலவனை எதிர்மறுத்துக் கூறல்.
5. நேர்தல் – தோழன், தான் சென்று தலைவியைக் கண்டு வர ஒப்புக்கொள்ளுதல்.
6. கூடல் – தலைவன் சென்று தலைவியைக் கூடல்.
7. பாங்கிற் கூட்டம் – தலைவன், தலைவியைப் பாங்கியரது இடத்தில் சேரச் சிறிதே தொலைவில் கொண்டுபோய் விடுதல்.

தலைவன் கூற்று

திணைமொழி ஐம்பது 49 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பாங்கற்குச் சொல்லியது. (பாங்கன் - தோழன்)

கூற்று விளக்கம்

தலைவன், இளம்பெண் ஒருத்தியை ஒரு சோலையில் கண்டதைத் தோழனிடம் சொல்லியது.

மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வம்கொல் கேளீர்! குயில்பயிரும்
கன்னி இளஞாழல் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும்என் நெஞ்சு.

தெளிவுரை

நட்பிற்சிறந்த தோழனே! குயில்கள் கூவி விளையாடுவதும் இளமையான கோங்க மலர்கள் நிறைந்துள்ளதுமான சோலையில் நான் கண்ட அம்மகள் மயிலோ, இவ்வுலகிலுள்ள இளமையான பெண்ணோ, அலைகள் நிறைந்த கடலில் வாழும் நீரர மகளோ என அறியாது மயங்குகிறேன். அவளை நோக்கிய என் கண்களைக் காட்டிலும் என் மனந்தான் மிகுதியான துன்பமடைந்துள்ளது. என் செய்வேன்?

கருத்து

சோலையில் நான் கண்டவள் தெய்வ மகளா, மனிதப்பெண்ணா என அறியாது மயங்குகிறேன்.

சொற்பொருள்

1. மயில்கொல் - மயில்தானோ?; மடவாள் - இளமையான பெண்; மாநீர் - பெரிய நீர்க்கடல்; திரை - அலை.
2. பயில்தல் - வாழ்தல்; கேளீர் - நண்பனே!; பயிரும் - கூவும்.
3. கன்னி - முதன் முதலாய்ப் பூத்த; ஞாழல் - ஒரு வகை மரம்.
4. கண்ணின் - கண்ணைவிட.

தலைவன் கூற்று

குறுந்தொகை 119 **சத்திநாதனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை ஒரு பொழிலிடத்தே புணர்ந்து திரும்பிய தலைவனிடம் காணப்பட்ட வேறுபாடு கண்டு, 'இஃது எதனாலாகியது?' என்று வினவிய தோழனிடம் தலைவன் கூறியது.

சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள், முளைவாள் எயிற்றள்,
வளையுடைக் கையள்எம் அணங்கி யோளே.

தெளிவுரை

"அழகிய கோடுகளைக் கொண்ட சிறிய வெண்ணிறப் பாம்புக் குட்டி, பெரிய காட்டுயானையைத் தீண்டி வருத்தினாற்போல, மிகவும் இளமை வாய்ந்தவளும், மூங்கிலின் முளை போன்ற ஒளிதரும் பற்களைக் கொண்டவளும், வளையலணிந்த கைகளைக் கொண்டவளுமாகிய ஒருத்தி என்னை வருந்தச் செய்துவிட்டனள்" எனத் தலைவன் தோழனிடம் கூறினான்.

கருத்து

இளைய பெண் ஒருத்தி தன் முறுவலினால் வலிமை வாய்ந்த என்னை வருத்திவிட்டனள்.

விளக்கம்

"பாம்புக்குட்டி கடித்தவுடன் அதன் நஞ்சு யானையின் உடல் முழுதும் பரவியதுபோல அவள் முறுவலைக் கண்டதும் காம நோய் என் உடல் முழுவதும் பரவிவிட்டது" என்கிறான், தலைவன்.

சொற்பொருள்

1. சிறு - சிறிய; வெள் - வெள்ளை நிறம்; அரவு - பாம்பு; அ வரி - அழகிய வரிகளைக் கொண்ட; குருளை - குட்டி.
2. அணங்குதல் - தீண்டி வருத்துதல்; யாஅங்கு - போல.
3. முளை - மூங்கிலின் முளை போன்ற; வாள் - ஒளி; எயிற்றள் - பற்களைக் கொண்டவள்.
4. வளை - வளையல்; அணங்கியோள் - வருத்தியவள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 72 **மள்ளனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன், தன் வேறுபாடு கண்டு வினாய (வினாவிய) பாங்கற் குரைத்தது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி எய்திப் பிரிந்த பின்னர்த் தலைவியை எய்தப் பெறாமையால் மெலிவுற்ற தலைவனிடம், 'இவ்வேறுபாடு உனக்கு எதனால் ஆயிற்று' எனத் தோழன் வினவ, அதற்குத் தலைவன் கூறியது.

பூஒத்து அலமரும் தகைய; ஏஒத்து
எல்லாரும் அறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்தோள், மாமலைப்
பரீஇ வித்திய ஏனல்
குரீஇ ஒப்புவாள், பெருமழைக் கண்ணே!

தெளிவுரை

"பெரிய மலைப்பக்கத்தே பருத்தியை ஊடுபயிராய் விதைத்த தினைப்புனத்தில், கதிர்களில் வந்து விழும் குருவிகளை ஓட்டி நின்றாள், மகள் ஒருத்தி. இனிய மொழியினையும் திரண்ட மென்மையான தோள்களையும் கொண்ட பெரிய குளிர்ச்சி பொருந்திய அவள் கண்கள் பூவைப்போல் மென்மையன;

சுழன்று பார்க்கும் தன்மையன; அவை என்மீது அம்பினைப் போன்று பாய்ந்து என்னை மெலிய வைத்து, எல்லோரும் வெளிப்பட அறியுமாறு என்னுள் காமநோயை உண்டாக்கி விட்டன" எனத் தலைவன் தன் தோழனிடம் கூறினான்.

கருத்து

தினைப்புனம் காக்கும் பெண் ஒருத்தியின் கண்கள் என்னை இந் நிலைக்கு ஆளாக்கிவிட்டன.

விளக்கம்

அமைப்பால் கண்கள் பூவையொத்து மென்மையனவாயினும் செயலால் அம்பு போன்ற கொடுமையனவாயின.

சொற்பொருள்

1. அலமரும் - சுழன்று பார்க்கும்; தகைய - தன்மையன; ஏ - அம்பு.
2. நோய் - காம நோய்.
3. தேமொழி - இனிய பேச்சு; மா - பெரிய.
4. பரீஇ - பருத்தி; வித்திய - (ஊடுபயிராய்) விதைத்த; ஏனல் - தினை.
5. குரீஇ - குருவி; ஓப்புவாள் - விரட்டி ஓட்டுவாள்; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 15 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பாங்கற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

எதனால் வருத்தம் உண்டானது என்று பாங்கன் கேட்க, தலைவன் தனக்கு நேர்ந்ததைக் கூறுவது.

திரைவிரி தருதுறையே, திருமணல் விரிஇடமே,
விரைவிரி நறுமலரே, மிடைதரு பொழில்இடமே,
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே எனைஇடர் செய்தவையே!

தெளிவுரை

அலைகள் பரந்த நீர்த்துறை; அழகான மணற்பரப்பு; மணம் மிக்க மலர்கள்; மரங்கள் நெருங்கிய கானற்சோலை. (அங்கே தோன்றிய பெண்ணின்) மணமுள்ள சுருண்ட கூந்தலும், மதி போன்ற அழகிய முகமும், அதில் பிறழும் கயல் போன்ற இரு கண்களுமே என்னைத் துன்புறச் செய்தன.

கருத்து

ஒருத்தியின் மதி போன்ற முகத்தில் உள்ள கயல் போன்ற கண்கள் என்னை வருத்தின.

சொற்பொருள்

1. விரி - பரந்த.
2. விரை - மணம்; மிடைதல் - நெருங்கல், செறிதல்.
3. மரு - மணம்; புரி - சுருள்; குழல் - கூந்தல்.
4. கயல் - கயல் மீன்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 14 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பாங்கற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

எதனால் வருத்தம் உண்டானது என்று பாங்கன் கேட்க, தலைவன் தனக்கு நேர்ந்ததைக் கூறுவது.

பொழில்தரு நறுமலரே, புதுமணம் விரிமணலே,
பழுதுஅறு திருமொழியே, பணைஇள வனமுலையே,
முழுமதி புரைமுகமே, முரிபுரு வில்இணையே,
எழுதஅரும் மின்இடையே எனைஇடர் செய்தவையே!

தெளிவுரை

தோழனே! பூம்பொழில் தருகின்ற நறுமணம் நிறைந்த மலர்; அம்மலர்மணம் விரிகின்ற பரந்த மணல்; அங்கிருந்த ஒருத்தியின் பழுதற்ற இனிய மொழி; பருத்த அழகிய இளங்கொங்கைகள்; முழுமதி போன்ற முகம்; வளைந்த புருவமாகிய இரு வில்; எழுது வதற்கு இயலாத மின்னல் போன்ற நுண்ணிய இடை. இவையே என்னைத் துன்புறச் செய்தன.

கருத்து

பெண் ஒருத்தியின் இளங்கொங்கைகளும், புருவங்களும், இடையுமே என்னை வருத்தின.

சொற்பொருள்

1. பொழில் - சோலை.
2. பழுது - குற்றம்; பணை - பருத்த.
3. புரை - போல (உவம உருபு); முரிபுரு - வளைந்த புருவம்.
4. எழுதஅரும் - எழுதுவதற்கு இயலாத; மின்இடை - மின்னல் போன்ற நுண்ணிய இடை; இடர் - துன்பம்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 16 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பாங்கற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

எதனால் வருத்தம் உண்டானது என்று பாங்கன் கேட்க, தலைவன் தனக்கு நேர்ந்ததைக் கூறுவது.

வளைவளர் தருதுறையே, மணம்விரி தருபொழிலே,
தளைஅவிழ் நறுமலரே, தனிஅவள் திரிஇடமே,
முளைவளர் இளநகையே, முழுமதி புரைமுகமே,
இளையவள் இணைமுலையே எனைஇடர் செய்தவையே!

தெளிவுரை

சங்குகள் வளர்கின்ற துறை; மணம் பரந்த கானற்சோலை; முறுக்கவிழ்ந்த மணமலர்கள். (அங்கே) தனித்து உலவி நின்ற ஒருத்தியிடம் தோன்றி மலர்ந்த புன்முறுவலும், முழுமதி போன்ற அழகிய அவள் முகமும், இளமைப்பருவமுள்ள இணைந்த கொங்கைகளுமே என்னைத் துன்புறுத்தின.

கருத்து

ஒருத்தியின் அழகிய முகமும், மலர்ந்த புன்முறுவலும், இணைந்த கொங்கைகளுமே என்னை வருத்தின.

சொற்பொருள்

1. வளை - சங்கு; வளர்தரு - வளர்கின்ற; விரிதரு - விரிகின்ற.
2. தளை - முறுக்கு; அவிழ் - அவிழ்தல், நெகிழ்தல்.
3. முளைவளர் - தோன்றி மலர்ந்த; இளநகை - புன்முறுவல்.
4. இடர் - துன்பம்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 129 **கோப்பெருஞ்சோழன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனது வாட்டத்தைக் கண்ட தோழன், 'உனக்கு இவ்வாட்டம் உண்டாதற்குக் காரணம் யாது?' என்று கேட்டபோது தலைவன் கூறியது.

எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!
புலவர் தோழ! கேளாய் அத்தை;
மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
5 கதுப்புஅயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே.

தெளிவுரை

"என் தோழனே! இளையோர்க்கு இன்பமூட்டும் நட்புக் கொண்டோய்! அறிவுடையார்க்கு உற்ற நண்பனே! நான் சொல்வதைக் கேள்! கரிய கடலின் நடுவே வளர்பிறையின் எட்டாம் நாளில் ஒளிவீசித் தோன்றும் பிறைமதிபோல, பெண் ஒருத்தியின் கூந்தலுக்குப் பக்கத்தே தோன்றுகின்ற சிறிய நெற்றியானது, புதிதாய்ப் பிடிக்கப்பட்ட யானையைக் கட்டி வைப்பதுபோல என்னைக் கட்டி வைத்துவிட்டது" எனத் தான் பெண் ஒருத்தியின் காதலில் கட்டுண்டிருப்பதைத் தலைவன் தோழனிடம் கூறினான்.

கருத்து

பெண் ஒருத்தியின் எட்டாம் நாள் பிறை போன்ற நெற்றி என்னைக் கட்டிப் போட்டுவிட்டது.

சொற்பொருள்

1. எலுவ - தோழ; சிறார் - இளையோர்; ஏமம் - இன்பம்.
2. புலவர் - அறிவு வாய்ந்தோர்; கேளாய் - கேள்; அத்தை - அசைச்சொல் (பொருளற்ற சொல்).
3. மா - கரிய; நடுவண் - நடுவே; எண்நாள் பக்கம் - எட்டாம் நாள் பிறை.
4. பசு வெண் - இளமையான வெண்மை நிறமுள்ள; ஆங்கு - போல.
5. கதுப்பு - கூந்தல்; அயல் - அருகே; விளங்கும் - தோன்றும்.
6. புதுக்கோள் - புதிதாய்ப் பிடிக்கப்பட்ட; பிணித்தல் - கட்டி வைத்தல்; எம்மே - என்னை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 95 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்வதையும், அடிக்கடி அவன் பெருமூச்சு விடுவதையும் தோழன் கண்டான்; "நீ ஏன் இப்படி வேறு பட்டிருக்கிறாய்? அஞ்சாத வலிமை படைத்த நீ இப்படி வாடியிருப்பதற்குக் காரணம் யாது? மறைக்காமல் என்னிடம் சொல்" என்று கேட்டான். அதற்குத் தலைவன் கூறியது.

மால்வரை இழிதரும் தூவெள் அருவி
கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்
நீர்ஓ ரன்ன சாயல்
தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே.

தெளிவுரை

"பெரிய மலையிலிருந்து வீழும் தூய வெண்மையான அருவிநீர், பாறை வெடிப்புகளில் விழுந்து ததும்பி ஒலிப்பதும், பல்வேறு மலர்கள் பூத்திருப்பதுமான மலைச்சாரல்; அச் சாரலில் உள்ள சிற்றூரில் வாழும் குறவன் பெற்ற, பெரிய தோள்களைக்கொண்ட இளமகளின் நீர் போன்ற இனிய சாயல், தீ ஒத்த என் மன வலிமையை அழித்துவிட்டது."

கருத்து

குறமகள் ஒருத்தியின் நீர் போன்ற இனிய சாயல், தீப்போன்ற என் வலிமையை அழித்துவிட்டது.

விளக்கம்

நீர், தீயை அணைப்பதுபோல, தலைவியின் இனிய சாயல் தலைவனின் மன ஊக்கத்தை அழித்துவிட்டது.

சொற்பொருள்

1. மால் வரை - பெரிய மலை; இழிதரும் - வீழும்; தூவெள் - தூய வெண்மையான.
2. கல்முகை - பாறை வெடிப்பு; ததும்பும் - ஒலிக்கும்.
3. சிறுகுடி - சிற்றூர்; குறுமகள் - இளமகள்.
4. நீர் ஓரன்ன - நீர் போன்ற (இனிய).
5. உரன் - வலிமை; அவித்தன்று - அழித்துவிட்டது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 100 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவி ஒருத்தியிடம் தலைவன் காமுற்றதை அவன் வாயிலாய் அறிந்த பாங்கன், 'அவள் எவ்வியல்பினள்?' என்று வினவியதற்குத் தலைவன் கூறியது.

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்து உண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற்கு அரிய, பணைப்பெருந் தோளே.

தெளிவுரை

"அருவி பாயும் நிலப்பரப்பில் மலைநெல்லை விதைத்து, வளர்த்து, அப்பயிர்களிடையே முளைத்த பெரிய இலைகளைக் கொண்ட மலைமல்லிகையையும் பச்சை நிறமுள்ள

மரல்செடிகளையும் மலைவாழ் மக்கள் களையாகப் பிடுங்கி யெறிவர். அவர்கள் சிற்றூர் செங்காந்தளை உயிர்வேலியாய்க் கொண்டிருக்கிறது. அங்குள்ளவர்களுக்குப் பசி தோன்றினால் தங்களிடமுள்ள யானைத்தந்தங்களை விற்று அதனால் கிடைக்கும் வருவாயிலிருந்து உணவுப்பொருள்களை வாங்கி உண்பர். அவர்கள் வாழும் கொல்லிமலை, வல்வில் ஓரி என்னும் வள்ளலுக்குரியது. அம்மலையின் மேற்குப்பக்கத்திலுள்ள கொல்லிப்பாவை போன்ற அழகு வாய்ந்தவள் என் காதலி. மூங்கில் போன்ற அவள் பெரிய தோள்கள் தழுவிக் கூடுதற்கு அரியன."

கருத்து

நான் கண்டுவந்த இளமை பொருந்தியவள், கொல்லிப்பாவை போன்று மயக்கும் அழகினள்; தழுவிக் கூடுதற்கு அரியவள்.

குறிப்பு

வல்வில் ஓரி கொல்லிமலையை ஆண்டவன்; சிறந்த வள்ளல். கொல்லி மலையில் தன்னைக் கண்டாரைத் தன் அழகால் வருத்தும் 'கொல்லிப் பாவை' இருந்தது.

சொற்பொருள்

1. அருவிப் பரப்பு - அருவி பாயும் நிலப்பரப்பு; ஐவனம் - மலைநெல்; வித்தி - விதைத்து.
2. பருஇலை - பெரிய இலை; குளவி - மலை மல்லிகை; பசு மரல் - பச்சை நிறமுள்ள மரல் செடி; கட்கும் - (களையாய்ப்) பிடுங்கி எறியும்.
3. காந்தள் - காந்தள் செடி; வேலி - (உயிர்) வேலியாய்க் கொண்டுள்ள; பசிப்பின் - பசி தோன்றினால்.
4. வேழம் - ஆண்யானை; கோடு - கொம்பு, தந்தம்; நொடுத்து - விற்று.
5. ஓரி - கொல்லிமலையை ஆண்டவன், கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; கொல்லி - கொல்லிமலை; குடவரை - மேற்குப்பாகம்.
6. பாவை - கொல்லிப்பாவை; மடவந்தனள் - இளமையானவள்.
7. மணத்தற்கு - தழுவுதற்கு; பணை - பருத்த.

தலைவன் கூற்று

அகநானூறு 140 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தான் உறவு கொண்ட பெண் தன்னை வருத்துவதாய்த் தலைவன் தோழனிடம் கூறியது.

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி,
'நெல்லின் நேரே வெண்கல் உப்பு'எனச்
சேரி விலைமாறு கூறலின், மனைய
விளிஅறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண், எமக்கு
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வம் தீர வாங்கும் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி,
வெய்ய உயிர்க்கும் நோய்ஆ கின்றே.

தெளிவுரை

சிற்றூரில் வாழ்ந்து, பெருங்கடலில் மீன் வேட்டையாடுபவர் பரதவர். உப்பங்கழியை ஒட்டிய உவர் நிலத்தில், ஏரால் உழாமலேயே விளைவது வெண்ணிற உப்பு. அந்த உப்பினை உப்பு வாணிகர் வண்டியில் ஏற்றி (மருதம் முதலிய பிற நிலங்களுக்குப்) பகலவனின் மிகுதியான 'வெம்மையால் பிளவுண்டுள்ள பாறைகளைக் கொண்ட மலைகளைக் கடந்து விற்பனை செய்ய எடுத்துச் சென்றனர். அவர்களுடன் அவர்கள்

அன்பு மகள், வளையொலிக்கக் கை வீசி நடந்து, 'ஒரு படி நெல்லுக்கு ஒரு படி உப்பு' என்று பண்டமாற்றாய் விலை கூறிச் சென்றாள். வேற்றாள் குரல் கேட்ட வீட்டுநாய் ஒன்று குரைத்ததும், அக்குரல் கேட்டு, கயல்மீன்கள் இரண்டு தம்முள் போரிட்டாற் போன்ற அவள் கண்கள் மருண்டு நோக்கின.

அவ்வாறு அஞ்சி மருண்ட அவள் கண்கள், எதிர்ப்பட்ட என்னைக் கட்டிப் போட்டுவிட்டன. புதுக்கொல்லை உண்டாக்கும்பொருட்டு முயலும் குறவன் சுட்டெரித்ததனால் உண்டாகிய புகையின் நிழல் போன்ற கரிய பழஞ்சேற்றில், அவள் தந்தை கையில் பற்றியுள்ள மாடுகள், உப்பு வண்டியை இழுக்கப் பெருமூச்சு விடும். அதுபோல, அவள் பார்வையைக் கண்ட நானும், அவளிடம் காதல்கொண்டு, 'அவள் நமக்குக் கிடைப் பாளா?' என நெடிது நினைக்கும் எண்ணத்தால் பெருமூச்சு விடுகிறேன். அத்தகைய துன்பத்தை அவள் பார்வை தந்து விட்டது.

கருத்து

உப்பு வாணிகருக்கு இளைய மகள் கையை வீசிக்கொண்டு தெருவில், 'நெல்லுக்குச் சமம் உப்பு' என்று விலை கூறிக் குரலெடுத்து விற்றுச் சென்றாள்; வேற்றுக் குரல் கேட்ட வீட்டுநாய் குரைத்தது; அது கேட்டு வெருவிய அவள் கண்கள் எனக்கு நோய் செய்தன; அவளை நினைந்து பெருமூச்சு விடுகிறேன்.

விளக்கம்

"வண்டி, சேற்றில் அழுந்திய துன்பத்தினை மாடு நீக்கியது போல, எனக்குண்டாகியுள்ள காமநோயை நீதான் போக்க வேண்டும்" எனத் தலைவன் பாங்கனை வேண்டினான்.

குறிப்பு

உப்பு விற்பார் மகளால் வருந்திய தலைவனுக்கு அவர்தம் வண்டியில் பூட்டிய பகட்டினையே உவமையாக்கியிருப்பது ஒரு நயம்.

சொற்பொருள்

1. வேட்டம் - வேட்டை.
2. செறு - வயல்; உழாஅது - உழாமல்.
3. கொள்ளை சாற்றி - விலை கூறி.

4. என்றூழ் - சூரியன்; விடர - பிளவுபட்ட.
5. கதழ்கோல் - விரைந்து செலுத்தப் பயன்படும் கோல்.
6. சில்கோல் - சிலவாகிய திரண்ட; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; தெளிர்ப்ப - ஒலிக்க.
7. நேர் - சமம். ('ஒரு படி உப்புக்கு ஒரு படி நெல்' என்று விற்றதால், சங்க காலத்தில் பண்டமாற்று வாணிக முறை இருந்ததை அறிகிறோம்.)
8. விலைமாறு - பண்டமாற்று விலை (விலையாய் வேறு பொருள்); மனைய - வீட்டில் உள்ள.
9. விளிஅறி - குரல் கேட்ட; ஞமலி - நாய்; வெரீஇய - அஞ்சிய.
10. மதர்கயல் - மதர்த்த கயல் மீன்; மலைப்பு - போர்.
11. இதை - புதுக்கொல்லை; முயல் - உண்டாக்க முயலும்; புனவன் - குறவன்; புகைநிழல் - தீயின் புகை நிழல்; கடுக்கும் - ஒக்கும்.
12. மாமூது அள்ளல் - கரிய பழைய சேறு; சாகாடு - வண்டி.
13. எவ்வம் - துன்பம்; வாங்கும் - இழுக்கும்.
14. கைபூண் - கையில் பற்றிய; பகடு - மாடு.
15. வெய்ய - வெப்பமாய்; உயிர்க்கும் - பெருமூச்சு விடும்; நோய் - துன்பம்.

தலைவன் கூற்று

அகநானூறு 390 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பாங்கற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு கூடிப் பிரிந்துவந்த தலைவன், உடல் வேறுபாடு அடைந்தான். அதைக் கண்ட தோழன், 'நீ இவ்வாறு வேறுபடுவதற்குக் காரணம் என்ன?' என்று வினவ, அதற்குத் தலைவன் கூறியது.

உவர்விளை உப்பின் கொள்ளை சாற்றி,
அதர்படு பூழிய சேண்புலம் படரும்
ததர்கோல் உமணர் போகும் நெடுநெறிக்

கணநிரை வாழ்க்கைதான் நன்று கொல்லோ?
வணர்சுரி முச்சி முழுதும்மன் புரள
ஐதுஅகல் அல்குல் கவின்பெறப் புனைந்த
பல்குழைத் தொடலை ஒல்குவயின் ஒல்கி,
'நெல்லும் உப்பும் நேரே; ஊரீர்,
கொள்ளீ ரோ'எனச் சேரிதொறும் நுவலும்,
அவ்வாங்கு உந்தி அமைத்தோ ளாய்,நின்
மெய்வாழ் உப்பின் விலைஎய் யாம்,என,
சிறிய விலங்கினம் ஆக, பெரியதன்
அரிவேய் உண்கண் அமர்த்தனள் நோக்கி,
'யாரீ ரோஎம் விலங்கி யீஇர்',என,
மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற
சில்நிரை வால்வளைப் பொலிந்த
பல்மாண் பேதைக்கு ஒழிந்தது,என் நெஞ்சே!

தெளிவுரை

"தோழனே! உவர் நிலத்தில் விளைந்த உப்பினை விலை கூறி விற்க, நெடுந்தொலைவில் புழுதியைக் கொண்டுள்ள இடங்களுக்குச் செல்லும் உப்பு வாணிகர் கூட்டத்துடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை சிறந்ததுபோலும்!

"வளைந்து சுருண்ட கூந்தலின் முடி முழுவதும் அலைஅலையாய்ப் புரண்டுகொண்டிருக்க, அல்குலில் அழகுபெறப் புனைந்து அணிந்துள்ள தளிர்களைக் கொண்ட தழையுடை, அவள் அசையுமிடத்து அதுவும் அசைந்தாட நடந்து, 'ஊரவரே! நெல்லும் உப்பும் விலை ஒப்பு ஆகும்; வாங்கிக்கொள்வீர்' என்று சேரிதோறும் சென்று விற்கும் ஒருத்தியைக் கண்டேன். அவளைப் பார்த்து, 'அழகிய வளைந்த கொப்பூழையும் மூங்கில் போன்ற தோளையும் கொண்டவளே! உப்பின் விலை கூறினாய்; உன் உடலின் உப்புக்கு (இன்பத்துக்கு) உரிய விலை என்ன? என்று அறியோம்' என்று கூறி, அவளைச் சிறிதுபொழுது தடுத்து நிறுத்தினேன்.

"அவள், பெரிய செவ்வரி படர்ந்த மையுண்ட தன் கண்களால் சிறிது மாறுபட்டவள்போல நோக்கி, 'எம்மைத் தடுக்கும் நீவிர்

யாவிரோ?' எனச் சொல்லி இளநகை கொண்டவளாய்ச் சற்றுத் தள்ளி நின்றாள். சில வளையல்களை நிரையாய் அணிந்து பொலிவுடன் திகழ்ந்த, பெருமை பல கொண்ட, அப்பேதையின் பொருட்டு என் நெஞ்சம் வலிமையை இழந்துவிட்டது."

கருத்து

உப்பு விற்கும் இளநங்கை ஒருத்தியின்பொருட்டு என் நெஞ்சம் வலிமை இழந்துவிட்டது.

சொற்பொருள்

1. உவர் - உவர் நிலம்; கொள்ளை - விலை; சாற்றி - கூறி.
2. அதர் - வழி; பூழிய - புழுதி கொண்ட; சேண் புலம் - நெடுந்தொலைவில் உள்ள இடம்; படரும் - செல்லும்.
3. ததர்கோல் - விரைந்து செலுத்தப் பயன்படும் கோல்; உமணர் - உப்பு வாணிகர்.
5. வணர்சுரி - வளைந்து சுருண்ட; முச்சி - முடி, கூந்தல்; மன்புரள - மிகவும் அலைய.
6. ஐது அகல் - மெல்லிய அகன்ற; கவின் - அழகு.
7. பல்குழை - பல தளிருடன் கூடிய; தொடலை - தழையுடை; ஒல்கி - அசைந்து.
8. ஊரீர் - ஊரினரே!
9. நுவலும் - கூறும்.
10. அவ் வாங்கு உந்தி - அழகிய வளைந்த கொப்பூழ்; அமை - மூங்கில்.
11. மெய் வாழ் உப்பு - உடலில் தோன்றும் இன்பம்; எய்ஆம் - என்ன விலை ஆகும்?
12. விலங்கினம் - தடுத்து நிறுத்தினேன்.
13. அரிவேய் - செவ்வரி படர்ந்த; அமர்த்தனள் - மாறுபட்டவள் போல.
14. விலங்கியீஇர் - தடுப்பவர்.
15. மூரல் முறுவல் - இளநகை; பேர்வனள் - சிறிது தள்ளி.
16. சில்நிரை - சில வரிசை; வால் வளை - வெண்மையான வளையல்.
17. பல்மாண் - பல வகையான பெருமை; ஒழிந்தது - வலிமையை இழந்துவிட்டது.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 172 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'கண்துயில்கின்றிலை, இதற்குக் காரணம் என்?' என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவெல்லாம் துயிலற்றுச் சோர்ந்துள்ள தலைவனைத் தோழன் பரிவொடு நெருங்கி, 'இதற்குக் காரணம் என்னவோ?' என்று கேட்க, தலைவன் கூறியது.

ஒண்தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே!
வண்டுஇமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடலொலித் திரையென
இரவி னானும் துயில்அறி யேனே!

தெளிவுரை

"ஒளி பொருந்திய வளையலணிந்த நங்கை ஒருத்தி என் நெஞ்சத்தைக் கவர்ந்துகொண்டனள். ஆதலின், வண்டுகள் ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய துறையைக் கொண்ட தொண்டிப்பட்டினத்தின் பரந்த கடலலைபோல, நான் இரவிலும் உறக்கம் இல்லாதவனாயிருக்கிறேன்."

கருத்து

'நங்கை ஒருத்தி என் நெஞ்சத்தைக் கவர்ந்துகொண்டாள்; ஆதலின், நான் நள்ளிரவிலும் துயிலாதவன் ஆயினேன்.'

விளக்கம்

கடலலை எழுந்து தாழ்வதுபோல, அவளைக் கூடுவதுபோல் எண்ணம் எழும்போது மன எழுச்சியும், கூட இயலவில்லை என்னும்போது மனத்தளர்ச்சியும் அடைகிறான், தலைவன்.

கடலலை இரவு, பகல் இடையறாது ஒலித்தல்போல, அவனும் இரவு, பகல் எப்பொழுதும் அவளையே நினைந்து தூங்காது உள்ளான்.

குறிப்பு

எல்லா உயிர்களும் தூங்கும் இரவிலும் நான் தூங்காதவனாய் இருக்கிறேன் என ஏங்குகின்றான், தலைவன்.

சொற்பொருள்

1. ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல்.
2. இமிர் - ஒலிக்கின்ற; பனி - குளிர்ச்சி பொருந்திய; தொண்டி - ஒரு துறைமுகம்.
3. உரவு - பரந்த; திரை - அலை.
4. துயில் - தூக்கம்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 30 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கண்டு நிறையழிந்த தலைவன் தன் தோழனிடம் கூறியது.

திங்களுள் வில்எழுதித் தேராது வேல்விலக்கித்
தங்கள்(உ)ளாள் என்னும் தாழ்வினால் – இங்கண்
புனங்காக்க வைத்தார்போல் பூங்குழலைப் போந்(து)என்
மனங்காக்க வைத்தார் மருண்டு.

தெளிவுரை

“முழு நிலவில் இரு வில்களை எழுதி வைத்து, அவை போதா என்று அவற்றின் கீழ் இரு வேல்களைப் புதைத்து வைத்திருப்பது போல, தன் திருமுகத்தில் வளைந்த புருவங்களையும் பிறரைத் துன்புறுத்தும் கண்களையும் கொண்டுள்ளவள், அவள்.

அழகால் பிறரை வருத்தும் அவள் பெருமையறியாது அவள் குலத்தவர் அவளை எளிய பெண் என்று கருதித் தினைப்புனம் காக்க அனுப்பி வைத்துள்ளனர். அவளோ என் மனத்தில் புகுந்து என்னைக் காவல் காக்கிறாள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்."

கருத்து

தினைப்புனம் காக்க வந்தாள் பெண் ஒருத்தி; அவள் வில்லையும் கயல்மீன்களையும் பதித்த முழுமதி முகத்தாள்; அவள் தினையைக் காப்பதைவிட்டு என் நெஞ்சத்தில் பரண் அமைத்து என்னைக் காக்கிறாள்.

சொற்பொருள்

1. திங்கள் - நிலவு; தேராது - பிறரை வருத்தும் என எண்ணிப் பாராது; வேல் விலக்கி - வேலை (இரு கண்களை அவ்விற்களிடையே) புதைத்து வைத்து.
2. தங்கள் உளாள் - தங்கள் குலத்தில் ஒருத்தியாய் உள்ளாள்; தாழ் வினால் - எளிமையானவள் என்ற கருத்தில்; இங்கண் - இங்கே.
3. புனம் - தினைப்புனம்; பூங்குழலை - பூக்கள் நிறைந்த கூந்தலைக் கொண்ட தலைவியை.
4. மருண்டு - அறிவின்றி.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 32 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கண்ட தலைவன் அவள்மீது தான் கொண்டுள்ள காதலைப் பற்றித் தோழனிடம் கூறியது.

பானல்அம் தண்கழிப் பா(டு)அறிந்து தன்ஐமார்
நூல்நல நுண்வலையால் நொண்டெடுத்த – கானல்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் நோக்கம்
கடி(பு)ஒல்லா என்னையே காப்பு.

தெளிவுரை

நெய்தல் மலர்கள் பூத்துள்ள குளிர்ந்த உப்பங்கழிகளில் பரதவர்கள், நூல்களால் நுட்பமாய்ப் பின்னப்பட்ட வலைகளை வீசி முகந்துவந்த மீன்களைக் கடற்கரைச்சோலையில் கருவாடாக்கக் காய வைத்தனர். அக்கருவாடுகளைப் பறவைகள் பற்றிச் செல்லா வண்ணம் தம் உடன்பிறந்தாளைக் காவலுக்கு வைத்தனர். வேல் போன்ற நெடிய கண்களைக் கொண்ட அவள் பார்வை, கருவாடுகளைக் காத்தலில் கருத்தைச் செலுத்தாது, என்னையே தன் உள்ளத்தில் கிடத்திக் காவல் செய்யும் வலிமையைப் பெற்றுள்ளது.

கருத்து

கடற்கரையில் கருவாடுகளைக் காக்க வந்தவள் அவற்றைக் காக்காது தன் உள்ளத்தில் என்னை வைத்துக் காவல் செய்துகொண்டிருக்கிறாள்.

சொற்பொருள்

1. பானல் - நெய்தல் மலர்; தண் - குளிர்ச்சி; கழி - உப்பங்கழி; பாடு - வழி; ஐ - தமையன்.
2. நுண்மை - நுட்பம்; நொண்டெடுத்த - முகந்து எடுத்த; கானல் - கடற்கரைச்சோலை.
3. படு புலால் - காய வைக்கப்பட்டுள்ள கருவாடு; படை - வேற்படையினை ஒத்த; நோக்கம் - பார்வை.
4. கடிபு - (கருவாட்டினைக்) காத்தலில்; ஒல்லா - (கருத்தைச்) செலுத்தாது; என்னையே காப்பு - என்னையே காவல் செய்கிறது.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 33 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பெண் ஒருத்தியைக் கண்டு காதல் கொண்டதைத் தோழனிடம் கூறியது.

பெருங்கடல் வெண்சங்கு காரணமாப் பேணா(து)
இருங்கடல் மூழ்குவார் தங்கை – இருங்கடலுள்
முத்தன்ன வெண்முறுவல் கண்டுருகி நைவார்க்கே
ஒத்தனம் யாமே உளம்.

தெளிவுரை

வெண்சங்குகளைப் பெறுவதற்காய்த் தம் உயிரையே பொருட்படுத்தாது கரிய கடலுள் மூழ்கிக்கொண்டுள்ளனர், பரதவர்கள். அவர்கள் தங்கையின் முத்தன்ன முறுவல் கண்டு மனம் உருகி நான் இங்கே நிற்கின்றேன்.

கருத்து

கடலிலுள்ள முத்துகளை எடுக்க அவள் தமையன்மார் உயிரையே பணயம் வைத்துக் கடலுள் மூழ்குகின்றனர். நானோ இவள் பல்முத்துகளைக் கண்டு என் உள்ளத்தையே பணயம் வைத்து இங்கே நிற்கின்றேன்.

சொற்பொருள்

1. பேணாது - (தம் உயிரையும்) பொருட்படுத்தாது.
2. இருங்கடல் - கரிய கடல்.
3. முறுவல் - புன்னகை; நைதல் - வருந்துதல், உருகுதல்.
4. ஒத்தனம் - ஒப்புமையானோம்.

தலைவன் கூற்று

நாலடியார் 395 **சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தலைமகளின் அழகுநலம் தன்னை வருத்துவதைப் பாங்கனிடம் கூறியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கூடி வந்த தலைவன், அவள் பிரிவால் பெரிதும் வருந்தியிருந்தான். அவன் அவ்வாறு இருப்பதேன் என வினவிய தோழனுக்குத் தலைவன் சொல்லியது.

கண்கயல் என்னும் கருத்தினால் காதலி
பின்சென்றது அம்ம சிறுசிரல் – பின்சென்றும்
ஊக்கி எழுந்தும் எறிகல்லா, ஒண்புருவம்
கோட்டிய வில்வாக்(கு) அறிந்து.

தெளிவுரை

தோழனே! சிறிய சிச்சிலிக் குருவி ஒன்று என் காதலியின் கண்களைக் கயல்மீன் என்று கருதியதால் அவற்றைக் குத்தி எடுக்க அவள் பின்னே சென்றது. அவ்வாறு பின்னே சென்று, ஊக்கத்துடன் குத்த எழுந்ததும், அவளுடைய ஒளிமிக்க புருவம் வளைக்கப்பட்ட வில்போல் இருந்ததைக் கண்டு அஞ்சி, கண்களைக் குத்தாது திரும்பியது.

கருத்து

தலைவியின் கனிந்த பார்வை என்னை அழைக்கிறது; வளைந்த புருவம் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அவளைப் பிரிந்திருப்பதால் வருந்தியிருக்கிறேன்.

சொற்பொருள்

1. கயல் - ஒருவகை மீன்.
2. சிறுசிரல் - சிச்சிலிப் பறவை.
3. ஊக்கி - ஊக்கத்துடன்; எறிகல்லா - குத்தாது.
4. கோட்டிய - வளைந்த; வில்வாக்கு - வில் வளைவு போன்றிருந்ததை.

தலைவன் கூற்று

நற்றிணை 160 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

கழற்றெதிர்மறை.

(கழறுதல் - (தோழன்) கடிந்துரைப்பதை; எதிர்மறை - (தலைவன்) மறுத்துக் கூறுதல்.)

(கழற்றெதிர்மறை - கூறுவதை மறுத்துரைப்பது.)

கூற்று விளக்கம்

'இளம்பெண் ஒருத்தியின் எழில் நலத்தால் நிலைகலங்கி வருந்துவது அழகா? நின் பெருமைப்பண்புகளெல்லாம் சிதைவனவா?' எனக் கடிந்துரைத்த தோழனிடம் தலைவன் அதனை மறுத்துரைப்பது.

நயனும், நண்பும், நாணும்நன்கு உடைமையும்,
பயனும் பண்பும் பாடுஅறிந்து ஒழுகலும்,
நும்மினும் அறிகுவேன் மன்னே கம்மென
எதிர்த்த தித்தி, ஏர்இள வனமுலை
விதிர்த்துவிட் டன்ன அம்நுண் சுணங்கின்,
ஐம்பால் வகுத்த கூந்தல், செம்பொன்
திருநுதல் பொலிந்த தேம்பாய் ஓதி,
முதுநீர் இலஞ்சி பூத்த குவளை
எதிர்மலர்ப் பிணையல் அன்னஇவள்
அரிமதர் மழைக்கண் காணா ஊங்கே.

தெளிவுரை

"தித்தி பொருந்தி மேலெழுகின்ற இளைய, அழகிய முலைகள்; அள்ளித் தெளித்தது போன்ற படர்ந்த அழகிய தேமல்; ஐந்து வகையாய் முடிக்கப்பட்டுத் தேனீக்களால் சூழப்பட்டிருக்கும் கூந்தல்; திலகமிட்டுள்ள அழகிய நெற்றி ஆகியவற்றால் பொலிவுற்றுத் தோன்றுகிறாள், ஒருத்தி. தெளிந்த நீர்ப்பொய்கையில் மலர்ந்த குவளை மலர்களை எதிரெதிர் வைத்துப் பிணைத்தது போன்று செவ்வரி பரந்து மதர்த்து விளங்குகின்றன, அவள்

கண்கள். அக்கண்களை நான் காணாமுன்பு அன்பும், நட்பும், நாணமும், நன்னெறி செல்லும் அறிவும், பிறர் நலம் பேணும் தன்மையும், பண்புடைமையும், உலக நடையறிந்தொழுகும் பாங்கும் உன்னைவிட மிக்குடையவனாய் இருந்தேன். அவள் கண்களைக் கண்ட பின்னர் இப்போது அவை யாவும் என்னிடம் இல்லையாயின" என்று தலைவன் தோழனிடம் கூறினான்.

கருத்து

'முலை, சுணங்கு, கூந்தல், நெற்றி ஆகியவற்றால் பொலிந்த குளிர்ச்சி பொருந்திய அவள் கண்களைக் காணா முன்பு நயன், நண்பு, நாண் முதலான நற்பண்புகளை உன்னைவிட மிகுதியாய்க் கொண்டவனாயிருந்தேன். இப்போது அவை அனைத்தும் நீங்கியவன் ஆயினேன்' என்று தலைவன் தன் தோழனிடம் கூறினான்.

சொற்பொருள்

1. நயன் - அன்பு.
2. பாடறிந்து ஒழுகுதல் - உலக நடையறிந்து நடத்தல்.
3. நும்மினும் - உன்னைவிட; மன் - இடைச்சொல் (பொருளற்ற சொல்); கம் என - சுவையுணர்வைத் தூண்டுவதாய்.
4. தித்தி - மேனிமேல் தோன்றும் அழகுப் புள்ளிகள்; ஏர் - அழகு.
5. விதிர்த்து விடுதல் - விரலால் தெறித்துவிடுதல்; அம் - அழகிய; சுணங்கு - தேமல்.
6. ஐம்பால் - ஐந்தாய்ப் பகுக்கப்படுதல்.
7. தேம் - தேன் - தேன் வண்டு; ஓதி - கூந்தல்.
8. இலஞ்சி - பொய்கை.
9. பிணையல் - மாலை.
10. அரி - செவ்வரி; மதர்த்த - செழுமையான; ஊங்கு - முன்பு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 184 **ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்**

திணை : நெய்தல்

கூற்று

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

கூற்று விளக்கம்

தன்னை இடித்துரைத்த தோழனை நோக்கித் தலைவன் கூறியது.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை;
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே;
இதற்குஇது மாண்டது என்னாது அதற்பட்டு,
ஆண்டுஒழிந் தன்றே, மாண்தகை நெஞ்சம்;
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே.

தெளிவுரை

"நுண்ணிய வலையினைக் கொண்ட பரதவரின் இளமை வாய்ந்த மகள் ஒருத்தி, மயில்தோகையில் காணப்படும் கண் போன்ற அழகிய கூந்தலைக் கொண்டவளாய்ப் பாவை போன்று, கடற்கரைச் சோலையில் இருக்கிறாள்; இதற்கு இது சிறப்புடையது என்றெல்லாம் சிந்திக்காது, மாட்சிமைப்பட்ட என் மனம் அவள் கண் வலையில் அகப்பட்டு, அங்கேயே தங்கி விட்டது. தாம் அறிந்த ஓர் உண்மையை மறைத்துப் பொய்யாய்க் கூறுவது சான்றோர் இயல்பன்று; ஆகவே, நான் உண்மையே சொல்கிறேன். அவள் இருக்கும் சிற்றூருக்குச் செல்வதைத் தவிர்த்துவிடுங்கள். சென்றால் என் நிலையையே நீங்களும் அடைவீர்கள்" எனத் தன் தோழனிடம் தலைவன் கூறினான்.

கருத்து

"தோழனே! பரதவர் மகளைக் காண்பதற்குமுன் தக்கது இது, தகாதது இது எனச் சிந்தித்தறியும் மாண்புள்ள நெஞ்சத்தைப் பெற்றிருந்தேன்; அவளைக் கண்டதும் சிந்தனை எதுவுமின்றி என் நெஞ்சம் அவளைச்

சென்றடைந்துவிட்டது; இது தவிர்க்க இயலாதது" எனத் தன் நிலையைப் பற்றித் தலைவன் தோழனிடம் உரைத்தான்.

சொற்பொருள்

1. கரி - சாட்சி.
2. குறுகல் ஓம்புமின் - செல்வதைத் தவிர்த்து உம்மைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; சிறுகுடி - சிற்றூர்.
3. மாண்டது - சிறப்பினைக் கொண்டது; அதற்பட்டு - அக் கண்வலை யிலே சிக்கி.
4. ஆண்டு - அங்கே; ஒழிந்தன்றே - தங்கியது.
5. மாண்முடி - சிறப்பமைந்த தலைமுடி; பாவை - பெண் (நான் கண்டவள்).
6. மடமகள் - இளமை பொருந்திய மகள்.
7. படூஉம் - அகப்படுவர்; கானல் - கடற்கரைச்சோலை.

தலைவன் கூற்று

திருக்குறள் 1103 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நிலையான பேரின்பத்தைப் பெறற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இவ்வாறு வருந்துவது தகாது' என்று கழறிய பாங்கற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'பெண் ஒருத்தியைக் கண்டு இவ்வாறு வருந்தி நிற்பது உனக்கு ஏற்றதா?' என்று கடிந்து கூறிய பாங்கனிடம் தலைவன் கூறியது.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தெளிவுரை

தாமரைபோல் சிவந்த கண் படைத்த இறைவன் உலகம், இன்பம் பொருந்தியது என்பர். தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளின்மீது தலைசாய்த்துத் துயிலும் இன்பத்தை விட அவ்வின்பம் இனியதாகுமோ? (ஆகாது.)

கருத்து

இறை உலக இன்பத்தினும் காதலியின் தோள்களில் மேவித் துயிலும் இன்பம் இனியது.

விளக்கம்

ஐம்புல இன்பத்தையே சிறந்ததெனக் காதலன் எண்ணுகிறான். அது, தான் விரும்பும் பெண்ணிடம் கிடைக்கிறது; ஆதலால், அந்த இன்பந்தான் உயர்ந்தது என்று எண்ணி மகிழ்கிறான்.

சொற்பொருள்

1. தாம்வீழ்வார் - தாம் விரும்பும் காதலியர்; துயில் - உறக்கம்.
2. தாமரைக் கண்ணான் - தாமரை போன்ற கண்களைக் கொண்ட திருமால் (இறை).

தலைவன் கூற்று

குறுந்தொகை 132 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழற்றெதிர்மறை.

கூற்று விளக்கம்

பேரறிவு கொண்ட நீ, பெண் ஒருத்திக்காக உள்ளம் உடைதல் அழகோ என்று இடித்துரைத்த தோழனிடம் தலைவன் கூறியது.

கவவுக் கடுங்குரையள்; காமர் வனப்பினள்;
குவவுமென் முலையள்; கொடிக்கூந் தலளே;
யாங்குமறந்து அமைகோ, யானே? ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்ஆன் நடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன,
சாஅய்நோக் கினளே; மாஅ யோளே.

தெளிவுரை

“தோழ! மாமை நிறம் கொண்ட தலைவி என்னை விரைந்து தழுவிக் கொள்ளும் இயல்பினள்; விருப்பம் நல்கும்

அழகினையும், குவிந்துள்ள மென்மையான முலையினையும், கொடிபோல் நீண்ட கூந்தலினையும் கொண்டவள். மேயச் சென்றுள்ள மிகுதியான பாலினைச் சுரக்கும் நல்ல பசுவின், நடுங்குகின்ற தலையைக் கொண்ட இளங்கன்று, தன் தாயைக் காண்பதற்குக் கொள்ளும் விருப்பத்தைப் போன்ற விருப்பத்தை வெளிப்படுத்தி, என்னை ஒருக்கணித்துப் பார்க்கும் பார்வையைக் கொண்டவள், அவள். அவளை எப்படி மறப்பேன்?"

கருத்து

மிகுதியான பாலினைச் சுரக்கும் தாய்ப்பசுவைக் காண்பதற்கு அதன் இளங்கன்று பெருவிருப்பத்தோடு இருப்பதுபோல அவளும் என்னைப் பார்க்க விரும்பியிருப்பாள். அவளை எப்படி மறப்பேன்?

சொற்பொருள்

1. கவவுதல் - தழுவுதல்; கடுங்குரையள் - விரைவு காட்டுபவள்; காமர் - விருப்பம்; வனப்பு - அழகு.
2. குவவு - குவிந்த; கொடி - நீண்ட.
3. ஞாங்கர் - பக்கம்.
4. கடுஞ்சுரை - மிகுதியான சுரப்பு; ஆன் - பசு; குழவி - கன்று.
6. சாஅய் - ஒருக்கணித்த; மாஅயோள் - மாமை நிறமுள்ளவள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 58 **வெள்ளிவீதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழற்றெதிர்மறை.

கூற்று விளக்கம்

தான் கொண்ட காதலுறவைப் பொருந்தாதது என்று இடித்துக் கூறிய தோழனிடம் தலைவன் தன் நோய்த்தன்மையைப்பற்றிக் கூறியது.

இடிக்கும் கேளிர்! நும்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல;
ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்

கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று, இந்நோய்; நோன்றுகொளற்கு அரிதே!

தெளிவுரை

என்னை இடித்துரைக்கும் தோழனே! உன் மனக்குறையைக் கேட்டு நான் இத்துன்பத்தை ஆற்றியிருப்பேனாயின் மிகவும் நல்லது. (ஆனால், இயலவில்லையே.) சூரியன் காயும் வெப்ப மிக்க பாறையின்மேல் வைக்கப்பட்டுள்ள வெண்ணெய் உருண்டையைக் கையில்லாத ஊமை ஒருவன் தன் கண்களால் மட்டுமே பாதுகாக்க இயலாததுபோல, என் துன்பமும் என்னுள் பரந்து மிகுதியாகிவிட்டது; என்னால் பொறுத்துக்கொள் வதற்கும் அரிதாகிவிட்டது.

கருத்து

காமநோய் பொறுத்தற்கரியது.

விளக்கம்

பாறைமீது வெண்ணெய்; வெப்பம் சுட்டெரிக்கிறது; வெண் ணெய் உருகுவதை அங்கே நிற்கும் கையில்லாத ஊமையனால் தடுக்க இயலாது. வெண்ணெயை எடுத்து நிழலிலே வைக்கலா மென்றால், அவனுக்குக் கைகளில்லை. பிறரிடம் கூறி அகற்றச் சொல்லலாமென்றாலோ, அவன் பேச இயலாத ஊமை. இந்நிலையில் வெண்ணெய் உருகுவதை அவனால் தடுக்க இயலாது. அதுபோன்றே, காமநோய்த் தாக்குதலால் என் உடல் உருகுவதை உன் இடித்துரையால் தடுக்க இயலாது.

சொற்பொருள்

1. கேளிர் - உறவினர்; நும் குறை - உன் மனக்குறையை.
2. நிறுக்கல் - நிறுத்தல்; ஆற்றினோ - இயலுமானால்.
3. ஞாயிறு - சூரியன்; வெவ்அறை - வெம்மையான பாறை.
4. கைஇல் - கை இல்லாத; ஊமன் - பேச இயலாதவன்.
5. வெண்ணெய் உணங்கல் - உருகும் வெண்ணெய்.
6. நோன்று கொளல் - பொறுத்துக்கொள்ளுதல்; அரிது - அருமை யானது, இயலாதது.

தலைவன் கூற்று

அகநானூறு 130 **வெண்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

கழறிய பாங்கற்குத் தலைமகன் கழற்றெதிர் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன், பெண் ஒருத்தியிடம் மையல் கொண்டு மயங்கினான். அவன் தோழன் அவனை இடித்துரைத்துப் பழித்தான். அதனை மறுத்துத் தலைவன் தன் தோழனிடம் உரைப்பது.

அம்ம வாழி, கேளிர்! முன்நின்று
கண்டனிர் ஆயின், கழறலிர் மன்னோ—
நுண்தாது பொதிந்த செங்கால் கொழுமுகை
முண்டகம் கெழீஇய மோட்டுமணல் அடைகரை,
பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்ப, பலஉடன்
வயிறுடைப் போது வாலிதின் விரீஇ,
புலவுப்பொருது அழித்த பூநாறு பரப்பின்
இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நல்தேர் வழுதி கொற்கை முன்துறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தல்
போதுபுறங் கொடுத்த உண்கண்
மாதர் வாள்முகம் மதைஇய நோக்கே.

தெளிவுரை

"தோழனே, வாழ்க! இதனைக் கேள்! சிறந்த தேர்களைக் கொண்டுள்ள பாண்டியனது கொற்கைத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள மணல்மேடுகளில் கழிமுள்ளிச்செடிகள் வளர்ந் திருக்கும். அவற்றின் தண்டுகளில் மகரந்தப்பொடிகள் உதிர்ந்து படர்ந்திருக்கும்; வளமான அரும்புகள் நிறைந்திருக்கும் அச்செடி களுக்கு அருகே பேய்போல விரிந்து கிடக்கும் உச்சியினையும்

சொரசொரப்பான அடிப்பகுதியையும் கொண்ட தாழம்புதரில், முள்களைக் கொண்ட புறவிதழ்கள் சூழ்ந்த தாழம்பூ, வெள்ளை வெளேரென மலர்ந்து, தன் நறுமணத்தால், கடலின் முடை நாற்றத்தைப் போட்டியிட்டுப் போக்கி நறுமணம் கமழச்செய்யும்.

அந்நெய்தற்பரப்பில் அலைகள் கொண்டுவந்து இறைத்த குளிர்ச்சி பொருந்திய ஒளிமுத்துகள் அவ்வழியில் வரும் தேர்க் குதிரைகளின் குளம்புகளில் வடுவுண்டாக்கி மேற்செல்லாது தடுத்து நிறுத்தும்.

வளைந்து அமைந்திருக்கும் உப்பங்கழியில், வண்டு மொய்த்தமையால் மலர்ந்த நெய்தல் மலர், தன் கண்ணுக்கு ஈடாகாது என்று சொல்லும்படியாய்ப் பெண் ஒருத்தி அங்கு நின்றாள். அழகிய ஒளி பொருந்திய அவள் முகத்தில் உள்ள மையுண்ட கண்களின் செருக்கான பார்வையினை நீ கண்டிருந்தால் இவ்வாறு என்னை இடித்துரைக்க மாட்டாய்.

கருத்து

“நண்ப! கொற்கைத் துறைமுகத்திற்கு அருகில், சோலையில் நின்று கொண்டிருந்த, அவளது அழகிய முகத்தில் விளங்கும் மையுண்ட கண்களின் செருக்கான பார்வையினை நீ கண்டிருந்தால், இவ்வாறு என்னை இடித்துப் பேசியிருக்க மாட்டாய்” என்று தலைவன் தன் தோழனிடம் கூறினான்.

சொற்பொருள்

1. கேளிர் - நண்பர்.
2. கழறலிர் - இடித்துப் பேச மாட்டீர்.
3. கொழுமுகை - கொழுவிய அரும்பு.
4. முண்டகம் - முள்ளிச்செடி; கெழீஇய - பொருந்திய; மோடு - உயரம்.
5. பேஎய்த் தலைய - பேயின் தலை போன்ற உச்சியினைக் கொண்ட; பிணர்அரை - சொரசொரப்பான அடிப்பகுதி.
6. எயிறுடை - முள்ளுள்ள; தோடு - மடல்கள்.
7. வயிறுடைப் போது - அகமடலாகிய மலர்; வாலிதின் - வெண்ணிறத் தோடு; விரீஇ - மலர்ந்து.
8. புலவுப் பொருது அழித்த - புலால் நாற்றத்தைத் தாக்கி அழித்த.
9. இவர்திரை - மேலெழுந்த அலைகள்; ஈர்ங்கதிர் - குளிர்ச்சி பொருந்திய ஒளி அமைந்த; முத்தம் - முத்து.

10. கவர் நடை - விரும்பத்தக்க நடை; புரவி - குதிரை; கால்வடுத் தபுக்கும் - காலை உறுத்தி வடுவுண்டாக்கிக் கெடுக்கும். (தபுதல் - கெடுதல்).
11. வழுதி - பாண்டியன்; கொற்கை - பாண்டியனது துறைமுகப்பட்டினம்.
12. வாங்கு கழி - வளைவாய் உள்ள உப்பங்கழி.
13. போது - மலர்; புறங்கொடுத்த - எதிர்த்துத் தோற்றுப்போன; உண்கண் - மை உண்ட (தீட்டப்பெற்ற) கண்.
14. வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்; மதைஇய - செருக்கிய; நோக்கு - பார்வை.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 9 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

கழற்றெதிர்மறை.

கூற்று விளக்கம்

தலைவிமீது கொண்ட காதலால் ஏற்பட்ட நோயால் தான் வருந்துவதைப் பாங்கனிடம் தலைவன் கூற, பாங்கன், 'நின் பெருந்தகைமைக்கு இது தகாது' என்று கூறத் தலைவனோ, 'நீ அவளைப் பார்த்திருந்தால் இவ்வாறு கூற மாட்டாய்' எனத் தோழன் கூறுவதை எதிர்மறுத்துச் சொல்லியது.

நிணம்கொள் புலால்உணங்கல் நின்றுபுள் ஓப்புதல்
　　தலைக்கீடு ஆக,
கணம்கொள் வண்டுஆர்த்து உலாம்கன்னி நறுஞாழல்
　　கையில் ஏந்தி
மணம்கமழ் பூங்கானல் மன்னி,மற்று ஆண்டுஓர்
அணங்குஉறையும் என்பது அறியேன்; அறிவேனேல்
　　அடையேன் மன்னோ!

தெளிவுரை

கொழுப்புள்ள மீன்கள் வற்றலாகும்படி உலர வைக்கப் பட்டிருக்கும். அவற்றைப் பாதுகாக்க அவற்றிற்கு அருகே நின்று,

பறவைகளை ஓட்டுவதை ஒரு போலிக் காரணமாய்க் கொண்டு கன்னி ஒருத்தி நின்றாள். வண்டுகள் சுற்றிச் சுற்றி முரல்கின்ற புலிநகக் கொன்றைப் பூங்கொத்தை அவள் தன் கையில் ஏந்தி யிருந்தாள். மணம் வீசும் பூக்களைக் கொண்ட கழிக்கான லிடத்திலே இப்படித் தன்னைக் கண்டவரை வருத்தும் ஓர் அணங்கு வாழ்ந்திருக்கும் என்பதை நான் முன்னரே அறியா திருந்து விட்டேன்! அறிந்திருந்தால் அங்கே சென்றிருக்கவே மாட்டேன்.

கருத்து

இங்கு நிற்பவள் காண்பாரை வருத்தும் அணங்கு.

விளக்கம்

இங்கு நிற்பவள் கன்னி அல்லள்; இவள் ஓர் அணங்கே! வற்றலைக் காப்பதைப் போலிக் காரணமாய்க் கொண்டு இங்கு வந்து, காண்பாரை வருத்தி நிற்கிறாள்.

குறிப்பு

நீ அவளைக் கண்டிருந்தால் என்னைக் கண்டிக்க மாட்டாய்.

சொற்பொருள்

1. நிணம் - கொழுப்பு; புலால் உணங்கல் - மீன் வற்றல்; புள் - பறவை; ஓப்புதல் - ஓட்டுதல்; தலைக்கீடு - போலிக் காரணம்.
2. கணம் - கூட்டம்; ஆர்த்தல் - ஒலித்தல்; கன்னி - இளம்பெண்; ஞாழல் - புலிநகக் கொன்றை (பூங்கொத்தினை).
3. கானல் - கடற்கரைச்சோலை; மன்னி - நிலையாய் நின்று; ஆண்டு - அங்கு.
4. அணங்கு - வருத்தும் தெய்வம்; அடையேன் - சென்றிருக்க மாட்டேன்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 10 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

கழற்றெதிர்மறை.

கூற்று விளக்கம்

தலைவி தந்த காதல் நோயால் தான் வருந்துவதைப் பாங்கனிடம் தலைவன் கூற, பாங்கன், 'நின் பெருந்தகைமைக்கு இது தகாது' என்று கூற, தலைவனோ, 'நீ அவளைப் பார்த்திருந்தால் இவ்வாறு கூற மாட்டாய்' எனத் தோழன் கூறுவதை எதிர்மறுத்துச் சொல்வது.

வலைவாழ்நர் சேரி வலைஉணங்கும் முன்றில்
    மலர்கை ஏந்தி
விலைமீன் உணங்கல் பொருட்டாக வேண்டுஉருவம்
    கொண்டு வேறுஓர்
கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம் வாழ்வது
அலைநீர்த்தண் கானல் அறியேன் அறிவேனேல்
    அடையேன் மன்னோ!

தெளிவுரை

அது வலைகொண்டு வாழ்பவர் சேரி; வலை உலரும் முற்றம். அங்கே மலரைக் கையில் ஏந்தி, விற்றற்குரிய மீன் வற்றல் உலர்வதைக் காத்து நின்றாள், கன்னி ஒருத்தி. அவள் கன்னி அல்லள். கொடிய கூற்றுவன், தான் விரும்பிய வடிவத்தை எடுத்துக்கொண்டு, கொலை செய்யும் நீண்ட வேல் போன்ற கண்களுடன், அலைகின்ற நீரினைக் கொண்ட குளிர்ந்த கானலிடத்தே அவ்வாறு வாழ்வதை நான் முன்னரே அறியேனே! அறிந்திருந்தால் அங்கு நான் சென்றிருக்க மாட்டேனே!

கருத்து

கூற்றுவனே பெண் உருவம் கொண்டு இங்கு வந்து நின்று, என் உயிரை வாங்குகின்றான். நீ அப்பெண்ணைக் கண்டிருந்தால் என்னை இடித்துரைக்க மாட்டாய்.

சொற்பொருள்

1. வலை வாழ்நர் - வலை கொண்டு வாழும் பரதவர்; உணங்கும் - உலர்த்தும்; முன்றில் - முற்றம்.
2. உணங்கல் - வற்றல்; பொருட்டாக - காப்பதன்பொருட்டு; வேண்டு உருவம் - வேண்டிய வடிவம்.
3. கொடுங்கூற்றம் - கொடிய கூற்றுவன்.
4. அறிவேனேல் - அறிந்திருந்தால்; அடையேன் - அங்குச் சென்றிருக்க மாட்டேன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 156 **பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து (வருந்திக்) கூறியது.

கூற்று விளக்கம்

பெண் ஒருத்தியை விரும்பிய தன்னைத் தன் தோழன் இடித்துரைத்த போது, தலைவன் அவனை நோக்கி, 'நீ இடித்துரைத்தலால் பயனொன்று மில்லை' என்று வருந்திக் கூறியது.

பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து,
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? மயலோ இதுவே.

தெளிவுரை

"பார்ப்பனத் தோழனே! செந்நிறப் பூக்களைக் கொண்ட முருங்க மரத்தின் மேற்பட்டையை நீக்கிய தண்டினை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையில் கரகச்செம்பைத் தொங்க விட்டிருக்கும் விரத உணவைக் கொண்ட பார்ப்பனத் தோழனே!

ஏட்டில் எழுதப்படாது கேள்விவழிக் கற்பிக்கப்படும் உன் வேதச் சொற்களுள்ளே, பிரிந்திருக்கும் காதலரைச் சேர்த்துவைக்கும் மருந்தும் உண்டோ? உண்டாயின் கூறு. இல்லையேல் என்னை நீ இடித்துக் கூறுவது உன் அறியாமையே" எனத் தலைவன், தன்னை இடித்துரைத்த தோழனிடம் கூறினான்.

கருத்து

பார்ப்பனத் தோழனே! நீ ஓதும் வேதத்திலேனும் என் நோய்க்கு மருந் துண்டாயின் கூறு! இன்றெனில் நீ என்னைக் கடிந்துரைப்பது உன் அறியாமையே.

குறிப்பு

பார்ப்பனர்கள் தொடக்கத்தில் தண்டு, கமண்டலத்துடன் இரந்துண்ணும் விரத உணவுடன் வாழ்ந்திருந்தனர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

வேதம், ஏட்டில் எழுதப்பட்டுக் கற்பிக்கப்படாமல் வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்டு வந்தது.

சொற்பொருள்

2. செம்பூ - செந்நிறப்பூ; முருக்கு - முருங்க மரம்; நார் - பட்டை; களைந்து - நீக்கி.
3. தாழ் - தொங்குகின்ற; கமண்டலம் - கரகம்.
4. படிவ உண்டி - விரத உணவு.
5. எழுதா - எழுதப்படாது; கற்பு - கற்பிக்கப்படும்; நின்சொல் - உன் வேதச் சொல்.
6. புணர்க்கும் - சேர்க்கும்; பண்பின் - தன்மை வாய்ந்த.
7. மயல் - மயக்கம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 191 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'நின்னாற் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள்' என்று வினாவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

'உன்னைக் கவர்ந்த இளையோள் எத்தன்மையள்? அவள் வாழும் இடம் யாது?' என்று வினாவிய தன் தோழனிடம் தலைவன் கூறியது.

கடல்கோடு செறிந்த வளையார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்
கானல் ஞாழல் கவின்பெறு தழையள்
வரையர மகளிரின் அரியள்,என்
நிறைஅரு நெஞ்சம் கொண்டுஒளித் தோளே.

தெளிவுரை

"தோழனே! அழித்தற்கரிய என் மனத்திண்மையை அழித்து, என் நெஞ்சத்தைக் கவர்ந்து சென்றவள், கடற்கரைச்சோலை யிடத்தே காணப்பட்டாள். அவள் கடல்சங்குகளால் செய்யப் பெற்ற வெள்ளிய வளையல் அணிந்த முன்கையினையும் கடற் கழியில் பூத்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த கருங்கூந்தலையும் கொண்டவள். ஞாழல் மரத்தின் தழை களாலாகிய அழகிய தழையாடையை உடுத்தியவள். வரையர மகளிரைப் போன்ற அவள் என்னால் பெறுதற்கரியவளு மாவள்."

கருத்து

"தோழனே! என் நெஞ்சம் கவர்ந்தவள் கடற்கரைச்சோலையில் காணப் பட்டாள். அவள், முன்கையில் வளையலையும், கருங்கூந்தலில் மாலை யினையும், இடையில் தழையாடையையும் அணிந்தவளாயிருந்தாள். அவளைப் பெறுதல் அரிது."

சொற்பொருள்

1. கடல்கோடு - கடற்கரை; செறிந்த - மண்டிக் கிடக்கும் (சங்கு); வளை - வளையல்; ஆர் - பொருந்திய.
2. கழி - உப்பங்கழி; தொடர்ந்த - தொடுக்கப்பட்ட; இரும்பல் - கருமையான பல சடைகளாய்ப் பின்னப்பட்ட.
3. கானல் - கடற்கரைச்சோலை; ஞாழல் - ஒரு வகை மரம்; கவின் - அழகு; தழையள் - தழை ஆடையை அணிந்தவள்.
4. வரை - மலை; அரமகளிர் - தெய்வப்பெண்; அரியள் - பெறுதற்கு அரியவள்.
5. நிறைஅரு - அழித்தற்கரிய.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 60 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கற்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தன் உள்ளத்தைக் கவர்ந்த தலைவியின் இயல்பைத் தலைவன் தன் தோழனிடம் கூறியது.

திரையலறிப் பேராத் தெழியாத் திரியாக்
கரைஅலவன் காலினால் காணாக் – கரையருகே
நெய்தல் மலர்கொய்யும் நீள்நெடுங் கண்ணினாள்
மையல் நுளையர் மகள்.

தெளிவுரை

எனக்கு மயக்கத்தைத் தருகின்ற பரதவர் மகள் நெடிய கண்களைக் கொண்டவள்; ஒலிக்கின்ற கடல் அலைகள் பெயர்ந்து போகும்வண்ணம் அவள் நீந்துகிறாள்; கடற்கரையில் அலைந்து தன் கால்களினால் மணலைக் கிளறி அங்குள்ள நண்டுகளைக் காண்கிறாள்; கரையருகே மலர்ந்துள்ள நெய்தல்

மலர்களைக் கொய்கிறாள். இவ்வாறு அவள் அங்கு விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

கருத்து

என் உள்ளத்தைக் கவர்ந்துகொண்ட பரதவர் மகள், கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

சொற்பொருள்

1. அலறி - ஒலித்து; பேரா - திரும்பிப் போகும்வண்ணம்; தெழியா - நீந்தி; திரியா - அலைந்து.
2. அலவன் - நண்டு; காணா - கண்டுபிடித்து.
4. மையல் - மயக்கம்; நுளையர் - பரதவர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 255 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நின்னாற் காணப்பட்டவள் எத்தன்மையள்?' என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்கு உதவி செய்யும் பொருட்டுத் தோழன், 'உன்னால் காணப்பட்டவள் எங்கிருக்கிறாள்? அவள் எத்தகையவள்?' என்று கேட்க, அவனிடம் தலைவன் கூறியது.

குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர்ப் புரையும் சாயலள்;
ஐயள்; அரும்பிய முலையள்;
செய்ய வாயினள்; மார்பினள் சுணங்கே.

தெளிவுரை

"தோழனே! நான் கண்ட நங்கை, குன்றக்குறவர் பெற்றெடுத்த அன்புக்குரிய இளமகள்; மலையில் வந்து விளையாடும் தெய்வ

மகள் போன்ற சாயல் கொண்டவள்; வியக்கத்தக்க அழகும் அரும்பியெழும் முலையும் கொண்டவள்; சிவந்த வாயும் தேமல் படர்ந்த மார்பும் பெற்றவள்" என்று தலைவன் கூறினன்.

கருத்து

நான் கண்ட நங்கை, 'குறிஞ்சிநிலக் குறவர் மகள்; தெய்வ மகள் போன்ற சாயலள்; இளையள்; அரும்பியெழுந்த முலையினள்; சிவந்த வாயினள்; சுணங்கு நிறைந்த மார்பினள்.'

சொற்பொருள்

2. புரையும் - ஒத்த; சாயலள் - சாயலைக் கொண்டவள்.
3. ஐயள் - வியத்தற்குரிய அழகுள்ளவள்.
4. செய்ய - சிவந்த; சுணங்கு - தேமல்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 291 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தன் தோழனிடம் தலைவன், தலைவி இருக்கும் இடத்தையும், அவள் தன்மையையும் கூறியது.

சுடுபுன மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே;
கிளிஅவள் விளிஎன, எழல்ஒல் லாவே;
அதுபுலந்து அழுத கண்ணே, சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்இதழ் கலைஇத்
தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றனவே.

தெளிவுரை

"மரம் செடிகளை வெட்டிச் சுட்டெரித்துப் பண்படுத்திய கொல்லையில் வளர்ந்துள்ள தினைப்புனத்தில் வந்து அமரும் கிளிகளை விரட்டுவதற்காகக் குறமகளின் கையிலுள்ள 'குளிர்' என்னும் கருவி, இசைபோல இனிமையாய் ஒலிக்கிறது. ஆனால், அதைக் கிளிகள், தங்களை விரட்டுவதற்காக அக்கருவியால் இசைக்கப்படும் ஒலி எனக் கருதாமல், அவள் பாடும் பாட்டென்று கருதிக் கதிர்களை விட்டு எழாமல் மயங்கியிருக்கின்றன. அதுகண்டு வருந்தி அழுது கலங்கிய அவள் கண்கள், மலைச் சாரலில், ஆழமான நீரைக் கொண்ட பசிய சுனையில் பூத்த குவளை மலரில் மழைத்துளிகள் விழுந்து தங்கிப் படிந்ததால் அம்மலரின் இதழ்கள் குலைந்திருந்த தன்மையைக் கொண்டிருந்தன. அவளைக் கண்டே நான் உள்ளமிழந்தேன்."

கருத்து

"பூத்த குவளை போன்ற கண்களைக் கொண்ட மகள் ஒருத்தி தினைப்புனம் காக்கிறாள்; அவள் கிளியை ஓட்டக் 'குளிர்' என்னும் கருவியை இசைக்கிறாள். அந்த ஒலியைக் கிளிகள் அவள் பாடும் பாட்டு என்று கருதிப் புனத்திலிருந்து எழாதிருந்தன. அதைப் பார்த்த குறமகள், கண்களில் நீர் ததும்ப அழுது நின்றாள்; அவளே என் உள்ளம் கொள்ளை கொண்டவள்" என்று தலைவன் தோழனிடம் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. சுடு புனம் மருங்கில் - மரங்களை வெட்டிச் சுட்ட கொல்லையில்; கலித்த - தழைத்த; ஏனல் - தினை.
2. படு - தினையைக் கவர வந்து அமரும்; கடியும் - விரட்டும்; கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண்; குளிர் - கிளியை ஓட்டப் பயன்படும் கருவிகளுள் ஒன்று.
3. இசையின் இசையா - இசையோடு பொருந்தி; இன்பாணித்தே - இனிமையாய் ஒலிக்க.
4. அவள் விளி - அவள் பாட்டு; எழல் ஒல்லா - எழுந்து செல்லா.
5. புலந்து - வருந்தி.
6. குண்டு - ஆழம்.
7. பயில் - மொய்க்கின்ற; கலைஇ - குலைந்து.
8. தண்துளி - குளிர்ச்சி பொருந்திய மழைத்துளி; ஏற்ற - ஏற்றுக்கொண்ட.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 9 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்குத் தலைமகன் தலைமகளைக் கண்ட வகை கூறித் தன் ஆற்றாமை மிகுதி சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழனிடம் தான் தலைவியைக் கண்டதைப் பற்றிக் கூறித் தலைவன் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தியது.

வஞ்சமே என்னும் வகைத்தால்ஓர் மா,வினாய்த்
தஞ்சம் தமியனாய்ச் சென்றேன்என் – நெஞ்சை
நலங்கொண்டார் பூங்குழலாள் நன்றாயத்(து) அன்(று)என்
வலங்கொண்டாள் கொண்டாள் இடம்.

தெளிவுரை

“‘என் அம்பினுக்குத் தப்பி வந்த விலங்கினைக் கண்டதுண்டா?’ என்று கேட்டுக்கொண்டே, அன்று, தனியனாய் அவள் இருந்த இடத்திற்குச் சென்றேன். அங்கு, நறுமணப் பூக்களையணிந்த கூந்தலைக் கொண்ட அவள், தன் தோழியர் நடுவே இருந்தாள். அவள், என் வெற்றித் திறமைகளையெல்லாம் கைப்பற்றிக்கொண்டதோடு, என் மனத்தையும் தனக்கு இடமாக்கிக்கொண்டாள். இஃது ஒரு மாயமே என்று சொல்லும் தன்மையாய் உள்ளது” என்று தலைவன் தன் தோழனிடம் தலைவியைக் கண்ட வகையைக் கூறி, அதன்மூலம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தினான்.

கருத்து

‘என் அம்புக்குத் தப்பிய விலங்கு இங்கு வந்ததுண்டா?’ எனச் சோலையில் நின்ற இளமங்கையைக் கேட்க, அவள் அதற்கு மறுமொழி கூறாமல் என் மனத்தை அகப்படுத்திக்கொண்டாள்.

சொற்பொருள்

1. வஞ்சம் - மாயம்; வகை - தன்மை; மா - விலங்கு; வினாய் - கேட்டு.

2. தஞ்சம் தமியனாய் - எனக்குத் துணை நானே ஆக, தன்னந் தனியனாய்.
3. நலம் கொண்டுஆர் - நறுமணம் பொருந்திய; ஆயம் - தோழியர் கூட்டம்.
4. வலம் - திறமை; இடம் கொண்டாள் - தனக்கிடமாக்கிக்கொண்டாள்.

தலைவன் கூற்று

நற்றிணை 95 **கோட்டம்பலவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் பாங்கற்கு, 'இவ்விடத்து இத்தன்மைத்து' என உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கண்ட தலைவன் தன் கருத்தை இழந்து, காதல் மிகுந்து செயலற்றிருந்தான். அவன் மெலிவு கண்ட தோழன், 'உனக்கு என்ன நேர்ந்தது? நெஞ்சமழிந்து நிற்கிறாயே! ஏன்?' என்று வினவினான். அதற்குத் தலைவன் கூறியது.

கழைபாடு இரங்க, பல்இயம் கறங்க,
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று,
அதவத் தீம்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்துஎழுந்து
குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும்அக்
குன்றகத் ததுவே, கொழுமிளைச் சீறூர்;
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி;
கொடிச்சி கையகத் ததுவே,பிறர்
விடுத்தற்கு ஆகாது பிணித்தஎன் நெஞ்சே.

தெளிவுரை

"*புல்லாங்குழல் ஒலிப்ப, பலவகை இசைக்கருவிகளும் முழங்க, முறுக்கேறிய வலிய கயிற்றின்மீது கழைக்கூத்தி ஒருத்தி ஆடிச்*

சென்றாள். அவள் சென்றதும் அத்திப்பழம் போன்ற சிவந்த முகத்தையும், பஞ்சு போன்று மென்மையான மயிர் பொருந்திய தலையையும் கொண்ட பெண்குரங்கொன்றை அதன் வலிய குட்டி பற்றிக்கொள்ள, அக்குரங்கு அக்கயிற்றின்மீது ஏறி ஆடியது. அதைக் கண்ட குறச்சிறுவர்கள், மலைப்பக்கத்தே யுள்ள பெரிய பாறைமீது ஏறி நின்று ஆரவாரித்துத் தாளம் கொட்டி மகிழ்ந்தனர். அக்குன்றிடத்தே காவற்காடு சூழ்ந்த ஒரு சிற்றூரில் நறுமணம் கமழும் கூந்தலைக் கொண்ட குறிஞ்சி நிலப்பெண் ஒருத்தி வாழ்கிறாள். அவள் கையிலேதான் என் நெஞ்சம், பிறரால் விடுவிக்க முடியாதவாறு சிக்குண்டு கிடக்கிறது."

கருத்து

தலைவன், "தோழி! குன்றத்தில் உள்ள ஒரு சிற்றூர்; அச்சிற்றூரிலுள்ளாள், கொடிச்சி ஒருத்தி; அவள் கூந்தல் நறுநாற்றம் கொண்டது; அவள் கையில் என் நெஞ்சு சிக்குண்டு கிடக்கிறது; அவளையன்றிப் பிறரால் அதனை விடுவிக்க இயலாது" என்று பாங்கனிடம் கூறினான்.

குறிப்பு

இருபெருமரங்கட்கிடையே வலிமையான கயிற்றைக் கட்டி, அதன்மீது ஏறி, எவ்விதப் பிடிப்புமின்றி, மனநிலை குலையாமல், வாச்சியங்கள் முழங்க நடந்துசெல்வது, கழைக்கூத்து.

இறைச்சி

'கழைக்கூத்தி நடந்த கயிற்றில் குரங்கு ஏறி ஆடியதுபோல, திண்மை மிகுந்த என் நெஞ்சத்தில் அவள் புகுந்து ஆட்டமிடு கிறாள். குரங்கைக் கண்டு குறச்சிறார் சிரிப்பதுபோல நீயும் நகையாடிச் சிரிக்கிறாய். நான் என் செய்ய? அவளை விட்டு நீங்க முடியாதவாறு என் நெஞ்சம் அவளிடம் கட்டுண்டு கிடக்கிறதே' என்னும் இறைச்சிப் பொருள் தோன்றத் தலைவன் பேசுகிறான்.

சொற்பொருள்

1. கழை - மூங்கில்; கழைபாடு - புல்லாங்குழல்; இரங்க - ஒலிப்ப; பல்இயம் - இசைக்கருவிகள்; கறங்க - முழங்க.
2. ஆடுமகள் - கழைக்கூத்தி; கொடும்புரி - முறுக்குண்ட புரி; நோன் கயிறு - வலிமையான கயிறு.

3. அதவம் - அத்தி மரம்; தீம் - இனிய.
4. துய் - பஞ்சு; மந்தி - பெண்குரங்கு; வன் - வலிய; பறழ் - குட்டி; தூங்க - ஆட.
5. இரும்பொறை - பெரிய பாறை.
7. கொழுமிளை - கொழுவிய காவற்காடு; சீறூர் - சிறிய ஊர்.
8. நாறுமயிர் - நறுமணம் கமழும் கூந்தலைக் கொண்ட; கொடிச்சி - குறிஞ்சிநிலப் பெண்.
10. பிணித்த - கட்டுண்டு கிடக்கிற.

தலைவன் கூற்று

நற்றிணை 201 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழறிய பாங்கற்குத் தலைமகன் உரைத்தது.

கூற்று விளக்கம்

'நீ தலைவியைப் பெறுதல் அரிது; அவள் பொருட்டு முயல்வது நன்றன்று; மறந்துவிடு' என்று கூறிய தோழனிடம் தலைவன் கூறியது.

'மலைஉறை குறவன் காதல் மடமகள்,
பெறல்அருங் குரையள், அருங்கடிக் காப்பினள்;
சொல்எதிர் கொள்ளாள்; இளையள்; அனையோள்
உள்ளல் கூடாது' என்றோய்! மற்றும்
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு,
அவ்வெள் அருவிக் குடவரை அகத்து,
கால்பொருது இடிப்பினும், கதழ்உறை கடுகினும்,
உரும்உடன்று எறியினும், ஊறுபல தோன்றினும்,
பெருநிலம் கிளரினும், திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவையின்,
போதல் ஒல்லாள்என் நெஞ்சத் தானே.

தெளிவுரை

" 'மலையிலே வாழ்கின்ற குறவருக்கு அன்பு மகளாகிய அவள் இளமையினள்; பெறுதற்கு அரியவள்; உன்னால் நெருங்குதற் கரிய காவலில் உள்ளாள்; நீ கூறும் மொழிகளை ஏற்றுக் கொள்ளுதற்கு ஏற்ற முதிர்ச்சி பெற்றவளும் அல்லள்; அவளை நீ நினைத்தலும் பொருந்தாது' என்று என்னைக் கடிந்து கொள்ளும் நண்பனே! செவ்விய வேர்ப்பலா மரங்களைக் கொண்ட கொல்லிமலையின் நெடிய உச்சிகளிலிருந்து விழும் அருவிகளின் மேற்புறத்தே உள்ளது, கொல்லிப்பாவை. அது தெய்வத்தால் காக்கப்படுவது; உவமையில்லாதது. காற்று வீசி மோதினாலும், பெரிய மழைத்துளிகள் விரைந்து வீழ்ந்தாலும், சினங்கொண்டு இடி முழங்கித் தாக்கினாலும், இன்னோரன்ன இடையூறுகள் தோன்றினாலும், பெரிய இந்நிலவுலகமே நடுக் குற்றாலும் அப்பாவையின் அழகிய வடிவு கெடாது. அது போலவே, நான் கண்ட அவ்வெழில்மகளும் யாது நேரினும் என் நெஞ்சிலிருந்து நீங்காது நிலைத்திருக்கிறாள். அவளை நான் எவ்வாறு மறத்தல் கூடும்?"

கருத்து

" 'நண்ப! அத்தலைவி பெறுதற்கரியள்; அரிய காவலில் உள்ளாள்; அவளை நினைந்திடல் வேண்டா'மென மொழிகின்றாய்! நீ கூறுவன உண்மையே; ஆயினும், கொல்லிக் குடவரையில் பெருங்காற்று, பெருமழை, கடுவெயில் ஆகியவை தாக்கினும் சற்றும் அசைவின்றிப் பொற்பாவை நிற்றல்போல, அவளும் என் நெஞ்சில் நிலைபெற்றுவிட்டாள்; இனி நீங்காள்! அவளை மறத்தற்கு முயல்வதைவிட்டு, பெறுதற்கு முயல்வதே செய்தற்குரியது" எனத் தலைவன் தோழனிடம் கூறினான்.

குறிப்பு

கொல்லிமலையின் மேற்குப் பகுதியில் இயற்கையாய் அமைந்திருந்த பெண் உருவம் கொல்லிப்பாவை எனப்பட்டது. கண்டாரை வருத்தும் இது பேரழகு கொண்டது; எவ்வகை இயற்கைச் சீற்றத்தாலும் அழியாதது.

சொற்பொருள்

1. மடமகள் - இளமையான மகள்.
2. பெறல் அருங்குரையள் - பெறுதற்கு அரியவள்; கடி - மிகவும், காப்பினள் - காவலில் உள்ளவள்.

3. எதிர் கொள்ளுதல் - ஏற்றுக்கொள்ளுதல்.
4. உள்ளல் - நினைத்தல்.
5. கெழு - மிகுந்த; கொல்லி - கொல்லி மலை.
6. கோடு - உச்சி.
7. குடவரை - மேற்குப்புறம்.
8. கால் - காற்று; கதழ்உறை - பெருமழை; கடுகினும் - மிகுந்தாலும்.
9. உரும் - இடி; உடன்று - இடித்து; எறியினும் - தாக்கினும்; ஊறு - துன்பம்.
10. பெருநிலம் - உலகம்; கிளர்தல் - நடுங்குதல்.
11. மாயா - கெடாத; இயற்கைப் பாவை - இயற்கையிலேயே அமைந்துள்ள கொல்லிப்பாவை.
12. போதல் ஒல்லாள் - நீங்குவாள் அல்லள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 280 **நக்கீரர்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழற்றெதிர்மறை.

கூற்று விளக்கம்

தன்னை இடித்துரைத்த தோழனை நோக்கித் தலைவன், தலைவியின் அருமையைக் கூறியது.

கேளிர்! வாழியோ கேளிர்! நாளும்என்
நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்
பெருந்தோள் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒருநாள் புணரப் புணரின்,
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே.

தெளிவுரை

"நண்பரே! வாழ்க! நான் விரும்பும் என் இளைய தலைவி, எப்பொழுதும் என் உள்ளத்தைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் அழகிய கருங்கூந்தலையும் பெரிய தோள்களையும் கொண்டவள். அவளது சிறிய மெல்லிய

மார்பை ஒரே ஒரு நாள் ஐம்புலனும் ஒருங்கே பொருந்தக் கூடித் தழுவப்பெறுவேனாயின் அதன் பின்னர் அரைநாள் வாழ்க்கையினையும் நான் விரும்ப மாட்டேன்."

கருத்து

'தலைவியைப் பெறாது பல நாள் உயிர் வாழ்தலினும் அவளோடு அளவளாவி, சிறிது பொழுதில் மாய்ந்துவிடினும் நன்று' என்று கூறுகிறான், தலைவன்.

சொற்பொருள்

1. கேளிர் - நண்பர், உறவினர்; நாளும் - எப்பொழுதும்.
2. பிணிக்கொண்ட - அகப்படுத்திக்கொண்ட; அம் சில் - அழகிய மென்மையான; ஓதி - கூந்தல்.
3. குறுமகள் - இளையவள்; சிறுமெல் ஆகம் - சிறிய மெல்லிய மார்பு.
5. வேண்டலென் - விரும்ப மாட்டேன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 272 **ஒருசிறைப் பெரியனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

கூற்று விளக்கம்

தன் செயல் தகாதென இடித்துரைத்த தோழனை நோக்கித் தலைவியின் அருமையைத் தலைவன் கூறியது.

தீண்டலும் இயைவது கொல்லோ? மாண்ட
வில்லுடை வீளையர் கல்இடுபு எடுத்த
நனந்தலைக் கானத்து இனம்தலைப் பிரிந்த
புன்கண் மடமான் நேர்பட, தன்ஐயர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத்து அழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன உண்கண்,
நாறுஇருங் கூந்தல், கொடிச்சி தோளே!

தெளிவுரை

“சிறப்புமிக்க வில்லையேந்தி, சீழ்க்கை ஒலி எழுப்பி, கற்களை வீசி அகன்ற காட்டில் குறவர்கள் விலங்குகளை ஓட்டுகின்றனர். தம் இனத்தினின்று பிரிந்து ஓடிய ஓர் இளம் பெண்மான் அவர்கள் எதிரே வந்து நின்றது. ஆனால், அதன்மீது அம்பைச் செலுத்தாது துள்ளியோடும் அதன் ஆண்மானின் மார்பில் அழுந்தும்படி செலுத்திய அம்புகளைக் குருதிக்கறையுடன் பிடுங்கி எடுத்தனர், நான் காதலிப்பவள் தமையன்மார். அவர்கள் பிடுங்கியெடுத்த சிவந்த அம்புகள் ஒன்றுடன் ஒன்று எதிரெதிராய் வைக்கப்பட்டவை போன்ற, மை தீட்டிய சிவந்த கண்களையும் மணம் வீசுகின்ற கரிய கூந்தலையும் கொண்ட அவள் தோள்களைத் தழுவும் பேறு எனக்கு வாய்க்குமா?” என, தன்னைக் கடிந்துகொண்ட தோழனிடம் தலைவன் கேட்டான்.

கருத்து

‘அம்பு போன்ற மையுண்ட கண்களையும் கருங்கூந்தலையும் கொண்ட தலைவியைத் தழுவும் பேறு பெறுவேனா?’ எனத் தலைவன் தோழனிடம் கேட்கிறான்.

விளக்கம்

காடுகளில் கற்களை வீசியும், சீழ்க்கை ஒலி எழுப்பியும் வேட்டுவர் மான்களை விரட்டுவர்; அஞ்சி ஓடும் மான்களை அம்பெய்து கொல்லுவர். கொல்லப்பட்ட மானின் உடம்பி லிருந்து பிடுங்கப்பட்ட அம்புகள் செந்நிறத்துடன் கூர்மையாய்க் காணப்படும். அத்தகைய அம்புகள் ஒன்றுக்கொன்று எதிராய் இருப்பதைப் போன்று செவ்வரி படர்ந்த கண்களைக் கொண்ட வளாய்த் தலைவி விளங்குகிறாள்.

குறிப்பு

பெண்மான் எதிரேயே ஆண்மானைக் கொல்லும் அன்பற்ற வன்கண்மை கொண்டவரிடத்திலுள்ள தலைவியைப் பெறுவது எளிதன்று என்னும் கருத்தைத் தலைவன் வெளிப்படுத்துகிறான்.

சொற்பொருள்

1. தீண்டல் - தழுவுதல்; இயைவது கொல்லோ? - இயலுமோ?; மாண்ட - சிறப்புடைய.
2. வீளை - சீழ்க்கை; இடுபு - வீசி; எடுத்த - எழுப்பிய.
3. நனந்தலை - அகன்ற இடமுள்ள; தலைப் பிரிந்த - தனித்துப் பிரிந்த.
4. மடமான் - இளம் பெண் மான்; நேர்பட - எதிரே தோன்ற; தன் ஐயர் - தன் தமையன்மார்.
5. கடுவிசை - மிக்க வேகத்தைக் கொண்ட; கலை - ஆண்மான்; நிறம் - மார்பு; அழுத்தி - அழுந்தச்செய்து.
6. குருதி - இரத்தம்; வாளி - அம்பு.
7. மாறு கொண்டன்ன - ஒன்றோடொன்று எதிரெதிராய் வைக்கப் பட்டவை போன்ற; உண்கண் - மை தீட்டிய கண்.
8. நாறு இருங் கூந்தல் - மணக்கின்ற கரிய கூந்தல்; கொடிச்சி - குறிஞ்சி நில மகள்.

தலைவன் கூற்று

நற்றிணை 185 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தானுற்ற வருத்தத்தைத் தன் தோழனிடத்தே எடுத்துரைத்தான். அதுகேட்ட தோழன் பெண் ஒருத்தியின் வனப்புக்கு அடிமையாகி அலமருதல் கூடாதென நகைத்து அறிவுறுத்தினான். அதைக் கேட்டுத் தலைவன் அமைதி பெறாது தோழனிடம் கூறியது.

ஆனா நோயோடு அழிபடர்க் கலங்கிக்
காமம் கைம்மிகக் கையறு துயரம்
காணவும், நல்காய் ஆயின், பாணர்
பரிசில் பெற்ற விரிஉளை நல்மான்
கவிகுளம்பு பொருத கல்மிசைச் சிறுநெறி,
இரவலர் மெலியாது ஏறும், பொறையன்

உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்,
அகல்இலைக் காந்தள் அலங்குகுலைப் பாய்ந்து,
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள்
கொலைசூழ்ந் தனளால் நோகோ யானே.

தெளிவுரை

"புகழ்மிக்க கொல்லிமலைத் தலைவன் பொறையனிடம் பாணர்கள் பரிசிலாய்ப் பெற்றுச் செல்லும் குதிரைகளின் கவிந்த காற்குளம்புகள் மோதுதலால் மலைப்பாறையிடத்தே உண்டாகிய சிறுவழியில் இரவலர் வருத்தமின்றி ஏறிச் செல்வர். அக்கொல்லிமலைக்கு மேற்குப் பக்கத்தில் அகன்ற இலைகளைக் கொண்ட காந்தள் மலர்க்கொத்துகளில் படிந்த தேனை, வண்டுகள் நுகர்ந்து அடைகளாய் மலை உயரத்தே சேர்த்து வைத்திருக்கும். மிகுந்த உயரமுள்ள அந்த இடத்தில் தெய்வத் தன்மை பொருந்திய ஒரு பாவை எழுதி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொல்லிப்பாவையை ஒத்த ஒருத்தியை நான் கண்டேன். அவள், என்னைக் காமத்தால் வருத்துகிறாள்; கொல்கிறாள்; தீராத அக்காதல்நோயினால் துன்புற்றுக் கலங்கி, அடக்க முடியாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கின்றேன். அதை அறிந்தும் நீ எனக்குத் துணைபுரிவதாயில்லை. அதனால், என்னை நானே நொந்துகொள்வதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்?" என்று தலைவன் தோழனிடம் கூறினான்.

கருத்து

'கொல்லிப்பாவைபோல அவள் கொல்கிறாள்; நீயோ துணை புரியாது கடிந்துகொள்கிறாய். நான் என்னை நொந்துகொள்வதன்றி வேறென்ன செய்ய இயலும்?' எனத் தன் ஆற்றாமையைத் தலைவன் தோழனிடம் புலப்படுத்துகிறான்.

இறைச்சி

'குதிரைகளின் காலடிக் குளம்புகளால் உண்டாகிய வழியில் இரவலர் இடர்ப்பாடின்றி ஏறிச் செல்வர்' என்னும் தொடர்

மூலம் தோழன் கூட்டுவிப்பின் தலைவனும் உளம் மெலியாது கூடி இன்புறுவான் என்னும் இறைச்சிப் பொருளும், 'ஈக்கள் தாம் சேர்த்துச்சேர்த்து உண்டாக்கிய தேனடையை எட்டா உயரத்தில் சேர்த்து வைக்கும்' என்னும் தொடர் மூலம் அழகெலாம் சேர்ந்து உண்டாகிய தலைவியின் நலனும் தலைவனுக்கு எட்டாததாய் உள்ளது என்னும் இறைச்சிப் பொருளும் தோன்றுகின்றன.

சொற்பொருள்

1. ஆனா - தீராத; அழிபடர் - மிகுந்த துன்பம்.
2. கைம்மிகல் - அளவு கடத்தல்; கையறு - செயலற்றிருக்கும்.
3. நல்குதல் - அருளுதல்.
4. உளை - பிடரி மயிர்; நல்மான் - குதிரை.
5. கவி - பிளவுபட்ட; சிறுநெறி - சிறிய வழி.
6. மெலியாது - உள்ளம் தளராது; பொறையன் - சேரன்.
7. உரைசால் - புகழுரையால் மேம்பட்ட; வரை - மலை; கொல்லி - கொல்லிமலை; குடவயின் - மேற்குப்பக்கம்.
8. அலங்குதல் - அசைதல்.
9. பறவை - தேன்வண்டு; இழைத்த - உண்டாக்கிய; பல்கண் - பல கண்களைக் கொண்ட; இறாஅல் - தேன் அடை.
11. வினைமாண் - மாட்சிமைப்பட்ட தொழிலால் செய்யப்பட்ட; பாவை - அழகிய உருவம்.
12. கொலை சூழ்ந்தனள் - கொலை செய்கின்றாள்; நோ - துன்பம், வருத்தம்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 206 **ஐயூர் முடவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

கூற்று விளக்கம்

'காம நோயால் வருந்துதல் உனக்கு அழகன்று' என்று இடித்துரைத்த தன் தோழனிடம் தலைவன் கூறியது.

அமிழ்தத் தன்ன அம்தீம் கிளவி
அன்ன இனியோள் குணனும், இன்ன
இன்னா அரும்படர் செய்யும் ஆயின்,
உடன்உறைவு அரிதே காமம்;
குறுகல் ஓம்புமின், அறிவுடை யீரே!

தெளிவுரை

"நான் விரும்பும் காதலியின் மொழி அமிழ்தம் போன்றது; குணமும் அவ்வாறே இனியதே! அவள்மேல் நான் கொண்டுள்ள காமத்தால் இவையே எனக்கு அரிய துன்பத்தைச் செய்கின்றன என்றால், காமத்தோடு கூடி வாழ்தல் அரிது என்பது புரிகிறது. ஆகவே, என்னைப் போல் நீங்களும் துன்புறாது காமத்தினின்றும் தப்ப வேண்டுமானால் அதனை நெருங்காதீர்!" (நெருங்கினால் துன்பமே நேரிடும் எனத் தலைவன் தோழனிடம் நேரிடையாய்ச் சொல்லாமல் அவனுக்குக் கேட்குமாறு தானே கூறிக்கொள்கிறான்.)

கருத்து

காமம் தாங்குதற்கரியதாய்த் தன்னை வருத்துகிறது என்று தோழனிடம் கூறிய தலைவன், அதனைத் தீர்ப்பதற்கு வழி கூறுமாறு நேரிடையாய்க் கூறாமல் அவனுக்குக் கேட்கும்படியாய்த் தானே கூறிக்கொள்கிறான்.

சொற்பொருள்

1. அம் - அழகிய; தீம் - இனிய; கிளவி - மொழி.
2. அன்ன - அத்தகைய.
3. இன்னா - இனியது அல்லாத; படர் - துன்பம்; ஆயின் - என்றால்.
4. உறைவு - வாழ்வது.
5. குறுகல் - நெருங்குதல்; ஓம்புமின் - தவிர்க (நீங்கி உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.)

பாங்கன் கூற்று

குறுந்தொகை 204 **மிளைப்பெருங்கந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.

கூற்று விளக்கம்

இளமகள் ஒருத்தியிடம் காமுற்று வேறுபட்ட தலைவனைத் தோழன் கடிந்து உரைப்பது.

'காமம் காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
முதைச்சுவல் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு,
விருந்தே காமம் பெருந்தோ ளோயே!

தெளிவுரை

"பெரிய தோளைக் கொண்ட தலைவ! அறியாதவர்தாம் காமம் காமம் என்று சொல்லிக்கொண்டிருப்பர். காமம் புறத்தே இருந்து வந்து நம்மைத் தாக்கித் துன்புறுத்துவதும் அன்று; நம்முள் தோன்றி வருத்தும் நோயும் அன்று. ஆராய்ந்து பார்த்தால், பழைய மேட்டுநிலத்திலே முளைத்த இளம்புல்லை, முதிய பசு (கடித்து மெல்ல இயலாமல்) நாவால் தடவி இன்புற்றாற்போல, காமம் என்பது நம் நினைப்பின் காரண மாய்ப் புதுமையாய்த் தோன்றும் ஒன்றே! காமம் நம் நினைப்பின் அளவிலேயே இன்பத்தை அளிக்கிறது; அதனை அறிவால் அடக்கிக்கொண்டால் துன்பம் தோன்றாது" என்று தோழன் தலைவனிடம் கூறினான்.

கருத்து

பழைய நினைவினால் முதிய பசு, புல்லைத் தடவி இன்புறுவதுபோல நீயும் அவளைப் பார்த்த நினைவினாலேயே ஏக்கங்கொண்டிருக்கிறாய்.

விளக்கம்

'காமம் நிலைத்த இன்பம் தருவதன்று. நமது அறிவுதான் காமத்தை இன்பமாய்க் கருதுகிறது. காமம் இன்பம் தருவதாய்

இருப்பதற்கும் துன்பம் தருவதாய் இருப்பதற்கும் நம் நினைப்புத் தான் காரணம். நல்ல வலிமையுள்ள நீ காமத்தால் கலங்குதல் தகாது' என்று அறிவுரை புகன்றான், தோழன்.

குறிப்பு

"கிழட்டுப்பசுவினால் புல்லைக் கடித்துச் சுவைத்து நுகர இயலவில்லை; நாக்கால் தடவுகின்ற அளவிலேயே இன்பம் அடைகின்றது. இதற்குக் காரணம் அப்புல்லின் சுவையன்று; அந்தப் பசுவின் ஆசைதான். அப்பசுவின் ஆசையின் அளவாய்ப் புல்லின் சுவை அமைகிறது. அதுபோலவே காமமும் நம் நினைப்பின் அளவிலேயே நமக்கு இன்பத்தை அளிக்கின்றது. நம் அறிவால் அதை அடக்கிக்கொள்ள இயலும். நீ இந்த உண்மையை உணர்ந்துகொள்" என்று தலைவனிடம் தோழன் கூறினான்.

சொற்பொருள்

1. காமம் - காம உணர்வு.
2. அணங்கும் - வருத்துவதும்; பிணியும் - நோயும்; நினைப்பின் - ஆராய்ந்து பார்த்தால்.
3. முதைச்சுவல் - பழைய மேட்டுநிலம்; கலித்த - முளைத்த.
4. மூதா - முதிய பசு, கிழட்டுப்பசு; தைவருதல் - தடவுதல்; ஆங்கு - போல.
5. விருந்து - புதிய இன்பம்.

பாங்கன் கூற்று

குறுந்தொகை 78 **நக்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கன் தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் ஒருத்தியிடம் காதல் கொண்டான். அதனால் அவனிடம் வேறுபாடு காணப்பட்டது. அதைக் கண்ட தோழன் தலைவனிடம் காமத்தின் தன்மையை எடுத்துக் கூறி, அதிலிருந்து விடுபடுமாறு இடித் துரைத்துச் சொல்லியது.

பெருவரை மிசையது நெடுவெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பிச்
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப!
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றுஎன உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

தெளிவுரை

“பெரிய மலையின்மேலிருந்து நெடிய வெண்ணிற அருவி, அறிவு முதிர்ந்த கூத்தர்களுடைய முழவைப்போல ஓசையிட்டுப் பெருகி, பக்கமலையில் விழுகின்ற மலைநாட்டுத் தலைவனே! காமம் என்பது தன்னைச் சிறிதும் ‘நல்லது’ என உணராதவரிடத்தும் தானே சென்று தங்கும்படியான மிகப்பெரிய அறிவின்மையுடையது. ஆதலின், அது மிகவும் வெறுக்கத் தக்கது” எனத் தலைவனிடம் தோழன் கூறினான்.

கருத்து

காமம் மிகவும் அறிவின்மையுடையது; அதனால் மிகவும் வெறுக்கத் தக்கது. ஆதலின், நீ ஒருத்திபால் கொண்ட காமத்தை ஒழித்துவிடு.

விளக்கம்

தன்னை ‘நல்லது’ என்று ஏற்காது வெறுப்பவரையும் விட்டு விலகாத தன்மை வாய்ந்த காமத்தைத் தோழன், ‘அறிவில்லாதது’ எனக் கடிந்துகொள்கிறான்.

சொற்பொருள்

1. பெருவரை - பெரிய மலை; மிசை - மேலே; நெடு - நெடிய, நீண்ட.
2. முதுவாய் - அறிவு முதிர்ந்த; கோடியர் - கூத்தர்; ததும்பி - ஒலித்து.
3. சிலம்பு - பக்க மலை; இழிதரும் - கீழிறங்கும்; இலங்கும் - விளங்கும்; வெற்ப - மலைநாட்டுத் தலைவனே!
4. நோதக்கன்று - நொந்து வெறுக்கத்தக்கது; யாவதும் - சிறிதும்.
5. பேதைமைத்து - அறிவில்லாதது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 136 **மிளைப்பெருங்கந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

'காம நோயால் கலங்குதல் உன் பெருமைக்குத் தக்கதன்று' என்று இடித்துரைத்த தோழனிடம் தலைவன் கூறியது.

'காமம் காமம்' என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே; யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்து,அது காணுநர்ப் பெறினே.

தெளிவுரை

"தோழனே! 'காமம் காமம்' என்று ஏதோ இழிவுள்ளது போலப் பேசுகின்றனர். காமம், தாக்கித் துன்புறுத்துவதும் அன்று; வருத்தும் நோயும் அன்று. நுண்ணிதாயிருந்து மிகுவதும் அன்று; பெரிதாகிப் பின்னர்க் குறைவதும் அன்று. யானை அதிமதுரத் தழையை உண்டு அதனால் மதம் கொள்வது போல, காதல் தக்காரைக் காணும்போது வெளிப்பட்டுத் தோன்றுகிறது."

கருத்து

காமம் ஒவ்வொருவரிடமும் அடங்கிக் கிடக்கிறது; வாய்ப்புக் கிட்டும்போது அது வெளிப்படுகிறது. அது தோன்றும் செவ்விபெற்று வெளிப்படும்போது, அதன்வழிச் செல்வதன்றி அதனைக் கட்டுப்படுத்த இயலாது.

விளக்கம்

"யானை அதிமதுரத்தழையை மென்றவுடன் அதன் உள்ளே யுள்ள மதம் வெளிப்படுதற்கு ஏற்ற காரணமாய் அமைவதால், வெளிப்பட்டு, அந்த யானையைத் தன் வசம் ஆக்கிக்கொண்டு

ஆட்டுவிக்கிறது. அதுபோல, காமமும் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் அடங்கிக் கிடக்கிறது. அது தக்கவரைக் காணும்பொழுது வெளிப்படுகிறது. அது வெளிப்படும்போது அதனைக் கட்டுப்படுத்த இயலாது. உனக்கு இன்னும் அந்த நிலை ஏற்படவில்லை; ஏற்படும்போது அதனியல்பை நீ உணர்வாய்; இப்பொழுது நீ உணராமையால் என்னைக் கடிந்துகொள்கிறாய்" என்று தலைவன் தோழனிடம் கூறினான்.

சொற்பொருள்

2. அணங்குதல் - துன்புறுத்தல்; பிணி - நோய்; நுணங்கி - சிறுத்து.
3. கடுத்தல் - கூடுதல்; தணிதல் - குறைதல்; இன்றே - இல்லை.
4. குளகு - அதிமதுரத் தழை; ஆள் மதம்போல - ஆள்கின்ற மதத்தை ஆள்வதுபோல, மதத்திற்கு ஆட்படுவதுபோல.
5. பாணியும் உடைத்து - தான் தோன்றுமொரு செவ்வியைக் கொண்டது; காணுநர்ப் பெறின் - தான் தோன்றுதற்குத் தக்கவரைக் காணப் பெற்றால்.

பாங்கன் கூற்று

ஐங்குறுநூறு 173 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் குறிவழிச் சென்று தலைமகளைக் கண்ட பாங்கன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சொல்லிய வழியிலே சென்று தலைவியைக் கண்ட பாங்கன், தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

இரவி னானும் இன்துயில் அறியாது
அரவுஉறு துயரம் எய்துப, தொண்டித்
தண்நறு நெய்தல் நாறும்
பின்னிருங் கூந்தல் அணங்குற் றோரே.

தெளிவுரை

"இவள் தொண்டிப்பட்டினத்தின் நீர்த்துறையில் மலர்ந்த மணமும் குளிர்ச்சியும் மிக்க நெய்தல் மலர்களைச் சூடியிருக்கிறாள். பின்னிவிடப்பட்டுள்ள கருங்கூந்தலைக் கொண்ட இவளால் வருத்தப்பட்டோர், இரவிலும் துயில் பெறாது, அருமணியிழந்த நாகம்போலத் துயருறுவர் என்பது உறுதி" என்று தோழன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதோடு, தலைவன் வருத்தம் கொள்வது இயல்பே என்ற தெளிவும் பெற்றான்.

கருத்து

மலரணிந்த, பின்னிய கூந்தலைக் கொண்ட இம்மகளைக் காண்போர், துயில் இழந்து துயருற்றிருப்பது இயல்பே எனத் தோழன் உணர்ந்தான்.

சொற்பொருள்

1. துயில் - தூக்கம்.
2. அரவு - பாம்பு; உறு - அடைகின்ற; எய்துப - அடைவர்; தொண்டி - சேரர் துறைமுகம்.
3. தண் - குளிர்ச்சி பொருந்திய; நெய்தலின் - நெய்தல் மலரின்; நாறும் - மணம் வீசும்.
4. பின் இருங்கூந்தல் - பின்னிவிடப்பட்ட கரிய கூந்தல்; அணங்குற்றோர் - வருத்தப்பட்டோர்.

பாங்கன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 45 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சொல்லிய குறிவழி அறிந்து தலைமகளைக் கண்ட பாங்கன், தலைமகனை வியந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சொன்ன அடையாளங்கள் வழியே போய்த் தலைவியைப் பார்த்த தோழன், தலைவனை வியந்து சொல்லியது.

தாழை தவழ்ந்துலாம் வெண்மணல் தண்கானல்
மாழை நுளையர் மடமகள் – ஏழை
இணைநாடில் இல்லா இருந்தடங்கண் கண்டும்
துணைநாடி னன்,தோம் இலன்.

தெளிவுரை

தாழை மரங்கள் படர்ந்து பரவியிருக்கும் வெண்மணல் நிரம்பிய, குளிர்ச்சி பொருந்திய கடற்கரைச்சோலையில் வாழும் நெய்தல் நிலத்தவர் மகள், இவள். இவள் கண்களுக்கு ஒப்புமையாய் ஆராய்ந்து பார்த்து எதையும் கூற இயலாது. இக்கண்களைப் பார்த்த பிறகும் தலைவன் திரும்ப என்னிடம் வந்துள்ளான். அவன் எவ்விதக் குற்றமும் இல்லாதவனே!

கருத்து

இவள் கண்கள் ஒப்புமை கூற இயலாதவை. தலைவன் இக்கண்களுக்கு ஆட்பட்டது இயற்கையே.

குறிப்பு

'அழகிய அகன்ற இவள் கண்களைப் பார்த்த பிறகும் தோழனாகிய என்னை நாடித் திரும்ப வந்துள்ளான் என்றால், அவனைக் குறை கூறுதல் தவறு; அவன் சிறிதும் குற்றமிலாதவனே' எனப் பாங்கன் தலைவனை வியந்து கூறினான்.

சொற்பொருள்

1. தாழை - தாழை மரம்; தவழ்ந்து - படர்ந்து; உலாம் - பரவி நிற்கும்.
2. மாழை - அழகிய; நுளையர் - நெய்தல்நிலத்தவர்; மடமகள் - இளைய மகள்; ஏழை - இப்பெண்.
3. இணை நாடில் - ஒப்புமை உண்டோ என்று ஆராயின்.
4. துணை - தோழனாகிய என்னை; நாடினன் - தேடி வந்தான்; தோம் இலன் - குற்றம் இல்லாதவன்.

பாங்கன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 28 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சொன்ன குறிவழியே சென்று, தலைமகளைக் கண்டு பாங்கன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பார்த்துத் தன் உள்ளத்தைப் பறி கொடுக்கக் காரணமான பெண் இருக்கும் இடத்தைத் தோழனிடம் கூறினான். அவன் சொன்ன குறிவழியே சென்ற தோழன் அவளைக் கண்டு தன்னுள் கூறியது.

மேகந்தோய் சாந்தம் விசைதிமிசு காழ்அகில்
நாகந்தோய் நாகம் எனஇவற்றைப் – போக
எறிந்துழுவார் தங்கை இருந்தடங்கண் கண்டு
மறிந்துழல்வா னோஇம் மலை.

தெளிவுரை

"உயர்ந்து வளர்ந்துள்ள சந்தன மரம், விசை மரம், வேங்கை மரம், முற்றிய அகில் மரம், விண்ணையே தொடும் நாக மரம் எனப் பல்வகை மரங்களை வெட்டித் திருத்தி உழுது பயிர் செய்கின்றனர், இம்மலைநாட்டவர். இவர்கள் தங்கையாகிய இத்தலைவியின் பெரிய அகன்ற கண்களைப் பார்த்த பிறகும், இங்கிருந்தும் திரும்பி வந்துள்ள தலைவன் இம்மலைபோன்ற அசையா நெஞ்சினனேயாவான்" என்று தோழன் தன்னுள் கூறிக்கொண்டான்.

கருத்து

இவளைக் கண்ட பின்னும் தலைவனால் திரும்ப இயன்றதென்றால் அவன் திண்ணிய நெஞ்சத்தினனே!

சொற்பொருள்

1. தோய் - படிகின்ற; சாந்தம் - சந்தன மரம்; விசை - விசை மரம்; திமிசு - வேங்கை மரம்; காழ் - வயிரம் வாய்ந்த; அகில் - அகில் மரம்.
2. நாகம் - தேவருலகம், சுரபுன்னை மரம்; போக - அற்றுப்போகும் படியாக.

3. எறிந்து - வெட்டி; இருந்தடங்கண் - கரிய அகன்ற கண்.
4. மறிந்து உழல்வான் - இங்கிருந்து மீண்டு திரும்பியுள்ளவன்; இம்மலை - மலை போன்ற அசையா நெஞ்சினனாகிய இத்தலைவன்.

பாங்கன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 47 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கன் தலைமகனைக் கண்டு தலைமகளை வியந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் விரும்புகின்ற பெண்ணைச் சென்று கண்டு வந்த தோழன், அவள் அழகைத் தலைவனிடம் வியந்து சொல்லியது.

பண்ணாது பண்மேல்,தே பாடும் கழிக்கானல்
எண்ணாது கண்டார்க்கே ஏர்அணங்கால் – எண்ணாது
சாவார்,சான் றாண்மை சலித்திலா மற்(று)இவளைக்
காவார் கயிறுரீஇ விட்டார்.

தெளிவுரை

"நீ விரும்புகின்றவளின் அழகு, சான்றோர்களின் உறுதிப்பாட்டினையும் வேறுபடுத்தக்கூடியது. இவளை வீட்டினுள்ளேயே பாதுகாவாது இயற்கையழகுமிக்க சோலைக்கு அனுப்பியிருப்பது, கொல்லேற்றினைக் கட்டுத்தறியில் கட்டி வைத்துப் பாதுகாக்காது கயிற்றினின்று அவிழ்த்துவிட்டது போன்றதேயாம்!"

கருத்து

"இவளைப் பார்த்து நீ மனம் வேறுபட்டது குற்றமன்று; இவளை வீட்டினுள்ளேயே பாதுகாத்து வைத்திடாது வெளியே அனுப்பியிருக்கிறார்களே அவள் பெற்றோர், அவரே குற்றமுள்ளவர்" என்று தோழன் தலைவனிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. பண்ணாது - (இசைக்கருவிகளை) இசைக்காமலேயே; தே பாடும் - தேன் பாடும் - வண்டுகள் பாடுகின்ற.
2. ஏர் அணங்கு - அழகிய தெய்வம்; எண்ணாது - ஆராயாது.
3. சாவார் - இறைவனையே எண்ணி இறந்துபடும் சான்றோரின்; சான்றாண்மை - மனவமைதியாகிய உறுதிப்பாட்டின் முன்னும்; சலித்திலா - வேறுபடாத.
4. காவார் - காவலில் வைத்திராது; உரீஇ விட்டார் - அவிழ்த்து விட்டவர்.

பாங்கன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 8 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கன் கூற்று.

கூற்று விளக்கம்

தலைவியைச் சந்திக்கக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்ற தோழன், தலைவியைக் கண்டு தலைவனின் காதல் மிகுதி தக்கதே எனத் தன்னுள்ளே சொல்லிக் கொண்டது.

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல்உழுத தோற்றம் மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூஉதிர்ந்து நுண்தாது போர்க்கும் கானல்
நிறைமதி வாள்முகத்து நேர்கயல்கண் செய்த
உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்!

தெளிவுரை

“கடற்கரையிலே மேய்கின்ற வலம்புரிச்சங்குகள் மணலிலே தோய்ந்து உழுதலால் உண்டாகிய சுவடுகளை (கோடுகளாகிய குழிகளை) அங்குள்ள புன்னை மரங்கள் தம் நிறைந்த பொதியான பூக்களின் நுண்ணிய தாதுகளால் மறைக்கும். இத்தகைய கானலிடத்தில், தலைவியின் முழுமதி போன்ற முகத்திலுள்ள கயல் போன்ற கண்கள் செய்த காமநோயாகிய

வடுவினைத் தேமல் படர்ந்த அவள் மென்மையான முலைகள் அழுந்துவதாலேயே போக்க இயலும் போலும்" எனத் தலைவனின் காதல் நோயை இவளால் மட்டுமே போக்க இயலும் என்று தோழன் தன்னுள்ளே சொல்லிக்கொள்கிறான்.

கருத்து

சங்கு செய்த சுவடுகளைத் தாது மறைத்துவிடக்கூடும். ஆனால், இவள் கண்கள் செய்த நோயைத் தீர்க்க இவள் முலைவேது தவிர வேறு எதுவும் இல்லை. (அவள் உண்டாக்கிய நோயை அவளால் மட்டுமே போக்க இயலும்.)

விளக்கம்

கடற்கரையில் வலம்புரிச்சங்குகள் ஊர்ந்து செல்லும்போது அவற்றின் நகங்கள் கீறுவதால் சிறிதளவு ஆழமுள்ள குழிகள் தோன்றுகின்றன. அவ்வடுக்களைப் புன்னை மரங்களின் பூக்களி லிருந்து உதிரும் தாதுகள் மூடி மறைக்கின்றன. ஆனால், இவள் கண்கள் செய்த வடுவினை இவள் முலையால் மட்டுமே மறைக்க இயலும்.

சொற்பொருள்

1. துறை - கடற்கரை; வலம்புரி - வலம்புரிச்சங்கு; தோய்ந்து - படிந்து; தோற்றம் - உழுபடைபோல் தோன்றும் தோற்றம்; மாய்வான் - மறைக்கும்படி.
2. பொறை - பாரம்; மலி - நிறைந்த; போர்க்கும் - மறைக்கும்.
3. நிறைமதி - முழு நிலவு; வாள் - ஒளி பொருந்திய; நேர்கயல் கண் - கயல்மீனை ஒத்த கண்.
4. உறை - மருந்து; உய்யா நோய் - தீர்க்க இயலாத நோய்; ஊர் சுணங்கு - தேமல் படர்ந்த.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 174 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டுவந்த பாங்கன், அவள் நின்றுழி நின்றாளென்று கூறியவழி ஆண்டுச் செல்லக் கருதிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிய இடத்திற்குத் தோழன் சென்று, தலைவியைக் கண்டு வியந்து, மீண்டு வந்து, அவள் நிலைமையைக் கூறிட, அது கேட்ட தலைவன், தலைவியைப் பெற்றவன் போன்று தன்னுள்ளே மகிழ்ந்து கூறியது.

அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன
மணம்கமழ் பொழில்குறி நல்கினள் நுணங்குஇழைப்
பொங்குஅரி பரந்த உண்கண்,
அம்கலிழ் மேனி அசைஇய எமக்கே.

தெளிவுரை

"என் தலைவி தந்த காதல்நோயினால் மெலிந்துள்ளேன். வேலைப்பாடமைந்த அணிகலன்களையும், செவ்வரி படர்ந்த கண்களையும், அழகொழுகும் மேனியையும் கொண்ட அத்தலைவி, குளிர்ச்சி பொருந்திய துறைகளைக்கொண்ட தொண்டி நகரைப் போன்றவள். மணங்கமழும் சோலையைக் குறியிடமாய்த் தந்து என் மெலிவை அவள் நீக்கிவிட்டாள். (அங்குச் சென்று அவளை அடைவேன்.)"

கருத்து

என் தலைவி குளிர்ச்சி பொருந்திய, மணங்கமழும் சோலையை எனக்குக் குறியிடமாய் நல்கியுள்ளாள் என்று தலைவன் பெருமிதத்தோடு கூறினான்.

சொற்பொருள்

1. அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்; பனி - குளிர்ச்சி; தொண்டி - சேரர் துறைமுகம்.

2. பொழில் - சோலை; குறி - குறியிடம்; நல்கினள் - தந்துள்ளாள்; நுணங்குஇழை - நுணுகிய செயல்திறம் அமைந்த அணிகலன்களை அணிந்த தலைவி.
3. பொங்கு - மிக்க; அரி - செவ்வரி; உண்கண் - மையுண்ட கண்.
4. அம்கலிழ் - அழகு ஒழுகும்; அசைஇய - மெலிந்துள்ள.

தலைவன் கூற்று

திருக்குறள் 1114 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கற்கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியிருக்குமிடத்தை அறிந்து வந்து பாங்கன் கூற, அங்குச் சென்று, அங்கு வான் நோக்கியிருந்த குவளை மலரைப் பார்த்துத் தலைவன் சொல்லியது.

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று.

தெளிவுரை

குவளைப்பூக்களுக்குக் காணுகின்ற ஆற்றல் இருக்குமேயானால், அணிகலன்கள் பூண்டுள்ள என் காதலியின் கண்களைப் பார்த்து, தாம் அவற்றிற்கு ஒப்பாக மாட்டோம் என்று நாணித் தலைகுனிந்து நிலத்தையே நோக்கியிருக்கும்.

கருத்து

குவளைப்பூவே! நீ என் தலைவியின் கண்ணுக்கு ஒப்பாகாய்!

விளக்கம்

காதலியின் கண்கள் குவளை மலரினும் அழகியன. அழகால் குவளை கண்ணனை ஒத்திருப்பினும், பார்க்கும் தன்மை கொண்டது அன்று. காண்கின்ற தன்மையும் நாணமும் இல்லாமையால்தான்

குவளை செம்மாந்து வானை நோக்கி மலர்ந்து நிற்பதாய்க் காதலன் காரணம் கற்பித்துக் கூறுகிறான்.

குறிப்பு

மலர்ந்து நிமிர்ந்து நிற்கும் குவளை மலருக்குப் பார்க்கும் தன்மை இருக்குமாயின், என் காதலியின் கண்ணைப் பார்த்து, அதுபோன்ற அழகு தனக்கு இல்லையென்று நாணப்பட்டுத் தலைகுனிந்து கவிழ்ந்திருக்கும்.

சொற்பொருள்

1. காணின் - பார்க்கின்ற தொழிலைக் கொண்டவையாயின்; குவளை - குவளை மலர்கள்; கவிழ்ந்து - (நாணத்தால் தலை) குனிந்து; நோக்கும் - பார்க்கும்.
2. மாண் இழை - மாட்சிமைப்பட்ட அணிகலன்கள்; ஒவ்வேம் - நிகராகேம்; என்று - என்று கருதி.

தலைவன் கூற்று

திருக்குறள் 1104 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் பாங்கற்கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

பாங்கற்கூட்டமாவது, இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த மூன்றாம் நாள், தலைவி இருக்கும் இடத்தைத் தலைவன், தோழன் வாயிலாய் அறிந்து சென்று கூடுவதாகும். அவ்வாறு கூடிய தலைவன், தலைவிபற்றிச் சொல்லியது.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

தெளிவுரை

இவள், தன்னை விட்டு அகன்றால் சுடுவதும், நெருங்கினால் குளிர்ச்சி தருவதுமான புதுமைத் தீயை எங்கிருந்து பெற்றனளோ?

கருத்து

தொட்டால் குளிர்ச்சி தருவதும், விட்டால் சுடுவதுமான தீயாய்த் தலைவி இருக்கிறாள்.

விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடும் முன்னும் பிரியும்போதும் துன்புறுகிறான்; நெருங்கும்போதும் கூடும்போதும் இன்புறு கிறான். நெருங்கும்போது குளிர்ச்சி தருவதும், விலகும்போது சுடுவதுமான புதுமைத் தீயாய்த் தலைவி இருக்கிறாள்.

சொற்பொருள்

1. நீங்கின் - விலகினால்; தெறூஉம் - சுடும்; குறுகுங்கால் - நெருங்கும் போது; தண் என்னும் - குளிர்ச்சியாய் இருக்கும்.
2. தீ - (இப்படிப்பட்ட) தீயை; யாண்டு - எங்கிருந்து; இவள் - (என் காதலியாகிய) இவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 175 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பாங்கற் கூட்டம் நீங்கும் தலைமகன், 'இனி, நீ வருமிடத்து நின் தோழியோடும் வர வேண்டும்' எனத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழன் வாயிலாய்த் தலைவி இருக்குமிடத்தை அறிந்து சென்று அவளைக் கூடிய தலைவன் கூட்டம் முடிந்து நீங்கும்போது, அவளிடம், 'இனி நீ வரும்போது உன் தோழியோடு வரவேண்டும்' என்று சொல்லியது.

எமக்குநயந் தருளினை ஆயின் பணைத்தோள்
நன்னுதல் அரிவையொடு மென்மெல இயலி
வந்திசின், வாழியோ மடந்தை
தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே.

தெளிவுரை

இளமை பொருந்திய தலைவியே! இப்போது என்னை விரும்பி வந்து உன் நலத்தைத் தந்து மகிழ்விக்கின்றாய். நீ, தொண்டி நகரைப்போல வனப்பும் பண்புகளும் கொண் டுள்ளாய்! நீ இனிமேல் வரும்போது, பருத்த தோள்களையும் அழகிய நெற்றியையும் கொண்டுள்ள உன் உயிர்த்தோழியுடன் மெல்ல மெல்ல நடந்து வருக!

கருத்து

இனி நீ வரும்போது உன் உயிர்த்தோழியுடன் வருக!

குறிப்பு

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பாங்கன் உதவியால் தலைவி குறித்த இடம் சென்று அவளைத் தலைவன் கூடிக் களித்தான். தொடர்ந்து அவளுடன் கூடி மகிழும் வகையில் பாங்கியிற் கூட்டம் பெறும்பொருட்டுத் தலைவியை நோக்கி, 'உன் தோழியோடும் இனி வருக' என்று தலைவன் கூறினான்.

தோழியை அறிந்ததும் அவளை வேண்டி அவள் துணை பெற்றுத் தலைவியைச் சேர முற்படுவான்.

சொற்பொருள்

1. நயந்து - விரும்பி; ஆயின் - (இன்னும் இவ்வாறே எனக்கு அருள் செய்யும்) கருத்துடையவளாயின்; பணைத்தோள் - பருத்த தோள்.
2. அரிவை - பெண், தோழி; இயலி - நடந்து.
4. தொண்டி - சேரர்களின் துறைமுக நகரம்.

பாங்கியிற் கூட்டம்

(தோழியிற் புணர்ச்சி)

பாங்கி கூட்டிவைக்கத் தலைவன் தலைவியைக் கூடுதல்.

நம்பி அகப்பொருள் இதனை 12 வகைகளாகப் பிரித்துக் கூறுகிறது.

1. இரந்து பின் நிற்றல் – தலைவன் தோழியிடம் குறையுற்று நிற்றல். அஃதாவது தன் குறையைத் தீர்க்கவேண்டும் என்று வேண்டி நிற்றல்.
2. சேட்படை – சேண்மைப்படுத்துதல். தோழி, தலைவனை மறுத்துரைத்து அகற்றல்.
3. மடற் கூற்று – தலைவன் தான் மடலேறுவதாகத் தோழியிடம் கூறுதல்.
4. மடல் விலக்கு – தோழி தலைவனை மடலேறு வதினின்றும் தடுத்தல்.
5. உடன்படல் – பாங்கி தலைவனது குறையை நிறைவேற்ற இசைதல்.
6. மடற்கூற்று ஒழிதல் – தலைவன், மடலேறும் எண்ணம் செயல் இரண்டனையும் விட்டுவிடுதல்.
7. குறை நயப்பித்தல் – தோழி, தலைவியை வற்புறுத்தித் தலைவனது குறையை முடித்துவைக்க அவளும் விரும்பும் வகை செய்தல்.
8. நயத்தல் – தலைவி, தலைவன் குறையை முடிக்க விரும்புதல்.

9. கூட்டல் — தோழி தலைவியைக் குறியிடம் கொண்டு உய்த்தல்.

10. கூடல் — தலைவன் தலைவியைக் கூடுதல்.

11. ஆயம் கூட்டல் — தோழி தலைவியை அழைத்துக் கொண்டேகித் தோழியர் கூட்டத்தில் சேர்த்தல்.

12. வேட்டல் — தலைவன் தோழியின் விருப்பத்திற்கு இணங்கி விருந்து ஏற்க விரும்புதல்.

இவற்றுடன் கையுறை என்றொரு வகையும் சேரும். தலைவிக்காகத் தலைவன் பரிசுப் பொருள் (காணிக்கை) தோழியிடம் கொடுக்க, அவள் மறுத்தலும், பின் ஏற்றலும் செய்தல்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 222 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தல்.

(பெட்டவாயில் பெறுதல் - தலைவியால் விரும்பப்பட்ட தோழியைத் தூதாய்ப் பெறுதல்; (வாயில் - தூது); இரவு - இரந்து கேட்டல்.)

தலைவியால் மிகவும் நேசிக்கப்படும் உயிர்த்தோழி இவள் என அறிந்து, தலைவன் அவளிடம் தலைவியை அடைய உதவுமாறு இரந்து கேட்டு வற்புறுத்துதல். (இரந்து கேட்டு - கெஞ்சிக் கேட்டு.)

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் நீராடி ஒருங்கிருந்த இடத்தில், அத்தோழியோடு தலைவிக்குள்ள நெருக்கத்தினை அறிந்து, 'இவளே தலைவியை நாம் பெறுதற்குரிய வாயில்; இனி, இவள் வாயிலாய் இரந்து தலைவியை அடைவோம்' எனத் தலைவன் நினைந்தது.

தலைப்புணைக் கொளினே, தலைப்புணைக் கொள்ளும்;
கடைப்புணைக் கொளினே, கடைப்புணைக் கொள்ளும்;
புணைகை விட்டுப் புனலோடு ஒழுகின்,
ஆண்டும் வருகுவள் போலும்! மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர்அன் னோளே.

தெளிவுரை

"நெஞ்சே! மழைக்காலத்தில் மலரும் அழகிய பிச்சியின் நீர் ஒழுகும் வளமான அரும்பின் சிவந்த புறவிதழைப் போன்ற கொழுவிய செவ்வரியுள்ள கடைப்பகுதி கொண்ட குளிர்ச்சி மிக்க கண்களைக் கொண்டவள், நம் தலைவி. நீர்த்துளிகள் தவழும் தளிர் போன்ற மென்மையளாயும் அவள் உள்ளாள்.

(தெப்பத்திலேறி ஆற்றில் செல்லும்போது) தெப்பத்தின் தலைப்பகுதியை இத்தோழி பற்றினால், தலைவி, தானும்

அதையே பற்றிக்கொள்கிறாள். இத்தோழி, தெப்பத்தின் கடைப்பகுதியைப் பற்றினால், இவளும் அவ்வாறே பற்றுகிறாள். தோழி, தெப்பத்தைக் கைசோரவிட்டு நீரோடு சென்றால், இவளும் அவ்வாறே செய்வாள் போலும்!

கருத்து

இயற்கைப் புணர்ச்சி எய்திய தலைவன், மீண்டும் தலைவியை அடைதற்கு, 'இவளே உயிர்த்தோழி' என்றுணர்ந்து அவளைக் குறையிரப்ப நினைக்கிறான்.

குறிப்பு

'இத்தனை மகளிருள் இவளொருத்தியையே தலைவி பின்பற்றுகிறாளாதலின் உறுதியாய் இத்தோழியே தலைவிக்கு உயிர்த்தோழி எனத் தெரிகிறது. இவளை அணுகி இவள் வாயிலாகவே தலைவியை அடைய முயலவேண்டும்' எனக் கருதுகிறான், தலைவன்.

தலைவியின் கண்களுக்குப் பிச்சி மலரின் மொட்டும், மழைத்துளி தவழும் அவள் உடம்புக்கு மழைக்காலத்து மெல்லிய தளிரும் **உவமைகள்.**

சொற்பொருள்

1. புணை - தெப்பம்; தலை - தலைப்பகுதி; கொளினே - கைப்பற்றினால்.
2. கடை - கடைப்பகுதி.
3. புனல் - நீர்; ஒழுகின் - (தண்ணீரின் போக்கிலே) சென்றால்.
4. ஆண்டும் - அங்கும்; மாண்ட - பெருமை பொருந்திய.
5. மாரி - மழை(க் காலத்தில் மலரும்); பித்திகம் - பிச்சி மலர்; நீர்வார் - நீர் ஒழுகும்; கொழு முகை - வளமான அரும்பு.
6. செவ் - சிவந்த; வெரிந் - முதுகு; உறழும் - போன்ற; கொழுங்கடை - செழித்த கடைக்கண்.
7. துளிதலை - மழைத்துளிகள்; தலைஇய - தவழும்.

தலைவன் கூற்று

நற்றிணை 213 **கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

மதியுடம்படுக்குந் தலைமகன் சொல்லியது.

(மதியுடம்படுத்தல் - தலைவன் தன் விருப்பத்தினை நிறைவேற்றுவதற்குத் தகுதியாய்த் தோழியின் அறிவுப்போக்கினை மாற்றல்.)

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் தோழியின் வாயிலாய்த் தலைவியை அடையக் கருதிய தலைவன், தலைவியும் தோழியும் ஓரிடத்திலிருப்பதையறிந்து, அங்கே புதிதாய் வந்திருப்பவன்போல அவர்களோடு பேசி, அவ்விருவர் கருத்தினையும் தன் கருத்தோடு ஒன்றுபடுத்தி உணர்வதற்காகக் கூறியது.

அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணி,
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்கும் கொழுஞ்சுளைப் பெரும்பழம்
குழவிச் சேதா மாந்தி, அயலது
வேய்பயில் இறும்பின் ஆம்அறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதுஎன,
சொல்லவும் சொல்லீர்; ஆயின், கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென எழுந்த
செங்கேழ் ஆடிய செழுங்குரல் சிறுதினைக்
கொய்புனம் காவலும் நுமதோ?
கோடுஏந்து அல்குல் நீள்தோ ளீரே!

தெளிவுரை

“பக்கம் உயர்ந்த அல்குலையும் பெருத்த தோளையும் கொண்ட இள மங்கையரே! கன்றை ஈன்ற பசு, தன் கன்றை நாடி அருவிகள் முழங்கும் பெரிய மலையை அடைந்தது; அங்கே உள்ள மன்றத்தில் கன்றின் கால் பலா மரத்தில் கயிறு கொண்டு கட்டப்பட்டு நிற்பதைக் கண்டது. அவ்வேர்ப்பலா மரத்தின் வேர்களில் பழுத்திருக்கும் கொழுவிய சுளைகளைக் கொண்ட

பெரிய பழங்களைக் கன்று ஈன்ற அப்பசு தின்றது; பின்னர், மூங்கில் நிறைந்த பக்கமலையிலே ஊறி ஓடி வருகின்ற நீரைப் பருகியது. இத்தகைய வளமிக்க பெரிய மலைகள் வேலிபோலச் சூழ்ந்திருக்கும் உமது சிற்றூர் யாது என்றேன். நீங்கள் ஒரு சொல்லும் சொல்லவில்லை. சொல்ல விரும்பவில்லை எனினும் நன்று. ஆயினும், மின்னல் முதலான தொகுதியைக் கொண்ட கார்மேகங்கள் ஒன்றுதிரண்டு 'கல்' என்னும் இடி முழக்கத் தோடு மழையைப் பொழிந்துள்ளது. அதனால் தழைத்தெழுந்து, செந்நிறம் பொருந்திய செழித்த கதிர்களைத் தாங்கிக் கொய்யும் நிலையிலுள்ள இத்தினைப்புனத்தைக் காவல் செய்வது நீவிர் தாமோ? இதனையேனும் கூறுவீர்களா?" என்று, புனங்காவல் செய்த தலைவியையும் தோழியையும் கண்டு தலைவன் கேட்டான்.

கருத்து

'இளமங்கையரே! உம் ஊர் யாது?' எனத் தலைவன் வினவினான். அவர்கள் மறுமொழி கூறாது நாணி நின்றதால், 'ஊரைச் சொல்லா விட்டாலும் போகட்டும்; இப்புனம் காப்பவர் நீவிர்தாமா?' என்று கேட்டு, அவ்விருவர் கருத்தையும் தன் கருத்தோடு தலைவன் ஒன்றுபடுத்த முற்படுகிறான்.

விளக்கம்

தலைவன், ஒரு நாள், தினைப்புனத்தில் தலைவியும் தோழியும் தனித்திருக்கக் கண்டு, அவர்கள் முன் சென்று நின்றனன்; நாணத்தால் அவர்கள் தலையிறைஞ்சி நிற்கின்றனர். அவர் களோடு உரையாட விரும்பிய தலைவன், 'உமது ஊர் யாதோ?' என்று கேட்கிறான். அவர்கள் விடையொன்றும் கூறாது அவ் விடத்திலிருந்து நீங்குகின்றனர். அவனும் அயர்ச்சி கொள்ளாது பின் சென்று, 'இத்தினைப்புனத்தைக் காவல் செய்வது நீவிர்தாமோ?' என்று வினவுகின்றான். (தலைவன் உரையைக் கேட்டுத் தலைவியின் காதலுள்ளம் துடிக்கிறது. தலைவியிடம் தோன்றும் வேறுபாடுகளையும் தலைவனது உட்கோளையும் தோழி குறிப்பால் உணர்ந்துகொள்கிறாள். அதன் பின்னர்த்

தலைமக்களிடையே நிலவவிருக்கும் களவொழுக்கத்துக்குத் தோழி உறுதுணையாய் இருப்பாள்.)

உள்ளுறை

கன்றை நாடி வந்த சேதா, பலாப் பழத்தைத் தின்று, அருகே ஓடும் சுனைநீரைப் பருகும் என்னும் தொடர்மூலம், தலைவியை முன்பே இயற்கைப் புணர்ச்சியில் பெற்றவனாகிய தலைவன், அவளை இனித் தினைப்புனத்தில் பகற்குறியிலும், சிறுகுடியில் இரவுக்குறியிலும் கூடி மகிழ்வான் என்னும் உள்ளுறை பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. ஆர்க்கும் - ஒலிக்கும்; வரை - மலை; நண்ணி - அடைந்து.
2. கன்று - பசுங்கன்று; கால் யாத்து - (காலிலிட்ட கயிற்றால்) கட்டப்பட்டுள்ள; மன்றப் பலவின் - மன்றத்திலுள்ள பலா மரத்தின்.
3. வேர்க்கொண்டு தூங்கும் - வேர்ப்புறத்தே பற்றித் தொங்கும்.
4. குழவிச் சேதா - இளங்கன்றினைக் கொண்ட செந்நிறப் பசு; மாந்தி - உண்டு; அயலது - அருகேயுள்ள.
5. வேய் பயில் - மூங்கில் நெருங்கிய; இறும்பு - பக்க மலை; ஆம் - உண்டாகும்; அறல் - அறல் போன்ற நீரை.
6. பெருங்கல் - பெரிய மலை.
7. கல் என - 'கல்' என்ற ஒலியுடன்.
8. கருவி (மின்னல், இடி ஆகிய) தொகுதி; வீழ்ந்தென - பெய்ய; எழுந்த - தழைத்து எழுந்த.
9. செங்கேழ் - செந்நிறம்; ஆடிய - கொண்ட; செழுங்குரல் - செழித்த கதிர்.
10. கொய் புனம் - கொய்யும் நிலையில் உள்ள தினைப்புனம்.
11. கோடு ஏந்து - பக்கம் உயர்ந்த; நீள்தோளீர் - பருத்த தோள்களைக் கொண்டவர்களே!

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 1 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகளும் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்று தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் ஒன்றாயிருக்கும்போது, தலைவன் அங்குச் சென்று, தோழியிடம் இரந்து நின்று, தான் தலைவியிடம் கொண்டுள்ள காதல் நிறைவேற உதவுமாறு வேண்டியது. (தலைவியின் தோற்றம், நாற்றம் முதலியன கண்டு தோழி, தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே தொடர்பு உண்டென்பதைத் தன் மனத்தே ஒருவகையாய், முன்னரே முடிவு செய்திருந்தாள். அந்நிலையில் தலைவன் வந்து தோழியிடம் உரையாடவே, தலைவன், தலைவி ஆகிய இருவர் கருத்தினையும் தன் கருத்தினோடு ஒன்றுபடுத்தித் தோழி உணர்கிறாள். இது 'மதியுடம்படுத்தல்' எனப்படும்.)

நறைபடர் சாந்தம் அறஎறிந்து, நாளால்
உறைஎதிர்ந்து வித்தியஊழ் ஏனல் – பிறைஎதிர்ந்த
தாமரைபோல் வாள்முகத்துத் தாழ்குழலீர்! காணீரோ
ஏ,மரை போந்தன ஈண்டு.

தெளிவுரை

"பிறைமதியினை ஏற்றுக்கொண்டுள்ள தாமரை மலர் போன்ற ஒளி முகத்தையும் தாழ்ந்து நீண்ட கூந்தலையும் கொண்டுள்ள பெண்களே! நறுமணமிக்க கொடிகள் படர்ந்துள்ள சந்தன மரங்களை வேரோடு வெட்டி வீழ்த்தி, நிலத்தைப் பண்படுத்தி, நல்ல நாளில், மழை பெய்யும் காலத்தில் விதைத்ததனால் வளர்ந்து முதிர்ந்துள்ள தினைப்புனத்தைக் காவல் செய்கின்றீர்! என் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு பாய்ந்த மான்கள் இவ்விடத்திற்கு வந்ததை நீங்கள் கண்டீர்களா?" என்று தலைவன் வினவினான்.

கருத்து

தலைவன், 'மான் வரக் கண்டதுண்டா?' என்று வினவுவதுபோல், தான் தலைவியிடம் கொண்டுள்ள காதலுணர்வைத் தோழியிடம் குறிப்பாய்ப் புலப்படுத்துகின்றான்.

குறிப்பு

தலைவன் தேடி வந்தது மானை அன்று; பெண்மானாகிய தன் தலைவி யினையே என்பதைத் தோழி உணர்கிறாள்.

சொற்பொருள்

1. நறைபடர் - மணம் (மிக்க பூங்கொடிகள்) படர்ந்துள்ள; சாந்தம் - சந்தன மரம்; அறஎறிந்து - வேரோடு வெட்டி; நாளால் - நல்ல நாளில்.
2. உறை - மழை; ஊழ் - முற்றிய; ஏனல் - தினைப்புனம்; பிறை எதிர்ந்த - பிறைமதியை ஏற்றுக்கொண்டுள்ள.
3. வாள் - ஒளி பொருந்திய; காணீரோ - கண்டீர்களோ?
4. ஏ - (என் அம்பினால்) எய்யப்பெற்ற; மரை - மான்கள்; ஈண்டுப் போந்தன - இங்கு வந்ததனை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 176 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழிச் சென்ற தலைமகன், 'இவள் என்னை இலை கோடற்குக் காரணம் என்?' என்று தோழியை வினாவியது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் ஒரே இடத்தில் நின்றபோது அங்கே சென்ற தலைவன், தோழியிடம் தலைவியைச் சுட்டிக்காட்டி, 'இவள் என்னிடமுள்ள பெருமைக் குணங்களைக் கவர்ந்துகொண்டதற்குக் காரணம் என்ன?' என வினவியது.

பண்பும் பாயலும் கொண்டனள் தொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்தொடி,
ஐதுஅமைந்து அகன்ற அல்குல்,
கொய்தளிர் மேனி! கூறுமதி தவறே.

தெளிவுரை

தொண்டி நகரத்தில் மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மணம் கமழுகின்ற புதிய மலர் போன்று மணம் கமழும் மேனியைக் கொண்ட தலைவி, ஒளி பொருந்திய தொடியினை அணிந்தவள்; அழகிய அகன்ற அல்குலினைக் கொண்டவள்; கொய்யப்பட்ட மாந்தளிர் போன்ற நிறத்தினைக் கொண்டவள்; இத்தகைய உன் தலைவி என் பெருமைக் குணங்களையும் உறக்கத்தையும் கவர்ந்து கொண்டனளே! இதற்கு நான் செய்த தவறுதான் என்ன? நீயே கூறு.

கருத்து

தலைவி, என் பெருமையையும் குணங்களையும் கவர்ந்துகொண்டனள்.

குறிப்பு

தலைவியோடு தான் இயற்கைப் புணர்ச்சி கொண்டதைக் குறிப்பாய் உணர்த்த, அவள் மேனி, அணிகலன், அல்குல் ஆகியவற்றை விரிவாய்த் தலைவன் தோழியிடம் குறிப்பிடுகின்றான்.

சொற்பொருள்

1. பாயல் - உறக்கம்; தொண்டி - சேரர் துறைமுகப்பட்டினம்.
2. தண்கமழ் - குளிர்ச்சி பொருந்திய மணம்; ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல் அணிந்தவள்.
3. ஐது அமைந்த - மெல்லியதாய் அமைந்த.
4. கொய்தளிர் - கொய்யப்பட்ட மாந்தளிர்; கூறுமதி - கூறு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 177 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழி, 'இவள் என்னை வருத்து தற்குச் செய்த தவறு என்?' என்று வினவிய தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

(நகையாடி - எள்ளி நகைத்து.)

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் ஓரிடத்தில் நின்றபோது தலைவன் தோழியிடம், 'தலைவி என்னை வருத்துதற்கு நான் செய்த தவறு என்ன?' என்று கேட்டான். அதற்குத் தோழி எள்ளி நகையாடி உரைத்தது.

தவறுஇலர் ஆயினும், பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி அன்னோள் தோள்உற் றோரே.

தெளிவுரை

ஒன்றன்மேல் ஒன்றாய் எழும் அலைகளால் கொழித்திடப் பெற்ற மணல் பரந்த உயர்ந்த கரையினைக் கொண்ட துறையிலே, நீர்முள்ளியின் நறிய மலர்கள் மணம் வீசும் தொண்டி நகரைப் போல்வாள், இத் தலைவி. தவறு ஏதும் செய்யாதவரும் இவள் தோளைப் பார்த்தால் தடுமாறி நடுக்கமுறுவர்.

கருத்து

தலைவியின் தோளைப் பார்த்தாலே போதும், தவறு ஏதும் செய்யாத வரும் தடுமாறுவர்.

குறிப்பு

'நீர் சூழ்ந்த மணல்மேட்டில் முண்டகம் மலர்ந்து மணம் கமழும். அது போலத் தலைவி, கட்டுக்காவல் அமைந்த வீட்டில் பெருவளம் திகழப் பொலிவோடு வாழ்கிறாள். முண்டக மலரின் நறுமணம் உள்ளத்தைக் கவர்ந்தாலும் அது முள்களைக் கொண்டிருத்தலால் அதனைக் கைக்கொள்ள

இயலாததுபோலத் தலைவியை அடைய மிகவும் விரும்பினாலும் தலைவன் அவளைக் கைக்கொள்ள இயலாது' என்று தோழி குறிப்பாற் கூறினாள்.

'தோளைப் பார்த்தவர்' என்று தோழி கூறுவதன்வழி தலைவன் தலைவியின் 'தோளை உற்றவன்' என்பதைத் தான் அறிந்திருப்பதைக் குறிப்பாய் உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. பனிப்ப - நடுக்கமுற்று வருந்துவர்.
2. இவறு திரை - ஒன்றன்மேல் ஒன்றாய் எழும் அலை; திளைக்கும் - கொழிக்கும்; இடுமணல் - தூவுகின்ற மணல்; நெடுங்கோடு - உயர்ந்த மணல்மேடு.
3. முண்டகம் - நீர்முள்ளிச்செடி; கமழும் - மணக்கும்.
4. தோள் உற்றோர் - தோளைப் பார்த்தவர்.

தோழி கூற்று

திருக்குறள் 1100 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் ஓரிடத்தில் இருந்தபோது அங்குத் தலைவன் வந்தான். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்கினர். அப்பார்வை கொண்டு தலைவன் தலைவியரிடையே காதல் உண்டு என்பதை ஒருவாறு உய்த்துணர்ந்த தோழி தன்னுள் கூறியது.

கண்ணொடு கண்இணை நோக்(கு)ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

தெளிவுரை

காதலனின் இரு கண்களும் காதலியின் இரு கண்களும் தம்முள் ஒன்றிணைந்து தங்கள் மன ஒற்றுமையை உணர்த்தி

விடும்போது, தம் காதலை அவர்கள் சொற்களால் சொல்ல வேண்டும் என்பதில்லை.

கருத்து

கண்கள் ஒன்றுபட்ட பின் வாய்ப்பேச்சுக்கு இடமில்லை.

விளக்கம்

ஒத்த பார்வையே காதலை உணர்த்திவிடும். வெளிப்படையாய் அவர்கள் பேசித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை.

குறிப்பு

தலைவனும் தலைவியும் பார்த்துக்கொள்ளும் பார்வையே அவர்கள் காதல் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுவதைத் தோழி உணர்கிறாள்.

சொற்பொருள்

1. கண்ணொடு - (காதலர் இருவருள் ஒருவர்) கண்களோடு; கண் இணை - (மற்றவர்) கண்கள்; நோக்கு ஒக்கின் - பார்வையால் ஒக்குமாயின்; வாய்ச்சொற்கள் - வாயினால் பேசப்படும் சொற்களால்.
2. என்ன பயனும் - எப்பயனும்; இல - இல்லை.

தோழி கூற்று

திருக்குறள் 1099 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது.

(மதியுடம்படு தோழி - தலைவனுக்கும் தலைவிக்கும் கூட்டமுள்ளமையைத் தன்னுணர்வினால் ஆராய்ந்து அறிந்த தோழி.)

கூற்று விளக்கம்

தலைவனோடு தலைவிக்குக் கூட்டமுள்ளமையை அறிந்த தோழி தன்னுள்ளே சொல்லியது.

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

தெளிவுரை

முன்பின் அறியாத அயலார்போல, ஒருவரை ஒருவர் பொதுப் பார்வை பார்த்துக்கொள்வது, காதல் கொண்டவரிடம் உள்ள ஓர் இயல்பு.

கருத்து

அயலார்போலப் பொதுப் பார்வை பார்த்தல் காதலரிடம் உண்டு.

விளக்கம்

காதலர், உள்ளத்தால் ஒருவரையொருவர் மிகவும் நேசிப்பவர்களாயினும் அதனைக் கண் பார்வையில் வெளிப்படையாய்க் காட்டமாட்டார்.

குறிப்பு

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர் என்பதைச் சில குறிப்புகளால் தோழி உணர்ந்தாள்.

சொற்பொருள்

1. ஏதிலார் - முன்பின் அறியாத அயலவர்; பொதுநோக்கு - (ஒருவரையொருவர்) பொதுப் பார்வையாய்; நோக்குதல் - பார்த்துக் கொள்ளுதல்.
2. காதலார்கண் - காதல் கொண்டுள்ள இருவரிடத்தும்; உள - உண்டு.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 42 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

நயப்பு.

கூற்று விளக்கம்

நயப்பு - குறை நயப்பு. தலைவன் தன் குறைகளைத் தோழியிடம் நயமாய்க் கூறுதல்.

கவளக் களிப்பியல்மால் யானை,சிற் றாளி
தவழத்தான் நில்லா ததுபோல் – பவளக்
கடிகை இடைமுத்தம் காண்தொறும், நில்லா
தொடிகை யிடைமுத்தம் தொக்கு.

தெளிவுரை

"கவளங்களாய்த் தீனித்திரளை (உருண்டைகளை) உண்ட களிப்பில் மூழ்கிய மதமிக்க யானை, நடை கற்கும் பருவத் திலுள்ள அரிமாவின் குருளைக்கு அஞ்சி அதன்முன் நிற்காது. அதனைப் போன்று (தலைவியின்) பவளத்துண்டமான வாயிதழ் களின் இடையே தோன்றும் பற்களாகிய முத்துகளைக் காணும் போதெல்லாம், (அவள்) கை வளையல்களில் பதிக்கப்பட்டுள்ள முத்துகள் யாவும் ஒன்றுசேர்ந்தாலும் எதிர் நிற்க இயலாமல் தோற்கும்" எனத் தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

'முத்துகள் தலைவியின் பற்களுக்கு முன் தோற்கும்' எனத் தோழியிடம் தலைவன் கூறினன்.

குறிப்பு

முத்துகளும் தோற்கும் பற்களைக் கொண்ட அத்தலைவியைத் தான் அடையத் துணை செய்ய வேண்டுமெனத் தலைவன் தோழியை வேண்டு கிறான்.

சொற்பொருள்

1. கவளம் - (யானைத்) தீனி உருண்டை; மால் - மதம்; சிற்றாளி - சிறு ஆளி - யாளியின் சிறுகுட்டி.
2. தவழ - நடை கற்கும் பருவத்திலும்; நில்லாது - (எதிர்த்து) நிற்க மாட்டாது.

2-3.பவளக் கடிகை - பவளத்துண்டு (தலைவியின் வாய் இதழ்கள்).

3. இடை முத்தம் - இடையே தோன்றும் பற்கள்; காண்தொறும் - காணும்போது; நில்லா - தோற்கும்.
4. தொடி - வளையல்; இடை - இடையிலே (பதிக்கப்பெற்ற); முத்தம் - முத்துகள்; தொக்கு - ஒன்றாய்ச் சேர்ந்து.

தலைவன் கூற்று

ஐந்திணை ஐம்பது 47 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் தலைவியைக் கூடுதல் வேண்டித் தோழியிடம் குறை நயந்த காலத்தில் கூறியது.

பெருங்கடல் உள்கலங்க நுண்வலை வீசி
ஒருங்குடன் தன்ஐமார் தந்த கொழுமீன்
உணங்கல்,புள் ஓப்பும் ஒளியிழை மாதர்
அணங்காகும் ஆற்ற எமக்கு.

தெளிவுரை

'பெரிய கடலின் உள்ளிடமெல்லாம் கலங்கும்படி, நுண்ணிய வலையை வீசி இவள் தமையன்மார் ஒன்றாய்ச்சேர்ந்து கொண்டு வந்த கொழுத்த மீன்களை வெயிலில் உலரவைத்து வற்றலாக்கு கின்றனர்; பறவைகள் அவ்வற்றல்களைக் கவர்ந்து சென்று விடாமல் காத்துக்கொண்டிருக்கும் அணிகளை அணிந்துள்ள

இப்பெண், (உன் தலைவி) என்னை மிகுதியும் வருத்தும் தெய்வமாய் இருக்கிறாள்' எனத் தலைவன் தோழியிடம் உரைத்தான்.

கருத்து

இவள் தமையன்மாரோ கயிற்று வலையை வீசி, மீனைப் பிடித்துக் கொல் கின்றனர். இவளோ தன் கண் வலையை வீசி என்னை அகப்படுத்திக் கொல் கிறாள்.

உள்ளுறை

"தமையன்மார் பெருங்கடலுள் புகுந்து வலை வீசி மீன்களை அகப்படுத்திக்கொள்வதுபோலத் தலைவியும் தலைவன் நெஞ்சம் கலங்குமாறு தன் கண்வலையை வீசி அவன் வலிமை, அறிவு ஆகிய மீன்களைப் பிடித்துத் தன்னுடையனவாக்கிக் கொண்டாள்" என உள்ளுறைப் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

2. ஒருங்குடன் - ஒன்றாய்; ஐமார் - தமையன்மார்; தந்த - கொண்டுவந்த.
3. உணங்கல் - வற்றல்; புள் - பறவை; ஓப்பும் - ஓட்டும்; இழை - அணிகலன்; மாதர் - பெண்.
4. அணங்கு - வருத்தும் தெய்வம்; ஆற்ற - மிகவும்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 178 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் தோழியை இரந்து குறையுறுவான் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவியைத் தான் அடைவதற்குத் தோழி உறுதுணையாய் இருக்க வேண்டும்' எனத் தலைவன் தோழியிடம் பணிந்து சொல்லியது.

தோளும் கூந்தலும் பலபா ராட்டி,
வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோல்
குட்டுவன் தொண்டி அன்ன,
என்கண்டு நயந்துநீ நல்காக் காலே.

தெளிவுரை

செங்கோல் வேந்தன் குட்டுவனின் தொண்டி நகரையொத்த வளமுடையவன், நான். என்னை நீயே நேரில் கண்டிருக்கிறாய். கண்டிருந்தும், நீ விரும்பி எனக்கு அருள் செய்யாவிடின், தலைவியின் தோளையும் கூந்தலையும் வாயால் பாராட்டிக் கொண்டு மட்டுமே நான் உயிர் வாழ்ந்திருத்தல் கூடுமோ?

கருத்து

'என் குறை இன்னது என்று தெரிந்துள்ள நீயே உதவி செய்யாவிடில் நான் தலைவியை எங்ஙனம் அடைய இயலும்?' என்று தோழியிடம் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

2. ஒல்லுமோ - இயலுமோ?
3. குட்டுவன் - சேர மன்னன்; தொண்டி - (குட்டுவனுடைய) துறைமுக நகரம்.
4. என்கண்டு - என் நிலையை நீ நேரில் கண்டிருந்தும்; நயந்து - விரும்பி; நல்குதல் - அருளுதல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 185 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'ஆயமகளிருள் நின்னால் நயக்கப்பட்டாள் யாவள்?' என வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

கூட்டமாய் மகளிர் நின்றனர். அம்மகளிர் கூட்டத்தைச் சுட்டிக் காட்டித் தலைவனிடம், 'இவர்களுள் உன்னால் விரும்பப்படுபவள் யார்?' என்று தோழி கேட்டாள். அதற்குத் தலைவன் மறுமொழியாய்ச் சொல்லியது. (மகளிருடன் நின்ற தலைவியைத் தலைவன் சுட்டிக் காட்டுகிறான்.)

அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்குமுத்து உறைக்கும் எயிறுகெழு துவர்வாய்
அரம்போழ் அவ்வளைக் குறுமகள்
நரம்புஆர்த்து அன்ன தீங்கிள வியளே!

தெளிவுரை

என்னால் விரும்பப்படுபவள், இளையமகள் ஒருத்தி; அவள் அசையும் இதழ்களைக் கொண்ட நெய்தற்பூக்கள் நிறைந்த கொற்கைப்பட்டினத்தின் கடல்துறையில் எடுக்கப்படுகின்ற முத்துப் போன்று ஒளிவீசும் பற்களைக் கொண்டவள்; பவளம் போன்று சிவந்த வாயிதழைக் கொண்டவள்; அரத்தால் அறுத்து அமைக்கப்பட்ட சங்கு வளையலை அணிந்தவள்; யாழ் நரம்பில் எழும் இசை போன்ற இனிய மொழியினைக் கொண்டவள்.

கருத்து

'உன்னால் விரும்பப்படுபவள் யார்?' என்று கேட்ட தோழியிடம் தலைவன், 'அதோ! பவள வாயில் முத்துப் பற்களுடன் இனிய மொழி பேசி நிற்கிறாளே, அவள்தான்' என்றான்.

விளக்கம்

தலைவி தன்னை விரும்புவதால், தான் 'புன்முறுவல்' பெற்றதையும், இதழ் உண்டமை காட்டத் 'துவர்வாயினை'

வியந்தும், தழுவியதைச் சொல்லக் 'கைவளை' காட்டியும், உரையாடி இன்புற்றமை புலப்படத் 'தீங்கிளவியள்' என்றும் நயம் பொருந்தத் தலைவன் சுட்டினான்.

குறிப்பு

கொற்கை முத்து உலகப்புகழ் பெற்றது. கொற்கைத் துறைமுகம் பாண்டி நாட்டுக்குச் சிறப்பைத் தருவது; பொருநை (தாமிரபரணி) கடலோடு கலக்கு மிடத்தில் முன்பு இருந்த கடற்கரை நகரம்.

சொற்பொருள்

1. அலங்கு இதழ் - அசைகின்ற இதழ்; கொற்கை - பாண்டியர்களின் துறைமுக நகரம்; முன்துறை - துறைக்கு முன்.
2. இலங்கு முத்து - ஒளி வீசும் முத்து; உறைக்கும் - ஒக்கும்; எயிறு - பல்; கெழு - பொருந்திய; துவர் - பவளம், சிவப்பு.
3. அரம்போழ் - அரத்தால் பிளக்கப்பட்ட; அவ்வளை - அழகிய வளையல்.
4. நரம்பு ஆர்த்து அன்ன - யாழ் நரம்பு ஒலித்தது போல; தீம் - இனிய; கிளவியள் - சொற்களைக் கொண்டவள்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 17 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நின்னால் சொல்லப்பட்டவளை அறியேனாலோ' என்ற தோழிக்குத் தலைமகன் அறிய உரைத்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவனிடம், 'நீ கூறிய தலைவியை நான் அறியேன்' என்றாள்; அப்போது தலைவன் தோழி அறியுமாறு சொன்னது.

அறி(கு)அவளை ஐய இடைமடவாய்! ஆயச்
சிறிதவள்செல் லாள்இறுமென் றஞ்சிச் – சிறிதவள்
நல்கும்வாய் காணாது நைந்துருகி என்நெஞ்சம்
ஒல்கும்வாய் ஒல்கல் உறும்.

தெளிவுரை

"இளமை மிக்கவளே! அவளை நான் நன்றாய் அறிவேன். உண்டோ இல்லையோ என்று ஐயப்படும்படியான இடையைக் கொண்டவள். அந்த இடை சிறிது தூரம் நடப்பதற்குள் இற்று விழுந்துவிடுமோ என்று அஞ்சுவேன். நாணமுற்று என்னிடம் அன்பு காட்டுகிறாளா அன்றா என்பதையுமறியாது அவள் தளர்நடையினைக் காணுந்தோறும் என் நெஞ்சம் அவள் பின்னே போய்த் தளர்ந்து வருந்தும்" என்று தலைவன் தோழியிடம் சொன்னான்.

கருத்து

'உண்டோ இல்லையோ என்று ஐயப்படும் இடையினைக் கொண்டுள்ள அவளைத்தான் நான் சொன்னேன்' என்று தலைவியைத் தோழியிடம் தலைவன் சுட்டிக் காட்டுகிறான்.

விளக்கம்

தோழியர் கூட்டத்துள் தலைவிக்கு நெருக்கமாயுள்ள தோழியிடம் தலைவன், தான் தலைவியிடம் காதல் கொண்டிருப்பதைக் கூறுகிறான். தோழி அவளை யார் என அறியாதவள்போல, 'நீ யாரைச் சொல்கிறாய்?' என்று கேட்கிறாள். அவளிடம் தலைவன் அத்தலைவிபற்றிக் கூறினான்.

சொற்பொருள்

1. அறிகு - அறிவேன்; ஐய இடை - உண்டோ இல்லையோ என்று ஐயப்படும்படியான இடை; மடவாய் - இளமை மிக்கவளே!; ஆய - வருந்தும்படியாய்.
2. சிறிதவள் - சிறிது + அவள்; (நடந்தால்) இறும் - ஒடியும்.
3. நல்கும்வாய் - அன்பு காட்டும் நெறி; காணாது - அறிய இயலாது; நைந்து - தளர்ந்து.
4. ஒல்கும்வாய் - (தலைவியின்) தளர்நடையினைக் காணுந்தோறும்; ஒல்கல் உறும் - தளர்ந்து வருந்தும்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 23 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நின்னால் குறிக்கப்பட்டாளை யானறியேன்' என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியிடம் சென்று, தன் உள்ளத்துள்ளாளைப்பற்றி உரைத்தான். அவள், 'நீ சொல்லியவளை நான் அறியேன்' என்று கூற, அதற்குத் தலைவன் சொல்லியது.

பெருமலை தாம்நாடித் தேன்துய்த்துப் பேணா(து)
அருமலை மாய்க்குமவர் தங்கை – திருமுலைக்கு
நாண்அழிந்து நல்ல நலன்அழிந்து நைந்துருகி
ஏண்அழிதற்(கு) யாம்,ஏ யினம்.

தெளிவுரை

"இம்மலைவாழ்நர், பெரிய மலைப்பக்கம் எங்கும் தேடி, அகப் பட்ட தேன் முழுவதையும் அருந்துவர்; அதனால் நேரும் களிப்பினையும் பொருட்படுத்தாது அரிய மலைகளைப் போன்ற யானைகளைக் கைப்பற்றுவர்; அத்தகையவர் தங்கையின் அழகிய முலைகளுக்கு நான் தோற்றேன்; அதனால் நாணம் இழந்தேன்; நல்லறிவு முதலான என் அரிய பண்புகள் கெட்டன; தளர்ந்துருகி வலிமை கெடும் நிலைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளேன்' என்று தலைவன் கூறினான்.

கருத்து

'கானவர் மகள் ஒருத்தியால் என் உள்ளமிழந்து நிலை தளர்ந்துள்ளேன்.'

குறிப்பு

'நான் கூறுபவள் யார் என்று கேட்கிறாயா? அவள் கானவர் மகளாகிய உன் தலைவியே' என்று தலைவன் தோழியிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. நாடி - தேடி; துய்த்து - குடித்து; பேணாது - பொருட்படுத்தாது.

2. அருமலை - அரிய மலைகளைப் போன்ற யானைகளை; மாய்க்குமவர் - கைப்பற்றும் அவர்க்கு.
3. நாண் - நாணம்; நலன் - நல்ல பண்புகள்; நைந்து - தளர்ந்து.
4. ஏண் - வலிமை; ஏயினம் - எடுத்துக்காட்டாய் அமைந்தேன்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 8 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னிலை முனியாது நின்ற தலைமகன் தோழியை மதியுடம் படுத்தியது.

(பின்னிலை முனியாது - தோழிக்குப் பின் நின்று தன் குறையைச் சொல்லுதலில் வெறுப்பில்லாமல். மதியுடம்படுத்தியது - தோழியின் அறிவைத் தன் அறிவுக்கு ஒன்றி வருமாறு செய்தது.)

கூற்று விளக்கம்

தலைவன், தான் தலைவியிடம் கொண்டுள்ள காதலை நிறைவேற்றித் தருமாறு தோழியை வேண்டிக் கேட்டுக்கொண்டது.

> அவட்காயின் ஐவனம் காவல் அமைந்த(து)
> இவட்காயின் செந்தினைகார் ஏனல் – இவட்காயின்
> எண்ணுளவால் ஐந்(து)இரண்(டு) ஈத்தான்கொல்? என்னாங்கொல்
> கண்ணுளவால் காமன் கணை.

தெளிவுரை

நான் உம் இல்லத்திற்கு வந்தால் மலைநெற்குவியலுக்குக் காவல் அமைந்ததாயிருக்கும்; தினைப்புனத்தில் இருப்பேனே யானால் சிவந்த தினையினையும் கருந்தினையினையும் கொண்ட தினைப்புனத்திற்குக் காவல் அமைந்ததாயிருக்கும். (ஆனால், நான் எங்கிருப்பது என்பதற்குத் தக்க மறுமொழி சொல்லா திருக்கிறாய்.) காமனின் அம்புகள் ஐந்தும் இத்தலைவியிடம் அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டனைக் காமன் இவளுக்குக்

கண்களாய்க் கொடுத்துள்ளான். ஆதலால், என் உயிர்க்கு என்ன நிலை ஏற்படுமோ?

கருத்து

'தலைவியின் கண்கள் காமன் கணைகளாயுள்ளன. அவற்றால் என் உயிர் என்ன ஆகுமோ?' என்று கூறி அவளைத் தான் அடையத் துணை செய்யுமாறு தோழிக்குப் பின் நின்று தலைவன் வேண்டுகின்றான்.

விளக்கம்

காமன் கணை : காமன் அம்புகள், பூக்கள்; அவை முல்லை, அசோகு, நீலம், தாமரை, மாம் பூ என ஐந்து.

ஓரம்பினாலேயே உயிரைக் கவர்ந்துவிடக்கூடிய காமன் இவளிடம் இரு அம்புகளைக் கொடுத்துள்ளானே! என் உயிர் என்ன ஆகுமோ?

குறிப்பு

'தலைவியைக் காண இல்லத்திற்கு வரவேண்டுமா, புனத்திற்கு வர வேண்டுமா; எங்கு வர வேண்டும்?' என்று கேட்டு, 'நான் அவளை அடையத் துணை செய்' எனத் தோழியைத் தலைவன் வேண்டுகிறான்.

சொற்பொருள்

1. அவட்காயின் - அவண் + கு + ஆயின் - அங்கு வந்தால்; ஐவனம் - மலைநெல்.
2. இவட்குஆயின் - இங்கு வந்தால்; செந்தினைகார் ஏனல் - சிவந்த தினையினையும் கருந்தினையினையும் கொண்ட தினைப்புனம்; இவட்குஆயின் - இந்தத் தலைவியிடத்திலோ.
3. ஐந்து எண்ணுள - (காமன் அம்புகள்) ஐந்தும் உள்ளன.

3-4. இரண்டு கண்உள ஈத்தான் - (அவற்றுள் இரண்டைக்) கண்களாய்க் கொடுத்துள்ளான்; என்ஆம் கொல்? - என் நிலை என்ன ஆகுமோ அறியேன்.

4. காமன் - மன்மதன்; கணை - அம்பு.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 19 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன், தோழி குறை மறாமல், தனதாற்றாமை மிகுதி சொல்லியது.

(பின்னிற்றல் - தலைவன் தான் தலைவியை அடையத் துணை செய்யுமாறு தோழியை வேண்டிக் கேட்டு நிற்றல்.)

கூற்று விளக்கம்

தோழிக்குப் பின்னின்ற தலைவன், தன் வேண்டுகோளை அவள் மறுப்பதற்கிடமின்றி எடுத்துக் கூறியது.

பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த ஐவனம் காப்பாள்,கண் – வேலொத்(து)என்
நெஞ்சம்வாய்ப் புக்(கு)ஒழிவு காண்பானோ காண்கொடா
அஞ்சாயற் கே,நோவல் யான்.

தெளிவுரை

தலைவி, பால் போன்ற வெண்மையான அருவிகளில் நீராடி, பல்வகையான மலர்களைப் பரப்பி வைத்தாற்போன்ற மலைநெல் விளையும் நிலத்தைக் காவல் செய்கின்றாள். வேல் போன்ற அவள் கண்கள் என் நெஞ்சுள் தாவிப் புகுந்தன; பாய்ந்த அவை வெளியே வாராமல் என் உயிரை நீக்குவதற்காக உள்ளேயே தங்கிவிட்டனவோ? என் உயிரை நீக்க இவ்வளவு முயற்சி வேண்டுமா? வேண்டுவதில்லையே! ஏனெனில், நான் அவள் அழகிய சாயலுக்கே வருந்தி அழிகின்றேனே.

கருத்து

தலைவியின் கண்கள் என் நெஞ்சில் வேலைப் போலப் பாய்ந்து என்னைக் கொல்லுகின்றன.

குறிப்பு

என்னைக் கொல்ல அழகிய வேலாகிய அவள் கண்கள் தேவையா? தேவையில்லை; அவளது அழகிய சாயலைக் கண்டே நான் மனம் அழிந்து போகிறேன்.

சொற்பொருள்

1. பாய்ந்து - குதித்து; ஆடி - நீராடி; பல்பூ - பல வகையான பூக்கள்.
1-2.பெய்தால் ஒத்த - பரப்பி வைத்தாற்போன்ற; ஐவனம் - மலைநெல்.
3. வாய்ப்புக்கு - தாவிப் புகுந்து (வாய் - வாவி - தாவி); ஒழிவு - என் உயிரின் ஒழிவு; காண்பானோ - காணவேண்டியோ.
4. அஞ்சாயல் - அழகிய மேனி; நோவல் - வருந்துகின்றேன்.

தலைவன் கூற்று

நற்றிணை 77 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் நெஞ்சிற்குரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியைக் கண்ணுற்றுச் செயலிழந்த நெஞ்சினனாயினான். அவளைத் தனக்குக் கூட்டுவிக்குமாறு அவள் தோழியை இரந்துவேண்டி நிற்பவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

மலையன் மாஊர்ந்து போகிப் புலையன்
பெருந்துடி கறங்கப் பிறபுலம் புக்கு,அவர்
அருங்குறும்பு எருக்கி, அயாஉயிர்த் தாஅங்கு
உய்த்தன்று மன்னே நெஞ்சே! செவ்வேர்ச்
சினைதொறும் தூங்கும் பயம்கெழு பலவின்
சுளையுடை முன்றில், மனையோள் கங்குல்
ஒலிவெள் அருவி ஒலியில் துஞ்சும்
ஊரலஞ் சேரிச் சீறூர், வல்லோன்
வாள்அரம் பொருத கோள்நேர் எல்வளை
அகன்தொடி செறித்த முன்கை, ஒள்நுதல்,
திதலை அல்குல், குறுமகள்
குவளை உண்கண் மகிழ்மட நோக்கே.

தெளிவுரை

நெஞ்சமே! செம்மையான வேர்களைக் கொண்ட பலாவின் கிளைதோறும் தொங்குகின்ற, பயன்மிக்க சுளைகள் நிறைந்து கிடக்கின்ற முன்றிலைக் கொண்ட வீட்டுக்குரியவள், என் தலைவி; அவள் இரவு நேரத்தில், நெருங்கி விழுகின்ற வெண்ணிற அருவியின் ஓசையைக் கேட்டுக்கொண்டே தூங்கியிருப்பாள். அவள் ஊர் சில வீடுகளைக் கொண்ட சிற்றூர்; அங்குத் தொழில் திறமைமிக்க ஒருவன், கூர்மையான அரத்தால் அராவி, வளைவாய், அழகுடன் செய்த ஒளிமிக்க வளையலையும், அகன்ற தொடியினையும் அணிந்த முன்கையைக் கொண்டவள், அவள். ஒளிபொருந்திய நெற்றியையும், தேமல் படர்ந்த அல்குலினையும் கொண்டவள், அவ்விளமகள். குவளை போன்ற மையுண்ட அவள் கருங்கண்களின் காதலும் இளமை ததும்பிய பார்வை யுமே நம்மை அவளிடத்தே செலுத்தியுள்ளன.

திருமுடிக்காரி தன் குதிரையின்மேல் ஏறிப் புலையனாகிய துடியன் துடியை முழக்கிட, பகைப்புலத்தே சென்று, அவர் களுடைய கோட்டைகளை அழித்துப் பின் பெருமூச்சுவிட்டான். அதுபோல, தலைவியின் பார்வை இத்தோழியின் பின்னர் நம்மைச் செலுத்தி நிறுத்தியிருக்கிறது. (இத்தோழியிடமிருந்து ஊக்கம் தரும் நல்ல சொற்கள் பிறக்கவில்லை என்றாலும்) மனமே! பொறுத்திருப்போம்!

கருத்து

"தலைவியின் நோக்கிற்பட்டுத் தளர்வுற்ற நான், அவள் தோழியைப் பணிந்து நிற்றல் இழிவானதன்று. நம் காதலியின் பார்வையே நம்மை இவள்பால் இரந்து பின்னிற்கும்படி செலுத்துகின்றது. அவள் உடன்படும் வரை மனமே! நீ வருந்தாது ஆற்றியிரு.

குறிப்பு

மலையன் - தேர்வண் மலையனாகிய மலையமான் திருமுடிக்காரி. இவனது குதிரை, 'காரிக் குதிரை' என்றே பெயர் பெற்றது.

திருமுடிக்காரி பெற்ற வெற்றிபோல நமக்கும் வெற்றி கிட்டும் எனத் தலைவன் தன் நெஞ்சிடம் கூறுகின்றான்.

தலைவியின் நெஞ்சம் பலாச்சுளை போன்றது; அவளைச் சுற்றியுள்ள தோழியர், முள்போலக் காணப்படுகின்றனர்.

தன்னையும் தன் தலைமையையும் நோக்காது தோழிப்பெண் ஒருத்தி யிடம் பணிந்து இரந்து நின்று ஒழுகுவது, தனக்கு ஆகாத ஒன்று எனத் தலைவன் எண்ணினான். தோழியின் பின்னிற்கும் முயற்சியைக் கைவிட அவன் நெஞ்சு கருதியது. தலைவியின் காதற்குறிப்பையும் நல்லொழுக்கத் தினையும் சீர் தூக்கி, தன் நெஞ்சுக்குத் தான் அடிமையாகாது, தனக்கு அஃது அடங்கி நடக்குமாறு செய்கிறான்.

சொற்பொருள்

1. மலையன் - தேர்வண் மலையன் என்பவன். இவன் மலையமான் திருமுடிக்காரி என்று வழங்கப்படுபவன்; மா - குதிரை.
2. துடி - குறிஞ்சிப்பறை; கறங்க - முழங்கிட; பிறபுலம் - பகைவர் நிலம்; புக்கு - நுழைந்து.
3. குறும்பு - கோட்டை; எருக்கி - அழித்து; அயா உயிர்த்து - பெருமூச்சு விட்டு.
4. உய்த்தன்று - செலுத்தியிருக்கிறது; செவ்வேர் - செம்மையான வேர்.
5. சினை - கிளை; தூங்கும் - தொங்கும்; பயம் - பயன்; கெழு - பொருந்திய; பலவின் - பலா மரத்தின்.
6. முன்றில் - வீட்டின்முன்; மனையோள் - மனையிலிருப்பவளாகிய தலைவி; கங்குல் - இரவு.
7. ஒலி - ஒலிக்கும்; துஞ்சும் - தூங்கியிருப்பாள்.
8. ஊரலஞ்சேரி - சேரிகள் சில கொண்ட சிற்றூர்; வல்லோன் - தொழில் வல்லமை கொண்டவன்.
9. வாள் அரம் பொருத - வாளாகிய அரத்தால் அராவிச்செய்த; கோள் நேர் - கையில் கொள்ளுதற்கு நேரிதாகிய; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்.
10. அகன் - அகன்ற; தொடி - வளையல்.
11. திதலை - தேமல்; குறுமகள் - இளைய மகள்.
12. மகிழ்மட நோக்கு - மகிழ்ச்சியும் இளமையும் பொருந்திய பார்வை.

தலைவன் கூற்று

நற்றிணை 209 **நொச்சி நியமங்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறை மறுக்கப்பட்டுப் பின்னின்ற தலைமகன் ஆற்றானாய் நெஞ்சிற்குச் சொல்லுவானாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியிடம் சென்று, தலைவியைத் தானடையத் துணை செய்ய வேண்டும் என்று கேட்டபோது அவள் மறுத்துவிடவே, அவன் தன் நெஞ்சிடம் கூறியது.

மலைஇடம் படுத்துக் கோட்டிய கொல்லைத்
தளிபதம் பெற்ற கான்உழு குறவர்
சிலவித்து அகல இட்டென, பலவிளைந்து
இறங்குகுரல் பிறங்கிய ஏனல் உள்ளாள்,
மழலைஅம் குறுமகள், மிழலைஅம் தீம்குரல்
கிளியும் தாம்அறி பவ்வே; எனக்கே
படும்கால் பையுள் தீரும்; படாஅது
தவிரும் காலை ஆயின்,என்
உயிரோடு எல்லாம் உடன்வாங் கும்மே!

தெளிவுரை

குறவர், மலையிடத்தே நிலம் தேர்ந்து அதனை வளைத்து வேலியிட்டுக் கொல்லையாக்கினர். மழை பெய்து கொல்லைகள் உழவுக்குரிய பதத்தினைப் பெற்றதும், உழுது பண்படுத்திச் சிறிதளவு விதைகளைப் பரவலாய் விதைத்தனர். அவை ஒருசேர நன்றாய் விளைந்து உயர்ந்த கதிர்களாய்ச் செழித்து நிற்கின்ற தினைப்புனத்தில் இருப்பவள், மழலை மாறாத இளந்தலைவி. அவள் பேச்சிடைத் தோன்றும் இனிய சொற்களைக் கேட்டுக் கிளிகளும் நன்கு அறிந்துள்ளன. அத்தகைய இனிதான சொற்கள் என் செவியில் படும்போது என் காமநோய்த் துன்பமெல்லாம் நீங்கிவிடுகிறது. அவள், சொல் எதுவும் சொல்லாது அகன்று

செல்வாளாயின் அப்பொழுதே என் அறிவு, சால்பு முதலிய பண்புகளுடன் என் ஆருயிரும் அழிந்து போகும்.

(இத்தோழி, இதனையறியாது, நான் தலைவியோடு சேர இடமளிக்காது என்னை அகற்றுகிறாளே! நான் எங்ஙனம் உய்வேன்?)

கருத்து

தலைவியைக் காணவில்லையெனின் என் அறிவு அகல்கிறது; என் ஆருயிரும் அழிந்து போமோ?

இறைச்சி

'குறவர் சிலவாய விதைகளை விதைத்துத் தினையினை விளைத்துப் பலவாய பயனைப் பெறுவர் என்னும் இத்தொடர் மூலம், தலைவியை விரும்பித் தலைவன் கூறும் சிலவாய சொற்கள் உள்ளத்தே நிலை பெறுவதோடு தோழியும் உதவி செய்தாளாயின் தலைவனும் தலைவியிடம் பலவாய இன்பம் பெறுவான்' என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. இடம்படுத்து - தரிசு நிலம் தேர்ந்து; கோட்டிய - வளைத்து (வேலியிட்டு); கொல்லை - தரிசு நிலம்.
2. தளி - மழை (பெய்தலால்); பதம் - (உழுவதற்கேற்ற) பக்குவம்.
3. சிலவித்து - சிறிதளவு விதைகளை; அகல இட்டு - பரவலாய் விதைத்து; பல விளைந்து - மிகுதியாய் விளைந்து.
4. இறங்கு குரல் - தலைசாய்ந்த கதிர்; பிறங்கிய - செறிந்துள்ள; ஏனல் - தினைப்புனம்; உள்ளாள் - இருப்பவள்.
5. மிழலை அம் தீங்குரல் - மழலையாகிய அழகிய இனிய குரல்.
6. அறிபவ்வே - அறிபவே - அறிந்திருப்பனவே.
7. படும்கால் - (அக்குரலைக்) கேட்கும்பொழுது; பையுள் - துன்பம்.
8. தவிரும்காலை - நீங்கும் பொழுது.
9. எல்லாம் - அறிவு முதலான குணங்களெல்லாம்; உடன் வாங்கும் - சேர்ந்து அழிந்துவிடும்.

தலைவன் கூற்று

நற்றிணை 349 **மிளை கிழான் நல்வேட்டனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி கேட்பத் தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் குறையை முடிக்குமாறு தலைவன் நாள்தோறும் ஏவலன்போல இரந்து நிற்கிறான். எனினும், தோழி அருள் செய்யாதிருக்கிறாளே என்று நொந்து தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது.

கடுந்தேர் ஏறியும், காலில் சென்றும்,
கொடுங்கழி மருங்கின் அடும்புமலர் கொய்தும்,
கைதை தூக்கியும், நெய்தல் குற்றும்,
புணர்ந்தாம் போல, உணர்ந்த நெஞ்சமொடு
வைகலும் இனையம் ஆகவும், செய்தார்ப்
பசும்பூண் வேந்தர் அழிந்த பாசறை,
ஒளிறுவேல் அழுவத்துக் களிறுபடப் பொருத
பெரும்புண் உறுநர்க்குப் பேஎய் போல,
பின்நிலை முனியா நம்வயின்
என்என நினையும்கொல் பரதவர் மகளே?

தெளிவுரை

விரைந்து செல்லும் தேரேறிச் சென்றேன்; காலால் நடந்தும் சென்றேன்; வளைந்த கழிக்கு அருகில் மலர்ந்திருந்த அடும்ப மலர்களைக் கொய்து தந்தேன்; தாழை மலரைப் பறிப்பதற்கு ஏற்றவாறு மடலை வளைத்துப் பிடித்தேன். நீரிலே சென்று நெய்தற்பூவைக் கிள்ளித் தந்தேன். இவற்றால் தலைவியைச் சேர்ந்தது போன்ற உணர்ச்சி கொண்ட நெஞ்சத்துடனே நாளும் இத்தன்மையனாகவே இருந்தேன்.

அடையாள மாலையினையும் பசிய பூணாரத்தையும் அணிந்து போரிட்டு அரசர்கள் மடிந்த பாசறை; அங்குக் களிறு மடியுமாறு வேல் கொண்டு போரிட்டுக் காயம்பட்டுக் கிடந் தோரைக் காப்பார் வேறு எவருமின்மையால், பேய், தானே காத்து நிற்கும்.

அதுபோல, இத்தோழியின் பின் நின்று, வெறுப்படையாது ஏவல் செய்யும் என்னை, என் காதலியாகிய பரதவர் மகள் என்னை எத்தகையவன் என்று கருதியிருக்கிறாளோ? (அறியேன்.)

கருத்து

புண்பட்டுக் கிடக்கும் வீரனைக் காப்போர் இல்லாதபோது பேயும் இரக்க முற்றுக் காத்து நிற்குமே! இங்கோ, தலைவியிடம் கொண்ட காதல் நோயால் புண்பட்டிருக்கும் எனக்குத் துணை செய்ய இத்தோழி மனமில்லாதிருக் கிறாளே.

விளக்கம்

தலைவியும், உயிர்த்தோழியும், தோழியர் பிறரும் விளையாடு மிடத்திற்குத் தலைவன் நேரில் சென்று அடும்ப மலர் கொய்தான்; தாழை மலரைப் பறிக்கத் துணை நின்றான்; நெய்தல் பூவைப் பறித்தளித்தான். அவர்களுக்குத் தன்னிடம் விருப்ப முண்டாக இவ்வாறு தக்க வகையில் நடந்துகொண்டான். பிற மகளிர் தன் காதலுணர்வை அறிந்துகொள்வரோ என நாணத் தால் தலைவி அவனை அறியாதவள்போல இயங்கினாள்; உயிர்த்தோழியிடமும் இதனைச் சொல்லவில்லை. தலைவியின் காதலைத் தோழியும் குறிப்பால் அறிந்திருந்தும் ஏதும் அறியாதவள்போலவே நடந்துகொண்டாள். தன் கருத்தைத் தோழி அறிதற்காகத் தலைவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அதனைக் கேட்கும் தோழி, தலைவியும் இவனும் முன்னரே பழகிய நட்பினர் என்று அறிந்து, தலைவனுக்கு உதவ முன் வருவாள்.

சொற்பொருள்

1. கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்; காலில் சென்றும் - காலால் நடந்து சென்றும்.
2. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி.
3. கைதை - தாழை; தூக்குதல் - உதவி செய்தல்; குற்றும் - பறித்தும்.
5. வைகலும் - நாள்தோறும்; இனையம் ஆகவும் - இத் தன்மையனாய் இருந்தும்; செய் தார் - செம்மையான (அடையாள) மாலை.
6. பசும் பூண் - பசிய பூணாரம்; அழிந்த - (படையழிந்து) வீழ்ந்த.

7. அழுவம் - போர்க்களம்; களிறுபட - களிறு மடிய; பொருத - போரிட்ட.
8. புண்உறுநர் - புண்பட்ட வீரர்.
9. பின்நிலை - பின் நின்று; முனிதல் - வெறுத்தல்.
10. என் என நினையும் - எத்தகையவன் என்று கருதுவாளோ?

தலைவன் கூற்று

நற்றிணை 101 **வெள்ளியந்தின்னனார்**

திணை : நெய்தல்

கூற்று

பின்னின்ற தலைமகன் தோழி கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழியை இரந்து பின்னின்ற தலைவன், தலைவியை அடைய இயலாததால் தான் பெறுகின்ற துன்பத்தை, அத்தோழி உணரும் வகையில் கூறியது.

முற்றா மஞ்சள் பசும்புறம் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி இறவின்
கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கிப்
புன்னைஅம் கொழுநிழல் முன்உய்த்துப் பரப்பும்
துறைநணி இருந்த பாக்கமும் உறைநனி
இனிதுமன்; அளிதோ தானே, முனிவின்று
அகன்ற அல்குல் ஐதுஅமை நுசுப்பின்
மீன்எறி பரதவர் மடமகள்
மான்அமர் நோக்கம் காணா ஊங்கே.

தெளிவுரை

இறா மீன், முற்றாத இளம் மஞ்சள்கிழங்கின் பசிய மேற் புறத்தைப் போன்றது; சொரசொரப்பானது; உப்பங்கழியில் பிடிக்கப்பட்டது. அத்தகைய இறாமீன் குவியலை உலரவைப்ப தற்குப் புன்னை மரத்தின் கொழுவிய நிழலின்முன் பரப்புகின்ற துறை இது; மீன் வேட்டையாடும் பரதவர் மகளாகிய இவ்

விளையவள், அகன்ற அல்குலையும் மெல்லிய இடையையும் கொண்டவள். மான் போன்ற மருண்ட இவள் பார்வையைக் காணா முன் இத்துறையும் அண்மையில் உள்ள ஊரும் இனியனவாய் இருந்தன. இப்போது அந்த இனிமை நீங்கி இரங்கத்தக்க நிலையை உண்டாக்கியிருக்கின்றன. இதற்கு என் செய்வேன்?

கருத்து

பரதவர் மகளின் மான் போன்ற பார்வையைக் காணுமுன் இக்கடற் கரையிலுள்ள பாக்கமும் அதனைச் சார்ந்த கானற்சோலையும் மிகவும் இனியனவாயிருந்தன. இப்போது இரங்கத்தக்கனவாயிருக்கின்றன. இதற்கு என் செய்வேன்?

விளக்கம்

பாக்கம் முன்பு இனிமையாயிருந்தது; இவளைக் கண்ட பின்பு அவ்வினிமை இல்லை என ஆயிற்று. இனி, இப்பரதவர் மடமகள் தன் மான் போன்ற கண்ணினால் இனியன செய்தால்தான் இப்பாக்கமும் இனியதாகும்.

குறிப்பு

இரங்கத்தக்க இந்நிலையை மாற்றி இனிய நிலையை உண்டாக்கத் தோழி உதவ வேண்டுமென்பதைத் தலைவன் குறிப்பால் புலப்படுத்துகிறான். இதனால் தலைவி அவனோடு முன்பே களவுறவினைப் பெற்றவள் என்றறியும் தோழியும், தலைவனது வேண்டுகோளுக்கு இசைவாள்.

சொற்பொருள்

1. பசும்புறம் - பசிய மேற்புறம்; கடுப்ப - போன்ற.
2. பிணர் - சருச்சரை, சொரசொரப்பு; இறவு - இறாமீன்.
3. கணங்கொள் - தொகுதியான; குப்பை - குவியல்; உணங்கு திறன் நோக்கி - உலர்த்தும் வகையை எண்ணி.
4. கொழுநிழல் - அடர்ந்த நிழல்; முன் உய்த்து - முன்னர்க் கொண்டு சென்று.
5. துறை நணி இருந்த - துறைக்கு அருகே இருந்த; பாக்கம் - கடற்கரை ஊர்; உறை - தங்குவதற்கு; நணி - மிகவும்.
6. இனிதுமன் - இனிதாய் இருந்தது; தான் முனிவின்று அளிது - அது தானும் இப்போது வெறுக்கப்படுவதன்றாயினும் இரங்கத்தக்க தாயிற்று.

7. ஐது - மெல்லிது; நுசுப்பு - இடை.
8. மீன் எறி - மீன் வேட்டையாடுகின்ற; மடமகள் - இளைய மகள்.
9. மான் அமர் நோக்கம் - மான் போன்று விரும்பத்தக்க கண்கள்; காணா ஊங்கே - காணாதபோது.

தலைவன் கூற்று

நற்றிணை 140 **பூதங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கியது.

(குறை - தலைவன் தலைவியைக் காண வேண்டுதல்.)

கூற்று விளக்கம்

தோழியிடம் தலைவன் தன் குறையினைக் கூற, அவள் அதை மறுத்தாளாக, அது பொறாத தலைவன் தன் நெஞ்சினை நோக்கிக் கூறுவது.

கொண்டல் மாமழை குடக்குஏர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்
வகைசேர் ஐம்பால் தகைபெற வாரி,
புலர்விடத்து உதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ஆயம் உவப்ப, தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்து,
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
அருளினும் அருளாள் ஆயினும், பெரிதுஅழிந்து
பின்னிலை முனியல்,மா நெஞ்சே! என்னதூஉம்
அருந்துயர் அவலம் தீர்க்கும்
மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே.

தெளிவுரை

நெஞ்சே! கடலில் நீரை முகந்து எழுந்த மேகம், மேற்றிசையில் உள்ள மலையிலே மழையைப் பொழிந்தது. அதனால், சிறிய கிளைகளில் பூங்கொத்துகளைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய

பெரிய சந்தன மரம் தழைத்தது. அங்ஙனம் தழைக்கும் சந்தன மரத் துண்டுடன் பல நறுமணப் பொருள்களையும் சேர்த் தரைத்த குழம்பினைப் பூசி அழகு பெற வாரப்பட்டதும், அச்சாந்தம் புலர்ந்ததும் உதிர்ந்த துகள் பொருந்தியதும், ஐவகையாய் அமைந்ததுமான கூந்தலையும், பெரிய கண்களை யும் கொண்ட தோழியர் குழாத்துடன் என் தலைவி செல்கிறாள். அவள், தோழியர் மகிழுமாறு வெண்மணல் பரப்பிய தன் தந்தையின் முற்றத்தில் விளையாடுதற்காகப் பந்தோடு செல்கின்றாள். அவ்விளையவள் நமக்கு அருள் செய்தாலும் அருள் செய்யாது அகன்றாலும் நீ சோர்ந்து அழிந்துவிடாதே; இரந்து வழிபட்டு நிற்பதில் வெறுப்புக்கொள்ளாதே! நான் அடைந்த காம நோயினால் நேர்ந்த அருந்துன்பமாகிய அவலத்தைத் தீர்க்கும் ஒரே மருந்து அந்த இளமகளே! அவள் அன்றிப் பிறிதொன்று எவ்வளவிலும் துணையாய் இல்லையே!

கருத்து

"பந்து விளையாடிக்கொண்டே என்னைப் பாராமுகமாய்ச் செல்லும் தலைவி நமக்கு அருள் செய்யினும் அருள் செய்யாவிடினும், நெஞ்சே! நீ வருந்தாதே. நானுற்ற நோய்க்கு இவளன்றிப் பிறிதொரு மருந்து இல்லை" என வருந்தித் தலைவன் தன் நெஞ்சிடம் உறுதிபடச் சொல்லியது.

குறிப்பு

நம்மீது இரக்கம் இல்லாதவள்போல் தலைவி செல்கின்றாள்; காரணம், அவளைச் சுற்றித் தோழியர் செல்வதாலேயே! அவ்வாறு இல்லாமல் தனியே நின்றிருந்தால், நான் உற்ற நோய்க்கு மருந்தாய் அமைந்திருப்பாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. கொண்டல் - கீழ்க்காற்று (கொண்டுவந்த); மா மழை - கரிய முகில் கூட்டம்; குடக்கு - மேற்கு; ஏர்பு - எழுச்சி (கொண்டுசென்று பெய் தலால்); குழைத்த - தழைத்த.
2. சிறுகோல் - சிறு கிளைகளில்; இணர - பூங்கொத்துகளைக் கொண்ட; சாந்தம் - சந்தன மரம்.
3. வகைசேர் - சந்தனத்துடன் பல நறுமணப் பொருள்களையும் சேர்த்து அரைத்துப் பூசிய; ஐம்பால் - ஐந்தாய் வகுக்கப்பட்ட கூந்தல்; தகை - அழகு.

4. புலர்விடத்து - (சந்தனம்) புலர்ந்தபோது; கூழை - கூந்தல்.
5. ஆயம் - தோழியர் கூட்டம்.
6. வழங்கும் - செல்லும்; நிலவு மணல் - வெண்மணல்.
7. பெயரும் - செல்லும்; பரிவிலாட்டி - அன்பு இல்லாதவளாகிய தலைவி.
8. பெரிது அழிந்து - மிகவும் வருந்தி.
9. பின்னிலை - இரந்து பின்னிற்றலை; முனியல் - வெறுக்காதே; என்னதூஉம் - எவ்வகையிலும்.
10. அருந்துயர் - நீக்குதற்கரிய துயரம்; அவலம் - துன்பம்.
11. பிறிது இல்லை - வேறொன்று இல்லை; யான் உற்ற நோய்க்கு - நான் எய்தி வருந்தும் காதல் நோய்க்கு.

தலைவன் கூற்று

நற்றிணை 265 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் நெஞ்சிற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தோழியின் பின்னின்ற தலைவன், அவள் உடன்பாடு கிட்டாது தன் நெஞ்சிடம், 'இவள் தலைவி நம்மீது அன்பு கொண்டவள்; எனவே, வருந்தாதே' என்று கூறுவது.

இறுகுபுல் மேய்ந்த அறுகோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை
வீளை அம்பின் வில்லோர் பெருமகன்,
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும்
பாரத்து அன்ன ஆர மார்பில்
சிறுகோல் சென்னி ஆரேற்று அன்ன,
மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்
கலிமயில் கலாவத்து அன்ன,இவள்
ஒலிமென் கூந்தல் நம்வயி னானே.

தெளிவுரை

நெஞ்சமே! உதிர்ந்துவிடுமாறு முற்றிய கொம்பினைக் கொண்ட ஆண்மான்கள் காய்ந்த புல்லை மேய்ந்து சேற்றிலாடிக் கொண்டிருக்கும். புள்ளிகளையும் வரிகளையும் கொண்ட அக்கலைமான்களை வீரர்கள் அம்பால் எய்வர். அவ்வீரர் களுக்குத் தலைவன், மிஞிலி என்பவன். தோளில் கவசமணிந்த அம்மிஞிலி காவல் செய்துகொண்டிருக்கின்ற 'பாரம்' என்னும் ஊர் போன்று மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்களைக் கொண்டவள், நம் தலைவி. ஆத்தி மாலையணிந்த சோழன், 'ஆரேறு' என்னும் ஊரினை உடையவன். அவன் தன்னை அடைந்தவர்களை அருள் செய்வதுபோலத் தலைவியும் நம்மை அருளோடு நோக்குகின்றாள்; மழைபோலக் 'கொடை' வழங்கும் ஓரியின் கொல்லிமலையில் வாழும் மயிலினது தோகை போன்ற வளவிய மெல்லிய கூந்தலைக் கொண்ட அத்தலைவி, நமக்கே உரியவள்; எனவே, வருந்தாதே!

கருத்து

"மனமே! மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்களும், அருள்நோக்கும், வளவிய மெல்லிய கூந்தலும் கொண்ட இத்தலைவி, நமக்கே உரியவள்; வருந்தாதே!"

விளக்கம்

தலைவி, மிஞிலியின் பாரம் என்னும் ஊர் போன்ற மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்களைக் கொண்டவள்; 'ஆரேறு' என்னும் ஊரினையுடைய சோழனையொத்த அருளினைக் கொண்டவள்; ஓரியின் கொல்லிமலையில் வாழும் மயிலினது தோகை போன்ற மெல்லிய கூந்தலைக் கொண்டவள்! அவள் நமக்கே உரியவள்.

மானின் கொம்பு முதிர்ச்சியடைந்ததும் கழன்று விழும்; அப்போது உண்டாகும் நோவைத் தீர்த்துக்கொள்ள அது சேற்றில் இட்டுத் தன் தலையை ஆட்டிக்கொள்ளும்.

குறிப்பு

மிஞிலி - கொண்கான நாட்டு நன்னன் படைத்தலைவருள் ஒருவன்.

சென்னி - கரிகாற்பெருவளத்தான் தந்தை; இவன் இளஞ்சேட்சென்னி எனப்பட்டான்.

ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; கொல்லிமலைக்குத் தலைவன்.

சொற்பொருள்

1. இறுகுபுல் - காய்ந்த புல்; முற்றல் - முற்றிய; அறுகோடு - கழன்று விழுமாறு உள்ள கொம்பு.
2. அள்ளல் - சேறு; புள்ளி - புள்ளி(களையும்), வரிக்கலை - வரிகளையும் கொண்டதுமான ஆண்மான்.
3. வீளை - அம்பு செலுத்தப்படும்போது உண்டாகும் ஒலி; வில்லோர் - வில் வீரர்; பெருமகன் - தலைவன்.
4. பூந்தோள் - பொலிவு பொருந்திய தோள்; யாப்பின் - (கவசம்) பூண்டிருப்பவனாகிய; மிஞிலி - மிஞிலி என்னும் தலைவன்; காக்கும் - ஆட்சி செய்யும்.
5. பாரம் - ஓர் ஊர்; ஆர மார்பின் - ஆத்திமாலை அணிந்த மார்பினன்.
6. சென்னி - சோழன்; ஆரேறு - ஓர் ஊர்.
7. மாரி வண்மகிழ் - மழை போன்ற கொடையும் கள்ளுணவுமுடைய; ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; கொல்லி - கொல்லி மலை.
8. கலி மயில் - செருக்கிய மயில்; கலாவம் - தோகை.
9. ஒலி மென் கூந்தல் - தழைத்த மெல்லிய கூந்தலைக் கொண்டவள்; நம்வயின் - நம் இடத்தவள், நமக்கே உரியவள்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 165 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்த்தும் கூடலுறும் நெஞ்சிற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தோழியிடம் இரந்து நின்று தான் வேண்டியதைப் பெறாத தலைவன், தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

மகிழ்ந்ததன் தலையும் நறவுஉண் டாங்கு,
விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை;
இருங்கரை நின்ற உப்புஒய் சகடம்
பெரும்பெயல் தலையவீஇந் தாங்கு,இவள்
இரும்பல் கூந்தல் இயல்அணி கண்டே.

தெளிவுரை

"நெஞ்சே! கடத்தற்கரிய மணற்கரையிடத்தில் உப்பு ஏற்றப் பட்டுச் செலுத்தப்படும் வண்டிமீது பெரிய மழை பெய்தலினால் உப்பு முழுதும் கரைந்து அழியும். அதுபோலத் தலைவியின் கரிய செறிந்த கூந்தலினையும் இயற்கையான அழகினையும் கண்டு நாணத்தையும் வலிமையையும் இழந்து நிற்கின்றாய்.

"கள்ளுண்டு களித்தவன் மேலும் அக்கள்ளையே விரும்பிக் குடிப்பான். அதுபோல அவளை முன்னரே விரும்பி நாணம் அழிந்த பின்னரும் மேலும் அவளை விரும்பி நிற்கின்றாய். இஃது இரங்கத்தக்கது" என்று தலைவன் தன் நெஞ்சினைக் கடிந்து கூறுகின்றான்.

கருத்து

கள்ளுண்டு அறிவு மயங்கியவன் மேலும் அதனையே உட்கொள்ள விரும்புவது போல, தோழியிடம் ஒருமுறை குறையிரந்து மறுக்கப்பட்டவன் மேலும் குறையிரந்து நிற்கிறான்.

சொற்பொருள்

1. மகிழ்தல் - மதுவுண்டு களித்தல்; தலையும் - மேலும்; நறவு - மது.
2. விழைந்ததன் தலையும் - (அவளை) முன்னரே விரும்பி அது மறுக்கப்பட்டுத் தன் விருப்பம் நிறைவேறாத போதும்; வெய்துற்றனை - (மீண்டும்) விரும்பினை.
3. இருங்கரை - பெரிய (கடத்தற்கரிய) கரை; ஒய் - செலுத்தும்; சகடம் - உப்பு வண்டி.
4. பெரும்பெயல் - பெரிய மழை; தலைய - பொழிய; வீதல் - அழிதல்.
5. இரும்பல் கூந்தல் - கரிய செறிந்த கூந்தல்; இயல்அணி - இயற்கையான அழகு.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 24 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி குறைமறாமல், தலைமகன் தனது ஆற்றாமை மிகுதி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியிடம் தன் குறையைக் கூறும்போது அவள் அதை மறுத்துக் கூறாதபடி, தன் ஆற்றாமையைப் புலப்படுத்திக் கூறியது.

நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி – எறிந்(து)உழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்(து)இனைய வல்லளோ நோக்கு.

தெளிவுரை

'மணமிக்க குளிர்ச்சி பொருந்திய தகர மரம், வகுள மரம் ஆகியவற்றைப் பயனற்ற புதர்களைப் போலக் கருதி, வேரற வெட்டியெறிந்து, பயிர் செய்ய விரும்பி, உழுது, செந்தினையை விதைக்கின்ற மலை நாட்டவர் தங்கை, இத்தலைவி. இவள் பிறர்படும் துன்பத்திற்காகத் தளர்ந்து வருந்தத் தகுதி வாய்ந்த வளா என்பதை நீ ஆராய்ந்து காண்' என்று தலைவன் தோழி யிடம் கூறினான்.

கருத்து

'தலைவிக்கு என்மீது இரக்கமில்லையா?' என்று ஆற்றானாய்த் தலைவன் தோழியிடம் கேட்டான்.

குறிப்பு

தகரம் முதலியவற்றை வெறுத்து வெட்டுபவர் தங்கை என்பதால், இவள் பிறர் நோயினைத் தானாகவே எண்ணிப் பாராள்; ஆதலான், தலைவியிடம் நெருங்கித் தன் துன்பத்தைத் தோழி எடுத்துரைக்க வேண்டுமென்பது தலைவனின் குறையிரப்பு.

சொற்பொருள்

1. தகரம், வகுளம் - மரங்கள்; வகுளம் - மகிழ மரம்.

2. வெறும் புதல் - பயனற்ற புதர்; எறிந்து - வெட்டி; வேண்டி - பயிர் செய்ய விரும்பி.
3. வித்துவார் - விதைப்பவர்.
4. நொந்து - தளர்ந்து; இனைய - வருந்த; வல்லளோ - தகுதியானவளோ?; நோக்கு - ஆராய்ந்து பார்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 286 **எயிற்றியனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரந்து பின்னின்ற கிழவன், குறைமறாமல் கூறியது.

கூற்று விளக்கம்

தோழி வாயிலாய்த் தலைவியைப் பெற விரும்பி, அத்தோழியிடம் பணிவு மிக்க சொற்களைக் கூறி நின்ற தலைவன், தலைவியோடு முன்னுள்ள பழக்கத்தை அறியுமாறு குறிப்பாய்த் தோழியிடம் கூறுவது.

உள்ளிக் காண்பென் போல்வல் முள்எயிற்று
அமிழ்தம் ஊறும் செவ்வாய், கமழ்அகில்
ஆரம் நாறும் அறல்போல் கூந்தல்,
பேர்அமர் மழைக்கண், கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே.

தெளிவுரை

முள்போலும் கூரிய பல்வரிசை; அமிழ்தம் ஊறும் சிவந்த இதழ்; அகிற்புகையும் சந்தனப்புகையும் ஒருங்கே மணக்கும் கருமணல் போன்ற நெளிந்த கூந்தல்; மிகுந்த விருப்பத்தைத் தோற்றுவிக்கும் குளிர்ச்சியான கண்கள்; இவற்றைக் கொண்ட தலைவியின் அரும்பியும் அரும்பாத புன்னகையோடு கூடிய செருக்கிய பார்வை; இவை அனைத்தையும் நான் நினைவில்தான் காணவேண்டும் போலும். (ஏனெனில், நேரில் பார்த்து மகிழ இவர்கள் உடன்பட மறுக்கின்றனர்.)

கருத்து

நான் (இயற்கைப் புணர்ச்சியில்) அளவளாவிய தலைவியை இனிக் காணுதல் அரிது போலும்.

குறிப்பு

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியோடு ஐம்புல இன்பங்களையும் பெற்ற தலைவன், தோழியிடம், 'எங்களை இணைத்து வைக்காமல், அகற்றி வைத்தல் தகவுடையதன்று' என்கிறான்.

நேரில் காணத் தோழி தடுத்தாலும் தலைவியைத் தன் உள்ளத்திலே எப்போதும் பார்த்துக்கொண்டே இருப்பதையும் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

1. உள்ளி - நினைத்தே; காண்பென் - காணுவேன்; போல்வல் - போலும்; முள் எயிறு - கூரிய பல்.
2. செவ்வாய் - சிவந்த வாய்; கமழ் - மணக்கும்.
3. ஆரம் - சந்தனம்; நாறும் - மணக்கும்; அறல்போல் - (ஆற்றோரத்தில்) கருமணல் நெளிநெளியாய் இருப்பது போன்ற.
4. பேர் அமர் - மிகுந்த விருப்பம் தருகின்ற; மழைக்கண் - குளிர்ச்சியான கண்; கொடிச்சி - குறிஞ்சிநிலத் தலைவி.
5. மூரல் முறுவல் - அரும்பியும் அரும்பாத புன்னகை; மதைஇய - செருக்குள்ள; நோக்கு - பார்வை.

தோழி கூற்று

நற்றிணை 45 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

குறை வேண்டிய தலைமகனைத் தோழி சேட்படுத்தது.

(சேட்படுத்துதல் - அகற்றுதல்; தலைவியை அடைதல் எளிதன்று என்று தோன்றும்படி, தோழி தலைவனை நெருக்கமாய்ப் பழக விடாது அகற்றி வைத்தல். சேட்படை - சேண் + படை; சேண் - தொலைவு; படை - படுத்தல், அஃதாவது அகற்றல்.)

கூற்று விளக்கம்

தலைவியை அடைய விரும்பித் தலைவன் அவள் தோழியின் உதவியை நாடியபொழுது, தோழி தக்க காரணங்கள் கூறி அவனை அகன்று செல்லுமாறு கூறியது.

இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீன்எறி பரதவர் மகளே; நீயே,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே;
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி,
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ?
புலவு நாறுதும், செலநின் றீமோ!
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே;
எம்ம னோரில் செம்மலும் உடைத்தே!

தெளிவுரை

“தலைவ! நீ அடைய விரும்பும் இவளோ, கடற்கரைச்சோலையில் உள்ள அழகிய சிறுகுடியினைச் சார்ந்தவள்; நீல நிறப் பெருங்கடலும் கலங்குமாறு அதனுள் புகுந்து சென்று, மீன்களைப் பிடித்து வரும் பரதவர் மகள். நீயோ, நெடிய கொடிகள் அசைந்தாடிக்கொண்டிருக்கும் ‘நியமம்’ என்னும் பழைய ஊரிடத்தே இருக்கின்றவன்; விரைந்து செல்லும் தேரினையுடைய செல்வர்க்கு அன்புக்குரிய மகனாயும் இருக்கின்றாய். (ஆதலின், குலப்பொருத்தம் இல்லை.) கொழுப்புமிக்க சுறாமீன்களைத் துண்டங்களாய் அறுத்து வெயிலில் உலர வைத்து, அவற்றைக் கவர வரும் பறவையினங்களை ஓட்டிக் காவல் புரியும் எமக்கு நலம் என்ன வேண்டியுள்ளது? எமது மேனியில் புலால் நாற்றம் எழும். அதனை உன்னால் பொறுத்துக்கொள்ள இயலாது; ஆதலின், இங்கிருந்தும் அகன்று செல்க.

“கடலையே வயலாய்க்கொண்டு வாழும் எம் எளிய வாழ்க்கை உன் வளமான வாழ்வோடு பொருந்தி அமையாது.

மேலும், எம் பரதவர் குலத்திலேயே இவளை மணக்கத் தகுந்த பெருமை மிக்கவரும் இருக்கின்றனர்.''

கருத்து

இவள் உனக்கு ஏற்றவள் அல்லள்; ஆதலின், நீ அகன்று செல்.

விளக்கம்

“ஐய! என் தலைவியாகிய இவள், கடற்கரைச்சோலை யிலுள்ள சிற்றூரில் வாழும் மீன் பிடிக்கும் பரதவர் மகள். நீயோ, கொடிகள் பறக்கும் கடைத்தெருக்களைக் கொண்ட பேரூரில் வாழும் செல்வர் மகன். நாங்கள் சுறாமீன் துண்டங்களை உலர்த்தி, அவற்றைக் கவர வரும் பறவைகளை ஓட்டிக்கொண் டிருக்கிறோம்; எம் மேனியில் புலால் நாற்றம் எழும்; எம் நிலைமை உம் நிலைமைக்குப் பொருந்தி அமையாது. இவளுக்கு ஏற்றவர் எம் குடியிலேயே உள்ளனர். ஆதலின், நீ அகன்று செல்வதே நன்று'' என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. நண்ணிய - பொருந்தியுள்ள; காமர் - அழகு, விருப்பம்.
2. நீல் நிறம் - நீல நிறம்.
3. மீன் எறி - மீன் வேட்டையாடும்.
4. நுடங்கும் - ஆடும்; நியமம் - ஓர் ஊர்.
5. கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்.
6. நிணம் - கொழுப்பு; சுறா - சுறா மீன்; உணக்கல் - உலர்த்தல், காய வைத்தல்.
7. இனப்புள் - பறவைக்கூட்டம்; ஓப்பும் - ஓட்டும்; நலன் - நலம்.
8. புலவு - ஊன்; நாறுதும் - நாறும்; செலநின்றீமோ - அகன்று செல்வீர்.
9. பெருநீர் - கடல்; விளையுள் - விளையும் பொருள்கள்.
10. புரைவது - ஒப்பது.
11. எம்மனோரில் - எம் பரதவர் குலத்தில்; செம்மல் - பெருமை மிக்கவர், தலைமைத் தன்மை கொண்டவர்; உடைத்தே - உள்ளனர்.

தோழி கூற்று

நற்றிணை 379 **குடவாயிற் கீரத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகற்குத் தலைமகளை மடமை கூறியது

கூற்று விளக்கம்

தலைவியின் இளமையையும் அறியாமையையும் சுட்டித் தலைவனை அங்கிருந்து அகன்று செல்லுமாறு தோழி கூறியது.

புன்தலை மந்திக் கல்லா வன்பறழ்
குன்றுஉழை நண்ணிய முன்றில் போகாது,
எரிஅகைந் தன்ன வீததை இணர
வேங்கைஅம் படுசினைப் பொருந்தி, கைய
தேம்பெய் தீம்பால் வெளவலின், கொடிச்சி
எழுதுஎழில் சிதைய அழுத கண்ணே,
தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரிஅம் கிடங்கின் ஈரிய மலர்ந்த,
பெயல்உறு நீலம் போன்றன; விரலே,
பாஅய் அவ்வயிறு அலைத்தலின் ஆனாது,
ஆடுமழை தவழும் கோடுஉயர் பொதியில்
ஓங்குஇருஞ் சிலம்பில் பூத்த
காந்தள்அம் கொழுமுகை போன்றன, சிவந்தே.

தெளிவுரை

“ஐயனே! புல்லிய தலையைக் கொண்ட மந்தியின் அறிவு முதிராத வலிய குட்டி, குன்றில் உள்ள சிறு குடியிருப்பிலுள்ள வீடுகளின் முற்றத்தைவிட்டு வெளியே போகாமலேயே இருக்கும். நெருப்புக் கொழுந்துவிட்டது போன்ற பூங்கொத்துகளைக் கொண்ட வேங்கையின் தாழ்ந்த கிளைகளில் மறைந்திருந்தது, அக்குட்டி. ஒரு நாள் நீ காதலிக்கும் கொடிச்சி, தேன் பெய்த பால் நிறைந்த வள்ளத்தைக் கையில் ஏந்தி அருந்திக்கொண் டிருந்தாள். அப்போது, அக்குரங்குக்குட்டி அவளிடம் சென்று, அக்கலத்தைப் பறித்துக்கொண்டு போய்விட்டது. அதனால், மை

தீட்டப் பெற்ற தன் கண் அழகெலாம் அழிய அவள் அழுதாள். அப்போது அக்கண்கள், இரவலர்களுக்குத் தேர்களை வழங்கி மகிழும், வள்ளல் தன்மை மிக்க சோழ மன்னரது குடவாயில் என்னும் ஊரில், மழை பெய்து நிரம்பிக் கிடக்கும் அகழியில் குளிர்ச்சியாய் மலர்ந்துள்ள நீல மலர், மழைத்துளிகளை ஏற்றது போன்றிருந்தன. அவள், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தன் கைவிரல்களால் மீண்டும் மீண்டும் வயிற்றிலே அடித்துக் கொண்டாள். அதனால், அவ்விரல்கள், பாண்டியரது பொதிய மலையில் பூத்த காந்தள் மலர்களின் இதழ்களை ஒத்துச் சிவந்தன. இத்தகைய இளமையும் அறியாமையும் கொண்டவள் உன் காமத்தைத் தணிப்பாள் என எதிர்பார்ப்பது பொருந்தாது என்பதை அறிக" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவி, அறிவு வளர்ச்சி பெறாத இளமையள் என்பதைச் சுட்டித் தலைவனைத் தோழி சேட்படுத்துகிறாள்.

குறிப்பு

நீ காதல் கொண்டுள்ள இளமகள், தான் பருக வைத்திருந்த பாலைக் குரங்குக்குட்டி பறித்ததனால் அழுதாள்; அதனால் அவள் கண்கள், நீர் நிரம்பிய நீலமலர் போல் ஆயின. பின், அவள் தன் வயிற்றில் அறைந்து கொள்ளுதலால் அவள் கை விரல்கள் காந்தளிதழ்கள்போல் செந்நிற முற்றன. இத்தகைய அறியாமை வாய்ந்தவளால் உன் காமத்தைத் தணிக்க எவ்வாறு இயலும்?

சொற்பொருள்

1. புன்தலை - புல்லிய தலை; மந்தி - பெண் குரங்கு; கல்லா - அறிவு முதிராத; வன்பறழ் - வலிய குட்டி.
2. உழை - பக்கம்; நண்ணிய - பொருந்திய; முன்றில் - வீட்டு முற்றம்.
3. எரி -நெருப்பு, அழல்; அகைந்தன்ன - கப்பு விட்டு எரிதல் போன்ற; வீ - மலர்; ததை - நெருங்கிய; இணர் - பூங்கொத்து.
4. படுசினை - தாழ்வான கிளை.
5. தேம் - தேன்; தீம் - இனிய; வெளவல் - பறித்துக்கொள்ளுதல்; கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண் (உன் காதலி).
6. எழுது எழில் - மை எழுதப்பட்ட அழகு; சிதைய - அழியுமாறு.

7. தேர்வண் - (இரவலர்க்குத்) தேர்களை வழங்கும்; குடந்தை வாயில் - குடவாயில் என்னும் ஊர் (சோழர்க்குரியது).
8. மாரிஅம் கிடங்கு - மழை நீரால் நிரம்பிக் கிடக்கும் அகழி; ஈரிய - தண்ணென, குளிர்ச்சியான.
9. பெயல் உறு - மழைத்துளிகளை ஏற்ற; நீலம் - நீலமலர்.
10. பாஅய் - பரந்து; அ வயிறு - அழகிய வயிறு; அலைத்தலின் - அடித்துக்கொண்டதால்; ஆனாது - அது பொறாது.
11. ஆடுமழை - அசைகின்ற மழைமுகில்; கோடு - உச்சி; பொதியில் - பொதிய மலை.
12. ஓங்கு இரும் - உயர்ந்த பெரிய; சிலம்பு - பக்கமலை.
13. அம் - அழகிய; கொழுமுகை - கொழுமையான மொட்டு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 91 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

குறை வேண்டிப் பின்னின்று வந்த தலைமகற்குத் தோழி, 'இவள் இளையவள்; விளைவிலள்' எனச் சேட்படுத்தியது.

(குறை வேண்டுதல் - தலைவன் தோழியிடம், தலைவியைத் தன்னோடு சேர்த்துவைத்துத் தன் மனக்குறையை நீக்குமாறு வேண்டிக்கொள்ளுதல். சேட்படுத்துதல் - அங்கிருந்து அகன்று செல்லுமாறு கூறுதல்.)

கூற்று விளக்கம்

'தலைவி இளையள்; அறிவு வளர்ச்சி பெறாதவள்' எனக் கூறி, அதனால், தலைவன் அவளை அடைய முடியாதெனச் சொல்லி, தோழி அவனை அங்கிருந்து அகற்றுவது.

நெறிமருப்பு எருமை நீல இரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன் மகள்இவள்;
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.

தெளிவுரை

"வளைந்த கொம்புகளைக் கொண்ட கருநிறம் மிக்க பெரிய எருமைக் கடா, மலர்கள் நிறைந்த பொய்கைகளில் இறங்கி ஆம்பல் மலர்களைச் சிதைப்பதற்கு இடனானதும், கழனிகளைக் கொண்டுள்ளதுமான ஊரினைக் கொண்டவன் மகளாகிய இவள், வயல்களிலுள்ள மணமற்ற கரும்புப்பூவினால் தொடுக்கப் பட்டுள்ள நீண்ட மாலையை அணிந்திருப்பதைப் பார்" எனத் தோழி, தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவியைக் கூட்டுவிக்க வேண்டித் தோழிக்குப் பின்னாலேயே திரிந்த தலைவனிடம் தோழி, "தலைவி இளமையானவள்; முதிர்ச்சி அடை யாதவள்" என்று கூறி, இயலாதென மறுக்கிறாள்.

குறிப்பு

இது சூடத் தகுந்தது. இது சூடத் தகாதது என்று வேறுபடுத்திக் காணும் அறிவு வளர்ச்சி பெறாத இளையவள், இவள். இவளை விரும்புதல் பயனற்றது எனத் தெளிவுபடுத்தி, தலைவனின் குறையினைத் தீர்க்க இயலாதென்பதைத் தோழி புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. நெறி மருப்பு - வளைந்த கொம்பு; நீல இரும்போத்து - கரிய பெரிய ஆண் எருமை.
2. வெறிமலர் - மணம் மிக்க மலர்; மயக்கும் - சிதைக்கும்.
3. கழனி - வயல்.
4. பழன வெதிர் - வயல் மூங்கில் - கரும்பு (பூவின்); கொடிப்பிணை யலள் - நீண்ட மாலையை அணிந்துள்ளவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 256 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தள் அல்லள்' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன்னால் குறிப்பிடப்படுகின்ற பெண் உன்னை வருத்துகின்ற அளவிற்குப் பருவம் எய்தியவள் அல்லள்' என்று சொன்ன தோழிக்குத் தலைவன் கூறியது.

குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி;
வளையள் முளைவாள் எயிற்றள்;
இளையள் ஆயினும், ஆரணங் கினளே.

தெளிவுரை

"இவள் குன்றத்துக் குறவனுக்கு அன்புக்குரிய இளமகள்; வண்டுகள் மொய்க்கும் மலரணிந்த கூந்தலைக் கொண்டவள்; குளிர்ச்சி பொருந்திய தழையுடையைத் தரித்திருப்பவள்; வளையல்களை அணிந்திருப்பவள்; மூங்கில் முளைபோலும் கூர்மையும் ஒளியும் கொண்ட பற்களைக் கொண்டவள்; இவள் இளையவளேயாயினும் கண்டாரை வருத்தும் அணங்கே" என்று தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

"தோழியே! நீ கூறுவதுபோலத் தலைவி இளையவளே ஆயினும் கண்டாரை வருத்தும் அணங்கு போன்றவள் என்பதை அறிவேன்."

குறிப்பு

'வண்டுகள் மொய்க்கும் கூந்தல்' என்பதால், தான் அவளது கூந்தல் முயக்கம் பெற்றமையை உணர்த்தினான்; 'தழையுடை தரித்தவள்' என்பதால் தான் தந்த தழையுடையை அவள் ஏற்று மகிழ்ந்தவள் என்று உணர்த்துகிறான்; 'வளையல் அணிந்தவள்' என்பதால், வளையமுந்தத்

தன்னை அவள் தழுவியதையும் குறிப்பால் உணர்த்தினான். தனக்கும் தலைவிக்கும் கூட்டம் நிகழ்ந்துள்ளதைத் தலைவன் இவ்வாறு குறிப்பால் சுட்டுகிறான்.

சொற்பொருள்

1. காதல் மடமகள் - அன்புக்குரிய இளமகள்.
2. படு - மொய்க்கும்; தண்தழை - குளிர்ச்சி பொருந்திய தழையாடை; கொடிச்சி - குறிஞ்சிநிலத் தலைவி.
3. வளையள் - வளையலணிந்தவள்; முளை - மூங்கில் முளை (போன்ற); வாள் எயிற்றள் - கூரிய பற்களைக் கொண்டவள்.
4. ஆர் அணங்கு - மிகவும் வருத்தும் அணங்கு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 337 **பொதுக்கயத்துக் கீரந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியை இரந்து பின்னின்ற கிழவன் தனது குறையறியக் கூறியது.

கூற்று விளக்கம்

இரந்து பின்னின்ற தலைவனிடம் தோழி தலைவியின் இளமைத் தன்மையினைக் கூறியபொழுது, அவன், அவள் பருவம் எய்தியவள் என்பதையும், அவள் தன்னை வருத்தியிருப்பதையும் உணர்த்தியது.

முலையே முகிழ்முகிழ்த் தனவே, தலையே
கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே;
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின;
சுணங்கும் சிலதோன் றினவே; அணங்குஎன
யான்தன் அறிவல்; தான்அறி யலளே;
யாங்குஆ குவள்கொல் தானே
பெருமுது செல்வர் ஒருமட மகளே?

தெளிவுரை

தலைவிக்கு முலைகள் மொட்டுகள்போல் அரும்பியுள்ளன; தலையில் நெருங்கி வளர்ந்துள்ள மயிர்த்திரள் கீழ்நோக்கி நீண்டு

தாழ்ந்துள்ளது. செறிந்த வரிசையான வெண்பற்களும் விழுந்து முறையாய் முளைத்து நிரம்பியுள்ளன; மேனியில் தேமலும் சில தோன்றியுள்ளன. என்னை வருத்துமளவுக்கு அவள் பருவம் எய்தியுள்ளதை நானறிவேன்; அவளோ அதனை அறிந்தா ளில்லை.

பெருங்குடியில் பிறந்த செல்வரின் அந்த இளைய மகள் எத் தன்மை கொண்டவள் ஆவாளோ? (என்னிடம் எத்தகைய வளாய் இருப்பாளோ, அறியேன்.)

கருத்து

தலைவியோடு கூடுதலை விரும்பி வந்த தலைவன் தோழியிடம் வேண்டிக்கொண்டான். அவள், 'தலைவி சிறுமி' என்று சொல்லித் தட்டிக் கழித்தாள். அப்பொழுது தலைவன், 'அவள் தக்க பருவம் அடைந்தவள்; அவளால் நான் வருந்தினேன்' என்றுரைத்தான்.

குறிப்பு

'ஊழ் அணி தைவரல், முலை முகிழ்த்தல், கூழை விரித்தல், குரல் வீழ்தல், நகுநயம் மறைத்தல், வெண்பல் நிரம்புதல், உடைபெயர்த்துடுத்தல், சுணங்கு தோன்றியமை ஆகியவற்றால் தலைவி என்னை வருத்தினாள்' எனத் தலைவன் தோழியிடம் கூறினான்.

சொற்பொருள்

1. முகிழ் முகிழ்த்தன - மொட்டுகள் போல் அரும்பியுள்ளன.
2. கிளைஇய - நெருங்கி வளர்ந்துள்ள; குரல் - கூந்தல்; கிழக்கு வீழ்ந்தன - கீழ் நோக்கி நீண்டு தாழ்ந்துள்ளன.
3. செறி நிரை - செறிந்த வரிசையான; பறிமுறை - விழுந்த முறைப்படி; நிரம்பின - முளைத்து நிரம்பியுள்ளன.
4. சுணங்கு - தேமல்; அணங்கு - வருத்தும் அழகு.
5. தன் - அவளை; அறிவல் - அறிவேன்.
7. பெருமுது செல்வர் - பெருங்குடிப் பிறந்த செல்வர்; மடமகள் - இளைய மகள்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 5 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகனைக் காவல்மிகுதி சொல்லிச் சேட்படுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழிக்குப் பின் நின்று, தலைவியைக் கூடும் விருப்பம் கொண்டவனாய் அவளைக் கூட்டுவிக்குமாறு வேண்டினான். அப்போது அவனைத் தோழி விலக்கியது.

(பின் நிற்றல் - தோழியிடம் தன் குறையைச் சொல்லியவாறு தொடர்ந்து பின் செல்லுதல்; சேட்படுத்தியது - விலக்கியது.)

விரைகமழ் சாரல் விளைபுனம் காப்பார்
வரையிடை வாரல்மின் ஐய! — உரைகடியர்
வில்லினர் வேலர் விரைந்துசெல் அம்பினர்
கல்லிடை வாழ்நர் எமர்.

தெளிவுரை

"தலைவனே! இம்மலையில் வாழ்பவர், எம்மவராகிய வேடுவர். அவர்கள் கடுஞ்சொல்லினர்; வில்லேந்திய கையினர்; வேலினை உடையவர்; விரைந்து செல்லும் அம்புகளைக் கொண்டவர்; இரவில் தினைப்புனம் காவல் செய்பவர். ஆதலின், மணம் வீசும் இம்மலைப்பக்கத்தே வருதல் வேண்டா" என்று, குறையிரந்த தலைவனிடம் தோழி, காவல் மிகுதியைச் சொல்லி, வருதல் வேண்டா என்றாள்.

கருத்து

'இங்குக் காவல் மிகுதி; நீ வருதல் வேண்டா.'

சொற்பொருள்

1. விரை - மணம்; கமழ் - வீசும்; சாரல் - மலைப்பக்கம்; புனம் - தினைப் புனம்.
2. வரையிடை - மலைப்பக்கம்; வாரல் - வர வேண்டா; உரைகடியர் - கடுஞ்சொல்லினர்.

3. வேலர் - வேலினை உடையவர்; அம்பினர் - அம்பினை உடையவர்.
4. கல் - மலை; எமர் - எம்மவர், எம் உறவினர்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 6 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகனைக் காவல் மிகுதி சொல்லிச் சேட்படுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடும் விருப்புடையனாய்த் தோழிக்குப் பின் நின்று கூட்டுவிக்குமாறு அவளிடம் வேண்டினான். அவனைத் தோழி விலக்கியது.

யானை உழலும் அணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்;
ஏன லுள்ஐய! வரவுமற்(று) என்னைகொல்
காணினும் காய்வர் எமர்.

தெளிவுரை

"ஐயனே! யானைகள் அலைந்து திரியும் மலைகள் சூழ்ந்த குறிஞ்சி நிலத்தில் வாழும் வேட்டுவ மகளிர் நாங்கள். மேன்மகனாகிய தாங்கள் இத்தினைப்புனத்தில் என்ன பயன் கருதி வந்தீர்? எம்மவர் உம்மை நேரில் கண்டாலும் அல்லது இங்கே வந்துள்ளீர் என்பதை அறிந்தாலும் சினந்து உமக்குத் தீங்கு செய்வர். ஆகலின், நீர் இங்கு வருதல் வேண்டா" என, குறையிரந்து நின்ற தலைவனிடம், காவல் மிகுதியைப்பற்றித் தோழி கூறினள்.

கருத்து

நாங்கள் எளிய வேட்டுவ மகளிர்; நீயோ மேற்குடிமகன்; எங்களை விரும்ப வேண்டா. மேலும், இங்குக் காவல் மிகுதி; உனக்குத் தீமை நேரும்; ஆதலின் இவ்விடமிருந்து அகன்று செல்க.

சொற்பொருள்

1. உழலும் - அலைந்து திரியும்; அணிகிளர் - அழகு மிக்க; வரை - மலை.
2. கானகம் - காடு.
3. ஏனல் - தினைப்புனம்; வரவுமற்(று) என்னை? - என்ன பயன் கருதி வந்தீர்?
4. காய்வர் - சினந்து தீங்கு புரிவர்; எமர் - எம் உறவினர்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 8 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரந்து பின் நின்ற தலைமகனைத் தோழி சேட்படுத்தல்.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடவேண்டுமெனத் தோழியிடம் பணிந்து கேட்டு நின்றான். அவளோ தலைவியை நெருங்கவிடாமல் அவனைத் தடுக்கிறாள்.

(சேட்படை - சேண் + படை; சேண்மை - தொலைவு; படை - படுத்தல் அஃதாவது, விலக்குதல்)

வேங்கை மலர வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்குஅமை மென்தோள் குறவர் மகளிரேம்
சோர்ந்து குருதி ஒழுகமற்(று) இப்புறம்
போந்ததுஇல் ஐய களிறு.

தெளிவுரை

தலைவனே! வேங்கை மரங்கள் பூத்துக் குலுங்க, அதனால் மணம் கமழும் குளிர்ந்த இம்மலைச்சாரலில், வளைந்த மூங்கிலைப் போன்ற மென்மைமிகு தோள்களைக் கொண்ட குறப்பெண்களாகிய நாங்கள் வாழுகின்றோம். இப்பக்கத்தில், குருதி ஒழுகுமாறு ஆண்யானை எதுவும் வந்ததை நாங்கள்

காணவில்லை (எனவே, இங்கு வீணே காலம் கழிக்காது, வேறு பக்கம் சென்று தேடுங்கள்) என்று கூறி, குறையிரந்து நின்ற தலைவனைத் தோழி, தலைவியை நெருங்கவிடாது தடுத்தாள்.

கருத்து

'நீ கேட்டவாறு யானை எதுவும் இங்கு வரவில்லை; வேறு இடத்தில் சென்று தேடு' எனத் தலைவனைத் தோழி அப்புறப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. வேங்கை - வேங்கை மரம்; வெறி - மணம்; தண் - குளிர்ச்சி.
2. வாங்கு - வளைந்த; அமை - மூங்கில்; மென் - மென்மை.
3. சோர்ந்து - சொரிந்து; இப்புறம் - இப்பக்கம்.
4. போந்ததுஇல் - வரவில்லை; ஐய - ஐயனே!; களிறு - யானை.

தலைவன் கூற்று

நற்றிணை 75 **மாமூலனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தோழி கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை அடையத் தலைவன் அவள் தோழியின் உதவியை நாட, அவளோ தலைவியை அவன் நெருங்கவிடாது தடுத்து அப்புறப்படுத்தும் போது, தலைவன் அவள் கேட்குமாறு தன் நெஞ்சினிடம் சொல்லியது.

நயன்இன் மையின் பயன்இது என்னாது,
பூம்பொறிப் பொலிந்த அழல்உமிழ் அகன்பை,
பாம்புஉயிர் அணங்கி யாங்கும், ஈங்குஇது
தகாஅது வாழியோ குறுமகள்! நகாஅது
உரைமதி! உடையும்என் உள்ளம் சாரல்
கொடுவில் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போல,

சேயரி பரந்த மாஇதழ் மழைக்கண்
உறாஅ நோக்கம் உற்றஎன்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே.

தெளிவுரை

இளமை மிக்க பெண்ணே! நீ நெடுங்காலம் வாழ்க! என்மீது உனக்கு அருளேதும் இல்லை. அதனாலேதான் இதனால் விளையும் பயன் இன்னதென உணராமல் என்னை இகழ்ந்து பேசுகிறாய்! நீ கூறுவது நெருப்பைப் போலும் நஞ்சை உமிழ்கின்ற பொலிவுபெற்ற புள்ளிகள் பொருந்திய அகன்ற படம் கொண்ட பாம்பு, உயிர்களைக் கொல்லும்பொருட்டுத் தீண்டி வருத்தினாற் போல உள்ளது. இவ்வாறு நீ இகழ்ந்து உரைப்பது அறமாகாது; இந்த எள்ளல் பேச்சு என் உள்ளத்தை உடைத்துவிடும்; நானும் இறந்துபடுவேன்.

மலைச்சாரலில் கொடிய வில்லினையுடைய வேடுவன், கொம்பினைக் கொண்ட பன்றியை எய்து கொன்று, அதன் பசிய தசையிலிருந்து உருவியெடுத்த சிவந்த அம்பைப் போன்று செவ்வரிகள் படர்ந்ததும், கரிய இமைகளைக் கொண்டதுமான குளிர்ச்சி பொருந்திய கண்களைக் கொண்டவளின் (தலைவியின்) சிறப்பு நோக்கம் பெறாமையால் என் நெஞ்சம் வருந்தியுள்ளது. இவ்வாறு வருந்தியிருக்கும் என்னை நீ இகழ்ந்து உரைப்பது அறம் அன்று.

கருத்து

தன்னை அகன்று செல்லுமாறு கூறிய தோழியிடம் தலைவன், 'தலைவியை அடையேனாயின் நான் இறந்துபடுவேன்; என்னை எள்ளி நகையாடாது இரங்கி அருள் செய்' என வேண்டுகிறான்.

குறிப்பு

'தலைவியைப் பெறுதல் அன்றித் தான் உய்வதற்கு வேறு வழியில்லை' என்று தோழி தெளியுமாறு தலைவன் இவ்வாறு கூறினன்:

"என்னை நகையாடிப் பேசி அகற்ற முனைவது, ஒரு பாம்பு, தன் அழகிய படத்தை விரித்துச் சீறி, நஞ்சை உமிழ்ந்து, உயிர்களைக் கொல்வது

போன்ற கொடுமையான செயலாகும். உன் தலைவியிடம் சென்று என் குறையினை எடுத்துச் சொல்! அங்ஙனம் நீ செய்யாவிடில் வருத்தமுற்றுள்ள என் உள்ளம் உடைந்துபோக நானும் அழிந்துபடுவேன்.''

சொற்பொருள்

1. நயன் - அருள், இரக்கம்; இன்மையின் - இல்லாமையால்.
2. பூம்பொறி - அழகிய புள்ளி; பொலிந்த - விளங்குகின்ற; அழல் உமிழ் - தீயைப் போல் (நஞ்சினை) உமிழ்கின்ற; அகன் பை - விரிந்த நச்சுப்பை.
3. அணங்கி யாங்கும் - வருத்துவது போல்வதாகும்.
4. நகாது - இகழாது.
5. உரைமதி - சொல்.
6. கொடுவில் - கொடிய வில்; கோட்டு மா - கொம்புள்ள விலங்கு, பன்றி; தொலைச்சி - கொன்று.
7. பச்சூன் - பசிய ஊன்; பெய்த - படிந்த; பகழி - அம்பு.
8. சேயரி - செவ்வரி; பரந்த - படர்ந்த; மா இதழ் - கரிய இமை.
9. உறா நோக்கம் - பொருந்தாத நோக்கத்தால்; உற்ற - (தாக்குதல்) உற்ற.
10. பைதல் - வருத்தம்; உய்தல் - உயிர் வாழ்தல்.

தலைவன் கூற்று

நற்றிணை 204 **மள்ளனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் ஆற்றானாய்த் தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் குறையைத் தோழி விரைந்து முடிக்க வேண்டும் என்று கருதிய தலைவன், அவள் கேட்குமாறு, முன்னரே தலைவியைத் தான் சந்தித்திருப்பதைக் கூறுவது.

தளிர்சேர் தண்தழை தைஇ, நுந்தை
குளிர்வாய் வியன்புனத்து எல்பட வருகோ?
குறுஞ்சுனைக் குவளை அடைச்சிநாம் புணரிய
நறுந்தண் சாரல் ஆடுகம் வருகோ?
இன்சொல் மேவலைப் பட்டஎன் நெஞ்சுஉணக்
கூறுஇனி; மடந்தைநின் கூர்எயிறு உண்குஎன,
யான்தன் மொழிதலின், மொழிஎதிர் வந்து,
தான்செய் குறிவயின் இனிய கூறி,
ஏறுபிரி மடப்பிணை கடுப்ப வேறுபட்டு,
உறுகழை நிவப்பின் சிறுகுடிப் பெயரும்
கொடிச்சி செல்புறம் நோக்கி,
விடுத்த நெஞ்சம்! விடல்ஒல் லாதே.

தெளிவுரை

" 'மடந்தையே! தளிர்களையும் மலர்களையும் கொண்டு தொடுக்கப்பட்ட குளிர்ச்சியான தழையுடையை உடுத்து, 'குளிர்' என்னும் கிளிகடி கருவியைக் கையிற்கொண்டு நீ காவல் புரியும் உன் தந்தையினுடைய அகன்ற தினைப்புனத்திற்குக் கதிரவன் தோன்றி விளங்கும் காலைப்போதில் நான் வரவா? அல்லது, குறுகிய சுனையிலிருந்து பறித்த குவளைப்பூவை அணிந்து, நாம் முதற்புணர்ச்சி பெற்ற நறிய தண்ணிய மலைச்சாரலில் விளையாடிக் களிக்க வரவா?' என்று கேட்டேன்; 'இவற்றுக்கு மறுமொழியாய் உன் இனிய சொற்களை விரும்பிக் கேட்கத் துடிக்கும் என் நெஞ்சம் அமைதி கொள்ளுமாறு ஒரு சொல் உரைப்பாயாயின் உன் கூரிய பற்களிடத்தே ஊறுகின்ற அமுதினைப் பருகுவேன்' என்று நான் தலைவியிடம் உரைத்தேன். அவளும் என் மொழிக்கு விடை கூறுவாள் போல் எதிரே வந்து, தான் கருதிய குறியிடத்திற்கு என்னைக் கொண்டு சென்று இனிய மொழிகளைக் கூறினாள். அவ்வாறு கூறியவள் கலைமானைப் பிரிந்து செல்லும் அதன் இளைய பெண்மானைப் போல என்னை விட்டு வேறாய்ப் பிரிந்து நீங்கி, மிகுதியான மூங்கில்கள் உயர்ந்து தோன்றும் சிறுகுடி நோக்கிச் சென்றனள். நெஞ்சமே! அவ்வாறு போகவிடுத்து அவளது முதுகினை நோக்கியபடி அவளைக் கைவிட்டு வருந்துகின்றாய். நீ அவளை விட்டிருத்தல் கூடாது" என்று தலைவன் தன் நெஞ்சிடம் கூறி வருந்துகின்றான்.

கருத்து

தனக்கும் தலைவிக்கும் முன்னரே தொடர்பு ஏற்பட்டிருப்பதையும், அந்த உறவைத் தான் தொடர விரும்புவதையும் தலைவன் தோழிக்குக் குறிப்பால் உணர்த்துகிறான்.

குறிப்பு

தலைவிக்கும் தனக்கும் உளதாகிய உறவினைத் தோழியுணருமாறு தலைவன் உரைக்கின்றான். அவன் ஒழுக்கத்தையும் உரையையும் குறிப்பையும் கண்ட தோழி இருவர்க்கும் முன்பே உறவு உண்டென உணர்கின்றாள்; ஆயினும், தலைவியிடம் அவள் தலைவன் முயற்சியையும் ஒழுகலாற்றையும் உரைத்து, அவள் குறிப்பை ஆராய முற்படுவது அறமாகாது; அவள் வாயிலாகவே அது வெளிப்பட வேண்டுமென்று எண்ணுகிறாள்; எனவே, தலைவனை நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைத்தலையே தொடர்ந்து செய்து, பின்னர்க் குறை முடிப்பாள்.

சொற்பொருள்

1. தைஇ - தொடுத்த; நுந்தை - உம் தந்தை.
2. வியன்புனம் - அகன்ற தினைப்புனம்; எல்பட - கதிரவன் தோன்றி விளங்கும் காலைப்பொழுது; வருகோ - வரட்டுமா?
3. குறுஞ்சுனை - குறுகிய சுனை; அடைச்சி - அணிந்து, சூடி; புணரிய - கூடிய.
4. சாரல் - மலைச்சாரல்; ஆடுகம் - விளையாட.
5. மேவலைப்பட்ட - விரும்பித் துடிக்கும்; உண - அமைதி கொள்ள.
6. கூர் எயிறு உண்கு - கூரிய பற்களிடத்தே (ஊறுகின்ற அமுதினை) உண்ண வருவேன்.
7. தன் - அவளுக்கு; மொழி எதிர் வந்து - (என் சொல்லுக்கு) எதிர்மொழி சொல்பவளாய்.
8. குறிவயின் - குறியிடத்திற்கு (அழைத்துச் சென்று).
9. ஏறு - ஆண் (மான்); மடப்பிணை - இளைய பெண்மான்; கடுப்ப - போல; வேறுபட்டு - வேறாய்ப் பிரிந்து.
10. உறுகழை - மூங்கில் பொருந்திய; நிவப்பின் - உயரத்திலுள்ள; பெயரும் - செல்லும்.
11. கொடிச்சி - குறிஞ்சிநிலத்தலைவி; செல்புறம் - (சென்றபோது) முதுகுப்புறம்.
12. விடல் ஒல்லாதே - (என் மனம் இனி நினைத்தலைக்) கைவிடாது.

தலைவன் கூற்று

நற்றிணை 190 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் ஆற்றானாகி நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழிபாற்சென்று, தலைவியைத் தனக்கு இசைவித்துக் கூட்டுமாறு குறையிரந்து நின்று, அவளால் மறுக்கப்பட்ட தலைவன், ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குக் கூறியது.

நோஇனி; வாழிய நெஞ்சே! மேவார்
ஆர்அரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை,
தேம்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி,
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியல்அம் கழனி ஆர்க்காடு அன்ன
காமர் பணைத்தோள் நலம்வீறு எய்திய,
வலைமான் மழைக்கண், குறுமகள்
சில்மொழித் துவர்வாய் நகைக்குமகிழ்ந் தோயே!

தெளிவுரை

நெஞ்சே! சேந்தன் என்பவன் பகைவர்களின் கடத்தற்கரிய அரண்களை வென்று கைக்கொண்டவன்; மழைபோல வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவன்; வளவிய கள்ளுணவை உண்பவன்; பகைவரின் குருதிக்கறையோடு கூடிய வேற்படையை உடையவன். அவன் தந்தை அழிசி என்பான், தேன் பொருந்திய விரிந்த மலரால் தொடுக்கப்பட்ட மாலையையும் சிறப்பாய்ச் செய்யப்பட்ட தேரினையும் உடையவன். அவனது தலைநகர் ஆர்க்காடு.

நெற்கதிர்களுக்கிடையே நெய்தல்கள் மலர்தலால் வண்டினம் மொய்க்கின்ற கழனிகளைக் கொண்டது, ஆர்க்காடு. அந்த ஆர்க்காட்டினைப் போல விருப்பந்தரும் பருத்த தோள் நலத் தினையும், வலைப்பட்ட மான் போன்ற மருண்ட பார்வை

யினையும் கொண்டவள், தலைவி. சில சொற்களே பேசும் அவளது சிவந்த வாயில் தோன்றும் முறுவல் கண்டு, மனமே, நீ இன்பத்தால் மயங்கினை. இப்போது அவள் கிடைக்கப் பெறாததால் இனி நீ அவளையே நினைந்து துன்புற்றிரு!

கருத்து

'அழிசியின் ஆர்க்காடு போன்றாளின் முறுவலிலே நீ மயங்கி மகிழ்ந் தனை; அவள் கிடைக்கப்பெறா நிலையில் இனி உனக்குத் துன்பந்தான்' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.

சொற்பொருள்

1. நோ - துன்புறு; மேவார் - பகைவர்.
2. ஆர் அரண் - (பிறரால் வென்று கைக்கொள்ளுதற்கு) அரிய கோட்டை; கடந்த - வென்று அழித்துக் கைக்கொண்ட; மாரி - மழை; வண் - கொடை; மகிழ் - கள்; (கொடைத்தன்மையைக் கொண் டவன்; கள்ளுணவை உண்பவன்).
3. திதலை எஃகு - பகைவரின் குருதிக்கறையோடு கூடிய வேல்; சேந்தன் தந்தை - சேந்தனுக்குத் தந்தை.
4. தேம் கமழ் - தேன் மணக்கும்; விரிதார் - இதழ்கள் விரிந்த மாலை; அழிசி - சேந்தன் தந்தை.
5. மூசு - மொய்க்கும்; நெய்தல் - நெய்தல் மலர்.
6. அரியல் - மது, தேன்; ஆர்க்காடு - ஒரு நகரம்.
7. காமர் - விருப்பம்; பணை - பெரிய; நலம் - அழகு; வீறு - சிறப்பு, பொலிவு.
8. வலை மான் - வலைப்பட்ட மான்; மழைக்கண் - குளிர்ச்சியான கண்.
9. சில் மொழி - சில சொற்கள்; துவர் - சிவப்பு; நகை - முறுவல்.

தலைவன் கூற்று

நற்றிணை 80 **பூதன்தேவனார்**

திணை : மருதம்

கூற்று

சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன், தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை அடையத் தோழியின் உதவியைத் தலைவன் நாட, அவளோ தலைவியை நெருங்கவிடாது அவனைத் தடுத்து அப்புறப் படுத்தினாள்; அப்போது, தலைவன் அத்தோழி கேட்குமாறு தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

மன்ற எருமை மலர்தலைக் கார்ஆன்
இன்தீம் பால்பயம் கொண்மார், கன்றுவிட்டு,
ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும்
பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து,
'தழையும் தாரும் தந்தனன் இவன்'என,
இழைஅணி ஆயமொடு தகுநாண் தடைஇ,
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது,
மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே.

தெளிவுரை

தொழுவத்துள்ள அகன்ற தலையினைக் கொண்ட கரிய எருமைகளிடம் கன்றுகளை விட்டு, அவற்றின் இனிய தீம்பாலை நிறையக் கறந்துகொள்வர், ஆயர். பின்னர்க் கன்றுகளை வீட்டில் நிறுத்திவிட்டு, ஊரிலுள்ள இளஞ்சிறுவர்கள் அவ்வெருமைகள் மீதேறி அவற்றை மேய்புலத்துக்கு ஓட்டிச் செல்வர். அத்தகைய இருள் நீங்கிய விடியற்காலத்தே பெருத்த தோள்களைக் கொண்ட இவ்விளைய மகள், கலனணிந்து விளங்கும் ஆய மகளிரொடு தைத் திங்கள் முதல் நாளில் குளிர்ச்சி பொருந்திய பொய்கைக்கு நீராட விருப்பத்தோடு வருவாள். அவள், தான் உடுத்திருக்கும் தழையையும் தாரினையும் தந்தவன் 'இவனே' என

என் நினைவு தோன்ற, அதனால் ஏற்பட்ட நாணத்தை மறைத்துக் கொண்டு நோன்பின் பயனாய்த் தைந்நீராடுவாள். நான் அடைந்து வருந்தும் வேட்கை நோய்க்கு மருந்து பெரிய தோளைக் கொண்ட அந்த இளமகளேயன்றி வேறு இல்லை.

கருத்து

"இப்பெரும்புலர்விடியலில் இந்நீர்த்துறைக்கு வந்து, ஆய மகளிர் சூழத் தைந்நீராடும் இவ்விளைய மகள், 'தழையும் தாரும் தந்த துணைவன் இவனே' என என்னையே நினைந்து நீராடுகின்றாள். இவளால் வந்துற்ற நோய்க்கு இவளன்றி மருந்து வேறில்லை."

குறிப்பு

மணமாகாத மகளிர், தாம் மனத்தில் காதலித்தவனையே கணவனாய்ப் பெறுதற்பொருட்டு, பொய்கையில் புலர்காலையில் தை முதல் நாள் தொடங்கி அத்திங்கள் முழுதும் நீராடி வழிபாடாற்றுவர்.

சொற்பொருள்

1. மன்றம் - தொழுவம்; மலர்தலை - விரிந்த தலையைக் கொண்ட; கார்ஆன் - கரிய பெண் எருமை.
2. பால் பயம் கொண்மார் - பாலாகிய பயனைக் கொள்ளும்பொருட்டு.
3. குறுமாக்கள் - இளஞ்சிறார்; மேற்கொண்டு - எருமைகள் மீதேறி; கழியும் - செல்வர்.
4. பெரும்புலர் விடியல் - இருள் நீங்கிய விடியற்காலம்; போத்தந்து - போந்து.
5. தழை - உடுக்கும் தழை; தார் - மாலை.
6. இழை அணி - அணிகலன்களை அணிந்த; ஆயமொடு - தோழியருடன்; தகுநாண் தடைஇ - தன் பெண்மைக்குத் தகத் தோன்றும் நாணத்தை மறைத்துக்கொண்டு.
7. தைஇத் திங்கள் - தை மாதம்; தண்கயம் - குளிர்ந்த குளம்; படியும் - நீராடும்.
8. குறுமகள் - இளைய மகள்.
9. பிறிது - வேறு.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 16 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சேட்படுத்தவிடத்துத் தலைமகன் தனதாற்றாமையால் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைத் தலைவியிடம் நெருங்கவிடாது தோழி விலக்கியபோது, தலைவன் ஆற்ற இயலாது கூறுதல்.

நாள்நாகம் நாறும் நனைகுழலாள் நல்கி,தன்
பூண்ஆகம் நேர்(வு)அளவும் போகாது – பூண்ஆகம்
என்றேன் இரண்டாவ துண்டோ? மடல்மாமேல்
நின்றேன், மறுகிடையே நேர்ந்து.

தெளிவுரை

“அன்று மலர்ந்த சுரபுன்னையின் மலர்மணம் கமழ்வதும், தேனால் நனையப்பட்டதுமான கூந்தலைக் கொண்டவள், தலைவி. அணிகளுடன் கூடிய தன் மார்பை அவள் எனக்குக் கொடுத்து, என்னோடு சேர்கிறவரைக்கும் எலும்பால் செய்த அணிகலன் என் மார்பிலிருந்து நீங்காது. இதை உனக்கு நான் முன்பே சொல்லியுள்ளேன். அதற்கு மாறாய் இனி மற்றொன்று சொல்வதற்கு இல்லை. பனைமடலால் செய்யப்பெற்ற குதிரையின்மீது அமர்ந்து தலைவியின் தெரு வழியே ஊர்ந்து வருவதற்குத் துணிந்துவிட்டேன்” என்று தலைவன், தன் ஆற்றாமையின் காரணமாய்த் தோழியிடம் கூறினான்.

கருத்து

தலைவியைப் பெற நான் மடலேற உறுதி பூண்டுள்ளேன்.

விளக்கம்

மடலேறுதல் : தன் உடம்பெல்லாம் சாம்பலைப் பூசி, எலும்பு மாலையை மார்பில் அணிந்து எருக்கு, ஆவிரம், பூளை ஆகிய

பூக்களை விரவிக் கட்டிய மாலையைத் தலையில் சூடி, துணியில் தலைவியின் வடிவமெழுதிய ஓவியத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, பனைமடல் கருக்கினால் செய்யப்பட்ட குதிரையில் தலைவன் அமர்ந்திருப்பான். குதிரையின் கழுத்தில் மணிகளைக் கட்டி ஆவிரம் பூ மாலையை அணிவிப்பர். தலைவனைச் சார்ந்தோர் அக்குதிரையினைச் சிறிய வண்டியில் சேர்த்துத் தலைவி இருக்கும் வீதி வழியே இழுத்துச் செல்வர். இதனால் தலைவிக்கு உற்றார், தலைவனின் காதலை உணர்ந்து வியந்து அவனுக்குத் தலைவியை மணம் புரிவிப்பர்.

குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அகத்திணைபற்றிய பாடல்களுள் இந்த ஒரு பாடலில் மட்டுமே மடலேறுதல்பற்றிய குறிப்பு உள்ளது.

சொற்பொருள்

1. நாகம் - சுரபுன்னை மலர்; நனை - (தேனால்) நனையப்பட்ட; குழல் - கூந்தல்; நல்கி - கொடுத்து.
2. பூண் ஆகம் - அணிகளுடன் கூடிய மார்பு; நேர்வு அளவும் - என்னோடு சேர்கிற வரைக்கும்; பூண் ஆகம் - எலும்பாற்செய்த அணிகலன் பூண்ட என் மார்பினின்றும்; போகா - போகாது.
3. இரண்டாவது - இனி இதற்கு மாறாய் மற்றொரு சொல்; உண்டோ - உண்டாகுமோ; மடல் மா - பனைமடலால் செய்யப்பட்ட குதிரை.
4. மறுகு - வீதி; இடையே - வழியே; நேர்ந்து நின்றேன் - அமர்ந்து ஊர்தற்குத் துணிந்துவிட்டேன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 182 **மடல்பாடிய மாதங்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியால் குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது. (குறை - தலைவன் தலைவியைக் காண வேண்டுதல்.)

கூற்று விளக்கம்

தன் குறையைத் தோழி மறுத்தாளாக, "தலைவியும் இரங்கி நம் குறையைத் தீர்த்திலள்; தோழியும் உடம்படவில்லை; ஆதலின், இனி மடலேறுவேன்" என்பது தோன்றத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணிஅணி பெருந்தார் மரபிற் பூட்டி,
வெள்ளென்பு அணிந்து,பிறர் எள்ளத் தோன்றி,
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீக்கித்
தெருவின் இயலவும் தருவது கொல்லோ?
கலிழ்கவின் அசைநடைப் பேதை
மெலிந்திலள்; நாம்விடற்கு அமைந்த தூதே!

தெளிவுரை

நெஞ்சமே! அழகொழுகும் அசைந்த நடையினைக் கொண்ட தலைவி, நாம் அனுப்பிய தூதுரைக்குச் சற்றும் மனம் நெகிழ வில்லை; அதனால் அவளை நெகிழ்விக்கும்படியாய் நாம் விடக் கூடிய தூது இனியுள்ளது ஒன்றே ஒன்றுதான்.

உயர்ந்த உச்சியைக் கொண்ட பனையின் முற்றிய மடலால் செய்யப்பட்ட குதிரைக்கு, மணிகள் கோக்கப்பட்ட பெரிய மாலையை அணிவித்து, நாம் வெள்ளெலும்புகளை அணிந்து கொண்டு, பிறர் நம்மைக் கண்டு இகழும்படியாய், அம்மடல் மாவின்மேல் ஏறி, நம் நாணத்தை எல்லாம் விடுத்து ஒருநாள் தெருவில் இழுத்துச் செல்லும்படியான ஓர் அவல நிலையையும் தருமோ? ('இனி மடலேறக்கூடியதே நான் செய்யத்தக்கது' என்பதைத் தோழி அறியுமாறு தன் நெஞ்சிற்குச் சொல்வது போலத் தலைவன் சொல்லுகின்றான்.)

கருத்து

தலைவியைப் பெறுவதற்கு இனி மடலேறுவது ஒன்றே வழி.

குறிப்பு

தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறினான்; ஆயினும், அதைத் தோழி அறிய வேண்டும் என்பதே அவன் எண்ணம்.

சொற்பொருள்

1. விழுத்தலை - உயர்ந்த உச்சி; பெண்ணை - பனை மரம்; விளையல் மா மடல் - முற்றிய பெரிய மடல்.
2. மணிஅணி - மணிகள் கோக்கப்பட்ட; பெருந்தார் - பெரிய மாலை.
3. வெள் என்பு - வெள்ளை எலும்பு; எள்ள - இகழும்படியாய்.
4. மருங்கு - பக்கம், தெரு.
5. இயலவும் - இழுக்கப்படவும்.
6. கலிழ்கவின் - அழகொழுகும்; பேதை - பெண், தலைவி.
7. மெலிந்திலள் - நெகிழவில்லை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 17 **பேரெயின் முறுவலார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியிற்கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன், தோழி குறைமறாமல் கூறியது.

(குறை மறாமல் - தன் வேண்டுகோளை மறுத்துவிடாதபடி).

கூற்று விளக்கம்

தலைவியை அடைதற்குத் தோழி துணை செய்ய மறுத்ததால், தலைவன், 'காமநோய் முதிர்ந்தவர் மடலேறுவர்; மடியவும் செய்வர். நான் அவற்றைச் செய்யத் துணிந்துள்ளேன்' என்று தோழியிடம் கூறியது.

மாஎன மடலும் ஊர்ப; பூஎனக்
குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே.

தெளிவுரை

காமநோய் முதிர்ந்தால் ஆடவர், பனங்கருக்கினால் செய்யப் பட்ட குதிரைமேல் ஏறிச் செல்வர்; குவிந்த மொட்டுகளைக் கொண்ட எருக்கம்பூவால் ஆன மாலையை அணிந்துகொள்வர்; இவற்றோடமையாது, தெருவில் பலரும், 'இவளால் இவன் இவ்வாறு ஆனான்' என ஆரவாரித்து நகையாடுவதற்கும் ஆளாவர். இவற்றாலும் தம் எண்ணம் வெற்றி பெறாதாயின் சாதலுக்குரிய செயலையும் செய்வர்.

கருத்து

நான் மடலேறத் துணிந்துள்ளேன்.

குறிப்பு

உலக நிலையாய்த் தலைவன் இவற்றைத் தோழியிடம் கூறி, தான் அவற்றை மேற்கொள்ளாதிருக்கத் தலைவியைத் தனக்கு உடம்படச் செய்யுமாறு குறையிரந்து நின்றான்.

சொற்பொருள்

1. மாஎன - குதிரை எனக் கொண்டு; மடலும் ஊர்ப - பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிச் செல்வர்.
2. குவி முகிழ் - குவிந்த மொட்டு; கண்ணி - தலைமாலை.
3. மறுகு - தெரு; ஆர்க்கவும் படுப - ஊரார் ஆரவாரித்து எள்ளுவதற்கும் ஆளாவர்; பிறிதும் ஆகுப - சாதலுக்குரிய செயலையும் செய்வர்; காமம் காழ்க் கொளின் - காமநோய் முதிர்ந்தால்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 14 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

மடன்மா கூறும் இடனுமார் உண்டே (தொல். களவு. 11) என்பதனால் தோழி குறை மறுத்துழி, தலைமகன், 'மடலேறுவன்' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மடன் மா கூறும் இடனுமார் உண்டே' என்பதற்கு, 'தலைவன் மடலேறு வேன் என்று கூறி அச்சுறுத்தும் இடமும் உண்டு' என்பது பொருள். தலைவியைப் பெற்றோர் திருமணம் செய்து தர மறுத்தாலோ, தலைவி தன் காதலை ஏற்க மறுத்தாலோ தலைவன் இங்ஙனம் கூறி அச்சுறுத்துவான்.

குறை மறுத்தல் - தலைவியை மணம் செய்துவைக்கக் கேட்ட முறையைத் (வேண்டுகோளைத்) தோழி மறுத்தல்.

அப்போது தானே தன் முயற்சியால் தலைவியை அடையவிருப்பதாய்த் தலைவன் கூறியது.

அமிழ்துபொதி செந்நா அஞ்ச வந்த
வார்ந்துஇலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம, யானே! பெற்றாங்கு
அறிகதில் அம்ம,இவ் ஊரே! மறுகில்,
'நல்லோள் கணவன் இவன்'எனப்
பல்லோர் கூறயாம் நாணுகம் சிறிதே.

தெளிவுரை

அமிழ்தத்தைப் பொதிந்து வைத்தாற்போன்ற இனிமையுள்ள சிவந்த நா அஞ்சும்படியாக, முளைத்து வரிசையாய் விளங்கும் கூரிய பற்களைக் கொண்டவள், தலைவி. அவள் சில சொற்களை மட்டுமே பேசும் இளமையானவள். அவளை (மடலேறுதலால்) நான் பெறுவேன். அவ்வாறு நான் பெற்றதை இவ்வூர் நன்றாக அறியட்டும். அறியும் அவர்கள், வீதியில், 'இந்நல்லோளின் கணவன் இவன்' எனப் பலவாறாய்க் கூறுவர். அதனைக் கேட்டு நானும் சிறிதே நாணுவேன்.

கருத்து

'தோழியே! நீ உதவாவிடில், நான் ஊர்மன்றத்தில் மடல்மா ஏறி ஊர்ந்து வந்து அவளைப் பெறுவேன்' என்கிறான், தலைவன்.

விளக்கம்

குறிஞ்சிநிலத் தலைவன் தான் காதலித்த மங்கையைக் காண வந்தான். எப்பொழுதும் தலைவிக்கு அருகிலேயே இருந்து அவளுக்கு ஆவன செய்துகொண்டிருக்கும் தோழியைக் கண்டான். எப்படியாவது தலைவியைத் தன்னுடன் கூட்டுவிக்க வேண்டுமென்று கெஞ்சினான். தலைவியின் மனப்பாங்கை அறிந்திருந்த தோழி, தலைவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. தலைவனுடைய எண்ணத்தை நிறைவேற்ற இயலாது என்று மறுத்து விட்டாள். தலைவனோ, "நான் பொது மன்றத்தில் பனை மடலால் செய்யப்பட்ட குதிரைமேலேறி இவ்வூர்த்தெருவில் எல்லாரும் காணும்படி சென்றாவது என் குறையை முடித்துக் கொள்ளாமல் விடமாட்டேன்" என்றான்.

சொற்பொருள்

1. பொதி - பொதிந்து வைத்துள்ள; செந்நா - சிவந்த நாக்கு.
2. வார்ந்து - வரிசையாய் நீண்டு; இலங்கும் - விளங்கும்; வை எயிறு - கூரிய பற்கள்; சின்மொழி - சில சொற்களே பேசும்; அரிவை - பெண் (தலைவி).
3. பெறுக - பெறுவேன்; பெற்றாங்கு - பெற்ற பின்பு.
4. மறுகு - தெரு, நாற்சந்தி.
5. நல்லோள் - அந்த நல்ல அரிவை (தலைவி); இவன் - இவன்தான் (என்று என்னை).
6. நாணுகம் - வெட்கப்படுவேன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 173 **மதுரைக் காஞ்சிப்புலவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறை மறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியிடம் குறையிரப்ப அவள் மறுத்தாள்; 'இனி மடலேறுவது தவிர வேறு வழியில்லை; நான் மடலேற முனைந்துள்ளேன்' என்று தோழியிடம் தலைவன் கூறியது.

பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி, நாண்அட்டு,
பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப,
'இன்னள் செய்தது இது'என முன்நின்று
அவள்பழி நுவலும், இவ்ஊர்;
ஆங்குஉணர்ந் தமையின்ஈங்கு ஏகுமார் உளனே.

தெளிவுரை

பொன்னை ஒத்த ஆவிரையின் புதிய பூக்களை நெருங்க வைத்து, நூலினைக் கொண்டு கட்டப்பட்ட மாலைகள் அணிவிக்கப்பட்ட ஒரு குதிரை பனங்கருக்கால் செய்யப்பட்டது. நான் அக்குதிரையினது கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணிகள் ஒலிக்குமாறு அதன்மீது ஏறுவேன்; வெட்கத்தை விட்டு, என் உள்ளத்தை வாட்டும் காமநோய் மேன்மேலும் மிகுதியாக, 'இன்னாளால் உண்டாக்கப்பட்டது இக்காமநோய்' என்று கூறுவேன். அதனைக் காணும் ஊரார் முன்வந்து, தலைவியின் பழிச்செயலைப்பற்றிப் பேசுவர். அத்தகையதொரு வழியை நான் அறிந்திருத்தலால் அதனைச் செய்ய இவ்விடம் விட்டு இப்போதே செல்கிறேன்.

கருத்து

'நீ என் குறையைத் தீர்க்காவிட்டால் நான் இனி மடலேறித் தலைவியைப் பெற முயல்வேன்' எனத் தலைவன் தோழியிடம் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. நேர் - ஒத்த; மிடைந்த - கட்டிய.
2. பனைபடு கலிமா- பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரை.
3. பூண்மணி - பூட்டியுள்ள மணிகள்; கறங்க - ஒலிக்குமாறு; நாண் அட்டு - நாணத்தை (வெட்கத்தை) விட்டு.
4. பழிபடர் - பழியொடு பரவி; உள்நோய் - உள்ளத்தை வாட்டும் காம நோய்; வழிவழி சிறப்ப - மேலும் மேலும் மிகுதியாக.
5. முன் நின்று - (இவ்வூரில் வாழ்வோர்) என்முன் நின்று.
6. அவள் பழி - இவள் செய்த பழிச்செயலை; நுவலும் - கூறுவர்.
7. ஆங்கு உணர்ந்தமையின் - அவ்வாறு செய்து தலைவியை எய்தும் வழியை நான் இப்பொழுது அறிந்துள்ளமையால்; ஈங்கு - இங்கிருந்து; ஏகுமார் உளன் - (அச்செயலைச் செய்யும்பொருட்டுப்) போக உள்ளேன்.

தலைவன் கூற்று

நற்றிணை 146 **கந்தரத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகன் முன்னிலைப் புறமொழியாகத் தோழி கேட்பச் சொல்லியது. (முன்னிலைப் புறமொழி - தன் முன் நிற்பவரை நோக்கி நேராய்ப் பேசாமல் பிறரிடம் கூறுவதுபோலத் தம் சொற்களைச் சொல்லுதல்.)

கூற்று விளக்கம்

தோழியை இரந்தும் குறை பெறாது வருந்திய தலைவன், மீண்டும் தோழி கேட்டு இரங்கிக் குறை முடிப்பாள் என்னும் நோக்குடன் தான் மடலூர இருப்பதாய்ச் சொல்லியது.

வில்லாப் பூவின் கண்ணி சூடி,
நல்ஏ முறுவல்எனப் பல்ஊர் திரிதரும்
நெடுமாப் பெண்ணை மடல்மா னோயே!
கடன்அறி மன்னர் குடைநிழல் போலப்
பெருந்தண் என்ற மரன்நிழல் சிறிதுஇழிந்து,
இருந்தனை சென்மோ, வழங்குக சுடர்என,

அருளிக் கூடும் ஆர்வ மாக்கள்
நல்லேம் என்னும் கிளவி வல்லோன்
எழுதி அன்ன காண்தகு வனப்பின்
ஐயள், மாயோள் அணங்கிய
மையல் நெஞ்சம் என்மொழிக் கொளினே!

தெளிவுரை

"சிறந்த ஓவியன் ஒருவன் தன் திறமெல்லாவற்றையும் சேர்த்துத் தீட்டிய ஓவியத்தைப் போன்று கண்டு மகிழத்தக்க அழகினையும், மென்மையினையும், மாமை நிறத்தினையும் கொண்டவளால் வருத்தப்பெற்று மையல் கொண்ட நெஞ்சமே! விலைக்கு விற்பதற்கு ஆகாத பூளைப்பூக்கண்ணியைத் தலையிற் சூடி, 'இவன் மிக்க காமப்பித்தேறியவன்' என்று கண்டார் சிரிக்கும்படி நீண்ட கரிய பனை மடலால் செய்யப்பட்ட குதிரை மீதேறி, ஊர்கள் பலவும் சுற்றித் திரிகிறாய்! நான் சொல்வதை நீ கேட்பதாயின், முறை தெரிந்து உலகைப் பாதுகாக்கும் மன்னவனது குடை நிழலிலே நாட்டுமக்கள் குளிர்ச்சியடைவது போல, மிக்க குளிர்ச்சி பொருந்திய மரத்தின் நிழலில் குதிரை யினின்றும் இறங்கி, சிறிது நேரம் தங்கி இளைப்பாறிச் செல்" என்று தலைவன், தோழி கேட்குமாறு தன் நெஞ்சிற்குக் கூறினான்.

கருத்து

'மடலேறி மன்றம் போந்தாயினும் தலைவியை அடைவேன்' என்று தோழி கேட்குமாறு தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

குறிப்பு

குடை நிழலால் மக்கள் துயர் தீர்க்கும் மன்னன்போல, தன் நிழலால் வெயிலில் துன்புறுவோர் துயர் துடைக்கும் மரம்போல, தலைவியை அடைய இயலாது வருந்தும் தலைவனின் துயரை நீக்குபவளாய்த் தோழி துணை செய்ய வேண்டும் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. வில்லாப் பூ - விலைக்கு விற்பதற்காகாத பூ (பூளைப்பூ முதலியன).
2. ஏமுறுதல் - பித்துப் பிடித்தல்.

3. நெடுமா பெண்ணை - நீண்ட கரிய பனைமரம்; மடல்மான் - மடலால் (கருக்கினால்) செய்யப்பட்ட குதிரை.
4. கடன் - அரச நெறி; குடை - வெண்கொற்றக் கொடை.
5. இழிந்து - இறங்கி.
6. இருந்தனை சென்மோ - இருந்து இளைப்பாறிச் செல்.
7. அருளிக் கூடும் ஆர்வ மாக்கள் - (சித்திரம் காண்பதிலே) ஆர்வமுள்ள மக்கள் கூடி.
8. நல்லேம் என்னும் - 'நல்ல ஓவியன்' என்று கூறும்; கிளவி - சொல்லினைப் (பெற்ற); வல்லோன் - வல்லவன் ஒருவன்.
9. எழுதி அன்ன - தீட்டிய சித்திரம் போன்ற; காண்தகு வனப்பு - கண்டு மகிழத்தக்க அழகு.
10. ஐயள் - அழகினள்; மாயோள் - மாமை நிறத்தைக் கொண்டவள்; அணங்கிய - வருத்தப்பெற்ற.
11. மையல் நெஞ்சம் - மயங்கிய நெஞ்சம்; கொளின் - கொள்வதா யிருந்தால்.

தலைவன் கூற்று

நற்றிணை 152 **ஆலம்பேரி சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

மடல் வலித்த தலைமகன் முன்னிலைப் புறமொழியாகத் தோழி கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தோழியின் முன்னிலையில் வேறொருவரிடம் கூறுபவன் போன்று, 'காமம் மடலைத் தந்தது' என்று வருந்திக் கூறியது.

மடலே காமம் தந்தது; அலரே
மிடைபூ எருக்கின் அலர்தந் தன்றே;
இலங்குகதிர் மழுங்கி எல்விசும்பு படரப்
புலம்புதந் தன்றே, புகன்றுசெய் மண்டிலம்;
எல்லாம் தந்ததன் தலையும் பையென

வடந்தை துவலை தூவ, குடம்பைப்
பெடைபுணர் அன்றில் உயங்குகுரல் அளைஇ,
கங்குலும் கையறவு தந்தன்று;
யாங்குஆகு வென்கொல் அளியென் யானே.

தெளிவுரை

"நான் தலைவியிடம் கொண்ட காமம் இந்தப் பனங் கருக்காலே ஆன குதிரையைத் தந்தது; ஊரார் கூறும் பழிச் சொற்களோடு, 'ஆவிரை, பூளை, உழிஞை' என்று இன்னோரன்ன மலர்களை இடையிட்டுக் கட்டிய எருக்கம்பூ மாலையையும் தந்தது. அனைத்துயிரும் விரும்பி வரவேற்கும் ஞாயிற்று மண்டிலமோ, கதிர்கள் ஒளி குன்றி மேற்றிசை வானத்தைச் சென்றடைந்து தனிமைத் துன்பத்தைத் தந்தது. இத்துன்பங் களோடு மெல்லென வாடைக்காற்றும் மழைத்துளிகளைத் தூவத் தொடங்கியுள்ளது. கூட்டிலே பெடையைப் பிரியாது கூடியிருக்கும் அன்றில் பறவைகளும், வாடைக்கு ஆற்றாவாய் வருந்தும் குரலோடு தமக்குள் அளவளாவியபடி இருக்கின்றன. இராப்பொழுதும் என் செயல் அனைத்தும் ஒடுங்கும்படியான தன்மையைத் தந்தது. இவ்வளவு துன்பங்களும் சூழ்ந்துகொள்ள இவற்றினிடையே இனி எங்ஙனம் உய்வேனோ?"

கருத்து

"காமம் மிகுந்ததால் மடலேறுவது தவிர இனி வேறு வழியில்லை; நான் படும் துன்பம் இத்தன்மையது" என்று எடுத்துரைத்தால் தன்மீது தலைவி இரக்கம் கொள்வாள் என வேறொருவரிடம் கூறுவதுபோலத் தலைவன், தோழி கேட்குமாறு கூறினான்.

குறிப்பு

தலைவன் சொற்கள் தோழியின் செவியிலும் தலைவியின் மனத்திலும் புகுந்தன. தோழியின் மனம் அச்சத்தால் அலமரலுற்றது; தலைவியை நோக்கினாள். தலைவியின் உடலில் வியர்ப்பதும் உயிர்ப்பு மிகுவதும் தோழியறியும்படியாகப் புலனாயிற்று; அதனால் முன்னரே இருவர்க்கும் உள்ளக்கலப்பு உண்டு என்பதை உணர்ந்துகொண்டாள், தோழி; இனி அவர்கள் ஒன்றுகூட அவள் உறுதுணையாயிருப்பாள்.

சொற்பொருள்

1. மடல் - பனை மடல்; அலர் - ஊரவர் கூறும் பழிச்சொற்கள்.
2. மிடைபூ - இடையிட்ட பல பூக்கள்; எருக்கின்அலர் - எருக்கம் பூ.
3. மழுங்கி - குறைந்து; எல் - ஒளி; விசும்பு - (மேற்றிசை) வானம்.
4. புலம்பு - துன்பம், தனிமை.
5. தலையும் - (அவற்றிற்கும்) மேலாய்; பையென - மெதுவாய்.
6. வடந்தை - வாடைக்காற்று; துவலை - துளி; குடம்பை - கூடு.
7. பெடை - பெண்; அன்றில் - (ஆண்) அன்றில் பறவை; உயங்கு குரல் - வருந்தும் குரல்; அளைஇ - அளவளாவி (இருந்தன).
8. கங்குல் - இரவு; கையறவு - செயலற்ற தன்மை.
9. அளியன் - இரங்கத்தக்கவன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 276 **கோழிக் கொற்றன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழிக்குக் குறைமறாமல் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தோழி தன் குறையை ஏற்காதபோது தலைவன், 'இனி மடல் ஏறிச் சான்றோரறிய மணம் புரிவேன்' என்று இன்னொருவரிடம் கூறுவதுபோல் தோழி அறியும்படி கூறியது.

பணைத்தோள் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும் மற்றுஇவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்;
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான்தன் கடவின் யாங்கா வதுகொல்?
பெரிதும் பேதை மன்ற,
அளிதோ தானேஇவ் அழுங்கல் ஊரே!

தெளிவுரை

மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட இவ்விளையோளுக்கு விளையாட்டுப் பாவையை முன்னர்ச் செய்து கொடுத்தேன்; அதனைச் செய்வதற்காகப் பஞ்சாய்க்கோரை வளர்ந்துள்ள பள்ளமான நீர்நிலைகளில் சுற்றித்திரிந்தேன்; அரும்பி மேலெழுந்துள்ள அழகிய இவள் முலையில் நிறம் உண்டாகத் தொய்யில் எழுதினேன். இவற்றையெல்லாம் இத்தலைவியைப் பாதுகாத்து நிற்பவர் அறவே அறியார்.

முறை செய்து காப்பாற்றும் அரசனது அறங்கூறவையத்தில் யான் இவற்றைப்பற்றியெல்லாம் வினவினால் நிலைமை என்ன ஆகும்? (தோழியின் தடை முயற்சி எப்படி அமையும்?) ஆரவாரத்தைக் கொண்ட ஊர் பெரிதும் அறியாமை மிக்கது; ஆதலின், இரங்கத்தக்கது.

கருத்து

மடலேறி, அறங்கூறவையத்துச் சான்றோர் துணையால் இவளை அடைவேன்.

விளக்கம்

தலைவிக்கு நான் பஞ்சாய்க்கோரையில் பாவை செய்து கொடுத்ததையும், அவள் மார்பில் தொய்யில் எழுதியதையும் தோழி அறியாள். எங்களிடம் முன்னரே பழக்கம் இருந்ததை அறியாததனாலேயே தோழி மறுக்கிறாள்.

குறிப்பு

"நான் மடலேறிச் சான்றோர் அறிய, தலைவியால் நான் துன்புற்றதாய் அறிவிப்பேன். அறங்கூறவையத்தார் முன்னிலையில் என் உரிமையை உரைப்பேன். அப்பொழுது இத்தோழியின் மறுப்பு என்ன ஆகும்?" என்பது தலைவன் கூற்று.

தான் காதலித்த பெண்ணை அப்பெண்ணுக்கு உறவினர் மணம் செய்து கொடுக்க மறுத்தால் நீதிமன்றத்தில் வழக்கிட்டு, அப்பெண்ணைப் பெறும் உரிமை அன்று இருந்ததை இப்பாடல் தெரிவிக்கிறது.

சொற்பொருள்

1. பணை - பருத்த; பாவை - சிறுமியர் விளையாட்டுப்பதுமை; தைஇயும் - செய்து கொடுத்தும்.
2. பஞ்சாய்ப் பள்ளம் - பஞ்சாய்க்கோரை வளர்ந்த நீர்நிலை; சூழ்ந்தும் - சுற்றித் திரிந்தும்.
3. உருத்து எழு - அரும்பி மேலெழுந்துள்ள, (உருத்து - சினந்து).
4. தொய்யில் - மகளிர் மார்பில் கருநிற மையால் வரையப்படும் சித்திரம்; காப்போர் - அவளை இன்று காப்பவர்கள் (தோழியர்); அறிதலும் அறியார் - அறவே அறியார்.
6. தன் - அவளை; கடவின் - வினவினால்; யாங்காவது? - என்ன ஆகும்?
7. பேதை மன்ற - (ஊர்) பெரிதும் பேதைமை வாய்ந்ததாயிருக்கிறது.
8. அளிது - இரங்கத்தக்கது; அழுங்கல் ஊர் - ஆரவாரத்தைக் கொண்ட ஊர்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1131 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை அடைய இயலாமல் அகற்றப்பட்ட தலைவன் வருந்திக் கூறியது.

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை, வலி.

தெளிவுரை

காமநோயினால் பீடிக்கப்பட்டுத் துன்பப்படுகின்ற காதலர்க்கு யார் துணையும் வாய்க்காதபோது மடலேறுதல்போல் பாது காப்பானதும் துணையானதும் வேறில்லை.

கருத்து

காதலியை அடைய இனி மடலேறுவது ஒன்றே வழி.

விளக்கம்

தான் விரும்பிய காதலியை அடைய இயலாத காதலன் அவளை அடைவதற்காகப் பனங்கருக்கினாலான குதிரைமேல் ஏறி (மடலேறி), ஊரார்க்குத் தன் காதலை வெளிப்படுத்துவான். அப்போது அவன் காதலியைப் பெற்ற பெற்றோர் அவனுக்குத் தம் மகளை மணமுடிப்பர்.

சொற்பொருள்

1. காமம் உழந்து - (அரிய மகளிரோடு) காமத்தை அனுபவித்து (பின் அது பெறாமல்); வருந்தினார்க்கு - துன்பம் அடைந்த ஆடவர்க்கு; ஏமம் - (அத்துன்பம் நீங்கப்) பாதுகாப்பு.
2. மடல் - பனை மடலாலே செய்யப்பட்ட குதிரை; அல்லது - தவிர; வலி இல்லை - வலிமை மிக்க துணை இல்லை.

தலைவன் கூற்று

திருக்குறள் 1132 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'நாணுடைய நுமக்கு அது இயலாது' என, மடல் விலக்கிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'நாணத்தை நீக்கி நீ மடலேறத் துணிய மாட்டாய்' எனக் கூறிய தோழியிடம் தலைவன் கூறியது.

நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து.

தெளிவுரை

'காமநோயின் வருத்தத்தைப் பொறுக்க மாட்டாமல், என் உடலும் உயிரும் வெட்கத்தையும் விலக்கிவிட்டு மடல் ஏறத் துணியும்' என்று தலைவன் கூறினான்.

கருத்து

'காம வேதனையைப் பொறுக்க மாட்டாமல் என் உடலும் உயிரும் வெட்கத்தை விட்டு மடலேறும்படி என்னைத் தூண்டுகின்றன.'

விளக்கம்

இழிவானதைச் செய்வதற்குத்தான் நாணத்தை விடக்கூடாதே தவிர, தனக்கு உரிமையான பெண்ணைப் பெறுவதற்கு நாணத்தை விடுதல் தவறாகாது.

சொற்பொருள்

1. நோனா - (காம நோயினைப்) பொறாது; மடல் ஏறும் - (அதற்குக் காப்பாய்) மடலேறத் துணியும்.
2. நாணினை - நாணத்தை; நீக்கி நிறுத்து - விலக்கிவிட்டு.

தலைவன் கூற்று

திருக்குறள் 1133 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

நாணம் மட்டுமன்றி நல் ஆண்மையும் உடையையாதலின் மடலேற முடியாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'நாணமும் நல் ஆண்மையும் கொண்ட உன்னால் மடலேற இயலாது' என்று கூறிய தோழியிடம் தலைவன் சொல்லியது.

நாணொடு நல்ஆண்மை பண்டுடையேன்; இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.

தெளிவுரை

முன்பு நாணும் சிறந்த ஆண்மையும் பெற்றிருந்தவன் நான்; அவை காமத்தால் நீங்கிவிட்டமையால் இன்றோ, காமம் மிக்கார் ஏறும் மடல் ஒன்றே என்னிடம் உள்ளது.

கருத்து

முன்பு நாணும் ஆண்மையும் கொண்டிருந்தேன்; இன்று மடல் மட்டுமே கொண்டுள்ளேன்.

விளக்கம்

காம இன்பத்தில் உழல்பவர் நாணத்தையும் இழப்பர்; நல்லாண்மையையும் இழப்பர். என் உயிர் உடலோடு நிற்கவேண்டுமாயின் மடலேறுவதன்றி வேறு வழியில்லை.

சொற்பொருள்

1. நாணொடு நல்ஆண்மை - நாணத்தையும், மிகுந்த ஆண்மையையும்; பண்டு - முன்பு; உடையேன் - கொண்டிருந்தேன்; இன்று - இன்றோ.
2. காமுற்றார் ஏறும் மடல் - காமம் மிகுந்தவர் ஏறுகின்ற மடலைக் (கொண் டிருக்கிறேன்.)

தலைவன் கூற்று

திருக்குறள் 1134 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

‘நாணும் நல்லாண்மையும் காம வெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவனவல்ல’ என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

‘காம வெள்ளத்தைக் கடக்கும் புணையாய் இருக்கும் நாணினையும் நல்லாண்மையையும் நீ எவ்வாறு நீக்க இயலும்?’ என்று கேட்ட தோழியிடம் தலைவன் சொல்லியது.

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

தெளிவுரை

விரைந்தோடும் காமப்பெருவெள்ளம், என் நாணம், நல்லாண்மை என்னும் படகுகளையே அடித்துச்சென்று விட்டதுவே! (நான் என்ன செய்வேன்?)

கருத்து

நாணமும் ஆண்மையுமாகிய படகுகளைக் காம வெள்ளம் என்னிட மிருந்து பிரித்து அடித்துக்கொண்டு போய்விட்டது.

விளக்கம்

ஆற்றைக் கடக்கப் பயன்படும் படகுகளைப் பெருவெள்ளம் அடித்துச் சென்றதுபோல, என் நாணத்தையும் ஆண்மையையும் காமப்பெருவெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது.

குறிப்பு

காமம், தெப்பங்களால் கடக்க இயலாத பெருவெள்ளம்.

சொற்பொருள்

1. காமக் கடும் புனல் - வேகம் மிக்க காமமாகிய வெள்ளம்.
1-2. நாணொடு நல்லாண்மை என்னும் புணை - (அவ்வெள்ளத்தைக் கடப்பதற்குள்ள) நாணம், நல்லாண்மை என்னும் தெப்பங்களை.
1. உய்க்குமே - வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டதே.

தலைவன் கூற்று

திருக்குறள் 1135 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'ஆற்றாமையும் மடலேறும் கருத்தும் நுமக்கெவ்வாறு வந்தன?' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மடலேறும் எண்ணம் உமக்கு எவ்வாறு தோன்றியது?' என்று கேட்ட தோழியிடம் தலைவன் சொல்லியது.

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உய்க்கும் துயர்.

தெளிவுரை

மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலையையும் சிறிய வளையல்களையும் அணிந்த இந்த அழகிய பெண்ணே, மாலைப்பொழுதில் வருத்தும் துயரையும், மடல்மா ஊர்தலையும் எனக்குத் தந்தனள். (இவளைக் காணுமுன் இவைபற்றி நான் அறியேன்.)

கருத்து

மாலைப்பொழுது வருத்தும் துன்பத்தையும் மடலேறும் எண்ணத்தையும் தந்தவள் இவளே!

விளக்கம்

"என் வாழ்வில் இதுகாறும் அமைதியாய் இன்புற்றிருந்தேன். இப்பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதிலிருந்து இவளை எண்ணியெண்ணி வேதனைப்படுகிறேன். மேலும், இவளை அடைய மடலேறி அல்லற்பட வேண்டியுமிருக்கிறது" என்று தலைவன் கூறுகிறான்.

சொற்பொருள்

1. தொடலை - மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை; குறுந்தொடி - சிறிய வளையல்; தந்தாள் - தந்தனள்; மடலொடு - மடல்மா ஊர்தலோடு.

2. மாலை - மாலைப்பொழுதில்; உய்க்கும் - அனுபவிக்கும்; துயர் - துன்பம்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1136 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'மடலூரும் பொழுது இன்றைக்குக் கழிந்தது' என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மடல் ஊர்வதற்குரிய நேரம் கடந்த பின்னரும் அதற்கான முயற்சி செய்வது ஏன்?' என்று தோழி கேட்டபோது அவளிடம் தலைவன் சொல்லியது.

மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்(கு)என் கண்.

தெளிவுரை

இளமை பொருந்திய இந்த அழகிய பெண்ணின் காரணமாய் என் கண்கள் உறங்காமலேயே இருக்கின்றன. எல்லோரும் உறங்கிக்கொண்டிருக்கும் நடுஇரவிலுங்கூட, உறுதியாய் மடல்மா ஏறிச் செல்வதையே என் உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருப்பேன்.

கருத்து

நள்ளிரவிலும் மடல்மா ஊர்தலையே எண்ணியிருப்பேன்.

விளக்கம்

எல்லாரும் உறங்கும் இரவில் மடலூரும் அவனைக் காண்பார் இரார்; அந்நேரத்தில் மடலூர்ந்தும் பயனில்லை. ஆனால், நடு இரவிலும் அவளைப்பற்றியும் அவளை அடையும் வழியைப் பற்றியுமே எண்ணித் தலைவன் உறக்கமுமின்றி வாடுகிறான். ஆதலால், 'அவளை அடைய நேரம், பொழுது என்பன எனக் கில்லை' என்று கூறுகிறான்.

சொற்பொருள்

2. பேதைக்கு - பேதைத் தன்மை கொண்ட (உன் தலைவியையே எண்ணியிருப்பதால்); என் கண் - என் கண்கள்; படல் ஒல்லா - (ஒருபோதும்) இமை பொருந்தா (அதனால்).
1. யாமத்தும் - (எல்லாரும் உறங்கும்) நள்ளிரவிலும்; மன்ற - உறுதியாய்; மடல் ஊர்தல் - மடல் மா ஏறுதலையே; உள்ளுவேன் - நினைப்பேன்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1137 **திருவள்ளுவர்**

திணை : பாலை

கூற்று

'மகளிரினும் ஆடவரன்றோ காமநோயால் வரும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்வர்' என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'துன்பத்தைப் பொறுத்துக்கொள்வதில் பெண்களினும் ஆண்கள் வல்லவர். அவ்வாறிருக்க, மடல் ஊர்தல் போன்ற செயலில் பெண்கள் ஈடுபடாதிருக்க, ஆண்கள் மட்டும் மடல் ஊர்வதேன்?' என்று வினாவிய தோழியிடம் தலைவன் கூறியது.

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்க(து) இல்.

தெளிவுரை

கடல் போன்று அளவின்றி மிகுந்த காம வேதனை மனத்தை வாட்டினாலும் மடல் ஏறுதலைச் செய்யாது, துன்பத்தைப் பொறுத்திருந்து வாழும் பெண்பிறப்பினைப்போல், பெருமைக்குரிய பிறப்பு உலகில் வேறு எங்கும் இல்லை.

கருத்து

மடலேறாது அடக்கத்தோடு இருக்கும் பண்பு பெண்டிரிடம் மட்டும் இருத்தலால் இவ்வகையில் அவர் பிறப்பே பெருமை வாய்ந்தது.

விளக்கம்

"அடக்கம் என்பது பெண்களிடமுள்ள தனிப் பண்பு. ஆண் களைப்போல அவர்கள் தம் மன நிலையை வெளிப்படுத்தார்" என்கிறான், தலைவன்.

சொற்பொருள்

1. கடல் அன்ன காமம் - கடல் போல் கரையற்ற காமநோய்; உழந்தும் - அனுபவித்தும்; மடல் ஏறா - மடல் மா ஏறாமல் (பொறுத்திருக்கிற).
2. பெண்ணின் - பெண்ணைப் போல்; பெருந்தக்கது - பெருமைக்குரிய பிறப்பு; இல் - (உலகில் வேறு எங்கும்) இல்லை.

தலைவன் கூற்று

திருக்குறள் 1096 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சேட்படுத்தியவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை நெருங்க உடன்படாது கடுஞ்சொற்களைக் கூறி அகன்று செல்லுமாறு தலைவனிடம் தோழி கூற, அவள் உள்ளுணர்வை அறிந்த தலைவன் தன்னுள்ளே சொல்லியது.

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

தெளிவுரை

தலைவியைத் தலைவன் நெருங்காதிருக்க, வெளித்தோற்றத் திற்கு அயலார்போலத் தோழி கடுஞ்சொற்களைச் சொன்னாள்; ஆயினும், 'அது உள்ளுக்குள்ளே பகையில்லாத பேச்சு என்பதை விரைவில் அறிவேன்' என்கிறான், தலைவன்.

கருத்து

தோழி, தன் உரையினால் இசையாமை காட்டினும், அவள் உள்ளத்தின் அன்பை விரைவில் உணர்வேன்.

விளக்கம்

தலைவியைத் தலைவன் நெருங்காதிருக்க, தோழி அயலார் போலக் கடுஞ்சொற்களைக் கூறினாள். ஆயினும், தலைவன் அறிவுடையனாதலின், அத்தகைய சொற்களால் தளராது, தன் குறை முடிக்கக் கருதியே தான் அவ்வாறு நீக்கி வைக்கப்படுவதைக் குறிப்பால் அறிந்துகொள்கிறான்.

சொற்பொருள்

1. உறாஅதவர் போல - அயலார் போல; சொலினும் - (கடுஞ்சொற்களைக்) கூறினாலும்; செறாஅர் - பகையில்லாதவர்; சொல் - சொற்கள் என.
2. ஒல்லை - விரைவில்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1097 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சேட்படுத்தியவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனை அகலுமாறு தோழி சொன்ன சொற்கள், தொடர்பில்லாதவரிடம் கூறப்பட்டவைபோலப் பிறர்க்குத் தோன்றினாலும், அவை அவள் உள்ளப்பிணைப்பை உணர்த்துவதைக் குறிப்பால் அறிந்து தலைவன் கூறியது.

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்(று) உற்றார் குறிப்பு.

தெளிவுரை

புறத்தே அயலார்போல இருந்து கூறும் பகை கொள்ளாத கடுஞ்சொல்லும், பகைவர்போல் பார்க்கும் பார்வையும் அகத்தே அன்பு கொண்டவரின் குறிப்பு ஆகும்.

கருத்து

தோழியின் வெகுண்ட சொல்லும் பார்வையும் அவள் இணங்கற்குறிப்பு என்பதைத் தலைவன் குறிப்பால் உணர்ந்தான்.

விளக்கம்

சினம் இல்லாமலே சினந்தாற்போல் கூறுபவையும், பகை இல்லாமலே பகைத்தாற்போல் பார்க்கும் பார்வையும், உறவில்லாதவர்போல் உறவாய் இருப்பவரின் குறிப்புகள் ஆகும்.

சொற்பொருள்

1. செறாஅ - சினமில்லாத; சிறு சொல் - (சினம் கொள்வது போன்ற) மறுப்புச் சொல்; செற்றார் - சினம் கொண்டவர் (போன்ற); நோக்கும் - பார்வையும்.
2. உறார் போன்று - (காம நோய்) இல்லாதவர் போன்று (காட்டிக் கொள்ளும்); உற்றார் - (காமநோய்) அடைந்துவிட்ட பெண்களின்; குறிப்பு - அடையாளம்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1098 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவனைச் சேட்படுத்தியபோது, தலைவி அவனை ஒரு குறிப்போடு நோக்கியது கண்டு அவன் மகிழ்ந்து கூறியது.

அசைஇயற்(கு) உண்(டு)ஆண்(டு)ஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

தெளிவுரை

தோழியின் கடுமையான சொற்களைக் கேட்டு வருத்தமுற்று நான் தலைவியை நோக்கினேன்; அவள் என்மீது இரக்கங் கொண்டு மெதுவாய்ப் புன்முறுவல் புரிந்தாள். அவளது அந்தச் சிரிப்பினிலே ஒரு நன்மைக்குறிப்பு இருப்பதை உணர்ந்து நான் மகிழ்ந்தேன்.

கருத்து

தலைவியின் முறுவலில் ஓர் அழகிய குறிப்பு உள்ளது எனத் தலைவன் கருதுகிறான்.

விளக்கம்

('ஆண்டு' என்பதால், தலைவி தொலைவில் நிற்பதைக் குறிக் கிறான்.) நான் பார்க்கும்போது புன்முறுவல் பூத்தலால் அவள் பிரிந்து நிற்பினும் என்னிடம் அன்பு கொண்டுள்ளதைப் புரியச் செய்கிறாள்.

சொற்பொருள்

1. யான் நோக்க - நான் பார்த்தபோது.
2. பசையினள் - அன்பு கொண்டவளாய்; பைய நகும் - புன்முறுவல் செய்வாள்.
1. அசை இயற்கு - அசையும் மெல்லிய இயல்பு வாய்ந்த அவளின்; ஆண்டு - அந்தச் சிரிப்பில்; ஓர் ஏர் - ஓர் அழகிய குறிப்பு; உண்டு - உள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1113 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'நின்னாற் கருதப்பட்டாளை அறியேன்' என்று சேட்படுத்திய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி சேட்படுத்தியபோது தலைவன், தான் முன்னரே தலைவியை அறிந்திருப்பதைத் தோழிக்குக் குறிப்பால் சொல்லியது.

முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்,
வேல்உண்கண், வேய்த்தோள் அவட்கு.

தெளிவுரை

நான் கண்ட என் தலைவியின் தோள், மூங்கில் போன்றது; நிறம், மாந்தளிர் போன்றது; பல், முத்துப் போன்றது; அவளிடம் தோன்றும் நறுமணம், இயற்கை மணம் வாய்ந்தது; மையுண்ட கண்கள், வேல் போன்றவை.

கருத்து

தலைவி மூங்கிலனைய தோளும், தளிர் போன்ற மேனியும், முத்தனைய முறுவலும், இயற்கை மணமும், வேல் போன்ற கண்களும் கொண்டவள்.

விளக்கம்

முன்னரே தலைவியின் புன்முறுவலைக் கண்டும், தளிர் மேனியைத் தழுவியும், மேனியின் இயற்கை மணத்தை நுகர்ந்தும் இருப்பதைத் தலைவன் தோழிக்குக் குறிப்பால் புலப்படுத்து கிறான்.

சொற்பொருள்

2. வேய்த்தோள் அவட்கு - மூங்கில் போன்ற தோளைக் கொண்டவளுக்கு.
1. முறிமேனி - மாந்தளிர் போன்ற நிறம்; முத்தம் முறுவல் - முத்துப் போன்ற பல்; வெறி நாற்றம் - இயற்கை மணம்.
2. வேல் உண்கண் - மை தீட்டப்பெற்ற வேல் போன்ற கண்கள்.

தலைவன் கூற்று

நற்றிணை 377 **மடல் பாடிய மாதங்கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன், தோழி கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை அடையத் தலைவன் அவள் தோழியின் உதவியை நாட, அவளோ தலைவியை நெருங்கவிடாது தலைவனைத் தடுத்து அப்புறப்படுத்துகிறாள். அப்போது, தலைவன் அவளுக்குக் கேட்குமாறு தனக்கு இரக்கம் காட்டும் வகையில் தன் நெஞ்சத்திடம் சொல்லியது.

மடல்மா ஊர்ந்து, மாலை சூடி,
கண்அகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒள்நுதல் அரிவை நலம்பா ராட்டி,
பண்ணல் மேவலம் ஆகி, அரிதுஉற்று,
அதுபிணி ஆக, விளியலம் கொல்லோ.
அகல்இரு விசும்பின் அரவுக்குறை படுத்த
பசுங்கதிர் மதியத்து அகல்நிலாப் போல,
அளகம் சேர்ந்த திருநுதல்
கழறுபு மெலிக்கும் நோய்ஆ கின்றே.

தெளிவுரை

அகன்ற பெரிய வானிலே அரவு விழுங்குதலால் கறைப் படுத்தப்பட்டு விளங்குகிறது, பசிய கதிர்களைக் கொண்ட அழகிய நிலவு. அந்நிலவின் ஒரு பாதி போன்று கூந்தல் சூழ்ந்த அழகிய நெற்றியைக் கொண்டவள், இத்தலைவி; நான் அவளை நினைக்குந்தோறும் என் எதிரே தோன்றி, என் தோழர்கள் என்னை இடித்துரைக்குமளவுக்கு என் தோளை மெலியச் செய்துவிட்டனள். ஆதலால், எனக்குக் காமநோய் மிகுந் துள்ளது. அந்நோய் தீரப் பனைமடலாலே செய்யப்பட்ட குதிரைமீது ஏறி, பல வகை மலர்களாலாகிய மாலையினைச் சூடிக்கொண்டு, இடமகன்ற நாடுகளிலும் ஊர்களிலும், ஒள்ளிய

நெற்றியினைக் கொண்ட தலைவியின் அழகினைப் பாராட்டிச் சொல்ல வேண்டும் என்னும் எண்ணத்தைத் தவிர்த்துவிட்டேன். இந்த எண்ணமே நெஞ்சத்தில் நிலையாய் நின்று, அதுவே நோயாய்ப் பெருகி இறந்துவிடவும் நேராதோ? நெஞ்சமே! இனி என் செய்வோம்?

கருத்து

'மடலேறித் தலைவியை அடைய வேண்டும்; அன்றெனில் காம நோய் மிக்கு உயிர்விட நேரிடும்' என்னும் நிலையில், தலைவன் மடலேறுதலைத் தவிர்த்து, உயிர் துறத்தலே நலம் என்கிறான்.

குறிப்பு

'நோய் கொண்டு மெலிந்து மெலிந்து, முடிவில் இறப்பேனேயல்லாது மடலேறுதலை மேற்கொள்ள மாட்டேன்' எனத் தலைவன் சொல்வதைக் கேட்டுத் தோழி, தலைவியை அவனோடு கூட்டுவித்து அவன் ஏக்கத்தைப் போக்குவாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மடல் மா - பனைமடலால் செய்யப்பட்ட குதிரை; மாலை - எருக்கு, ஆவிரம், பூளை ஆகியவற்றை விரவிக் கட்டிய மாலை.
2. கண்அகன் - இடம் அகன்ற; வைப்பு - நிலப்பகுதி.
3. அரிவை - பெண், தலைவி; நலம் - அழகு.
4. பண்ணல் - (எனது காதலை) உலகறியச்செய்தல், மேவலம் - பொருந்தோம், மேற்கொள்ளமாட்டோம்.
5. அது பிணி ஆக - எம் காதலே நோயாய்ப் பெருக; விளியலம் - இறந்து போக நேராதோ?
6. அகல் இரு - அகன்ற பெரிய; அரவு - பாம்பு; குறைபடுத்த - (பாம்பால்) கறைப்படுத்தப்பட்ட.
7. மதியம் - நிலவு.
8. அளகம் - கூந்தல்; சேர்ந்த - கதுவப்பட்ட, சூழ்ந்த; நுதல் - நெற்றி.
9. கழறுதல் - இடித்துரைத்தல்; மெலிக்கும் - மெலிய வைக்கும்; நோய் ஆகின்று - நோய் ஆகிவிட்டது.

தலைவன் கூற்று

குறுந்தொகை 32 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்றான் கூறியது.

கூற்று விளக்கம்

பின்னிற்றல் - தலைவியை அடைய விரும்பும் தலைவன், அவள் தோழியிடம் தனக்கு உதவுமாறு கேட்பது.

காலையும், பகலும், கையறு மாலையும்,
ஊர்துஞ்சு யாமமும், விடியலும் என்றுஇப்
பொழுதுஇடை தெரியின், பொய்யே காமம்;
மாஎன மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே;
வாழ்தலும் பழியே – பிரிவுதலை வரினே.

தெளிவுரை

காலை, உச்சிப்பகல், பிரிந்தோர் செயலற்று வருந்தும் மாலை, ஊரார் மெய்ம்மறந்து உறங்கும் நள்ளிரவு, வைகறை என்னும் இவ்வைந்து சிறுபொழுதுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் ஒருவர்க்குத் தோன்றுமாயின், அவர் காதல் கொண்டுள்ளார் என்பது பொய்யாகும். இடைவெளியே தெரியாக் காமக் கூட்டத்தின்போது தலைவியைப் பிரியும் நிலை நேரிடுமாயின், ஓடும் குதிரை என்று சொல்லத்தக்க பனங்கருக்காலான குதிரை மேலேறி, தெருவில் தோன்றி, 'இவள்தான் என்னை வருந்தச் செய்தவள்' என்று கூறிப் பலரும் அறியச்செய்தால் அதனால் அவளைப் (தலைவியைப்) பழித்துரைக்க நேரும். அவளைப் பிரிந்து வாழ்தலும் எனக்கு அரிது; ஆதலின், உயிர் நீத்தலே நன்று.

கருத்து

'மடலூர்ந்தால் தலைவிக்குப் பழியாகும்; மடல் ஊராது போயின் என் வாழ்வே பழிப்புக்குள்ளாகிவிடும். அதனால், நான் உயிர் நீப்பேன்' எனத்

தலைவன், தோழிக்கு இரக்கமுண்டாகும் வகையில் தலைவன் தோழியிடம் கூறுகின்றான்.

விளக்கம்

பொழுதுகள் கழிவதைக் காதலர் உணர்வதில்லை; அவை உணரப்படுமாயின் அவர் காமம் கொண்டுள்ளனர் என்பது பொய்யாகும். காதலர் எப்பொழுதும் இணைந்திருப்பதால் 'இஃது இன்ன பொழுது' என அறியார்.

சொற்பொருள்

1. கையறுதல் - செயலற்று வருந்துதல்.
2. யாமம் - நள்ளிரவு; விடியல் - வைகறை.
3. பொழுது இடை தெரியின் - இஃது இன்ன பொழுது என்று அறிவராயின்.
4. மடலொடு - பனங்கருக்காலான குதிரையில் ஏறி; மறுகில் - தெருவில்.
5. தெற்றெனத் தூற்றலும் பழியே - இவள்தான் என்னை வருந்தச் செய்தவள் என்று பலரும்அறியச் செய்தால் அவளுக்குப் பழியுண்டாகும்; பிரிவு தலைவரின் - பிரிவு வருமாயின்.

தோழி கூற்று

நற்றிணை 301 **பாண்டியன் மாறன் வழுதி**

திணை : குறிஞ்சி

கூற்று

சேட்படுத்து, 'பிரிவின்கண் அன்பின் இயற்கையில் தகுவகையதோர் ஆற்றாமையினான்' என்று தோழி தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் வேண்டுகோளுக்கு இயையாது மறுத்துக் கூறினோம். அவன் படும் துன்பமும் அறிந்தோம்; நம் அன்னையோ தலைவியைப் புகழ்ந்து உறவு பாராட்டுகிறாள். இப்பொழுது நாம் தலைவியைத்

தலைவனுடன் கூட்டுவிப்பதை அன்னை அறிந்தால் அவள் எத்தன்மையள் ஆவளோ?' என்று தோழி தன்னுள்ளே சொல்லிக்கொள்வது.

'நீள்மலைக் கலித்த பெருங்கோல் குறிஞ்சி
நாள்மலர் புரையும் மேனி, பெருஞ்சுனை
மலர்பிணைத்து அன்ன மாஇதழ் மழைக்கண்,
மயிலோர் அன்ன சாயல், செந்தார்க்
கிளியோர் அன்ன கிளவி, பணைத்தோள்,
பாவை அன்ன வனப்பினள் இவள்'என,
காமர் நெஞ்சமொடு பலபா ராட்டி,
யாய்மறப்பு அறியா மடந்தை
தேம்மறப்பு அறியாக் கமழ்கூந் தலளே.

தெளிவுரை

" 'எம் தலைவி, தேனினம் மறவாது மொய்க்கும் மணமிக்க கூந்தலைக் கொண்டவள்; நீண்ட மலைத்தொடரில் முளைத்த பெருத்த தண்டினைக் கொண்ட குறிஞ்சியின் அன்றலர்ந்த மலர் போலும் மேனியள்; பெருஞ்சுனையில் தோன்றிய நீல மலர் இரண்டனை இணைத்தாற்போன்ற கரிய இமைகள் இமைக்கும் குளிர்ச்சி பொருந்திய கண்களைக் கொண்டவள்; மயில் போன்ற சாயலினள்; கழுத்தில் சிவப்பு வரி கொண்ட கிளிபோலப் பேசும் மழலைப் பேச்சினள்; மூங்கில் போன்ற பணைத்த தோளினள்; கொல்லிப்பாவைபோலும் அழகு வாய்ந்தவள்' என்று பாராட்டி, இவளைச் சிறுபொழுதுகூட மறக்க இயலாதவளாய் இருக்கிறாள், பெற்றெடுத்த நற்றாய். இவளை நான் தலைவனோடு கூட்டுவிப்பதை அறிந்தால் அத்தாய் என்ன நிலை அடைவளோ என அஞ்சுகிறேன்" என, தலைவன் வேண்டுகோளுக்கு இயையாது மறுத்த தோழி, தன்னுள்ளே சொல்லிக்கொள்கிறாள்.

கருத்து

தலைவனையும் தலைவியையும் ஒன்றுபடுத்த விரும்புகிறாள், தோழி. அப்போது, தாய் தன் மகளிடம் கொண்டுள்ள மிகுந்த அன்பைச் சிந்தித்துப் பார்க்கிறாள். 'இப்போது நாம் இத்தலைவியைத் தலைவனுடன் கூட்டுவித்தால், மகளைத் தன்னிடமிருந்து பிரித்துவிட்டாள் என்று தாய் கூறுவளே!' எனும் அச்சத்தால் தோழி, தலைவனைச் சேட்படுத்துகிறாள்.

குறிப்பு

தோழியின் பேச்சினைக் கேட்கும் தலைவனும் தலைவியின் அருமையை அறிந்து, அவளை விரைவில் மணந்து இனிது வாழ்வது பற்றிச் சிந்திப்பான்.

சொற்பொருள்

1. நீள் மலை - நீண்ட மலை; கலித்த - முளைத்த; பெருங்கோல் - பெரிய தண்டு.
2. நாள் மலர் - அன்றலர்ந்த மலர்; புரையும் - போலும்.
3. மலர் - குவளை மலர்; பிணைத்து அன்ன - இணைத்தது போன்ற; மா இதழ் - கரிய இமை; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.
4. செந்தார் - கழுத்தில் உள்ள சிவப்பு வரி.
5. கிளவி - பேச்சு; பணை - பெரிய.
6. பாவை - கொல்லிப்பாவை; வனப்பு - அழகு.
7. காமர் - விருப்பம்.
8. யாய் - தாய்; மறப்பு அறியா - சிறிது பொழுதுகூட மறக்கவியலாத.
9. தேம் - தேன், தேன் வண்டு; கமழ் - மணத்தல்.

தோழி கூற்று

குறுந்தொகை 1 **திப்புத்தோளார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி கையுறை மறுத்தது.

(கையுறை - அன்பளிப்பு; அன்பு பாராட்டித் தலைமகன் தலைமகளுக்குக் கொடுக்கும் தழை முதலியன.)

கூற்று விளக்கம்

தலைவன் செங்காந்தள் பூக்களைக் கையுறையாய்க் கொணர்ந்து தோழியிடம் கொடுத்துத் தலைவியின் கூட்டத்தை அடைவதற்கு முயல்கிறான். தோழி அவற்றை ஏற்க மறுத்துக் கூறியது.

செங்களம் படக்கொன்று, அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

தெளிவுரை

தலைவனே! போர்க்களம் எங்ஙனும் குருதியால் சிவப்புறுமாறு தன்னை எதிர்த்த அவுணர்களை, அவர்கள் இலர் என்னும்படி முற்றாய் அழித்தவன், முருகப்பெருமான். அவன், குருதிபட்டுச் சிவந்த திரண்ட அம்பினையும், பகைவர்களைக் குத்திக் கொன்றதால் சிவந்த கொம்புகளைக் கொண்ட யானையினையும் கொண்டவன்; கழல்கின்ற வீர வளையினையும் அணிந்தவன். அவனுக்குரிய இம்மலையில் குருதி நிறம் கொண்ட காந்தள் பூக்கள் குலைகுலையாய் உள்ளன.

கருத்து

'காந்தள் பூ எங்களுக்கு அரும்பொருள் அன்று; எமது மலையில் இது நிரம்ப இருப்பதால் உம் கையுறையை ஏற்க மறுக்கிறோம்.'

குறிப்பு

தோழி, தலைவனைத் தலைவியுடன் சேர்த்து வைக்க விரும்புகின்றாள். ஆனால், தலைவி தன் எண்ணத்தை அதுவரை வெளிப்படக் கூறவில்லை. எனவே, அவள் ஒப்புதலைப் பெறும்வரை தலைவனை அகற்றி வைக்கவே தோழி விரும்புகிறாள். ஆகவே, அவனிடம், 'நீ கொண்டுவந்துள்ள செங்காந்தள் மலர்கள் எங்கள் மலையில் ஏராளமாய் உள்ளன; அதனால் உன் அன்பளிப்பு வேண்டா' என்று கூறி ஏற்க மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. செங்களம் - போர்க்களம்; அவுணர் - அசுரர்; தேய்த்த - அழித்த.
2. செங்கோடு - செந்நிறம் படிந்த தந்தம்.
3. கழல் தொடி - வீரக்கழலணிந்த; சேஎய் - முருகன்.
4. குருதிப் பூ - குருதி நிறமுள்ள காந்தள் பூ; குலைக்காந்தட்டு - கொத்துக் கொத்தாய் உள்ளன.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 187 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி, கையுறை மறுத்தது.

கூற்று விளக்கம்

தக்க காரணம் சொல்லிக் கையுறையை ஏற்க முடியாதென்று தோழி கூறியது.

நொதும லாளர் கொள்ளார் இவையே;
எம்மொடு வந்து கடலாடு மகளிரும்
நெய்தல்அம் பகைத்தழைப் பாவை புனையார்;
உடலகம் கொள்வோர் இன்மையின்,
தொடலைக்கு உற்ற சிலபூ வினரே.

தெளிவுரை

தலைவ! நீ கொடுக்கும் இத்தழையுடை, நெய்தல் பூவை மிகுதியாய் வைத்து அதற்கு மாறுபட்ட நிறங்களைக் கொண்ட மலர்களாலும் தழைகளாலும் தொடுக்கப்பட்டுள்ள 'பகைத்தழையுடை' ஆகும். எம்மொடு வந்து கடல்விளையாட்டயரும் எம் தோழிமார் தம் விளையாட்டுப்பாவைக்குக்கூட இதனைப் புனைய மாட்டார். இப்பூக்களனைத்தையும் பயன்படுத்துவார் எவரும் இங்கு இலர்; இவற்றை உடம்பில் அணிந்து கொள்ளுபவர் இன்மையால் மாலைதொடுப்பார்கூட இவற்றுள் சில பூக்களை மட்டுமே கொள்வர். ஆதலின், நீ தரும் இதனை ஏற்றுக்கொண்டால் அயலவருக்கு ஐயம் உண்டாகும்.

கருத்து

'இயல்பல்லாத ஒன்றை அணிவது ஐயத்திற்கு இடனாகும் என்று தழையுடையை ஏற்கத் தோழி மறுத்தனள்.

குறிப்பு

தலைவிக்கு அன்பளிப்பாய்த் தலைவன் கொண்டுசெல்லும் தழை, கண்ணி, முத்து, பவளக்கொடி முதலியவை 'கையுறை' எனப்படும்.

பகைத்தழை - ஒருவகைத் தளிரைத் தலைமையாகவும் மற்ற பல்வேறு நிறத் தழைகளை உடன் சேர்த்தும் தொடுக்கப்படும் தழையாடை, 'பகைத்தழை' எனப்படும்.

சொற்பொருள்

1. நொதுமலாளர் - உறவு, பகை ஆகிய இரு நிலையினரும் அல்லாத அயலோர்.
2. கடலாடு மகளிர் - கடல்விளையாட்டயரும் தோழிமார்.
3. பாவை - விளையாட்டுப்பாவை.
4. உடலகம் கொள்வோர் - உடம்பில் அணிந்துகொள்வோர்.
5. தொடலைக்கு உற்ற - மாலை தொடுப்பதற்குக்கூட.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 20 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கையுறை மறை.

கூற்று விளக்கம்

கையுறை மறை - தலைவியின் கையில் சேர்க்கும்படி தலைவன் பரிசாய்க் கொண்டுவந்த பொருளை, ஏதேனும் ஒரு காரணம் கூறித் தோழி மறுத்தல்.

நாள்வேங்கை பொன்விளையும் நல்மலை நல்நாட!
கோள்வேங்கை போல்கொடியார் என்ஐயன்மார் – கோள்வேங்கை
அன்னையால் நீயும், அருந்தழை,யாம் ஏலாமைக்(கு)
என்னையோ? நாளை எளிது.

தெளிவுரை

"அன்றலர்ந்த வேங்கை மலர்கள் பொன்போன்ற தாதுகளை உதிர்க்கும் மலைநாட்டுத் தலைவனே! (இன்று இங்கு வரப்போகும்) என் தமையன்மார் வன்புலி போன்ற கொடுமை மிக்கவர். நீயும் வலிமைமிக்க பெரும்புலியை ஒத்துள்ளாய்! (ஆகலின், நீ இங்கு இருப்பின் போர் விளைதல் கூடும்.) நீ கொணர்ந்த அருமையான இத்தழையினை ஏற்றுக்

கொள்ளாமைக்கு வேறு காரணம் ஏதுமில்லை. நாளை நீ இதனைக் கொண்டுவந்தால் ஏற்றுக்கொள்வதில் தடையில்லை" என்று தோழி தலைவனிடம் கூறிக் கையுறை மறுத்தாள்.

கருத்து

'இன்று என் தமையன்மார் வருகின்றனர்; அதனால் உடனே சென்றுவிடு' என்று கூறித் தோழி, தலைவன் தந்த கையுறைப்பொருளை ஏற்க மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. நாள் வேங்கை - அன்று பூத்த வேங்கைப்பூக்கள்; பொன் விளையும் - பொன் போன்ற தாதுக்களை உண்டாக்கும்.
2. கோள் வேங்கை - வலிமைமிக்க புலி; ஐயன்மார் - தமையன்மார்.
3. (நீயும் அவ்வாறே) அன்னை - ஒத்துள்ளாய்; அருந்தழையாம் - அருமையான இத்தழையினை; ஏலாமைக்கு - ஏற்றுக்கொள் ளாமைக்கு.
4. என்னையோ? - (இதுவன்றி வேறு காரணம்) என்ன உள்ளது? (ஒன்றுமில்லை.)

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 28 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

கையுறை மறுத்தல்.

கூற்று விளக்கம்

தலைவியிடம் கொடுக்குமாறு தலைவன், தோழியிடம் தரும் அன்பளிப்புப் (கையுறைப்) பொருளை அத்தோழி பெற்றுக்கொள்ள மறுத்தல்.

தீங்கதிர் வாள்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவல்
ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்துஎன்று வைகலும் மால்மகன்போல்
வருதிர் ஐய!

வீங்குஓதம் தந்து விளங்குஒளிய வெண்முத்தம்
விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல் மீளும்
புகாரே எம்ஊர்!

தெளிவுரை

"இனிய கதிர்களைப் பொழியும் திங்களைப் போன்ற ஒளி பொருந்திய முகத்தினைக் கொண்ட தலைவியின் சிவந்த வாயில் உள்ள அழகிய பற்களுக்கு (நீ கொடுக்கும்) இம்முத்துகள் நிகராகா! என்றாலும், 'இம்முத்துகளை வாங்கிக்கொள் ளுங்கள்' என்று கூறி நீயும் ஒவ்வொரு நாளும், பித்தேறி மயங்கியவனைப் போல வருகின்றாய்! ஐயனே! ஒலிமிக்க கடல்அலை, ஒளிமிக்க வெண்முத்துகளைத் தந்து (முத்துகளைக் கரையிலே இறைத்து), அவற்றிற்கு ஈடாய்க் கானலிலே கிடக்கும் மணம் பொருந்திய பூமாலைகளை அள்ளிக்கொண்டு வணிகர் போல மீண்டு செல்கின்ற புகார் நகரமன்றோ எம் ஊர். (எம் ஊர், முத்துவளம் மிக்கது. கடற்கரைச் சோலையில் இறைந்து கிடக்கக் கூடியது. எனவே, நீ கொடுக்கும் முத்து வேண்டா" என்று தோழி மறுத்தாள்.)

கருத்து

முத்து எங்கட்கு அரிய பொருளன்று; ஆதலின், இக்கையுறை வேண்டா.

குறிப்பு

பூம்புகார் நகரில் கடல் அலைகள் முத்துகளைக் கரையில் இறைத்து விட்டு, கரையில் கிடக்கும் பூமாலைகளை உள்ளே இழுத்துச் செல்கின்றன. (அலை, பண்டமாற்று வாணிகம் செய்கிறது.)

சொற்பொருள்

1. தீம் - இனிய; வாள் - ஒளி; முறுவல் - பல்; ஒவ்வா - நிகராகா.
2. வைகல் - நாள்தோறும்; மால்மகன் - பித்தேறியவன்; வருதிர் - வருகின்றீர்.
3. வீங்குதல் - பூரித்து ஒலித்தல்; ஓதம் - கடல் அலை; முத்தம் - முத்து; விரை - மணம்; கானல் - கடற்கரைச்சோலை.
4. கோதை - மாலை; விலைஞர் - வணிகர்; புகார் - புகார் நகரம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 21 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆற்றானாய தலைமகனைத் தோழி ஏன்றுகொண்டு கையுறை எதிர்ந்தது.

(ஏன்றுகொண்டு - ஏற்றுக்கொண்டு; கையுறையை ஏற்றுக்கொள்ளுதல்.)

கூற்று விளக்கம்

கையுறையை ஏற்காவிட்டால் தலைவன் மிகவும் வருந்துவான் என்பதால் அவன் தந்த தழையைத் தோழி பெற்றுக்கொள்ளுதல்.

பொன்மெலியும் மேனியாள் பூஞ்சுணங்கு மென்முலைகள்
என்மெலிய வீங்கினவே பாவம்என்(று) – என்மெலிவிற்(கு)
அண்கண்ணி வாடாமை யால்,நல்ல என்(று)ஆற்றான்
உண்கண்ணி வாடாள் உடன்று.

தெளிவுரை

“பொன் தோற்கும் நிறம் கொண்ட மேனியைக் கொண்ட தலைவியின் அழகிய தேமல் படர்ந்த மென்மையான கொங்கைகள், எதற்காக நான் வருந்துமாறு பருத்துக் காணப் படுகின்றன? ஐயோ, பாவம்” என்று தலைவன் கூறினான். அது கேட்ட தோழி, “தலைவ! இதற்காக நீ ஏன் வீணாய் மெலி கின்றாய்! நீ கொண்டுவந்த இந்தக் குறுங்கண்ணியான தழை வாடிப் போகாதபடி நான் தலைவியிடம் கொண்டுசென்று நல்லது என்று காட்டினால், மையுண்ட கண்களைக் கொண்ட அவள் மாறுபட்டு வருந்தாதவளாய் ஏற்றுக் கொள்வாள்” என்று தலைவனிடம் சொன்னாள்.

கருத்து

‘கையுறையைத் தலைவி ஏற்கச் செய்வேன்; நீ ஐயப்பட்டு மெலிய வேண்டா.’

குறிப்பு

‘தழை வாடிவிடாதவாறும் உன் உடலும் வாடிவிடாதவாறும் செய்வேன்; தழையைத் தலைவியிடம் சேர்ப்பதுபோல உன்னையும் தலைவியுடன் கூட்டுவேன்’ எனத் தோழி குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பொன் மெலியும் - (உருக்கி வார்த்த) பொன்போல ஒளி விட்டுக் காணும்; பூ - அழகிய; சுணங்கு - தேமல்.
2. என் - எதற்காக?; மெலிய - (நான்) வருந்தும்படியாய்.
3. அண்கண்ணி - (நீ கொண்டுவந்த இக்) குறுங்கண்ணி; ஆற்றான் - வழிமுறைப்படி காட்டினால் (ஆறு - வழி).
4. உண்கண்ணி - மையுண்ட கண்களைக் கொண்ட தலைவி; உடன்று - மாறுபட்டு; வாடாள் - வருந்தாதவளாய் (ஏற்றுக் கொள்வாள்).

தோழி கூற்று

நற்றிணை 245 **அல்லங்கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறை நேர்ந்த தோழி, தலைமகளை முகம்புக்கது.

(முகம்புகுதல் - எதிர் சென்று நிற்றல்.)

கூற்று விளக்கம்

தன்னிடம் வந்து வேண்டிய தலைவன் குறையை முடிப்பதாய் உடன்பட்ட தோழி, தலைவியிடம் வந்து, அவள் குறிப்பைத் தன் வயம் ஆக்குவாளாய் உரையாடியது.

நகையா கின்றே தோழி! 'தகைய
அணிமலர் முண்டகத்து ஆய்பூங் கோதை
மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇ,
துணிநீர்ப் பெளவம் துணையொடு ஆடி,
ஒழுகுநுண் நுசுப்பின், அகன்ற அல்குல்,
தெளிதீம் கிளவி! யாரை யோ,என்
அரிதுபுணர் இன்உயிர் வெளவிய நீ'எனப்
பூண்மலி நெடுந்தேர்ப் புரவி தாங்கி,
தான்நம் அணங்குதல் அறியான், நம்மின்
தான்அணங் குற்றமை கூறிக் கானல்
சுரும்புஇமிர் சுடர்நுதல் நோக்கிப்,
பெருங்கடல் சேர்ப்பன் தொழுது நின்றதுவே.

தெளிவுரை

“தலைவியே! நீலமணி போலும் கூந்தலில் அழகிய முள்ளி மலர்களை ஆய்ந்தெடுத்துத் தொடுத்த பூமாலையைச் சூடி, தெளிந்த நீர் நிறைந்த கடலில் தோழியருடன் விளையாடி யிருந்தோம். அவ்வேளையில், ‘நேர்த்தியான நுண்ணிய இடை யினையும், அகன்ற அல்குலினையும், தெளிந்த இனிய மொழி யினையும் கொண்டவளே! பெறுதற்கரிய என் உயிரைப் பற்றிக் கொண்ட நீ யாரோ’ என்று கேட்டவண்ணம், நெடிய பூணணிந்த தேரில் பூட்டிய புரவியைக் கையில் பற்றியவண்ணம், அவன் வந்து நின்றான்.

“நம் மனத்தைக் கவர்ந்து அவன் வருத்துவதை அறியாமல், நம்மால் அவன் வருத்தப்பட்டதாய்க் கூறினான். அத்துடன் அமையாது, கடற்கரைச்சோலையில் நாம் நின்றபோது, வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் ஒளி பொருந்திய நமது நெற்றியை நோக்கி, அப்பெரிய கடல்நிலத் தலைவன் கை தொழுதும் நின்றான். இது நகைப்பைத் தருவதாயுள்ளது” எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் நம்மைத் தொழுது நிற்கிறான். அவன் வேண்டுகோள் ஏற்கப்பட வேண்டியதே’ எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

தலைவிக்கும் தலைவனுக்கும் முன்னரே ஏற்பட்டிருந்த உறவினைத் தான் அறிந்தமை புலப்படவும், அதே வேளை, தான் ஏதும் அறியாதவள் போலவும் தோழி பேசுகிறாள். தலைவனைப்பற்றிச் சொல்லும்போது தலைவியிடம் தோன்றும் மெய்ப்பாடுகளை அறிந்து, அவளைத் தலைவனோடு சேர்த்து வைப்பாள்.

சொற்பொருள்

1. நகையாகின்றே - நகைப்பைத் தருகின்றது; தகைய - மிக்க.
2. அணிமலர் - அழகிய மலர்; முண்டகம் - முள்ளி மலர்; ஆய் பூங்கோதை - ஆய்ந்தெடுத்துத் தொடுக்கப் பெற்ற பூ மாலை.
3. மணிமருள் - நீலமணி போலும்; தைஇ - சூடி.
4. துணி நீர்- தெளிந்த நீர்; பௌவம் - கடல்.

5. ஒழுகு நுண் நுசுப்பு - நேரிதாய்ச் சிறுத்த இடை.
6. தெளி - தெளிந்த; தீம் கிளவி - இனிய சொல்; யாரையோ? - நீ யாரோ?
7. வௌவிய - கவர்ந்த.
8. பூண்மலி - நெடிய பூண் அணிந்த; புரவி - குதிரை; தாங்கி - கையால் பற்றியவண்ணம்.
9. தான் - அவன்; அணங்குதல் - வருத்துதல்; நம்மின் - நம்மால்.
10. கானல் - கடற்கரைச்சோலை.
11. சுரும்பு இமிர் - வண்டு மொய்த்து ஒலிக்கும்.
12. சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.

தோழி கூற்று

நற்றிணை 220 **குண்டுகட்பாலியாதனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறை நேர்ந்த தோழி தலைமகளை முகம்புக்கது.

கூற்று விளக்கம்

தலைவன் அடைந்த குறையைத் தீர்க்க உடன்பட்ட தோழி, தலைவியிடம் சென்று, அத்தலைவி, தன் முகம் நோக்கி மகிழ்ந்து வினாவுதல் நிமித்தமாய் உரையாடியது.

சிறுமணி தொடர்ந்து, பெருங்கச்சு நிறீஇ,
குறுமுகிழ் எருக்கம் கண்ணி சூடி,
உண்ணா நல்மாப் பண்ணி, எம்முடன்
மறுகுடன் திரிதரும் சிறுகுறு மாக்கள்,
பெரிதும் சான்றோர் மன்ற விசிபிணி
முழவுக்கண் புலரா விழவுடை ஆங்கண்,
ஊரேம் என்னும்இப் பேர்ஏம் உறுநர்
தாமே ஒப்புரவு அறியின், தேமொழிக்
கயல்ஏர் உண்கண் குறுமகட்கு
அயலோர் ஆகல்என்று எம்மொடு படலே!

தெளிவுரை

பனைமடலால் குதிரை ஒன்று பண்ணி, அதற்குச் சிறுசிறு மணிகளைக் கோத்து, பெரிய கச்சையையும் பூட்டி நிறுத்தி, குவிந்த அரும்புகளைக்கொண்ட எருக்கம்பூ மாலையை அணிந்த வனாய் அதன்மேல் ஏறி ஒருவன் அமர்ந்திருந்தான். அக் குதிரையை நடுத்தெருவில் சிறுவர்கள் இழுத்துத் திரிகின்றனர். வார் இறுகக் கட்டப்பட்ட முழவு ஓயாது முழங்கிக்கொண் டிருக்கும் விழாவினைக் கொண்ட இவ்வூரில், 'நீவிர் யாவிர்?' எனக் கேட்போர்க்கு, 'இவ்வூரினர்' எனச் சொல்லி மகிழ்ச்சி கொள்கின்றனர், இச்சிறுவர்கள். இவர்கள் உலக இயல்பினை நன்கு அறிந்திருத்தலால், என்னைக் காட்டி, 'இவர் யார்?' என்று வினவின், "இத்தோழி தேன் போன்ற மொழியினையும் கயல்மீன் போன்ற கண்ணினையும் கொண்ட தலைவிக்கு அயலாரே யாவர்" என்று என் கருத்துக்கு ஒப்ப இயம்புகின்றனர். இவர்கள் சிறந்த பண்பினரான சான்றோர்கள்போலத் தோன்றுகின்றனர்.

கருத்து

தலைவன் மடலூர்வதாய்க் கூறுவதால், ஊரார் பழி கூறுவர் என்பதை உணர்த்தி, தலைவி தலைவனை ஏற்க வேண்டும் என்கிறாள், தோழி.

விளக்கம்

தலைவன், பனைமடலால் செய்யப்பட்ட குதிரைக்கு மணியும் கச்சும் அணிவித்துத் தானும் எருக்கமாலை அணிந்தவனாய் மடலேற, அக்குதிரை இழுத்துச் செல்லப்பட்டதாய்த் தோழி கூறுவது படைத்து மொழி கிளவி.

'தலைவன் மடலூர்தலை ஊரார் அறியின், உன்னை அலர் தூற்றுவராதலின் அதற்குமுன் நீ உடன்படல் வேண்டும்' என்பதை வலியுறுத்தி, தோழி தலைவியை இசைவிக்க முற்படு கிறாள்.

குறிப்பு

தலைவிக்குத் தோழியாயிருந்தும் தன் துயரை அறியாதவளாய் இருக்கிறாள் எனத் தலைவன் வருந்துகிறான். அப்போது சிறுபிள்ளைகள் தோழியைத் தலைவிக்கு அயலாள் என்று கூறுதல் தலைவன் துயரை

அறிந்து அவர்கள் கூறுவதுபோல் அமைந்தது. அதனால் அவர்களைச் சான்றோர் போலும் என உவகைபட மொழிந்தாள்.

சொற்பொருள்

1. சிறுமணி தொடர்ந்து - சிறிய பல மணிகளைக் கோத்து; பெருங் கச்சு - பெரிய துணியாலாகிய கச்சு; நிறீஇ - பூட்டி.
2. குறுமுகிழ் - குறுகியதாய் முகிழ்த்துள்ள; கண்ணி - மாலை.
3. உண்ணா நல்மா - உணவு உண்ணாத நல்ல குதிரை (பனங் கருக்கினால் செய்யப்பட்ட குதிரை.)
4. மறுகுடன் - தெருவில்; திரிதரும் - (குதிரையை இழுத்துத்) திரிவர்.
5. விசிபிணி - வார் நன்கு இறுகக் கட்டப்பட்ட.
6. முழவுக்கண் - முழவின் கண்; புலரா விழவு - ஓயாது முழக்கம் எழும் விழா.
7. ஊரேம் - இவ்வூரில் வாழ்பவர்; ஏம் உறுநர் - மகிழ்ச்சி கொள்ளுபவர்.
8. தேமொழி - தேன் போன்ற மொழி.
9. கயல் ஏர் - கயல்மீன் போன்ற; உண்கண் - மையுண்ட கண்; குறுமகள் - இளமகள்.
10. அயலோர் ஆகல் - அயலோராவர்; எம்மொடு படல் - என் கருத்துக்கு ஒப்ப (இயம்புகின்றனர்).

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 14 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகட்கு மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பக் கூறியது. (மெலிதாய் - நயமாய்)

கூற்று விளக்கம்

தலைவனின் வேண்டுகோளைத் தலைவியிடம் சொல்லி அதனை ஏற்குமாறு தோழி நயமாய்க் கூறியது.

புனைபூந் தழைஅல்குல் பொன்அன்னாய்! சாரல்
தினைகாத் திருந்தேம்யாம் ஆக – வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவல் உற்றதொன் றுண்டு.

தெளிவுரை

"தொடுக்கப்பட்ட மலர்களுடன் கூடிய தழைகளால் அலங் கரிக்கப்பெற்ற அல்குலினைக் கொண்ட பொன்மகள் போன்ற எம் தலைவியே! இம்மலைப்பக்கத்தில் உள்ள நம் தினைப் புனத்தை நாம் காத்திருந்தோம். அப்பொழுது, வேட்டை யாடுவதை மேற்கொண்டு, தாம் தப்பவிட்ட விலங்கைத் தேடி வருபவர் போன்று ஒருவர் வந்தார். அவர் நம்மிடம் விலங்கைப் பற்றி வினவினாலும், நம்மிடம் வினவ விரும்பியது வேறு ஒன்றைப் பற்றியதாகும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'அவன் விலங்கைத் தேடி வந்தவன் அல்லன்; வேறொரு கருத்துக் கொண்டவன்.'

குறிப்பு

அவன் உன்னைத் தேடியே வந்துள்ளான். அவன் வேண்டுகோளை ஏற்று நீ உடன்படலாம்.

சொற்பொருள்

1. புனை - தொடுக்கப்பட்ட; பூந்தழை - மலர்களோடு கூடிய தழை.
2. தினை - தினைப்புனம்; வினைவாய்த்து - வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டு.
3. மா - விலங்கு; வினவுவார் - கேட்பவர்; நம்மாட்டு - நம்மிடத்தில்.
4. வினவலுற்றது - (விலங்கைப்பற்றி) வினவினாலும்; ஒன்று - (வினவ விரும்பியது) பிறிதொன்று (அஃதாவது, காதலைப் பற்றியதாகும்.)

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 31 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகளை மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியின்மூலம் தலைவியை அடைய எண்ணினான்; தோழியிடம் தன் கருத்தை உரைத்தான். அவன் கருத்துக்கு இசைந்த தோழி, தலைவியிடம் நயமாய்ச் சொல்லித் தலைவனின் வேண்டுகோளை ஏற்குமாறு கூறியது.

தன்குறையி(து) என்னான்; தழைகொணரும்; தண்சிலம்பன்,
நின்குறை என்னும் நினைப்பினனாய்ப் – பொன்குறையும்
நாள்வேங்கை நீழலுள் நண்ணான் எவன்கொலோ
கோள்வேங்கை அன்னான் குறிப்பு.

தெளிவுரை

குளிர்ச்சி பொருந்திய மலைநாட்டுத் தலைவன் தனக்குள்ள குறை இன்னதென வெளிப்படக் கூறான்; ஆனால், கையுறையாய்ப் பூந்தழைகளை அடிக்கடி கொண்டுவருகின்றான். தான் நாடி வந்த செயல், 'உன்னால் முடியத்தக்கது' என்ற எண்ணம் கொண்டவனாய் இருக்கின்றான். பொன்னின் நிறத்தையும் தோற்கச் செய்யும் புதிய மலர்கள் மலர்ந்த வேங்கை மரத்தின் நிழலில் சிறிது பொழுது தங்குவதும் இல்லை. வலிமை மிகுந்த புலி போன்ற அவன் மனக் கருத்துத்தான் யாதோ?' என்று தோழி தலைவியை வினவினாள்.

கருத்து

'தலைவன் உன்னை மிகவும் விரும்புகிறான். அவனை ஏற்று உடம்பட வேண்டும்' எனத் தோழி நயமாய்த் தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

தலைவன் தலைவிமேல் கொண்டுள்ள காதலை வெளிப்படையாய் விரித்துரைக்காமல், திறம்பட மறைமுகமாய்த் தெரிவிக்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. என்னான் - சொல்லான்; தழை - தழை ஆடை; தண் சிலம்பன் - குளிர்ச்சி பொருந்திய மலைநாட்டுத் தலைவன்.
2. நின்குறை என்னும் நினைப்பினன் - தான் நாடி வந்த காரியம் உன்னால் இயலும் என்று கருதுகிறான்; பொன் குறையும் - பொன்னின் நிறத்தையும் குறைவுபடுத்தும்.
3. நாள் - அன்று பூத்த; நண்ணான் - தங்குவதுமில்லை; எவன் கொலோ - அவன் கருத்து என்னவோ?
4. கோள் - வலிமைமிக்க; வேங்கை - வேங்கைப்புலி; அன்னான் - ஒத்தவன்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 43 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்.

கூற்று விளக்கம்

தோழி தலைவன்மீது இரக்கம் கொண்டு, தலைவியிடம் சென்று, தலைவன் விருப்பத்துக்கு அவள் உடன்பட வேண்டுமென மென்மொழி யால் கூறுதல்.

கைதை வேலிக் கழிவாய் வந்துஎம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்;
பொய்தல் அழித்துப் போனார் அவர்நம்
மையல் மனம்விட்டு அகல்வார் அல்லர்.

தெளிவுரை

தாழைகள் சூழ்ந்த இக்கழியில் நம் விளையாட்டை நாம் மறக்குமாறு செய்துவிட்டார், ஒருவர். அங்ஙனம் மறக்கச்செய்த அவர் நம் மனத்தை விட்டு நீங்காமல் நிற்கிறார்.

கருத்து

தலைவியே! உன் விளையாட்டை மறந்து அவனையே எண்ணி யிருக்கும் நீ அவனுக்கு அருள் செய்ய வேண்டியதே முறை.

சொற்பொருள்

1. கைதை - தாழை; வேலி - சூழ்ந்துள்ள; கழி - உப்பங்கழி.
2. பொய்தல் - விளையாட்டு; அழித்தல் - நீக்குதல், மறத்தல்.
4. மையல் - காம மயக்கம்; அகல்வார் - நீங்குவார்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 44 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்.

கூற்று விளக்கம்

தோழி தலைவன்மீது இரக்கம் கொண்டு, தலைவியிடம் சென்று, தலைவன் விருப்பத்துக்கு அவள் உடன்பட வேண்டுமென மென்மொழியால் கூறுதல்.

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல்கு என்றே நின்றார் ஒருவர்;
நீநல்கு என்றே நின்றார் அவர்நம்
மான்நேர் நோக்கம் மறப்பார் அல்லர்.

தெளிவுரை

சோலை சூழ்ந்த இக்கழியில் வந்து, ' எனக்கு அருள் செய்ய வேண்டும்'என்று கேட்டு நின்றார், ஒருவர். அவ்வாறு சொல்லி நின்ற அவர், மானை ஒத்த நம் பார்வையை மறக்க மாட்டார்.

கருத்து

'தலைவியே! உன்னை எப்போதும் மறவாது உன்னையே நினைந்து வாடும் தலைவனுக்கு நீ அருள் செய்ய வேண்டும்' என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. கானல் - கடற்கரைச்சோலை; வேலி - வேலியாய்ச் சூழ்ந்துள்ள; கழிவாய் - உப்பங்கழியிடத்தே.
2. நல்கு - அருள் செய்க.
4. மான் நேர் - மானை ஒத்த; நோக்கம் - பார்வை.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 45 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்.

கூற்று விளக்கம்

தோழி தலைவன்மீது இரக்கம் கொண்டு, தலைவியிடம் சென்று, தலைவன் விருப்பத்துக்கு அவள் உடன்பட வேண்டுமென மென்மொழி யால் கூறுதல்.

அன்னம் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்;
நென்னல் நோக்கி நின்றார் அவர்நம்
பொன்நேர் சுணங்கிற் போவார் அல்லர்.

தெளிவுரை

அன்னப்பறவை தன் துணையோடு விளையாடல் கண்டு, (குறிப்போடு) நேற்று நம்மை நோக்கி நின்றார், ஒருவர். அவ்வாறு நின்ற அவர், நம் பொன்னிறத் தேமல் நம்மை விட்டுப் போகாதது போன்று நம்மை விட்டு நீங்காமல் இருக்கிறார்.

கருத்து

‘தலைவியே! உன்மீது மையல் கொண்டு உன்னை நீங்காதுள்ள தலைவனுக்கு நீ அருள் செய்ய வேண்டும்’ என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. துணை - பெண் அன்னம்; ஆடக் கண்டு - விளையாடல் கண்டு.
2. நென்னல் - நேற்று; நோக்கி - (ஒரு குறிப்போடு) நோக்கி.
4. பொன்நேர் - பொன் நிறத்தை ஒத்த; சுணங்கு - தேமல்; போவார் அல்லர் - விட்டு நீங்குவார் அல்லர்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 31 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல். (வலிதாக - உள்ளத்தில் நன்கு பதியுமாறு)

கூற்று விளக்கம்

தோழி தலைவனின் ஆற்றாமையைத் தலைவியிடம் வலிதாய் எடுத்துக் கூறி, அவன் கருத்தை நிறைவேற்றுமாறு அவளை வேண்டிக்கொள்ளுதல்.

புணர்துணையோடு ஆடும் பொறிஅலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வுஒழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி ஐம்பாலோய் வண்ணம் உணரேனால்!

தெளிவுரை

சுருண்ட கருங்குழலைக் கொண்ட தலைவியே! துணையோடு பொருந்தி விளையாடும் புள்ளிகளைக் கொண்ட ஆண் நண்டினை நோக்கினான்; அதேபோது, பூங்கொத்துகள் நிறைந்த சோலையிலிருந்த என்னையும் நோக்கினான்; உணர்வு ஒழிந்தவனாய் அங்கிருந்து அகன்றான். ஒலிக்கும் அலைகளைக் கொண்ட அக்கடல்நிலத் தலைவனின் உள்ளக்கிடக்கையை நான் அறிய இயலவில்லையே!

கருத்து

'தலைவன் நம்மை அடைய மிகுந்த ஏக்கமுள்ளவனாயிருக்கிறான். அவனுக்கு இரங்கி அவனை ஏற்றருள்' எனத் தோழி வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. புணர்துணை - துணையோடு பொருந்தி; ஆடும் - விளையாடும்; பொறி - புள்ளி; அலவன் - (ஆண்) நண்டு.
2. இணர் - பூங்கொத்து; ததையும் - நிறைந்த; கானல் - கடற்கரைச் சோலை.
3. ஒலிதிரை - ஒலிக்கும் அலை; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.

4. வணர்சுரி - நெளிந்து சுருண்ட; ஐம்பால் - கூந்தல்; வண்ணம் - (அச் சேர்ப்பனது) உள்ளக்கிடக்கையை; உணரேன் - என்னால் அறிய இயலவில்லை.

தோழி கூற்று

குறுந்தொகை 230 **அறிவுடை நம்பி**

திணை : நெய்தல்

கூற்று

வலிதாகக் கூறிக் குறை நயப்பித்தது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தான் அடைய உதவுமாறு தோழியிடம் வேண்டுகிறான், தலைவன். அவன் தலைவிக்கு ஏற்றவன் என்று கருதிய தோழி, தலைவியிடம் சென்று, அவன்மீது இரக்கம் காட்டுமாறு சொல்லியது.

அம்ம வாழி, தோழி கொண்கன்
தான்அது துணிகுவன் அல்லன்; யான்என்
பேதை மையால் பெருந்தகை கெழுமி,
நோதகச் செய்ததுஒன்று உடையேன் கொல்லோ?
வயச்சுறா வழங்குநீர் அத்தம்
சின்னாள் அன்ன வரவுஅறி யானே.

தெளிவுரை

தலைவியே! வாழி! (ஒன்று உரைப்பேன்; கேள்.)

தலைவன், வலிய சுறாமீன்கள் திரிகின்ற நீர்நிலைகளைக் கொண்ட வழியில் சில நாள்களாக முன்போல நம்மைக் காண வருவதைத் தவிர்த்துள்ளான். அவ்வாறு வாராமல் இருக்கத் தானாகவே துணிந்திருக்க மாட்டான் (முடிவெடுத்திருக்க மாட்டான்). நான் என் அறியாமையால் எனக்கொவ்வாத உரிமையை மேற்கொண்டு அவன் நோகும்படி ஏதாவது தவறு செய்திருப்பேனோ?

கருத்து

'தலைவியே! உன்னை அடையக் கருதிப் பலநாள் வந்தவன், ஒருவேளை நான் விலக்கியமையினால் வாராது போயினனோ?' எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

'உன்னைக் காணப் பலநாள் வந்த தலைவன், நான் செய்த ஏதோ தவற்றினாலேயே வாராதிருக்கிறான் போலும்' என்று தோழி சொல்லி, தலைவன்மேல் தலைவிக்கு இரக்கம் தோன்றச் செய்கிறாள்.

சொற்பொருள்

1. கொண்கன் - தலைவன்.
2. துணிகுவன் - துணிபவன்.
3. பேதைமையால் - அறியாமையால்; பெருந்தகை கெழுமி - (எனக்கு ஒவ்வாத) உரிமையை மேற்கொண்டு.
4. நோதகச் செய்தது - நோகும்படி செய்தது.
5. வயச்சுறா - வலிய சுறாமீன்; வழங்கும் - திரியும்; அத்தம் - வழி.
6. சின்னாள் - சில நாள்; அன்ன - முன்னர் வந்ததுபோல; வரவு அறியான் - வந்து போவதை மறந்தான்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 40 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் விருப்பத்தைத் தோழி முன்பு மெலிதாய்ச் சொன்னாள். அதனைத் தலைவி ஏற்காததால் வலிதாய்ச் சொல்லித் தலைவனின் வேண்டுகோளை ஏற்குமாறு செய்தல்.

தன்துணையோ(டு) ஆடும் அலவனையும் தான்நோக்கா
இன்துணையோ(டு) ஆட இயையுமோ? – இன்துணையோ(டு)
ஆடினாய் நீஆயின் அந்நோய்க்(கு)என் நொந்(து)என்று
போயினான் சென்றான் புரிந்து.

தெளிவுரை

"தன் பெடைநண்டுடன் இன்புற்று விளையாடும் ஆண் நண்டினையும் என்னையும் அவன் (தலைவன்) பார்த்து, 'என் இனிய துணையாகிய தலைவியுடன் இவ்வகை இன்புற்று விளையாட எனக்கு வாய்க்குமோ?' என்று தனக்குள் கூறிக் கொண்டான். பின்னர், அந்த ஆண்நண்டினை நோக்கி, 'நீ உன் பெடைநண்டுடன் இன்பத்துடன் விளையாடுவது ஒன்றையே செய்திருப்பாய்; அதனால் பிரிவுத்துன்பத்தை நீ அறிய மாட்டாய்! ஆதலால், அப்பிரிவுத்துன்பத்தினைப்பற்றி உன்னிடம் எடுத்துச் சொல்வதில் என்ன பயன் உண்டு?' எனக் கூறி இந்த இடத்தை விட்டு அகன்றான். இவ்வாறு சொல்லிச் சென்றவன் மீண்டும் வந்து தோன்றவில்லை" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'பிரிவுத்துன்பத்தினால் வாடிச் சென்ற தலைவனைத் திரும்பி வருமாறு செய்' எனத் தலைவியிடம் தோழி வற்புறுத்திக் கூறுகிறாள்.

குறிப்பு

'முன்பு மெலிதாய்க் குறை நயந்து கூறியும் தலைவி இணங்காதிருந்தமையின், காதலன் வெறுப்புற்றுச் சென்றுவிட்டான்' எனத் தோழி வலிதாய்க் கூறிக் குறை நயந்தாள்.

சொற்பொருள்

1. அலவன் - நண்டு; நோக்கா - நோக்கி.
2. இன்துணையோடு - என் இனிய துணையாகிய தலைவியோடு; இயையுமோ? - இயலுமோ?
3. அந்நோய்க்கு - அந்தப் பிரிவுத்துன்பத்தினை; நொந்து - (உனக்கு எடுத்துச் சொல்லி) வருந்தி; என் என்று - யாது பயன் என்று.
4. சென்றான் - (வருதலைக் கருதாதவனாய்ச்) சென்றுவிட்டான்; புரிந்து - (மீண்டும்) விருப்பத்தை மேற்கொண்டு.

தோழி கூற்று

குறுந்தொகை ௨௧௨ **நெய்தற்கார்க்கியன்**

திணை : நெய்தல்

கூற்று

குறை நேர்ந்த தோழி குறை நயப்பக் கூறியது.

(குறை நேர்ந்த - தலைவனது குறையை நிறைவேற்றுவதற்கு உடம்பட்ட; குறை நயப்ப - தலைவனது குறையைத் தீர்க்கத் தலைவி விரும்பும்படி.)

கூற்று விளக்கம்

தலைவனுக்கு அருள் செய்யும்படி தலைவியிடம் பரிந்து பேசும் தோழி, அவன்மீது தலைவிக்கு இரக்கம் உண்டாகும்படி கூறியது.

கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தெண்கடல் அடைகரைத் தெளிமணி ஒலிப்பக்
காண வந்து, நாணப் பெயரும்;
அளிதோ தானே காமம்;
விளிவது மன்ற, நோகோ யானே.

தெளிவுரை

தலைவன் ஏறிவந்த பெரிய தேர் கொடுஞ்சியைக் கொண்டது. அது, தெளிந்த நீரைக் கொண்ட கடலையடுத்துள்ள கரை வழியே, தெளிந்த ஓசையினைக் கொண்ட மணிகள் ஒலிக்குமாறு நாம் காணும்படியாய் வந்தது. நாம் நாணமுற்று அவனைப் பாராமல் இருக்கவே, அது வறிதே திரும்பிச் சென்றது. தலைவனை அலைக்கும் இக்காமநோய் இரங்கத்தக்கது; நிச்சயமாய் அழிய வேண்டியது. தலைவனின் நிலையைக் கண்டு நான் வருந்துகின்றேன்.

கருத்து

தலைவன் ஏக்கத்தை நீடிக்கவிடாது அவனைத் தலைவி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கொண்கன் - தலைவன்; ஊர்ந்த - ஏறிவந்த; கொடுஞ்சி - தேர்த் தட்டிற்கு முன்பு கையால் பற்றிக்கொள்ள வைக்கப்பட்டிருக்கும் தாமரை மொட்டுப் போன்ற உறுப்பு.

2. அடைகரை – கரையோரம்; தெளிமணி – தெளிந்த ஓசை எழும் மணி.
3. நாண – நாணமுற்று (நாம் பாராமல் இருக்கவே); பெயரும் – திரும்பிச் சென்றது.
4. அளிது – இரங்கத்தக்கது.
5. விளிவது – அழிவது; மன்ற – நிச்சயமாய்; நோகோ யானே – நான் வருந்துகின்றேன்; (நோதல் – வருந்துதல்).

தோழி கூற்று

குறுந்தொகை 176 **வருமுலையாரித்தியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, கிழத்தியைக் குறைநயப்பக் கூறியது.

(குறைநயப்ப – தலைவனின் விருப்பத்தை நிறைவேற்ற.)

கூற்று விளக்கம்

தலைவனைத் தலைவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் கருத்தினால், 'பல நாள் இங்கே வந்து பணிந்த சொற்களைக் கூறிச் சென்ற தலைவன் இப்போது எங்கே இருக்கின்றானோ? அவனை நினைந்து என் நெஞ்சம் கலங்குகின்றது' என்று, தலைவிக்கு இரக்கம் உண்டாகும்படி தோழி கூறியது.

ஒருநாள் வாரலன்; இருநாள் வாரலன்;
பல்நாள் வந்து, பணிமொழி பயிற்றி,என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை,
வரைமுதிர் தேனின் போகி யோனே;
ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
வேறுபுலன் நல்நாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலிழும்,என் நெஞ்சே.

தெளிவுரை

"*தலைவி! தலைவன் ஒருநாள் அன்று, இருநாள் அன்று, பல நாளும் வந்து என்னிடம் பணிவான சொற்களைப் பல முறையும் கூறி என் நல்ல நெஞ்சத்தை நெகிழச் செய்தனன். (அவன்*

அவ்வாறு கெஞ்சியதை நான் மறுத்ததால்), மலைமேல் முதிர்ந்த தேனடை கீழே விழுந்து பயனற்றுவிட்டதுபோலச் சென்று விட்டனன்; திரும்ப வரவேயில்லை.

"நமக்குத் துணைவனும் தந்தை போல்வானுமாகிய அத் தலைவன் இப்போது எங்குள்ளானோ? வேற்றுமைப்பட்ட பலவகை நிலப்பகுதிகளைக் கொண்ட நல்ல நாட்டில், இடியுடன் பெய்த மழைநீர் கலங்கி வருதல்போல என் நெஞ்சமும் கலங்கியுள்ளது."

கருத்து

'உன்னை மிகவும் விரும்பும் தலைவன் மிகவும் வருந்துகின்றான். அவன் நிலை கண்டு என் நெஞ்சம் இளகிவிட்டது; அவனை நீ ஏற்றுக் கொள்வது நல்லது.'

குறிப்பு

மலைப்பகுதியிலுள்ள முதிர்ந்த தேனடை அதனைக் கொள்வார் இல்லாமையால் வீணே வீழ்ந்து அழிவதுபோல, தலைவனும் தன் சொற்களை யாரும் ஏற்காமையால் மனமழிந்து சென்றனன்.

'தெளிவுடையதாய் விழும் மழைநீர் பல்வகை நிலங்களில் பாய்ந்து கலங்கலுறும். அதுபோல, தெளிவான என் நெஞ்சமும் தலைவனின் பல்வேறு பணிவான சொற்களைக் கேட்டு இரக்கத்தால் கலக்கமுற்றது' எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. வாரலன் - வந்தான்.
2. பணிமொழி பயிற்றி - பணிவான சொற்களைச் சொல்லி.
3. நன்னர் நெஞ்சம் - நல்ல நெஞ்சம்; பின்றை - பிறகு.
4. வரைமுதிர் - மலை மேல் முதிர்ந்த; தேனின் - தேனடை போல; போகியோன் - (பயனின்றிப்) போய்விட்டான்.
5. ஆசு - பற்றுக்கோடு; யாண்டு - எங்கு.
6. வேறு புலன் - வேறுபட்ட நிலம்.
7. ஏறுடை மழை - இடியோடு கூடிய மழை (ஏறு - இடியேறு); கலிழும் - கலங்கும்.

தோழி கூற்று

குறுந்தொகை 298 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

கிழத்திக்குத் தோழி குறைமறாமல் கூறியது.

கூற்று விளக்கம்

தன்னிடம் குறையிரந்து நின்ற தலைவனை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தோழி தலைவியிடம் கூறியது.

சேரி சேர மெல்ல வந்துவந்து,
அரிது வாய்விட்டு இனிய கூறி,
வைகல் தோறும் நிலம்பெயர்ந்து உறையும்அவன்
பைதல் நோக்கம் நினையாய் தோழி!
இன்கடுங் கள்ளின் அகுதை பின்றை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதுஒன்று குறித்தது,அவன் நெடும்புற நிலையே.

தெளிவுரை

தலைவி! (உன்னைக் காதலிக்கும் தலைவன்) நம் தெருப்பக்கம் அடிக்கடி மெல்ல மெல்ல வந்து போகிறான்; அரிதாய் எப்போதாவது வாய் திறந்து பேசுகிறான்; நமக்கு இனிமை தரும் சொற்களைச் சொல்லுகின்றான். தான் எண்ணியது கூடாமையின் துன்பத்தை வெளிப்படுத்தும் அவன் பார்வையை நீ நினைத்துப் பார்! இனிமையும் கடுமையும் நிறைந்த கள்ளினை உடையவன், அகுதை என்பவன். அவனை வழிபட்டு, வெள்ளிப்பூண் பூட்டிய சிறிய கோலைக் கொண்ட அகவல் மகளிர் அவன்பின் நிற்பர். அவர்கள் வாய் விட்டுச் சொல்லாமலேயே அவன் அவர்களுக்குப் பெண்யானைகளைப் பரிசிலாய் அளிப்பான். அதைப் போலத் தலைவனும் நீண்ட நேரம் என் பின்னின்று எதையோ நினைக்கிறான். அவனது நிலையானது, நாம் இசையோமானால், வேறொரு செயலாகிய மடலேறவும் தயங்கான் எனக் காட்டுகிறது.

கருத்து

தலைவியே! நீ இசைய வேண்டும்; அன்றெனில் தலைவன் கருத்து மடலேறுதலே.

விளக்கம்

'தோழி, தலைவியை நோக்கி, 'நம் தலைவன் நாள்தோறும் நம் சேரிக்கு வந்து வந்து, தன் குறை தீர்க்குமாறு சொல்லிச் சொல்லிச் சென்றனன். அவன் பார்வை அவன் துன்பத்தை விளக்குகின்றது. இந்நிலை நீடிக்குமாயின் அவன் மடலேற முயல்வான் என்று நான் உணர்கிறேன்' என்று விளக்கி, அவனை ஏற்றுக் கொள்ளுதலே நன்று என உரைக்கின்றாள்.

குறிப்பு

அகுதைக்குப் பின்னாக நின்ற அகவன் மகளிர், அவனிடமிருந்து மடப்பம் பொருந்திய பிடியானைகளைப் பரிசிலாய்ப் பெறும்பொருட்டே, எதுவும் கேளாமல் நின்றிருந்தனர். அவ்வாறே தலைவன் நெடுநேரம் என் பின்னாக நின்றதும் உன்னைப் பெறுதல் குறித்ததே.

சொற்பொருள்

1. சேரி சேர - நம் தெருவை அடைவதற்காக.
2. அரிது - அருமையாய்; வாய்விட்டு - வாய் திறந்து.
3. வைகல் - நாள்; நிலம் பெயர்ந்து - நம் இடம் விட்டு அகன்று; உறையும் - தங்குகின்ற.
4. பைதல் - துன்பம்; நினையாய் - நினைத்துப் பார்.
5. இன் கடும் கள்ளின் - இனிய கடுங்கள்ளையுடைய; அகுதை - வள்ளல்களுள் ஒருவன்; பின்றை - பின்னாக (நின்று).
6. வெண்கடை - வெண்மையான முனையைக் கொண்ட; அகவன் மகளிர் - பாடல் மகளிர்.
7. மடப்பிடி - இளம் பெண்யானை; மான - போல.
8. பிறிதொன்று - வேறொன்றனை (மடலேறுதலை); குறித்தது - கருதியது; நெடும்புற நிலை - நீண்ட நேரம் அவன் நம் பின் நின்ற நிலை.

தோழி கூற்று

கலித்தொகை 61 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி அவனோடு உறழ்ந்து சொல்லி, அவனது நீக்கத்துக்கண் அவன் குறை மறாமைக்கு ஏற்பன சொல்லித் தலைமகளைக் குறை நயப்பித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தோழி அவனுடன் மாறுபடப் பேசினாள்; அவன் நீங்கிய பின்னர், அவன் குறையை முடித்து வைத்தற்குத் தலைவியிடம் தக்கன கூறி, அவள் அதனை ஏற்குமாறு கேட்டுக்கொண்டாள்.

தலைவன் வருகை கண்டு, தோழி தலைவியை நோக்கிக் கூறுதல்

எல்லா! இஃதுஒத்தன் என்பெறான்? கேட்டைக்காண்;
செல்வம் கடைகொளச் சாஅய்ச் சான்றவர்,
அல்லல் களைதக்க கேளிர் உழைச்சென்று,
சொல்லுதல் உற்று,உரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்து,என்னை நோக்கும்;மற்று யான்நோக்கின்,
மெல்ல இறைஞ்சும் தலை.

தலைவன் எதிர்சென்று அவனை நோக்கித் தோழி வினாவுதல்

எல்லா!நீ, முன்னத்தான் ஒன்று குறித்தாய்போல் காட்டினை;
நின்னின் விடாஅ நிழல்போல் திரிதருவாய்!
என்நீ பெறாதது, ஈதுஎன்?

தலைவன்

சொல்லின், மறாதுஈவாள் மன்னோ, இவள்?
செறாஅது, ஈதல், இரந்தார்க்குஒன்று, ஆற்றாது வாழ்தலின்,
சாதலும் கூடுமாம் மற்று.

தோழி

இவள்தந்தை காதலின் யார்க்கும் கொடுக்கும், விழுப்பொருள்;
யாதுநீ வேண்டி யது?

தலைவன்

பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை ஈண்டுஇல்லை; யாழ
மருளி மடநோக்கின் நின்தோழி என்னை
அருள்ஈயல் வேண்டுவல், யான்.

தலைவன் நீங்கிய பின்னர்த் தோழி, தலைவியோடு உசாவுதல்

அன்னையோ, மண்டுஅமர்அட்ட களிறுஅன்னான் தன்னைஒரு
பெண்டிர் அருளக் கிடந்தது எவன்கொலோ?

தலைவி

ஒண்தொடீ! நாண்இலன் மன்ற, இவன் –

தோழி தலைவியை நோக்கிக் குறை நயப்பித்தல்

ஆயின் ஏஎ
'பல்லார்நக்கு எள்ளப் படும்மடல் மாஏறி,
மல்லல்ஊர் ஆங்கண் படுமே, நறுநுதல்,
நல்காள்கண் மாறி விடின்'எனச் செல்வான்;நாம்
எள்ளி நகினும் வரூஉம்; இடைஇடைக்
கள்வர்போல் நோக்கினும் நோக்கும்; குறித்தது
கொள்ளாது போகாக் குணன்உடையன், எந்தைதன்
உள்ளம் குறைபடா வாறு.

தெளிவுரை

தோழி (தலைவியிடம்) : *ஏடீ! ஒருவனுக்கு ஏற்பட்ட கேட்டினைப் பார்; அவன் பெற இயலாதது என்ன இருக்கிறது? (எதையும் பெறக்கூடியவன்); செல்வம் இழந்து வறுமையுற்ற சான்றோர், தமது துன்பத்தை நீக்கக்கூடிய உறவினரிடம் சென்று சொல்லத் தொடங்கி, சொல்ல நா எழாது நிற்பதுபோல வாயெழாத வனாய் நிற்கிறான். பலமுறை வந்து என்னை நோக்கியவாறு நிற்பான்; நான் அவனைப் பார்த்தால் மெதுவாய்த் தலை குனிந்துகொள்வான்.*

(என்று சொன்னவள், தான் அவனிடம் பேசியதைக் கூறுகிறாள்.)

தோழி : (தலைவனிடம்) *: ஏடா! நீ ஏதோ ஒன்றை உன் முகக் குறிப்பால் காட்டுகிறாய். உன் நிழல் உன்னைத் தொடர்வது*

போல் நீ என்னைத் தொடர்கிறாய்! நீ பெற இயலாதது ஏதேனும் உண்டா? (அதைச் சொல்லாமல்) என்னிடம் இவ்வாறு நடந்துகொள்வது ஏன்?

தலைவன் : (நான் சொன்னால் இவள் மறாது தருவாளா என்று தன்னுள் சொல்லிக்கொண்டு, பின்னர்த் தோழியை நோக்கிக் கூறினான்:)

தம்மிடம் இரந்து கேட்டவர்க்கு அவர் இரந்ததை முகஞ் சுளிக்காமல் கொடுக்க வேண்டும்; இல்லாமற்போனால் சாதலும் நன்று.

இதனைக் கேட்ட தோழி சொல்கிறாள் : என்னுடன் உள்ள இவள் தந்தை அன்போடு எவருக்கும் எதுவும் வழங்குவான்; சிறந்த பொருளைக் கொடுப்பான். நீ விரும்புவது என்ன?

தலைவன் : நான் கூறும் குறிப்பை அறியாதவளே! பொருள் கேட்டுப் பெற வேண்டிய வறுமை எனக்கில்லை. மருண்ட நோக்கினளான உன் தலைவிதான் எனக்கு அருள வேண்டும்!

தோழி : (இவன் அத்தன்மையனோ என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, தானும் தலைவனும் பேசியதைத் தலைவியிடம் கூறத் தொடங்குகிறாள்.) போர்க்களத்தில் பலரைக் கொன்று குவிக்கும் யானை போன்றவனுக்குப் பெண் ஒருத்தி கருணை காட்ட வேண்டிய நிலை ஏன் வந்தது?

தலைவி : ஒளி திகழும் வளையுடையாய்! உறுதியாய் இவன் நாணமில்லாதவன்.

தோழி : 'அந்தப் பெண் அருளாவிட்டால் இவ்வூர்த்தெருவில் பலரும் எள்ளி நகையாட நான் மடல் ஏற நேரிடும். அப்போது ஊரார் என்னையும் அவளையும் இணைத்துப் பழி கூறவும் நேரும்' என்று அவன் சொல்லிச் சென்றான். இனியும் வாராமல் இருக்கமாட்டான். பேசிக்கொண்டிருக்கும்போதே ஓரக் கண்ணால் இடையிடையே, கள்வர் தாம் குறித்த பொருளை, நோக்காது நோக்குவதுபோல, உன்னையும் அவன் நோக்கி னான். தான் கருதியதை அடையும் குணமும் கொண்டவன். நம் தந்தை கருதியிருப்பதற்குக் குறை நேராதபடி வேண்டியன

வெல்லாம் கொடுத்துத் தான் குறி வைத்த ஒன்றைக் கைப் பற்றாமல் செல்ல மாட்டான். (ஆதலின், அவன் விருப்பத்தை நீ ஏற்றுக்கொள்ளலாம்.)

கருத்து

தலைவியே! தலைவன் மடலேறியாவது மணந்துகொள்ளத் தவற மாட்டான். அவன் விருப்பத்தை ஏற்றுக்கொள்வதே நல்லது.

சொற்பொருள்

1. எல்லா - ஏடீ!; ஒத்தன் - ஒருவன்; என் பெறான் - அவன் பெற இயலாதது என்ன இருக்கிறது?
2. கடை கொள - அழிந்துவிட; சாஅய் - வறுமையுற்ற.
3. அல்லல் - துன்பம்; களைதக்க - நீக்கக்கூடிய; கேளிர் - உறவினர்.
4. சொல்லுதல் உற்று - சொல்லத் தொடங்கி; உரைக்கல்லாதவர் போல - சொல்ல நா எழாது நிற்பவர்போல.
5. பல் ஊழ் - பல முறை; பெயர்ந்து - திரும்பி.
6. இறைஞ்சும் - குனியும்.
7. முன்னம் - குறிப்பு; காட்டினை - காட்டுகிறாய்.
8. விடாஅ - நீங்காது.
9. ஈது என்? - என்னிடம் இவ்வாறு நடந்துகொள்வது ஏன்?
10. மறாது ஈவாள்? - மறுக்காது கொடுப்பாளோ?
11. செறாஅது - சினவாது, முகஞ்சுளிக்காமல்; ஆற்றாது - கொடுக்காது.
13. காதலின் -அன்பொடு; விழுப்பொருள் - சிறந்த பொருள்.
14. யாது நீ வேண்டியது - நீ வேண்டியது என்ன?
15. புன்கண்மை - வறுமை; ஈண்டு - இங்கு (எனக்கு).
16. மருளி - மருண்டு; மடநோக்கு - மருண்ட நோக்கு.
17. அருள் ஈயல் - அருள் செய்தலை; வேண்டுவல் - வேண்டுகிறேன்.
18. அன்னையோ? - அத்தன்மையனோ?; மண்டுஅமர் - மூண்ட போரில்; அட்ட - கொன்ற; அன்னான் - போன்றவன்.
19. அருளக் கிடந்தது எவன்? - அருள வேண்டிய நிலை ஏன் வந்தது?
20. நாண் இலன் - நாணம் இல்லாதவன்.
22. நக்கு எள்ளப்படும் - எள்ளி நகையாடும்; மடல்மா - பனங்கருக்குக் குதிரை.
23. மல்லல் - வளப்பம்; படுமே - வருவேன்.
24. நல்காள் - அருளாதவளாய்; கண்மாறிவிடின் - அன்பை மறந்து விடின்.

25. எள்ளி நகினும் வரூஉம் - எள்ளி நகையாடினாலும் வருவான்.
26. குறித்தது - தான் எண்ணியதை.
27. கொள்ளாது - பெறாது; குணன் - குணம்.
28. உள்ளம் குறைபடாவாறு - மனம் குறையாதபடி.

தோழி கூற்று

கலித்தொகை 60 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி, தலைமகளோடு உறழ்ந்து, அவனது குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனது வேண்டுகோளை ஏற்ற தோழி, தலைவியிடம் உரையாடி, அவன் வேண்டுகோளை ஏற்குமாறு கூறியது.

தோழி

சுணங்குஅணி வனமுலை, சுடர்கொண்ட நறுநுதல்,
மணம்கமழ் நறுங்கோதை மாரிவீழ் இருங்கூந்தல்,
நுணங்குஎழில், ஒண்தித்தி, நுழைநொசி மடமருங்குல்,
வணங்குஇறை வரிமுன்கை, வரிஆர்ந்த அல்குலாய்!

கண்ணார்ந்த நலத்தாரை, கதும்எனக் கண்டவர்க்கு
உள்நின்ற நோய்மிக, உயிர்எஞ்சு துயர்செய்தல்
பெண்அன்று, புனைஇழாய்! எனக்கூறித் தொழூஉம்; தொழுதே,
கண்ணும்நீ ராக நடுங்கினன், இன்நகாய்!
என்செய்தான் கொல்லோ – இஃதுஒத்தன் தன்கண்
பொருகளிறு அன்ன தகைசாம்பி, உள்ளுள்
உருகுவான் போலும், உடைந்து.

தலைவி

தெருவின்கண், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ,
வாரண வாசிப் பதம்பெயர்த்தல், ஏதில
நீநின்மேல் கொள்வது; எவன்?

தோழி

அலர்முலை ஆய்இழை நல்லாய்! கதுமெனப்
பேரமர் உண்கண்நின் தோழி உறீஇய
ஆர்அஞர் எவ்வம் உயிர்வாங்கும்;
மற்றுஇந்நோய் தீரும் மருந்தருளாய், ஒண்டொடீ!

நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்;
நின்முகம் தான்பெறி னல்லது, கொன்னே
மருந்து பிறிதுயாதும் இல்லேன், திருந்திழாய்!
என்செய்வாம் கொல்? இனிநாம்

தலைவி

பொன்செய்வாம்.
ஆறு விலங்கித் தெருவின்கண் நின்றுஒருவன்
கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் பண்புஉணராம்
தேறல் எளிதென்பாம் நாம்.

தோழி

ஒருவன் சாமாறு எளிதுஎன்பாம், மற்று.

தலைவி

சிறிதுஆங்கே– மாணாஊர் அம்பல் அலரின் அலர்கஎன,
நாணும் நிறையும் நயப்பில் பிறப்பிலி.

தோழி

பூண்ஆகம் நோக்கி இமையான், நயந்து,நம்
கேண்மை விருப்புற் றவனை, எதிர்நின்று,
நாண்அடப் பெயர்த்த நயவரவு இன்றே.

தெளிவுரை

தோழி : "*தேமல் அணி செய்யும் மார்பகம்; ஒளியும் மணமும் கொண்ட நெற்றி; மாலை சூட்டப் பெற்றதும், மேகம் மோகம் கொள்ளக் கூடியதுமான கருமை வாய்ந்த கூந்தல்; நுட்பமான எழில் கொண்ட ஒளி பொருந்திய திதலை படர்ந்ததும், கூர்ந்து பார்ப்பினும் காண இயலாததுமான மெல்லிடை; வளைவமைந் ததும் வளையணியப்பட்டதுமான முன்கைகள்; செவ்வரிகள் படர்ந்த அல்குல் ஆகிய இவற்றைக் கொண்ட என் தலைவியே! கேள்!*

"நான் தனித்து நின்றபோது, ஒருவன் என்னை நோக்கி வந்தான்; வந்தவன் என்னிடம், 'அணிகலன்களை அணிந்தவளே! கண் நிறைந்த அழகினைக் கொண்டவளாய், தம்மைத் திடுமெனக் கண்டோர்க்கு, உள்ளத்தில் கட்டுக்கடங்காத நோய் தந்து, உயிர் நீங்கும்படியான துன்பத்தைக் கொடுத்தல் பெண்மைக்குண மன்று' எனக் கூறி வணங்கினான். அவன் கண்ணில் கண்ணீர் எட்டிப் பார்த்தது; உடம்பில் நடுக்கமும் தெரிந்தது. இனிய புன்னகை பூப்பவளே! அவன் அவ்வாறு என்னிடம் கூறியது ஏன்? இப்படியும் ஒருவன் செய்வானா?" என்று தலைவியிடம் கேட்டாள். "போர் யானை போன்ற பெருமிதம் கொண்ட அவன், தன் நிலை சற்றே தாழ, மனமுடைந்து கசிந்து நின்றது போல் தோன்றியது."

இதைக் கேட்ட **தலைவி,** "யாரோ ஒருவர் தெருவில் காரண மின்றிக் கலங்குவதைக் கண்டு, உனக்குத் தொடர்பில்லாத செயலை நீ தலையில் போட்டுக்கொள்ளுதல், வாரணாசியில் உள்ளோர், பிறர் துன்பத்தைத் தமது துன்பமென்று கருதும் கருணையை நீ பெற்றதுபோல இருக்கின்றது (இதனால் என்ன துன்பம் வருமோ?)" என்றாள்.

அது கேட்ட **தோழி,** "அவன் மேலும் கூறினான்: 'மலர் மொட்டுப் போன்ற மார்பகமும், ஆய்ந்து அணிந்த அணிகலன் களுமுடையாய்! உன் தலைவி, மை தீட்டிய தனது பெரிய கண்ணால் என்னைப் பார்த்த அளவிலேயே எனக்கு உண்டாகிய துன்பம், பெருங்கவலை தருகின்றது. அது என் உயிருக்கே கேடு விளைவிக்கும். அத்துன்பம் நீங்க, நீதான் மருந்து அளிக்க வேண்டும். நான் அவளைக் காண்பதே எனக்கு மருந்தாகும்' என்றான். அவன் உன்னைக் காண்பது தவிர இப்பொழுது தனக்கு வேறு மருந்து எதுவும் இல்லையென்கிறானே, நாம் இனி என் செய்வோம்?" என்று தோழி கேட்டாள்.

அதற்கு மாற்றமளிக்கும் **தலைவி,** " 'பொன் செய்வோம்' என்றாள். "வழக்கம் அல்லாத வழக்கமாய்த் தெருவில் ஒருவன் முறையில்லாமல் கூறும் சொற்களை உண்மையென்று கருதி, அவற்றின் தன்மையை அறியாமல் தெளிவது சரியன்று" என்று தோழியின் கருத்துக்கு எதிராய்க் கூறினாள்.

அது கேட்ட **தோழி,** *"இல்லையென்றால் அவன் இறந்து விடுதல் எளிது என்போமா?" என்றாள்.*

தோழியை நோக்கித் **தலைவி,** *"அவனது நடத்தையால் இவ்வூரில் பழிச்சொல் எழுந்து பரவி நம் குடிப்பெருமையை மாசுபடச் செய்யும். இதை எண்ணிப் பார்க்கும் நாணமும் மன அடக்கமும் கொண்ட நற்குடிப் பிறந்தவனாய் அவன் தோன்ற வில்லை; அவன் இறக்க மாட்டான்" என்று சொன்னாள்.*

தோழி, *தலைவியிடம், "அணிகலன்கள் அணிந்த உன் மார்பகங் களை இமையாமல் நோக்கி நம்மிடம் நட்புக்கொள்ள விரும்பிய வனை, நம் நாணம் காரணமாய், காணாதிருப்பது நமக்கு இன்பம் அளிக்காது" என்று கூறிக் களவொழுக்கத்திற்குத் தலைவியை உடன்பட வேண்டினாள்.*

கருத்து

"போர் யானை போன்ற பெருமிதம் கொண்டவன் பணிந்து சொல்கிறான். நீ இன்றித் தன்னால் உயிர் வாழ இயலாதென்றும், உன்னால் ஏற்பட்டுள்ள காதல் நோய்க்கு நீயே மருந்து என்றும் கூறுகிறான். அவன் குறையிரந்து கேட்பதை மறுப்பது நமக்குப் பண்பன்று" என்று தோழி தலைவியிடம் கூறி, தலைவனை ஏற்க வேண்டும் என்கிறாள்.

விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் ஆகியவை நிகழ்ந்த பின்னர், இனித் தோழியின் துணையின்றித் தலைவியை எதிர்ப்பட இயலாது என்பதைத் தலைவன் உணர்ந்தான். தலைவிக்கு உயிர்த்தோழி யார் என்பதையும் கண்டறிந்தான். ஒரு நாள் தலைவி, தோழி ஆகிய இருவரும் இருந்த நேரத்தில் தலைவன் வந்தான். தலைவி அவனை அறியாதவள்போல நடந்துகொண்டாள். தோழி தனியே இருந்தபோது, தலைவன் அவளைக் கண்டு, தலைவியோடு கொண்டுள்ள உறவைக் குறிப்பால் உணர்த்தியதோடு தான் தலைவியைக் காணாது உயிர் வாழ இயலாத தன் தன்மையைப் பற்றியும் கூறினான். தலைவியைத் தான் அடைய அவள் உதவுமாறு பணிந்து வேண்டினான். அவளும் தலைவி தலைவனோடு கொண்டுள்ள உறவைக் குறிப்பால் அறிந்திருந்த வளாகையால் அவனுக்குத் துணை நிற்பதாய் வாக்களித்தாள்.

தலைவன் சென்ற பிறகு, தலைவன் தன்னிடம் உரைத்த வற்றையும் அவனது நிலைமையையும் தோழி தலைவியிடம் கூறத் தலைவி, தோழி ஆகிய இருவரிடையே நிகழ்ந்த உரையாடலே இப்பாடல்.

குறிப்பு

1. 'வாரணவாசிப் பதம் பெயர்த்தல்' (அடி. 13) பற்றிக் கபிலர் கூறியுள்ளது கொண்டு அவர் அந்நகரப் பண்பினை அறிந்தவர் எனப் புலப்படுகிறது. அந்நகரத்தவர், அங்குப் புதிதாய் வந்தவரிடம் உரையாடி, அவர்க்குள்ள துன்பத்திற்குத் தாமும் வருந்துவதாய்க் கூறும் பழக்கம் கொண்டவராம். அந்தப் பழக்கம் தோழிக்கு எப்படி ஏற்பட்டது எனக் கேட்டுத் தலைவி நகையாடினாள்.
2. 'என் செய்வோம்' என்று தோழி கேட்டதற்குத் தலைவி, 'பொன் செய்வோம்' என்று கூறியது, வினாவுடன் ஒலியொத்துக் கூறிய நகைச் சுவைக் குறிப்பு; ஏதும் செய்ய வேண்டுவதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்

1. சுணங்கு - தேமல்; சுடர் - ஒளி.
2. மாரி – மேகம்; மாரிவீழ் இருங்கூந்தல் - இவள் கூந்தலைப் போலக் கருமையாய் இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற மேகம்; (இரும் - கரிய.)
3. நுணங்கல் - நுண்மை, மிகுதி; ஒண் - ஒள்ளிய; தித்தி - புள்ளி; நொசி - மெல்லியது.
4. வணங்குதல் – வளைதல்; இறை - மணிக்கட்டு; வரிஆர்ந்த – செவ் வரிகள் படர்ந்த.
5. கதும் – விரைவுக் குறிப்பு.
6. எஞ்சுதல் - நீங்குதல்.
8. நீராக - கண்ணீர் வழிய; இன் - இனிய; நகை - சிரிப்பு, முறுவல்.
9. இஃது ஒத்தன் - இவன் ஒருவன்.
10. பொருகளிறு - போர் யானை; தகை - பெருமிதம்; சாம்புதல் - ஒடுங்குதல்.
13. வாரணவாசி - வாரணாசியில் உள்ளோர்; பதம் - குணம்; ஏதில - தொடர்பற்றவை.
14. நீ நின்மேல் கொள்வது? - நீ உனக்குரியதாய் எடுத்துக்கொள்வது; எவன்? – எதற்கு?

15. அலர் - விரிகின்ற; ஆயிழை - ஆய்ந்தெடுத்த அணிகளை அணிந்தவள்; கதுமென - விரைவாய்.
16. பேரமர் - மிகவும் விரும்பத்தக்க; உறீஇய - உண்டாக்கிய.
17. ஆர்அஞர் - பெருங்கவலை; எவ்வம் - துன்பம்.
19. என்னும் - என்று கூறுகிறான்.
20. கொன் - வீண்.
24. ஆறு - (ஒழுக்க) நெறி.
25. வாய் - உண்மை.
26. தேறல் - தெளிதல்.
27. சாமாறு - இறந்து விடுதல்.
29. நாண் - பழிக்கு அஞ்சும் அச்சம்; நயப்பு - அன்பு; பிறப்பிலி - நற்குடிப் பிறப்பு இல்லாதவன்.
30. ஆகம் - மார்பு.
31. கேண்மை - நட்பு, உறவு.
32. நயவரவு - இன்பம்.

தோழி கூற்று

நற்றிணை 32 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகட்குக் குறை நயப்புக் கூறியது.

கூற்று விளக்கம்

தோழி, நயமாய்ப் பலவாறு தலைவன் குறையைக் கூறியும் தலைவி அதை அறியாதவள்போல இருந்தாள். அதுகண்டு வருத்தமுற்ற தோழி, 'அத்தலைவன் படும் துயரை நான் கூறியும் நீ தெளிவடையவில்லை; என் பேச்சு உனக்கு ஏற்புடையது அன்று என்றால் வேறு தோழியரோடு ஆராய்ந்தேனும் தக்கது செய்' என வெளிப்படையாகவே கூறியது.

மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்,
வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி
அம்மலை கிழவோன் நம்நயந்து என்றும்
வருந்தினன் என்பதுஓர் வாய்ச்சொல் தேறாய்;

நீயும் கண்டு நுமரொடும் எண்ணி,
அறிவறிந்து அளவல் வேண்டும்; மறுதரற்கு
அரிய வாழி! தோழி! பெரியோர்
நாடி நட்பின் அல்லது,
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.

தெளிவுரை

தலைவி! திருமாலைப் போன்ற கரிய பெரிய மலையிடத்தே அவனுக்கு முன்னோனாகிய பலராமன்போல, அதோ தோன்றும் வெள்ளிய அருவியைப் பார். அம்மலைக்குரிய தலைவன் நம்மை நயந்து நாளும் நம் புனத்திற்கு வந்து நின்று வருத்தத்தோடு செல்கிறான். நான் அதனைப் பலமுறை சொல்லியும் நீ தெளிகின்றாயில்லை! அவன் வருத்தத்தை நீயாகவே நேரிற்கண்டும், உன்மீது என்னினும் அன்புடையாரோடு ஆராய்ந்தறிந்தும் எண்ணிப் பார். அவன் கூற்றும் மறுத்தற்குரியது அன்று. முன்கூட்டியே ஆராய்ந்து தெளிவு கொண்ட பின்னரே பெரியோர் நட்புக்கொள்வர்; நட்புக் கொண்ட பின்னர்த் தம்மொடு சார்ந்தவரை ஆராயமாட்டார்; நீ தலைவனோடு நட்புக்கொள்வதற்குமுன் ஆராய்ந்திருந்தால் பொருத்தமாயிருந்திருக்கும்; நட்புக்கொண்ட பின் இப்போது எண்ணிப் பார்ப்பது பெருமை தாராது.

கருத்து

தலைவியே! தலைவன் படும் துயரை நான் கூற, நீ அஃது உண்மையெனக் கருதவில்லை. நீயே நேரில் கண்டோ வேறு தோழியருடன் ஆராய்ந்தோ செய்ய வேண்டியதைச் செய்.

குறிப்பு

‘நட்புக்குறித்து இப்போது ஆராய்வது பயன் தாராது. இயற்கைப் புணர்ச்சியின்கண் நிகழ்ந்த கூட்டமும் நட்பும் பிரியத்தகுவன அல்ல’ என்பதைத் தோழி எடுத்துரைக்கிறாள்.

தலைவி தலைவனுடன் முன்னரே நட்புக்கொண்டிருப்பதைத் தோழி தான் அறிந்திருப்பதைக் குறிப்பால் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. மாயோன் – திருமால்; மால்வரை – கரிய மலை; கவாஅன் – கவான் - பக்க மலை.
2. வாலியோன் - பலராமன்; வயங்கு - விளங்குகின்ற.
3. கிழவோன் - உரிமையுடையவன்; நயந்து - விரும்பி.
4. ஓர் வாய்ச்சொல் - உண்மையான சொல்; தேறாய் - தெளிந்து அறியவில்லை.
5. கண்டு - நேரில் கண்டும்; நுமர் - உன் தோழியர்; எண்ணி - ஆராய்ந்து.
6. அறிவறிந்து - அறியத்தக்கது இன்னதென அறிந்து; அளவல் - அளவளாவல் - கலந்து பேசுதல், கூடி மகிழ்தல்; மறு தரற்கு - மறுத்துக் கூறுதற்கு.
8. நாடி - ஆராய்ந்து; நட்பின் அல்லது - நட்புக்கொள்வர் அல்லது.
9. நட்டு நாடார் - நட்புக்கொண்ட பின் ஆராய மாட்டார்; ஒட்டியோர் - தம்மைச் சார்ந்தவர்.

தோழி கூற்று

அகநானூறு 380 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தன்னோடு கூட்டுவிக்க வேண்டுமென்று தலைவன் வேண்டினனாக அதற்குடன்பட்ட தோழி, தலைவியிடம் சென்று, தலைவன் விருப்பத்திற்கு இணங்குமாறு கூறியது.

தேர்சேண் நீக்கி, தமியன் வந்து,'நும்
ஊர்யாது?' என்ன, நணிநணி ஒதுங்கி,
முன்நாள் போகிய துறைவன், நெருநை,
அகல்இலை நாவல் உண்துறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டு,தன்,

தாழை வேர்அளை, வீழ்துணைக்கு இடூஉம்
அலவன் காட்டி, 'நற்பாற்று இது'என,
நினைந்த நெஞ்சமொடு, நெடிதுபெயர்ந் தோனே;
உதுக்காண் தோன்றும், தேரே இன்றும்,
நாம்எதிர் கொள்ளாம் ஆயின், தான்அது
துணிகுவன் போலாம் நாணுமிக உடையன்
வெண்மணல் நெடுங்கோட்டு மறைகோ—
அம்ம, தோழி!— கூறுமதி நீயே.

தெளிவுரை

தலைவியே! நான் கூறுவதனைக் கேள்! கடல் துறையை யுடைய தலைவன், முன்னொரு நாள் தன் தேரினை நெடுந் தூரத்தில் நிறுத்திவிட்டுத் தன்னந்தனியனாய்க் குறுகக் குறுக நடந்து வந்து, 'உங்கள் ஊர் யாது?' என்று கேட்டு, நாம் பேசாததால் திரும்பிச் சென்றான்.

நேற்றோ, நீர் உண்ணும் துறையில், அகன்ற இலையைக் கொண்ட நாவல் மரத்திலிருந்து பழங்கள் உதிர்ந்து கிடந்தன. அவற்றுள் ஒரு கனியின் அழகு கெடுமாறு ஆண் நண்டு தாழைக்கு அடியிலுள்ள தன் வளைக்கு அதனை இழுத்துச் சென்று, அங்கிருந்த தன் பெண் நண்டிற்குக் கொடுத்தது. அதனைச் சுட்டிக் காட்டித் தலைவன் 'நல்ல இல்லறப் பயன் இது' என்று கூறியவாறு நெடிது சிந்தித்தவனாய் மீண்டும் சென்றான்.

இன்றும் இதோ பார்! அவன் தேர் தோன்றுகின்றது. இன்று நாம் அவனை எதிர்கொண்டு ஏற்காமலிருந்தால், அவன் நாணம் மிகக் கொண்டவன் ஆதலின், 'நாம் அவனிடம் அன்பில்லாத தால் புறக்கணிக்கிறோம்' எனத் துணிந்து மீண்டும் சென்று விடுவான்.

அதனால் வெண்மையான இந்த நெடிய மணல்மேட்டில் நான் மறைந்துகொள்கிறேன். அவனிடம் உன் கருத்தினை நீயே கூறிடு.

கருத்து

தலைவியே! தலைவன் தேர் தோன்றுகிறது; நீ இன்று அவனை எதிர்கொள்ள வேண்டும்.

விளக்கம்

தலைவியே! கேள்; நேற்றைக்கு முந்தைய நாள் தேரினைத் தொலைவில் நிறுத்திவிட்டுத் தனியனாய் வந்த தலைவன், நாம் பேசாமையால் திரும்பிச் சென்றான். நேற்றும் அவன் வந்தான்; இன்றும் அவன் தேர் அதோ தோன்றுகிறது. நாம் எதிர் கொள்ளவில்லையாயின் நாம் அவனைப் புறக்கணிக்கிறோம் என்று கருதிச் சென்று விடுவான். நான் மறைந்துகொள்கிறேன். நீ அவனிடம் உன் கருத்தினைக் கூறு.

குறிப்பு

நாவற்கனியை ஆண் நண்டு தன் பெண் நண்டுக்கு ஊட்டுவதைக் கண்டு, தானும் தலைவியை மணந்து அவளுடன் கூடி இனிதாய் இல்லறம் நடத்த வேண்டும் எனத் தலைவன் விரும்புகிறான்.

சொற்பொருள்

1. சேண் நீக்கி - சேய்மையில் நிறுத்தி; தமியன் - தனியே.
2. நணிநணி ஒதுங்கி - குறுகக் குறுக நடந்து வந்து.
3. துறைவன் - நெய்தல் நிலத்தலைவன்; நெருநை - நேற்று.
4. நாவல் - நாவல் மரம்; உண்துறை - நீர் உண்ணும் துறை.
5. கனி - நாவல்கனி; கவின் சிதைய - (அதன்) அழகு கெடுமாறு; வாங்கிக் கொண்டு - இழுத்துச் சென்று.
6 அளை - வளை; வீழ்துணைக்கு - தான் விரும்பும் துணையாகிய பெண் நண்டிற்கு; இடூஉம் - கொடுக்கும்.
7. அலவன் - நண்டு; நற்பாற்று இது - நல்ல இல்லறப்பயன் இது.
8. பெயர்ந்தோன் - மீண்டு சென்றான்.
9. உதுக்காண் - அதோ பார்.
10. எதிர் கொள்ளாம் ஆயின் - எதிர்கொண்டு ஏற்காமல் இருந்தால்.

10-11. தான் அது துணிகுவன் - அவன் அதனை மெய்யெனத் துணிவான்.

11. போலாம் - என்று தோன்றுகிறது.
12. நெடுங்கோடு - நெடிய மணல்மேடு; மறைகோ - ஒளிந்து கொள்வேன்.
13. கூறுமதி நீயே - உன் கருத்தை (அவனுக்கு) நீயே கூறு.

தோழி கூற்று

அகநானூறு 392 **மோசிகீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி, தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தோழியைத் தன் கருத்துக்கு இசைய வைத்தான்; பின்னர் அவன் தலைவியைத் தன்னோடு கூட்டுவிக்குமாறு தோழியை வேண்டினான். அவன் வேண்டுகோளுக்குத் தோழி இணங்கினாள். அவன் வேண்டுகோளுக்கு இணங்குமாறு தோழி தலைவிக்குக் கூறியது.

தாழ்பெருந் தடக்கை தலைஇய, கானத்து,
வீழ்பிடி கெடுத்த, வெண்கோட்டு யானை
உண்குளகு மறுத்த உயக்கத் தன்ன,
பண்புடை யாக்கைச் சிதைவுநன்கு அறிஇ,
பின்னிலை முனியான் ஆகி, நன்றும்
தாதுசெய் பாவை அன்ன தையல்,
மாதர் மெல்இயல், மடநல் லோள்வயின்
தீதின்று ஆக, நீபுணை புகுக!என,
என்னும் தண்டும் ஆயின், மற்றுஅவன்
அழிதகப் பெயர்தல் நனிஇன் னாதே—
ஒல்இனி, வாழி, தோழி!— கல்லெனக்
கணமழை பொழிந்த கான்மடி இரவில்,
தினைமேய் யானை இனன்இரிந்து ஓட,
கல்உயர் கழுதில் சேணோன் எறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி ஒல்லென,
மறப்புலி உரற, வாரணம் கதற,
நனவுறு கட்சியின் நல்மயில் ஆல
மலையுடன் வெரூஉம் மாக்கல் வெற்பன்
பிரியுநன் ஆகலோ அரிதே, அதாஅன்று,
உரிதுஅல் பண்பின் பிரியுநன் ஆயின்,

வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகொல் தானையொடு முன்வந்து இறுப்ப,
தன்வரம்பு ஆகிய மன்எயில் இருக்கை,
ஆற்றா மையின், பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற,
விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கில்
கான்அமர் நன்னன் போல,
யான்ஆ குவல்,நின் நலம்தரு வேனே.

தெளிவுரை

"தலைவியே! வாழ்க! இப்பொழுது நான் கூறுவதை மனம் பொருந்திக் கேள்.

"கல் என்னும் ஒலியுடன் மேகக்கூட்டங்கள் மழையைப் பொழிந்தன. காடெல்லாம் ஒலி அடங்கிய இரவு நேரம். தினைப் பயிரை மேய்ந்த யானைக்கூட்டம் நிலை கெட்டு ஓடும்படி, மலையில் உயர்ந்த பரணிலிருந்து கானவன் கல் வீசி எறிந்தான். அக்கல்லின் கடுமையான ஓசையைக் கேட்டு, அஞ்சாமையைக் கொண்ட புலி முழங்கியது; யானைகள் கதறின; அகன்ற காட்டிலே உள்ள அழகிய மயிலும் இடியோசை என்று கருதி ஆடியது. இவ்வாறு மலை முழுவதும் அஞ்சுதற்குக் காரணமான பெரிய கற்களைக் கொண்ட மலைநாட்டிற்கு உரியவன், தலைவன்.

"தொங்குகின்ற நீண்ட பெரிய கையுடன் வெண்மையான கொம்பினையும் கொண்ட ஆண்யானை, காட்டில், தன் விருப்பத் திற்குரிய பெண்யானையைப் பிரிந்துவிட்டதால் உண்ணும் தழையை உண்ணாது விலக்கிச் சோர்ந்தது. அதன் வாட்டத்தைப் போல, தலைவனும் அழகு வாய்ந்த தனது உடல் வாட்டத்தை நன்கு அறிந்திருந்தும் நம்மிடம் இரந்து பின் நிற்றலை அவன் வெறுக்கவில்லை; இழிவென்றும் கருதவில்லை.

" 'பொன்னால் செய்த பாவை போன்ற கட்டழகினையும், விரும்பத் தகும் மென்மைத் தன்மையுடன் இளமையும் பொருந்திய தலைவியிடம் நீ என் துன்பக்கடலைக் கடக்கப் புணையாய் இருப்பாயாக' என்று வேண்டினான்; அவ்வாறு

வேண்டிய பின்னர் நம்மை விட்டுச் சிறிது நீங்கினாலும் அப் பிரிவு நமக்கு மிகத் துன்பம் தருவதேயாகும்.

"தலைவியே! நாம் அவனுக்கு அருள் செய்யாவிட்டாலும் அவன் நம்மை விட்டுப் பிரிந்து செல்பவனாய்த் தோன்றவில்லை.

"தான் மேற்கொண்ட போரினின்றும் நீங்கித் திரும்பிய பகை வேந்தன், மீண்டும் போரிடப் படைகளுடன் கூடி, மதில் புறத்தே வந்து தங்கினான். மதிலின் உள்ளிருந்தோர், அப்பகைவேந்தனை எதிர்த்து நிற்க இயலாதிருந்தனர். மதிலுக்குரிய நன்னன் என்னும் மன்னன், அவ்வேளை, கண்டார் விரும்புமாறு உயர்ந்த மூங்கில்கள் நிறைந்த மலைப்பக்கம் உள்ள காட்டிற்குச் சென்று தங்கி இருந்தான். அவன் மீண்டு வந்து, தான் கையில் கொண்டிருந்த வலிமையான வேலினது ஆற்றல் பிழையாதபடி மதிலைத் தாக்கிய வேந்தனுடன் போரிட்டுத் தன் பழைய புகழை நிலை நிறுத்தினான். அதுபோல, தனக்கு உரியதல்லாத பண்பின் காரணமாய் எதிர்பாராது ஒரோவழி தலைவன் பிரிவானாயின், அந்த நன்னனைப் போலவே நானும் உனது நலத்தினை மீளவும் சேர்த்து வைப்பேன்.

கருத்து

"தலைவி! மலைநாட்டிற்குரிய தலவைன் அழகு வாய்ந்த தன் உடல் வாட்டத்தை நன்கு அறிந்திருந்தும் நம்மிடம் இரந்து பின் நிற்றலை வெறுக்கவில்லை. 'என் துன்பக்கடலைக் கடக்க நீ தெப்பமாய் இருந்து, தலைவியிடம் நீ சென்று கூறி எனக்கு உதவு' என்று சொன்னான். அவன், நீங்கியிருப்பானாயின் அது நமக்குத் துன்பமே தந்திருக்கும். ஆனால், அவன் பிரிந்து செல்வதாய் இல்லை. ஒருவேளை அவன் பிரிவானாயின், அவனை மீண்டும் உன்னோடு சேர்த்து வைத்து, உன் நலத்தினை மீளச் செய்வேன்" என்று கூறித் தோழி தலைவியை உடன்படுத்துகிறாள்.

குறிப்பு

நன்னன் என்பானுக்கு உரிய அரணை முற்றுகை இட்ட மாற்றுவேந்தன் தோற்று ஓடினான். வெற்றி பெற்ற நன்னன் காட்டில் சென்று தங்கியிருந்தான். அவ்வேளை, முன்பு தோற்றோடிய மன்னன் மீண்டும் வந்து கோட்டையைத் தாக்கினான். கோட்டையின் உள்ளிருந்தோர் அவனுடன் பொருதுதற்கு ஆற்றாதிருந்தனர். காட்டிலிருந்த நன்னன் மீள வந்து, தனது பழைய புகழ்

நிலைபெறும்படி அப்பகைவனை வென்று, அரணில் உள்ளாரைப் பாது காத்தான்.

அந்நன்னன் போல, 'தலைவன் அகன்றதால் நீ இழந்த உன் நலத்தினை எவ்வாறேனும் உனக்கு மீட்டுத் தருவேன்' என்றாள், தோழி.

'நன்னன் அரணை மாற்றார் முற்றுகையிட, அம்மாற்றாரைத் தாங்கலாற் றாது அரணுள் இருந்தோர் தவித்தபோது நன்னன் மீண்டுவந்து மாற்றாரை முறியடித்துத் தன் புகழை மீண்டும் நிலைநிறுத்தினன்' என்பது, தலைவன் பிரிந்து போனாலும் அவனை மீளக் கூட்டுவேன் என்றற்கு **உவமை.**

சொற்பொருள்

1. தாழ் - தொங்குகின்ற; தலைஇய - பொருந்திய.
2. வீழ்பிடி - விரும்பப்படும் பெண்யானை; கெடுத்த - இழந்துவிட்ட.
3. குளகு - தழை; உயக்கம் - வாட்டம், வருத்தம்.
4. சிதைவு - வாட்டம்; நன்கு அறீஇ - நன்கு அறிந்து வைத்தும்.
5. பின்னிலை - இறந்து பின் நிற்றலை; முனியான் - வெறுக்காதவன்.
6. தாது - பொன்.
7. மெல்இயல் - மென்மைத் தன்மை; மட நல்லோள் வயின் - மடப்பம் வாய்ந்த தலைவியிடம்.
8. தீது இன்றாக - தீமை தோன்றாதபடி; நீ புணை புகுக - நீ புணையாய் இருந்து உதவுக.
9. தண்டுதல் - விலகுதல்.
10. அழிதக - வருந்தும்படி; பெயர்தல் - பிரிந்து செல்லுதல்; நனி இன்னாதே - நமக்கு மிகவும் துன்பமாவதே.
11. கல் என - கடிய ஒலியுடன்.
12. கணமழை - கூட்டமாகிய மேகம்; கான்மடி - கானமெல்லாம் அடங்கிய.
13. இனன் - கூட்டம்; இரிந்து ஓட - நிலை கெட்டு ஓட.
14. கழுது - பரண்; சேணோன் - உயர்ந்த இடத்தில் இருப்பவன், குறவன்.
15. வல்வாய் - விசை வாய்ந்த; கவண் - கல்லெறி கருவி; வெடி - ஓசை; ஒல்லென - ஒல் என்று ஒலிக்க.
16. உரற - முழங்க; வாரணம் - யானை.
17. நனவுறு கட்சி - அகலமான காடு; ஆல - ஆட.
18. மலையுடன் - மலை முழுதும்; வெரூஉம் - அஞ்சும்; மாக்கல் வெற்பன் - பெரிய கற்களைக் கொண்ட மலை பொருந்திய நாட்டை யுடைய தலைவன்.

19. அதாஅன்று - அஃதன்றியும்.
20. உரிதுஅல் - தனக்கு உரியது அல்லாத; பண்பின் பிரியுநன் ஆயின் - பண்பினால் ஒரோவழிப் பிரிவான் ஆயின்.
21. வினைதவ - போர் ஒழிய; பெயர்ந்த - நீங்கிய.
22. முனை - போர் முனை; முன்வந்து இறுப்ப - மீளவும் மதிற்புறத்தே வந்து தங்க.
23. தன் வரம்பு ஆகிய - தன்னைப் பற்றுக்கோடாய்க் கொண்ட; எயில் - மதில்.
24. ஆற்றாமையின் - அப்பகைவேந்தனை எதிர்த்து நிற்க ஆற்றாமை யால்.
26. விழைதக ஓங்கிய - கண்டார் விரும்புமாறு வளர்ந்துள்ள; கழைதுஞ்சு - மூங்கில்கள் செறிந்த.
27. கான் அமர் - காட்டில் வாழ்ந்திருந்த.
28. யான் நின் நலம் தருவேன் ஆகுவல் - (அவனைச் சேர்ந்து) நான் நின் நலத்தினை மீண்டும் கூட்டி வைப்பேன்.

தோழி கூற்று

அகநானூறு 268 **வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறைவேண்டிப் பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை அடையத் தோழியின் உதவியை நாடினான். அவளும் அவன்மீது இரக்கங்கொண்டு, அவன் வேண்டுகோளை ஏற்றுத் தலைவியை அணுகி, அவனுக்கு அருள் செய்யுமாறு கூறியது.

அறியாய் – வாழி, தோழி! – பொறிவரிப்
பூநுதல் யானையொடு புலிபொரக் குழைந்த
குருதிச் செங்களம் புலவுஅற, வேங்கை
உருகெழு நாற்றம் குளவியொடு விலங்கும்
மாமலை நாடனொடு மறுஇன்று ஆகிய

காமம் கலந்த காதல் உண்டுஎனின்,
நன்றுமன்; அதுநீ நாடாய், கூறுதி;
நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்,
யான்அலது இல்லை,இவ் உலகத் தானே—
இன்உயிர் அன்ன நின்னொடும் சூழாது,
முளைஅணி மூங்கிலின், கிளையொடு பொலிந்த,
பெரும்பெயர் எந்தை அருங்கடி நீவி,
செய்துபின் இரங்கா வினையொடு
மெய்அல் பெரும்பழி எய்தி னேனே!

தெளிவுரை

"*தலைவியே! நான் கூறுவதனை ஆய்ந்துபார்.*

புள்ளிகளும் வரிகளும் பொருந்திய அழகிய நெற்றியைக் கொண்ட யானையுடன் புலி ஒன்று போரிட்டது. அதனால் குருதி படிந்து சிவந்த அந்த இடத்தில் புலால் நாற்றம் எழுந்தது. வேங்கை மலர்களின் மணம் காட்டுமல்லிகை மலர்களுடன் கலந்து அந்நாற்றத்தைப் போக்குகின்றது. அத்தகைய மலைநாட்டினைக் கொண்டவன், தலைவன்.

"*அவனுடன் குற்றமற்றதாகிய அன்பு கலந்த காதல் உனக்கு உண்டென்றால் அது நல்லதே. அதுபற்றிச் சிந்தித்துக் கூறு.*

"*என் இனிய உயிர் போன்றவள் நீ. உன்னோடும் கலந்து பேசாமல், அழகிய மூங்கில் முளைபோல் நெருங்கிய சுற்றத் தொடு திகழும் புகழ்மிக்க நம் தந்தையின் அரிய காவலையும் கடந்து, செய்த பின் அதற்காக வருத்தப்படாத செயல் ஒன்றனைச் செய்து முடித்துள்ளேன். அதனால் உண்மை யல்லாத பெரும் பழியையும் எய்தி உள்ளேன்.*

"*ஆதலால், இவ்வுலகத்தில் நாணமும் நட்பும் இலாதவர் யாரேனும் உளரோ என ஆராய்ந்து பார்த்தால் என்னையன்றி எவரும் இரார்.*"

கருத்து

'தலைவியே! நான் கூறுவதைக் கேள். மலைநாடனொடு குற்றமில்லாத அன்பு கலந்த காதற்கூட்டம் உன்னிடம் உளதாயின் அது மிகவும் நல்லதே!' என்கிறாள், தோழி.

விளக்கம்

தலைவனின் வேண்டுகோளைத் தோழி தலைவியிடம் கூறினாள். அதைக் கேட்டுத் தலைவி ஒன்றும் கூறவில்லை. அப்போது தோழி தலைவியிடம், தான் நாணம் விட்டு, சுற்றத்தார் காவலையும் கடந்துசென்று, தலைவனைச் சந்தித்து, அவனுக்குத் தலைவியை இயைவிப்பதாய்ச் சொல்லி வந்துள் ளதையும், அதனாலே தான் பெரும்பழி எய்தியிருப்பதையும் கூறுகிறாள். எனினும், தான் செய்தது முறையான செயல் என்பதால் வருந்தாதிருப்பதாகவும் கூறினாள்.

தலைவியின் இயற்கைப் புணர்ச்சியைத் தோழி அறிவாள். அதுபற்றி அவளே சொல்வாள் எனத் தோழி எண்ணியிருந் தாள். ஆனால், தலைவி அதனைச் சொல்லவில்லை. அதனால் தான், 'நாடனொடு நீ நட்புக்கொண்டிருந்தால் அது நல்லதே' என்கிறாள், தோழி.

குறிப்பு

தலைவனிடம் தலைவி தன் உள்ளத்தைச் செலுத்தியவளாதலால் (தலைவனோடு இயற்கைப் புணர்ச்சி நடந்துள்ளதால்) தோழியின் இப் பேச்சினைக் கேட்டுத் தலைவனைச் சந்திக்க இசைவாள் என்பது கருத்து.

உள்ளுறை

புலி யானையைக் கொன்ற இடத்தில் ஏற்பட்ட புலவு நாற்றத்தை மலர்களின் மணம் நீக்கும் என்னும் தொடர்மூலம் களவொழுக்கத்தால் ஏற்படும் பழியைத் தலைவன் தலைவியை மணந்து இல்லறம் நடத்திப் போக்குவான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அறியாய் - ஆராய்ந்து பார்.
2. பூ நுதல் - அழகிய நெற்றி; பொர - போரிட; குழைந்த - குழைவுற்ற.
3. செங்களம் - சிவந்த இடம்; புலவு அற - நாற்றம் நீங்க; வேங்கை - வேங்கை மலர்.
4. நாற்றம் - மணம்; குளவி - காட்டுமல்லிகை; விலங்கும் - மாற்றும்.
5. மறுஇன்று - குற்றம் இல்லாத.
6. காமம் கலந்த காதல் உண்டு எனின் - அன்பு கலந்த காதல் உனக்கு உண்டு என்றால்.

7. நன்றுமன் - மிகவும் நல்லது; நாடாய் - ஆராய்ந்து; கூறுதி - கூறு.
8. நாண - நாணம்; இல்லோர் - இல்லாதவரை; தேரின் - ஆராய்ந்தால்.
9. யான் அலது - என்னை அன்றி.
10. சூழாது - கலந்துகொள்ளாமல்.
11. முளை அணி - முளைகளால் நெருங்கி அழகு பெற்ற; மூங்கிலின் - மூங்கிலைப் போல; கிளையொடு பொலிந்த - சுற்றத்தொடு திகழும்.
12. பெரும் பெயர் - புகழ்மிக்க; எந்தை - எம் தந்தை; அருங்கடி - அரிய காவல்; நீவி - கடந்து, தாண்டி.
13. செய்து பின் இரங்கா - செய்ததன் பின் அதற்கு வருத்தப்படாத; வினையொடு - ஒரு செயலைச் செய்ததால்.
14. மெய் அல் - உண்மை அல்லாத; பெரும்பழி எய்தினேன் - பெரிய பழியை அடைந்துள்ளேன்.

தோழி கூற்று

அகநானூறு 250 செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியோடு தன்னைக் கூட்டி வைக்கத் தோழியை வேண்டினான். தலைவனது குறையை நிறைவேற்றுவதற்கு உடன்பட்ட தோழியும், அவன் வேண்டுகோளுக்கு இணங்குமாறு தலைவியிடம், அவள் நயக்கும் வண்ணம் கூறியது.

எவன்கொல்? – வாழி, தோழி! – மயங்குபிசிர்
மல்குதிரை உழந்த ஒல்குநிலைப் புன்னை
வண்டுஇமிர் இணர நுண்தாது வரிப்ப,
மணம்கமழ் இளமணல் எக்கர்க் காண்வரக்
கணம்கொள் ஆயமொடு புணர்ந்துவிளை யாட,
கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கி,

தாரன், கண்ணியன், சேரவந்து ஒருவன்,
வரிமனை புகழ்ந்த கிளவியன், யாவதும்
மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன்; அதற்கொண்டு
அரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்,
அவ்வலைப் பரதவர் கானல்அம் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையின் கலங்கி,
இறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையும் துஞ்சாது, கங்கு லானே!

தெளிவுரை

தலைவியே! நீ வாழி!

மிகுந்த அலைகளிலிருந்து தெறிக்கும் நெருங்கிய நீர்த்துளிகளால் மோதுண்டு புன்னைமரம் அசையும் நிலையினை எய்தியுள்ளது. வண்டுகள் அம்மரத்தில் மொய்க்கின்றன. அதன் பூங்கொத்துகளிலிருந்து பூந்துகள்கள் விழுந்ததால் மெத்தென்ற மணற்பரப்பு மணம் கமழ்கிறது. அப்பரப்பில் பலரும் காணும்படியாக நாம் தோழியர் கூட்டத்துடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது ஒருவன், கைப்பிடி கொண்ட தனது தேரையும் பணியாள்களையும் தொலைவிலே நிறுத்தினான். மார்பிலே மாலையும் தலையிலே கண்ணியும் அணிந்திருந்த அவன் தனியனாய் நம்மிடம் நெருங்கி வந்தான். நாம் இயற்றி விளையாடிக்கொண்டிருந்த மணல்வீட்டினைப் புகழ்ந்து பாராட்டினான். நம்மிடமிருந்து மறுமொழி ஏதும் பெறாததால் திரும்பிச் சென்றான்.

அதுமுதல் அவனை நினைத்து வருந்தும் துன்பத்தால் நம் தோள்கள் மெலிந்தன. அழகிய வலைகளைக் கொண்ட பரதவரின் கடற்கரைச்சோலையில் உள்ள சிற்றூரில் வாழும் பெண்டிர் பலருமறியப் பழிச்சொல் கூறுகின்றனர். அதனைக் கேட்டு உள்ளங்கலங்கி, உடல் மெலிந்து, முன்கையிலிருந்து வளையல்கள் கழன்று விழுகின்றன.

நாம்தாம் இரவு முழுவதும் உறங்காது விழித்திருக்கிறோம் என்றால், இந்தக் கடலும் ஏன் தூங்காதிருக்கிறது? இதற்குக் காரணம் என்னவோ?

கருத்து

'நாம் அடைந்துள்ள நோயும், ஊரார் கூறும் பழிச்சொற்களும் நீங்க வேண்டுமெனின், அத்தலைவனைத் தலைவி ஏற்றுக்கொள்ள வேண்டும்.'

விளக்கம்

தலைவியே! நீ வாழி! மெத்தென்ற மணல்மேட்டில் நாம் தோழியரோடு விளையாடிக்கொண்டிருக்க, ஒருவன் அருகே வந்து, நம் சிற்றிலைப் புகழ்ந்து பேசிட, நம்மிடமிருந்து மறுமொழி ஒன்றும் பெறாததால் வறிதே திரும்பிச் சென்றான். அன்றுமுதல் அவன் நினைவால் வருந்தி நம் தோள்கள் மெலிந்தன; உடல் மெலிந்து வளையல்கள் கழன்று விழுகின்றன. இரவு முழுவதும் தூங்காதிருக்கிறோம். ஆனால், நம்மோடு சேர்ந்து கடலும் ஏன் தூங்காதிருக்கிறது? காரணம் யாதோ?

குறிப்பு

'நாம் துன்புற்றுக் கலங்கி, வளையல் நெகிழ்வுற வருந்தியிருக்கிறோம்' என்று தோழி கூறுவது, தலைவி தலைவனைப் பிரிந்திருத்தலையேயாம்.

துறையும் இரவில் உறங்காதிருந்தது என்பதை இவர்கள் உறங்காதிருந்த தாலேயே அறிய இயன்றது.

'நாம் உற்ற நோயும் ஊர்ப்பெண்டிர் பழிச்சொல்லும் ஒழிய வேண்டின், அப்பெருந்தகையின் குறையினை நயந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்' எனத் தோழி குறை நயப்பக் கூறுகிறாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மயங்கு பிசிர் - நெருங்கிய துளிகள் மிக்க.
2. மல்கு திரை - மிக்க அலைகள்; உழந்த - வருந்திய; ஒல்கு நிலை - அசையும் நிலை.
3. இமிர் - ஒலிக்கின்ற; இணர் - பூங்கொத்துகள்; வரிப்ப - உதிர்ந்து அழகு செய்ய.
4. எக்கர் - மணல்மேடு.
5. கணம்கொள் - கூட்டம் கொண்ட.
6. கொடுஞ்சி - தேரின் முன்பகுதியில் மொட்டு வடிவில் உள்ள கைப்பிடி; இளையர் - ஏவலாளர்.
7. சேரவந்து - அணுக வந்து.

8. வரிமனை - (நாம் இயற்றிய) வண்டல் மனை; கிளவியன் - சொல்லினைச் சொன்னவன்.
9. பெயர்ந்தனன் - திரும்பிச் சென்றான்; அதற்கொண்டு - அதுமுதல்.
10. படர் எவ்வம் - பெருகிய துன்பம்; சாஅய் - மெலிய.
11. அம் சிறுகுடி - அழகிய சிற்றூர்.
12. வெவ்வாய் - கொடிய சொற்களைப் பேசும் வாய்; கவ்வை - பழிச்சொல்.
13. இறை - முன்கை; வளை - வளையல்.
14. துறையும் - கடல் துறையும்; துஞ்சாது - தூங்காது; கங்குல் - இரவுப் பொழுது.

தோழி கூற்று

கலித்தொகை 47 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி, அவன் தன்மையும், அவன் தனக்குக் கூறுவனவும், அக்கூற்றுத் தன்னால் பொறுக்க ஒண்ணாதவாறும், அவன் கருத்தும் தலைவிக்குக் கூறி, அவன் குறைநயப்பத் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவியை நட்பாக்கிக்கொள்ள வேண்டும்' என்னும் தலைவன் வேண்டுகோளைத் தோழி ஏற்றாள். அவன் தன்னிடம் கூறியவற்றையும், அச்சொற்களைத் தன்னால் தாங்கிக்கொள்ள இயலாத தன்மையையும், அவனது நோக்கத்தையும் அவள் தலைவியிடம் கூறினாள். அதற்குத் தலைவி பதில் ஒன்றும் கூறாமலிருந்தாள். அதைக் கண்டு தோழி, தனக்குத் தானே கூறுவதுபோல், 'தலைவனின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்' என்று சொல்லியது.

தரவு

ஒன்று, இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும்; உலகம்
புரப்பான் போல்வதுஓர் மதுகையும் உடையன்;
வல்லாரை வழிபட்டு ஒன்றுஅறிந் தான்போல்
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்;
இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க

வல்லான் போல்வதுஓர் வண்மையும் உடையன்;
அன்னான் ஒருவன்தன் ஆண்தகை விட்டுஎன்னைச்
சொல்லும்சொல், கேட்டீ—சுடரிழாய்! — பன்மாணும்.

தாழிசை

'நின்இன்றி அமையலேன் யான்'என்னும் அவனாயின்
அன்னான்சொல் நம்புண்டல் யார்க்கும்இங்கு அரிதாயின்
என்உற்ற பிறர்க்கும்ஆங்கு உளகொல்லோ? நறுநுதால்;

'அறியாய்நீ வருந்துவல் யான்'என்னும் அவனாயின்
தமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கும் அரிதாயின்
அளியரோ எம்போல் ஈங்குஇவன் வலைப்பட்டார்?

'வாழலேன் யான்என்னும் நீநீப்பின்' அவனாயின்
'ஏழையர்' எனப்பலர் கூறும்சொல் பழியாயின்
சூழுங்கால் நினைப்பதுஒன்று அறிகலேன் வருந்துவல்;
சூழுங்கால் நறுநுதால் நம்முளே சூழ்குவம்;

அவனை,

சுரிதகம்

நாண்அட, பெயர்த்தல் நமக்கும்ஆங்கு ஒல்லாது!
'பேணினர்' எனப்படுதல் பெண்மையும் அன்று;அவன்
வெளவினன் முயங்கும் மாத்திரம் வா'எனக்
கூறுவென் போலக் காட்டி
மற்றுஅவன் மேஎவழி மேவாய், நெஞ்சே!

தெளிவுரை

(தலைவியைக் கண்டு, அவள் தலைவனுடன் கொண்டுள்ள உறவை நேரிடையாய்க் கூறினால், பெருநாணம் கொண்டவளாகிய தலைவி மிகவும் துன்புறுவாள் எனத் தோழி எண்ணினாள். எனவே, தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள உறவைச் சுற்றி வளைத்துக் குறிப்பாய் உணர்த்தத் தோழி முற்படுகிறாள்.)

தோழி, தலைவியை நோக்கி, "ஒளிர்கின்ற அணிகள் அணிந்தவளே! (ஒரு நாள் நான் தனித்து நின்றுகொண்டிருந்தேன். அதுபோழ்து அங்கு ஒருவன் வந்தான்.) என்னிடம் ஒன்றை

இரந்து வேண்டுபவன்போல், மிக எளியவனாய் நின்று பேசினான். அப்படிக் குறையிரந்து நின்றாலும் உலகத்தை யெல்லாம் பாதுகாப்பவன் போன்ற வலிமை கொண்டவனாய்க் காணப்பட்டான். கற்றறிந்த வல்லவர்களை வழிபட்டுக் கற்று, அறிந்து, அடங்கியவர்களிடம் அமைகின்ற அடக்கம் கொண்ட வனாய்த் திகழ்ந்தான். வறியவர்களின் வறுமையைத் தன் ஈகைப் பண்பினால் தணிக்கவல்ல வள்ளல் போன்ற கொடை வண்மை கொண்டவனாயும் தோன்றினான். அப்படிப்பட்ட பெருமை யெல்லாம் கொண்ட ஒருவன் தன் ஆண்மைக்குரிய பெரு மிதத்தைக் கைவிட்டு, என்னை நோக்கிப் பலவாறு மாட்சிமைப் படச் சொல்லியவற்றை நீயும் கேள்."

இவ்வாறு கூறும்பொழுது, தலைவியின் மெய்ப்பாடுகளை அவளறியாதவாறு தான் அறிந்துகொண்ட தோழி, "நறுமணம் வாய்ந்த நெற்றியைக் கொண்டவளே! பெருமிதம் கொண்ட அவன் என்னைப் பார்த்து, 'நீ இல்லாமல் நான் அமைதி கொள்ள இயலாது' என்று கூறுகிறான். அவன் சொல்லை நம்புதல் யார்க்கும் அரிது என்று நான் எண்ணுகின்றேன். மற்றவர்க்கும் இந்த எண்ணம் உண்டாகுமோ என்று நான் ஐயுறுகிறேன்" என்றாள். (தலைவனின் உறுதியை நேரில் கேட்டு அறிந்தவள், தோழி. அவன் சொன்னதில் தோழிக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆகையால், தலைவியின் 'புறக்கணிப்பு' வருத்தம் தருகிறது. 'அவன் சொல்வதை மற்றவர்கள் நம்பவில்லை யென்றால் நான் வருத்தப்படுவதால் என்ன பயன்?' என்பது தோழியின் கருத்து. பிறர் என்று யாரையோ சொல்வதுபோலத் தோழி தலைவியைத்தான் குறிப்பிடுகிறாள்.)

"தலைவியே! மற்றொரு நாள் அவன், 'நான் எவ்வளவு வருத்தப்படுகிறேன் என்பதை நீ அறிய மாட்டாய்' என்று என்னை நோக்கிக் கூறினான். 'பொதுவாகப் பெண்கள் தாமாகவே ஒரு முடிவுக்கு வர இயலாதவர் என்பர்; என்னைப் போல அவன் சொல்லை நம்பி, அவன் வலையிலே அகப்பட்டுக் கொண்ட பெண்கள், பாவம் இரக்கப்பட வேண்டியவர்தாம்" என்றாள், தோழி. (பெண்கள் என்று யாரையோ பொதுவாய்ச் சொல்வதுபோல் சொன்னாலும் தலைவியைத்தான் தோழி அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்கிறாள்.)

தோழி, மீண்டும் தலைவியை நோக்கி, 'நறுமணம் கமழும் நெற்றியைக் கொண்டவளே! நீ அருள் காட்டாமல் நீங்கி விட்டால் நான் வாழமாட்டேன்' என்று அவன் சொல்லு கின்றான். பெண்களைப் பேதையர் என்று பலரும் சொல்லு கின்றனர். ஆகையால், நான் தனியே எண்ணிப் பார்த்தால் என்ன நினைப்பதென்று தெரியாமல் வருந்துகிறேன். செய்யத்தக்கது என்ன என்று நாம் கலந்து ஆராய்ந்து பார்ப்போம்" என்று கூறினாள். (இதைக் கேட்ட தலைவி, அவன்மீது தனக்குக் காதல் இருப்பதால் நாணத்தால் தலைசாய்ந்தாள். இதைக் கண்ட தோழி தனக்குத் தானே பேசிக்கொள்கிறாள்.)

"நம்மை நாணம் வாட்டுகிறது என்பதற்காக அவனை விலக்கி விடுதலும் நமக்குப் பொருந்தாது. அதற்காக அவனை வெளிப் படையாக வலிய ஏற்றுக்கொண்டாலும், அறிவிலிகள் என்று நம்மைப் பலரும் பழிதூற்றும் நிலை ஏற்பட்டுவிடும். அது பெண்மைக்கு அழகும் ஆகாது. அவனோ, உன்னை விரைவில் தழுவிக்கொள்ள வேண்டும் என நெஞ்சிலே உறுதிபூண்டு விட்டான். நீயோ அதை விரும்புவதுபோலத் தெரியவில்லை. இந்த நிலையில் நான் சொல்வதற்கு ஒன்றும் இருப்பதாய்த் தெரியவில்லை" என்று, இந்த அளவுக்குத் தலைவியிடம் கூறிய தோழி, பிறகு தன் நெஞ்சிற்குக் கூறுவாள்போலப் பேசுகிறாள்:

"நெஞ்சமே! பொய்யான ஒரு குறியிடத்தை அவனிடம் கூறுவேன். அதன்மூலம் அவன் வேண்டுகோளை நிறைவேற்று பவளாய் நான் நடந்துகொள்வேன்."

கருத்து

தலைவி தலைவனிடம் அன்பு கொண்டவள் என்பதைத் தோழி தெரிந்து கொண்டாள். தலைவி இசைவாள் என்பது தெரிந்து, தன் நெஞ்சிற்குக் கூறுவாள்போல, 'தலைவனை ஓர் இடத்திற்கு வருமாறு சொல்வேன்' என்றாள். இதற்குத் தலைவி மறுமொழி ஒன்றும் கூறவில்லை. என்றாலும், தலைவனின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் தனக்கு இசைவானதே என்று தலைவியிடம் தோழி குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. இரப்பான் - பணிந்து கேட்பவன்; எளிவந்தும் - எளியவனாய் வந்து.

2. புரத்தல் - பாதுகாத்தல்; மதுகை - வலிமை.
3. வல்லாரை - கல்வியிற்சிறந்தவரை.
5. புன்கண் - வறுமை; தணிக்க - நீங்க.
6. வண்மை - வள்ளல் தன்மை, ஆற்றல்.
7. ஆண் தகை - ஆண் பெருமை.
8. பன்மாணும் - பலவாறு மாட்சிமைப்பட.
9. அமையலேன் - அமைதி கொள்ளேன்.
10. நம்புண்டல் - நம்புதல்.
11. என் உற்ற பிறர்க்கும் ஆங்கு உள கொல்? - எனக்கு ஏற்பட்ட இந்த எண்ணம் மற்றவருக்கும் உண்டாகுமோ?
12. அவனாயின் - அவனோ; யான் வருந்துவல் நீ அறியாய் - நான் துன்பப்படுவதை நீ அறியாது இருக்கிறாய்; என்னும் - என்றான்.
13. பெண்டிர்க்குத் தமியரே துணிகிற்றல் அரிது - (பொதுவாய்ப்) பெண்கள் தாமே ஒரு முடிவுக்கு வருதல் அரிது என்பர்.
14. இவன் வலைப்பட்டார் எம்போல் அளியர் - இவன் சொல்லை நம்பி இவன் வலையில் அகப்பட்டுக்கொண்ட என் போன்ற பெண்கள் இரக்கப்பட வேண்டியவர்.
15. நீ நீப்பின் யான் வாழலேன் என்னும் - நீ அருள் காட்டாது நீங்கி விட்டால் நான் வாழ மாட்டேன் என்கிறான்.
16. ஏழையர் - (பெண்கள்) பேதையர், அறிவில்லாதவர்.
17. சூழுங்கால் - யான் தனியே நினைக்கும்போது; நினைப்பது ஒன்று அறிகலேன் - என்ன நினைப்பது என்று அறியாதவளாய் உள்ளேன்; வருந்துவல் - அதற்காக வருந்துகிறேன்.
18. நறுநுதால் - நறுமணம் கமழும் நெற்றியைக் கொண்ட தலைவியே!; சூழுங்கால் நம்முளே சூழ்குவம் - (அவன் குறையைத் தீர்க்கச்) செய்யத்தக்கது என்ன என்று நாம் நமக்குள்ளே ஆராய்ந்து முடிவெடுப்போம்.
19. அவனை - நம்மிடம் வந்துகொண்டிருக்கும் அவனை.
20. பெயர்த்தல் - நீக்குதல்; ஒல்லாது - முடியாது.
21. பேணினர் - ஏற்றுக்கொண்டனர்; பெண்மையும் அன்று - பெண்மைத் தன்மைக்கு ஏற்றதன்று.
22. வெளவுதல் - மனத்தால் கருதுதல்; முயங்கும் மாத்திரம் - தழுவும் அளவிற்கு (உறுதி பூண்டுவிட்டான்).

22-23. வா எனக் கூறுவென் போலக் காட்டி - வா என்று கூறுபவள்போல ஒரு குறியிடத்தைக் காட்டி.

24. நெஞ்சே! அவன் மேஎவழி மேவாய் - நெஞ்சமே! அவன் விரும்பிச் செல்லும் வழியை நீயும் மேற்கொள் (என்று தோழி தன் நெஞ்சிற்குக் கூறுவதுபோலக் கூறுகிறாள்.)

தோழி கூற்று

நற்றிணை 342 **மோசிகீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறைநேர்ந்த தோழி தலைமகளை முகம்புக்க தன் சொல் கேளாது விடலின், இறப்ப ஆற்றான் ஆயினான் என உணர்ந்து, ஆற்றாளாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது குறை தீர்க்கத் தலைவியிடம் தூதாய்ச் செல்கிறாள், தோழி. செய்தியைப் பலவாறு குறிப்பிட்டுக் காட்டியும் தலைவி தன் முகத்தில் எவ்வித இசைவுக்குறியையும் காட்டவில்லை. அதனால் அவன் நிலை யாதாகுமோ என்று நினைந்து தோழி தன்னுள்ளே வருந்தினாள். 'சோலைக்குச் சென்று அவளிடம் பணிந்து கூறினால் ஒருவேளை ஏதாவது சொல்லுவாள்' என்று தன்னுள்ளே கூறியது.

மாஎன மதித்து மடல்ஊர்ந்து, ஆங்கு
மதில்என மதித்து வெண்தேர் ஏறி,
என்வாய் நின்மொழி மாட்டேன், நின்வயின்
சேரி சேரா வருவோர்க்கு என்றும்,
அருளல் வேண்டும், அன்புஉடை யோய்!எனக்
கண்இனி தாகக் கோட்டியும் தேரலள்;
யானே, எல்வளை! யாத்த கானல்
வண்டுஉண் நறுவீ நுண்ணிதின் வரித்த
சென்னி சேவடி சேர்த்தின்,
என்எனப் படுமோ என்றலும் உண்டே.

தெளிவுரை

"அன்பு கொண்ட தலைவியே! பனங்கருக்கில் செய்த குதிரையினைத் தான் ஏறும் குதிரை எனக் கருதி ஒருவன் அதன்மீது ஏறி வந்துள்ளான். கோட்டை மதில் என்று எண்ணி, வெயிலால் தோன்றிய பேய்த்தேரினை முட்டச் சென்றான். இப்படி வருந்துகின்றவனுக்கு என் வாயாலே உன் பேச்சு இதுதான் என்று நான் கூற இயலாது. ஆதலால், உன்னை விரும்பி நம் சேரிக்கு வருபவனுக்கு நீயே அருளல் வேண்டும்" என்று கண்ணினால் சுழித்து, குறிப்பாலே பலவாறு உணர்த்திப் பார்த்தேன். ஆனால், தலைவி எந்த முடிவையும் கூறவில்லை.

(வேலி சூழ்ந்த கடற்கரைச்சோலையில்) வண்டுகள் உண்ணுகின்ற மகரந்தப்பொடியைக் கொண்ட நறிய பூக்கள் உதிர்ந்து, தரையில் கோலமிட்டதுபோலக் கிடக்கும். அவ்விடத்திற்குச் சென்று என் தலையை அவள் சிவந்த அடிகளிலே சேர்த்துப் பணிந்து வணங்கினால், 'அவன் என்ன ஆனான்' என அவள் கேட்கவும் கூடும். யான் வேறென்ன செய்ய இயலும்?" எனத் தோழி தன்னுள்ளே கூறிக்கொள்வதுபோலத் தலைவி அறியுமாறு கூறினாள். (இங்குப் பிற தோழியரும் இருப்பதால், தலைவி ஏதும் அறியாதவள்போலுள்ளாள். சோலையில் தனியே இருக்கும்போது கேட்டால் ஒருவேளை ஏதாவது சொல்வாள் என்று கருதித் தலைவியின் செவிப்படுமாறு தோழி, தனக்குள்ளேயே இவ்வாறு பேசிக்கொள்கிறாள்.)

கருத்து

'நாம் தலைவியின் அடிபணிந்து கேட்டால் தலைவனை ஏற்க ஒருவேளை அவள் ஒப்புவளோ?' என்று தோழி தன்னுள் கூறுகிறாள்.

விளக்கம்

தலைவன் தோழியிடம் இரந்தனன். முன்னமே இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்துள்ளதை உணர்ந்த தோழி, தலைவியிடம் தலைவன் நிலையைக் கூறி, அவளைக் கூட்டத்திற்கு உடன்படச் செய்ய முன்வந்தனள். அப்போது தலைவி, தான் முன்பு தலைவனுடன் கூடியிருந்ததை உணர்த்தாது மறைத்து, தோழி கூறிய மொழியையும் காட்டிய குறிப்பையும் உணராதவள்

போலிருந்தாள். அதனால் தோழி, தலைவன் மடலூர்ந்து திரிவதாய்ப் படைத்து மொழிந்து கூறினாள்.

"காமம் மிக்குத் தலைவன் அறிவு மயங்கியுள்ளான். பனங் கருக்கைக் குதிரை என்று கருதி அதன்மேல் ஏறி வருகிறான்; மதில் எனக் கருதி, பேய்த்தேர்மீது மோதுகிறான்" என்று தோழி, தனக்குள் சொல்லுபவளாய், அவனுக்குத் தலைவி அருள் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பால் கூறுகிறாள்.

குறிப்பு

தோழியின் இக்கூற்று, தலைவியின் வாயை அடைத்திருந்த நாணம் பைய நீங்கித் தன் காதலொழுக்கத்தைத் தோழியறிய வாய் திறந்து சொல்லுமாறு செய்கின்ற தந்திரம் நிறைந்ததாய் உள்ளது.

'தலைவன் காம நினைவாலே உன்மத்தன் ஆயினான்; அறிவிழந்து இனி என்னென்ன செய்வானோ?' எனத் தோழி கூறுவது கேட்டுத் தலைவி, தலைவன் நிலையை அறிந்து, அவனுக்கு இசைந்து, அவன் குறை தீர்ப்பாள் எனக் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. மா என மதித்து - குதிரையெனக் கருதி; மடல் ஊர்ந்து - பனைமடலால் செய்யப்பட்ட குதிரைமீது ஏறி வந்தான்.
2. மதில் - கோட்டை மதில்; வெண்தேர் - வெள்ளிய பேய்த்தேர், கானல் நீர்; ஏறி - மோதி.
3. என் வாய் நின்மொழி மாட்டேன் - நீ கூறுவதை என் வாயால் கூற இயலாது; நின்வயின் - உன்னிடம்.
4. சேரி சேரா வருவோர்க்கு - (உன்னை விரும்பி) நம் சேரியை நோக்கி வரும் அவனுக்கு.
5. அருளல் வேண்டும் - நீ அருள் செய்தல் வேண்டும்.
6. கோட்டியும் - கண்ணைச் சுருக்கிக் குறிப்பாய்க் கூறியும், (கோட்டி - சுருக்கி, நெறித்து); தேரலள் - (நான் சொல்வதைத் தலைவி) அறிந்து கொள்ளவில்லை.
7. யாத்த - வேலி சூழ்ந்த.
8. நறுவீ - நல்ல மலர்; நுண்ணிதின் வரித்த - நுண்ணிதாய்ப் படிந்த (இடத்தில்).
9. சென்னி சேவடி சேர்த்தின் - என் தலை அவள் சிவந்த பாதத்தில் சேரும்படி வணங்கினால்.
10. என் எனப்படுமோ? - அஃது என்ன என்று அவளால் கருதப்படும்; என்றலும் உண்டே - நீ கூறுவது என்ன என்று கேட்கவும் கூடும்.

தோழி கூற்று

நற்றிணை 25 **பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகளைத் தோழி குறை நயப்புக் கூறியது.

கூற்று விளக்கம்

'தலைவனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைவியிடம் சென்று, 'தினைப் புனத்தில் நம்மோடு கிளியோப்பித் தன் கருத்தைக் கூற இயலாதவனாய் அகன்றனன் ஒருவன். அவனைக் கண்டதால் என் தொடிகள் கழல, அவற்றைச் செறித்து வந்தேன்' என்று அவனைத் தன்னுள்ளம் விரும்பினது போலப் படைத்து மொழிந்தாள். தலைவி அதனை ஆராய்ந்து, 'தலைவி யாகிய தன்னையே அவன் விரும்பினன்' என்றுணருமாறு தோழி சொல்லியது.

அவ்வளை வெரிநின் அரக்குஈர்த் தன்ன
செவ்வரி இதழ சேண்நாறு பிடவின்
நறுந்தாது ஆடிய தும்பி, பசுங்கேழ்ப்
பொன்உரை கல்லின் நல்நிறம் பெறூஉம்
வளமலை நாடன் நெருநல் நம்மொடு
கிளைமலி சிறுதினைக் கிளிகடிந்து அசைஇ,
சொல்லிடம் பெறாஅன் பெயர்ந்தனன்; பெயர்ந்தது
அல்லல் அன்றுஅது காதலம் தோழி!
தாதுஉண் வேட்கையின் போதுதெரிந்து ஊதா
வண்டுஓ ரன்னஅவன் தண்டாக் காட்சி
கண்டும், கழல்தொடி வலித்தஎன்
பண்புஇல் செய்தி நினைப்பு ஆகின்றே!

தெளிவுரை

அன்பு கொண்ட தலைவியே! சங்கின் முதுகில் செவ் வரக்கைத் தீட்டினாற்போலச் சிவந்த வரி பொருந்திய இதழ்களைக் கொண்டன, பிடவ மலர்கள். அவை நெடுந் தொலைவு மணம் வீசும். அப்பிடவ மலர்களில் புகுந்து தேனுண்டு வெளிப்படும் வண்டு, பொன் உரைத்த கல்லொப்பத் தோன்றும். இத்தகைய மலைநாட்டுக்குரியவன், தலைவன்.

அவன் நேற்று நம்மோடும் கூடி, தினையில் விழும் கிளிகளை விரட்டித் தங்கியிருந்தான்; ஆயினும், தன் குறையினைச் சொல்லுதற்கு வாய்ப்புப் பெறாதவனாய் வறிதே நீங்கினான். நான் இப்போது சொல்வது, அவன் வருத்தத்தோடு சென்றதைப் பற்றியன்று. தேனையுண்ணும் விருப்பத்தால் நறுமலர் எது என ஆராயாமல் எவ்விடத்தும் சென்று விழுகின்ற வண்டினைப் போன்ற இயல்பினனாய அவன் சென்றபோது, என்னைப் பார்த்த பார்வை என் தொடியை நெகிழச் செய்தது; அது பிறர்க்குத் தெரியாதவாறு தொடியைச் செறித்துக்கொண்டேன். பண்பில்லா எனது இச்செய்கையை நினைந்து என் நெஞ்சம் வருந்துகின்றது" என்றனள், தோழி.

கருத்து

'தலைவன் உன்னை நாடியவன்; அவனுக்கு நீ அருள வேண்டும்' எனத் தலைவியிடம், தோழி கூறுகிறாள்.

குறிப்பு

தோழி, தான் காதல் கொண்டு கருத்தழிந்ததாய்ச் சொல்வது சங்க இலக்கிய மரபன்று. 'தொடி நெகிழ்ந்தது, செறித்துக்கொண்டேன்' என்று தோழி தன் செயலாய்க் கூறியது தலைவியிடத்தில் நிகழ்ந்த செயலையே ஆகும்.

தலைவியின் இச்செயலை முன்பே கண்டுணர்ந்திருந்த தோழி, 'உன்னை நாடிய அவனுக்கு நீயும் அருள வேண்டும்' என்று தலைவியிடம் கூறுகிறாள்.

முன்னரே தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாட்டில் தலைவனிடத்தில் உறவு உண்டு என்பதைத் தான் அறிந்திருப்பதைத் தோழி இக்குறிப்பால் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. அ வளை - அழகிய சங்கு; வெரிந் - முதுகு; வெரிநின் - முதுகின் மீது; ஈர்த்தன்ன - தீற்றினாற்போன்ற.
2. இதழ - இதழைக் கொண்ட; சேண்நாறு - நெடுந்தொலைவு மணம் வீசும்; பிடவு - பிடவ மலர்.
3. ஆடிய - அளைந்த; பசுங்கேழ் - பசிய நிறமுள்ள.
4. பொன் உரை கல் - பொன்னின் தரத்தையறிய உரைத்துப் பார்க்கப் பயன்படும் கல், கட்டளைக்கல்.

5. நெருநல் - நேற்று.
6. கிளைமலி - கிளைத்தல் மிக்க; கடிந்து - ஓட்டி; அசைஇ - தங்கி.
7. பெயர்ந்தனன் - பெயர்ந்து போனான்.
8. அல்லல் - துன்பம்.
9. போது தெரிந்து ஊதா - நல்ல மலர் இது என்று ஆராயாமல் எல்லாப் பூக்களிலும் சென்று தேன் எடுக்க நுழையும்.
10. தண்டாக் காட்சி - தோற்றப் பொலிவு.
11. வலித்த - செறித்த.
12. பண்பு இல் செய்தி - பண்பு இல்லாத செய்கை.

தோழி கூற்று

அகநானூறு 180 **கருவூர்க் கண்ணம்பாளனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரந்து பின்நின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் நட்பைத் தனக்குப் பெற்றுத் தருமாறு தோழியைத் தலைவன் வேண்டுகிறான். அவன் வேண்டுதலை ஏற்ற தோழி, தலைவியை அணுகித் தலைவனின் குறையை நீக்க வேண்டுமெனக் கூறியது.

நகைநனி உடைத்தால் – தோழி! – தகைமிக,
கோதை ஆயமொடு குவவுமணல் ஏறி,
வீததை கானல் வண்டல் அயர,
கதழ்பரித் திண்தேர் கடைஇ வந்து,
தண்கயத்து அமன்ற ஒண்பூங் குவளை
அரும்புஅலைத்து இயற்றிய சுரும்புஆர் கண்ணி
பின்னுப்புறம் தாழக் கொன்னே சூட்டி,
நல்வரல் இளமுலை நோக்கி, நெடிதுநினைந்து,
நில்லாது பெயர்ந்தனன், ஒருவன்; அதற்கே
புலவுநாறு இருங்கழி துழைஇ, பலஉடன்
புள்இறை கொண்ட முள்ளுடை நெடுந்தோட்டுத்

தாழை மணந்து ஞாழலொடு கெழீஇ,
படப்பை நின்ற முடத்தாள் புன்னைப்
பொன்நேர் நுண்தாது நோக்கி,
என்னும் நோக்கும்,இவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

"தலைவி! நடந்த நிகழ்ச்சியை நினைத்தால் நகைப்புத்தான் தோன்றுகிறது. மலர்கள் நிறைந்த கடற்கரைச்சோலையில் மாலையணிந்த தோழியரோடு, நான் மணல்மேட்டின்மீது விளையாடிக்கொண்டிருந்தேன். அவ்வேளை, தலைவன் ஒருவன் விரைந்தோடும் குதிரையைக் கொண்ட வலிய தேரினைச் செலுத்தி அங்கு வந்தான். குளிர்ச்சி பொருந்திய குளத்திலிருந்த குவளையின் அரும்புகளை மலர்வித்து, வண்டுகள் மொய்க்கும் கண்ணியினை என் பிடரியில் தாழ்ந்து தொங்குமாறு நான் விரும்பாமலே கூந்தலிலே சூட்டினான். பின்னர், நன்கு வளர்ந்துள்ள என் இளைய முலைகளை நோக்கினான்; ஏதோ நீள நினைந்தபின் அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டான். (இவ்வளவுதான் நடந்தது.)

புலால் நாறும் உப்பங்கழியில் இரை தேடுதற்காகத் துழாவும் பலவகைப் பறவைகளும் முள்ளுள்ள நீண்ட மடல்களைக் கொண்ட தாழை மரத்தில் தங்கியிருக்கின்றன. அத்தாழையைச் சார்ந்தும், புலிநகக் கொன்றையோடு பொருந்தியும் வளைந்த அடிமரத்தைக் கொண்ட புன்னை மரம் ஒன்று தோட்டத்தில் நிற்கிறது. ஊர்மக்கள் அப்புன்னையின் பொன் நிறத் தாதினையும் என்னையும் நோக்குகின்றனர். இதற்கே ஆரவாரமிக்க இவ்வூர் மக்கள், ஏதேதோ பேசுகின்றனர். இதற்குக் காரணம் யாதோ?

கருத்து

"தலைவியே! உன் மேனியில் படர்ந்துள்ள பசலையினை நோக்கி, ஊரார் அலர் கூறத் தொடங்கிவிட்டனர்; அப்பசலை நீங்க வேண்டுமாயின் தலைவனது வேண்டுகோளுக்கு நீ இசைய வேண்டும்" என்பதைத் தோழி புலப்படுத்துகிறாள்.

விளக்கம்

தோழி, தலைவி குறை நயப்ப வேண்டி, தலைவி தலைவனிடையே நடந்த நிகழ்ச்சிகளைத் தலைவனுக்கும் தனக்கும் இடையே நடந்தனவாய்ப் படைத்துக் கூறுகிறாள்.

'புன்னையின் தாதினையும் நோக்கித் தன்னையும் நோக்கும்' என்றது, புன்னையின் தாதுபோலும் தலைவியின் மேனியில் பசலை படர்ந்துள்ளது என்பதை உணர்த்துவதற்காம்.

சொற்பொருள்

1. நகை நனி உடைத்து - இது மிகவும் நகைப்பைத் தருகிறது; தகைமிக - அழகு மிக.
2. கோதை ஆயம் - மாலையணிந்த தோழியர்.
3. வீ - மலர்; ததை - நெருங்கிய; வண்டல்அயர - விளையாடிக் கொண்டிருக்க.
4. கதழ்தல் - விரைதல்; கடைஇ - செலுத்தி.
5. அமன்ற - நிறைந்த.
6. அலைத்து - விரித்து; சுரும்பு - வண்டு; ஆர் - மொய்க்கும்; கண்ணி - தலைமாலை.
7. பின்னுப்புறம் - கூந்தற்பின்னலைக் கொண்ட பிடரி; கொன்னே - (நான்) விரும்பாமலேயே.
8. நல்வரல் - நன்கு வளர்ந்துள்ள; நெடிது - நீள.
9. பெயர்ந்தனன் - சென்றனன்.
10. புலவு நாறு - புலால் நாறும்; துழைஇ - துழாவி.
11. (இறை கொண்ட) புள் - பறவைகள்; தோடு - மடல்.
12. மணந்து - தங்கி; ஞாழல் - புலிநகக் கொன்றை மரம்; கெழீஇ - பொருந்தி.
13. படப்பை - தோட்டம்; முடத்தாள் - வளைந்த அடிமரம்.
14. பொன் நேர்- பொன்னை ஒத்த.
15. என்னும் - என்னையும்; அழுங்கல் ஊர் - ஆரவாரம் மிக்க ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 356 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி, தலைமகளைக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தோழியை வாயிலாளாய்க் (தூதாய்க்) கொண்டு தலைவன் தலைவியைக் கூடக் கருதினான். தோழி தலைவியிடம் சென்று, தலைவன் வேண்டுகோளுக்கு இணங்குமாறு கூறியது.

மேல்துறைக் கொளீஇய கழாலின் கீழ்த்துறை
உகுவார் அருந்த, பகுவாய் யாமை
கம்புள் இயவன் ஆக, விசிபிணித்
தெள்கண் கிணையின் பிறழும் ஊரன் –
இடைநெடுந் தெருவில் கதுமெனக் கண்டு,என்
பொன்தொடி முன்கை பற்றினன் ஆக,
'அன்னாய்' என்றனென், அவன்கைவிட் டனனே,
தொல்நசை காவாமை, நன்னன் பறம்பில்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேன் ஆகி, மற்றுஅது,
செப்பலென் மன்னால், யாய்க்கே; நல்தேர்க்
கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி உள்ளா னாகவும், ஒன்னார்
கதுவ முயறலும் முயல்ப; அதாஅன்று,
ஒலிபல் கூந்தல் நம்வயின் அருளாது,
கொன்றனன் ஆயினும் கொலைபழுது அன்றே–
அருவி ஆம்பல் கலித்த முன்துறை
நன்னன் ஆய்பறம்பு அன்ன,
மின்ஈர் ஓதி!– என்னை,நின் குறிப்பே?

தெளிவுரை

"அருவிநீர் பெருகுமிடத்தில், ஆம்பல் தழைத்துள்ள முன் துறையைக் கொண்ட நன்னனது பறம்பு என்னும் ஊர் போன்ற ஒளி படைத்த குளிர்ச்சி பொருந்திய கூந்தலைக் கொண்ட தலைவியே!

"மேலைத்துறையில் கள்ளிருந்த கலங்களைக் கழுவுதலால், கீழ்த்துறையில் ஓடி வருகின்ற அக்கள்ளின் கலங்கல் நீரை அருந்துதற்காக, பிளந்த வாயினைக் கொண்ட ஆமை, இறுகக் கட்டிய தெளிந்த கண்ணினைக் கொண்ட கிணைப்பறைபோலப் பிறழும் ஊரினை உடையவன், நம் தலைவன்.

"அவன் நீண்ட தெருவிற்கு நடுவே விரைவாய் வந்து, என்னைக் கண்டு, பொன் வளையல் அணிந்த எனது முன்கையைப் பற்றிய போது, 'அம்மா' என்று கூவினேன். அவனோ, நீண்ட நாளாய் என்மீது கொண்ட விருப்பத்தினை நீக்காமலேயே என் கையை விட்டுவிட்டான்.

"நன்னன் என்பவனுக்குரிய பறம்பு மலையில் சாணைக்கல் செய்யும் தொழிலாளனது சாணைக்கல்லோடு சேர்த்த பிசின் ஒட்டிக் கொண்டதுபோல ஒட்டிப்போன நாக்கினைக் கொண்ட வளாய்ப் பேச நா எழாதவளாகி, அந்நிகழ்ச்சியை நான் நம் தாய்க்குக் கூறவில்லை. ஏன் எனில்,

"தலைவன் நல்ல தேரினையும், கடுமையான ஆண்யானை களையும் கொண்ட சோழ மன்னனின் வழிவந்தவன்; நீண்ட நெற்கதிர்கள் விளையும் வல்லம் என்னும் ஊருக்குத் தலைவன்; நல்லவன்; என்றாலும், அவன் பகைவர் அவனைக் கைப்பற்றி அழிக்கவும் முயல்கின்றனர். இதுதான் உலக இயற்கை. அது கிடக்க, தழைத்த நெருங்கிய கூந்தலைக் கொண்ட தலைவியே! நம்பால் அருளின்றித் தலைவன் கொல்வதுபோல் துன்பம் செய் தானாயினும் அச்செயல் குற்றமுள்ளது அன்று. (அவனுக்கு நன்மையே செய்வோம்.) உன் கருத்து யாது என்று கூறு."

கருத்து

'ஒளி படைத்த குளிர்ச்சி பொருந்திய கூந்தலைக் கொண்ட தலைவியே! தலைவன் தெருவிற்கு நடுவே வந்து என் முன்கையைப் பற்றினன்; உடனே 'அன்னாய்' என்று கூக்குரல் இட்டேன்; விருப்பமின்றியே அவன் என்

கையை விட்டுவிட்டான். இந்தச் செய்தியை நான் தாயிடம் கூறவில்லை. அவன் நம்மிடம் அருளின்றித் துன்புறுத்தினன் ஆயினும், அவன் செயல் குற்றமுள்ளது ஆகாது. ஆதலின், உன் கருத்து யாதோ?' என்று கூறி, தலைவியின் கருத்தை அறியத் தோழி முற்படுகிறாள்.

குறிப்பு

எவருக்கும் தீங்கு இயற்றாத நல்லவர்க்கும் பிறர் தீங்கியற்ற முயறல் உலக இயல்பு; ஆனால், நாமோ தீங்கியவற்றியவனுக்கும் நல்லது செய்வோம் எனத் தோழி கூறினாள்.

முன்பு கைவிட்டுப் பிரிந்து, அவன் நமக்கு அருள் செய்யாது துன்பம் தந்தனன் என்றாலும், அவனிடம் கொண்டுள்ள அன்பால் நாம் அதனைத் தீங்காய்க் கருதாது அவனை ஏற்றுக்கொள்ளுதலே தக்கது எனத் தோழி தலைவிக்கு உணர்த்தினாள்.

ஆமை, கள்ளின் கலங்கல்நீரைப் பருகும். அதன் வடிவம் கிணைப் பறையின் கண்ணை ஒத்திருக்கும். ஆதலால், ஆமை தண்ணீரில் பிறழ்வது கிணைப்பறை பிறழ்வதுபோலத் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கொளீஇய கழாலின் - கள்ளினைக் கொண்டிருந்த கலங்களைக் கழுவுதலின்.
2. உகுவார் - கழுவும்போது சிந்தும் கள்; பகுவாய் - பிளந்த வாய்.
3. கம்புள் - கம்பங்கோழி; இயவன் - வாச்சியக்காரன்; விசிபிணி - இழுத்துக் கட்டப்பட்ட.
4. தெள்கண் - தெளிவான கண் (பறைமீது அடிக்கப்படும் பகுதி); கிணை - கிணைப்பறை.
5. இடை நெடுந்தெரு - நீண்ட தெருவிற்கு நடுவே; கதுமென - விரைவாய்.
6. பொன் தொடி - பொன் வளையல்.
8. தொல்நசை - பழைய விருப்பம்; காவாமை - நீக்காமல்; நன்னன் - குறுநில மன்னன் ஒருவன்; பறம்பு - பறம்பு மலை.
9. சிறு காரோடன் - சாணைக்கல் செய்பவன்; பயின் - அரக்கு, பிசின்.
11. செப்பலென் - கூறவில்லை.
12. பகட்டு யானை - ஆண்யானை; சோழர் மருகன் - சோழ மன்னர் வழி வந்தவன்.

13. வல்லம் - ஓர் ஊர்; கிழவோன் - உரியவன்.
14. நல்அடி - நன்மை; ஒன்னார் - பகைவர்.
15. கதுவ - பற்ற; அதாஅன்று - அது கிடக்க.
17. கொன்றனன் - துன்புறுத்தினன்.
18. கலித்த - தழைத்த.
20. மின்ஈர் ஓதி - ஒளி படைத்த குளிர்ச்சி பொருந்திய கூந்தல்; என்னை - என்ன?

தோழி கூற்று

நற்றிணை 128 **நற்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறைநேர்ந்த தோழி, தலைமகள் குறை நயப்பக் கூறியது.

(குறை நேர்தல் - குறையைக் கேட்டு அதனை முடித்து வைப்பதாய்க் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவனது குறை தீர்க்க உடன்பட்ட தோழி, தலைவியை நோக்கி, ‘உன் மேனி வாடவும் நெற்றியின் ஒளி மாறவும் உனக்கு என்ன நேர்ந்தது என நீ ஏதும் கூறவில்லை; ஆனாலும், நான் அவற்றிற்கான காரணத்தை அறிவேன்; என்மீது தவறேற்றி வருந்தாதே!’ என்று கூறினாள்; பின், ‘தினைப்புனத்தில் ஒருவன் நேற்று வந்து என் முதுகை அணைத்தான். அதன்பின் அவன் சென்று விட்டான். அதனை நினைந்து என் நுதலும் மேனியும் வேறுபட்டன’ என்று கூறினாள். இதன்மூலம், தலைவனது குறையைக் கூறுவதற்குத் தோழி வந்துள்ளாள் என்பதைத் தலைவி அறியுமாறு செயற்படுகிறாள்.

‘பகல்எரி சுடரின் மேனி சாயவும்,
பாம்புஊர் மதியின் நுதல்ஒளி கரப்பவும்,
எனக்குநீ உரையா யாயினை; நினக்குயான்
உயிர்பகுத் தன்ன மாண்பினேன் ஆகலின்,
அதுகண் டிசினால் யானே’ என்றுநனி
அழுதல் ஆன்றிசின் ஆயிழை! ஒலிகுரல்
ஏனல் காவலி னிடைஉற்று ஒருவன்,

கண்ணியன், கழலன், தாரன், தண்ணெனச்
சிறுபுறம் கவையினன் ஆக, அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதுஆ கின்றுயான் உற்ற நோயே.

தெளிவுரை

"ஆராய்ந்தணிந்த அணிகளைக் கொண்ட தலைவியே! வெயிலொளியில் எரிகின்ற விளக்கொளிபோல உன் மேனி ஒளி யிழந்து விளங்குகின்றது. பாம்பினால் கௌவிக்கொள்ளப்பட்ட திங்கள்போல உன் நெற்றியின் ஒளியும் குன்றியது. இவ்வாறு வேறுபட்டும் எனக்கு நீ உண்மையை உரைக்கவில்லை. ஓருயிரை ஈருடம்பில் பொருத்தியது போன்று உன்னோடு நட்புக் கொண் டிருப்பவள் நான்; ஆதலால், 'உன் மனக்குறிப்பை மறைத் தொழுகும் உன் ஒழுக்கத்தை நானறிவேன்' என்பதால் நான் உரைப்பதற்காக நீ மிகவும் வருந்தி அழுதலைக் கைவிடு.

நேற்று எனக்கு இப்புனத்தில் நிகழ்ந்த ஒன்றை உரைப்பேன், கேள். நான் தினைப்புனம் காத்திருந்தேன். அப்போது ஒருவன், தன் தலைமுடியில் கண்ணியும், கால்களில் கழலும், மார்பில் மாலையும் அணிந்தவனாய் என்னிடம் வந்து, பின்னே நின்று, என் முதுகை அணைத்தனன். அதன்பின் அவன் அவ்விடத் தினின்றும் போய்விட்டான். தழுவல் குழைந்த அவனது அன்பால் பிறந்த இன்பத்தையே நினைந்தவளாய் ஏங்கும் நெஞ்சத்தோடு இருப்பதால் இவ்வாறு நோயுற்றேன்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவி தலைவனோடு தொடர்பு கொண்டவள் என்பதைத் தான் அறிந்திருப்பதைத் தோழி குறிப்பால் தெரிவித்து, அவன் குறையை முடித்து வைக்க வேண்டும் என்கிறாள்.

விளக்கம்

தலைவி, தான் தலைவனைச் சந்தித்து நட்புக்கொண்டதைத் தோழியிடம் கூறவில்லை; ஆயினும், தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உண்டான இக்காதல் தொடர்பைத் தான் அறிந்

துள்ளதைத் தோழி, அத்தொடர்பு தனக்கு நேர்ந்ததுபோலப் படைத்து மொழியால் தலைவிக்கு உரைக்கிறாள். (இதைக் கேட்கும் தலைவி, தோழி கூறுவதற்கு உடன்படுவாள்.) (படைத்து மொழிதல் - தானாய் ஒன்றைக் கற்பனை செய்து கூறுதல்.)

குறிப்பு

தோழி, தன்னை வந்து ஒருவன் தழுவியதாய்க் கூறியமையும் பிறவும் படைத்துமொழிதலே. அது தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சியில் நடந்த நிகழ்ச்சி; ஆயினும், அதனைத் தனக்கு நேர்ந்ததுபோலத் தோழி கூறினாள். இவ்வாறு கூறுவது குற்றமே ஆயினும், தலைவி மறைத்த நிகழ்ச்சியைத் தான் அறிந்துள்ளதாய்க் காட்டத் தோழி இவ்வுத்தியைக் கையாண்டுள்ளாள்.

சொற்பொருள்

1. பகல் எரி சுடரின் - வெயிலொளியில் எரியும் விளக்கொளிபோல; சாயவும் - நிறம் வேறுபடவும்.
2. பாம்பு ஊர் - பாம்பால் விழுங்கப்பட்ட; மதியின் - நிலவின்; கரப்பவும் - குறையவும்.
4. உயிர் பகுத்தன்ன - ஓருயிரை ஈருடலில் பகுத்து வைத்தது போன்ற; மாண்பினேன் - நட்பு மாட்சி உடையவள்.
5. அது கண்டிசின்யான் - அதன் காரணத்தை நான் அறிவேன்.
6. ஆன்றிசின் - கைவிடு.
7. ஏனல் காவலின் இடையுற்று - தினைப்புனத்தில் காவல் புரியு மிடத்துக்கு வந்து.
8. கண்ணியன் - தலையில் கண்ணி சூடியவன்; கழலன் - கால்களில் வீரக் கழல்களை அணிந்தவன்; தாரன் - மாலையைத் தரித்தவன்.
9. சிறுபுறம் - முதுகு; கவையினன் - தழுவினான்; அதற்கொண்டு - அது முதற்கொண்டு.
11. இஃது ஆகின்று - இவ்வாறு ஆயிற்று; யான் உற்ற நோய் - நான் எய்திய காமநோய்.

தோழி கூற்று

அகநானூறு 32 **நல்வெள்ளியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியின் காதலைப் பெறத் தலைவன் தோழியின் உதவியை நாடினான். அதனை ஏற்ற தோழி, தலைவியிடம் தலைவனின் வேண்டுகோளை ஏற்குமாறு கூறியது.

நெருநல் எல்லை ஏனல் தோன்றி,
திருமணி ஒளிர்வரும் பூணன் வந்து,
புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள,
இரவல் மாக்களின் பணிமொழி பயிற்றி,
சிறுதினைப் படுகிளி கடீஇயர், பல்மாண்
குளிர்கொள் தட்டை மதன்இல புடையா,
'சூர்அர மகளிரின் நின்ற நீமற்று
யாரை யோ?எம் அணங்கியோய், உண்கு!'எனச்
சிறுபுறம் கவையினன் ஆக, அதற்கொண்டு
இருபெயல் மண்ணின் ஞெகிழ்பு,அஞர் உற்றஎன்
உள்அவன் அறிதல் அஞ்சி, உள்இல்
கடிய கூறி, கைபிணி விடாஅ,
வெரூஉமான் பிணையின் ஒரீஇ, நின்ற
என்உரத் தகைமையில் பெயர்த்து,பிறிது என்வயின்,
சொல்ல வல்லிற்றும் இலனே; அல்லாந்து,
இனம்தீர் களிற்றின் பெயர்ந்தோன் இன்றும்
தோலாவாறு இல்லை தோழி!நாம் சென்மோ
சாய்இறைப் பணைத்தோள் கிழமை தனக்கே
மாசுஇன்று ஆதலும் அறியான், ஏசற்று,
என்குறைப் புறனிலை முயலும்
அண்கண் ஆளனை நகுகம், யாமே.

தெளிவுரை

“தலைவியே! அழகிய மணிகள் ஒளி வீசிக்கொண்டிருக்கும் பூணினை அணிந்த ஒருவன் நேற்றைப் பகற்பொழுதில் தினைப் புனம் வந்தான்.

“அரசன் போன்ற தன் தோற்றத்திற்கு மாறுபட்டு, இரந்து கேட்கும் எளிய மகனைப் போலப் பணிவான சொற்களைப் பல முறை கூறினான். ‘குளிரினையும், தட்டையினையும் பலமுறை புடைத்து, சிறிய தினைப்பயிரில் வந்து படியும் கிளிகளை விரட்டும் நீங்கள் யாரோ? சூரர மகளிர்போலத் தோன்றுகிறீர்! எம்மை வருத்தும் நும்மை நுகர்வேன்’ என்று கூறி, என் பிடரியினை அணைத்துக்கொண்டான்.

“அவன் உரையினையும் செயலினையும் கண்டு என் உள்ளம் மழை பெய்யப்பெற்ற மண்போல நெகிழ்வுற்று வருந்தியது. அவன் என் உள்ள நிலையை அறிந்துவிடுவானோ என அஞ்சி, என் மனத்தொடு படாத கடுமையான சொற்களைக் கூறி அவன் கையை அகற்றினேன்; அஞ்சுகின்ற பிணைமான் போன்று அவன் பெயர்ந்து போயினான்; என் நிலையைக் கண்டு கூசித் தன் காதலை உள்ளடக்கிக்கொண்டான். அதன்பின் என்னிடம் ஏதும் கூற வலிமையற்றவனாய்த் தன் இனத்தினின்றும் ஒதுக்கப் பட்ட களிறுபோலத் தளர்வுடன் சென்றான். அவன் இன்றும் தினைப்புனம் வருவான்; வந்தாலும் தோல்வியுடன்தான் செல்வான்.

“அழகிய முன்கையினைக் கொண்ட மூங்கில் போன்ற என் பெரிய தோள்களைத் தழுவுகின்ற உரிமை அவன் ஒருவனுக்கே உரியது என்பதனை அவன் அறியான். என்னால் ஆகும் செயலுக்கு என் பின் இரந்து நிற்பதற்கு வரும் அவனை நாம் நகையாடி மகிழலாம் வா!”

கருத்து

தலைவியின் உள்ளக்கருத்தினை அறிவதற்காகத் தோழி, தன் முதுகுப் புறத்தைத் தலைவன் அணைத்துக்கொண்டான் எனத் தானாகப் படைத்து மொழிந்து, தலைவன் குறையினைத் தலைவி போக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறாள்.

'என் தோள்களைத் தழுவுகின்ற உரிமை அவனுக்கே உரியது என்பதை அவன் அறியான்' என்று தோழி கூறியது, அவனது வேண்டுகோளைத் தோழி ஏற்றுக்கொண்டதைக் குறிப்பிடுகின்றது.

குறிப்பு

தலைவி கூற்றினைத் தன் கூற்றாய்ப் படைத்துக்கொண்டு தோழி பேசுகிறாள்.

சொற்பொருள்

1. நெருநல் - நேற்று; எல்லை - பகல் பொழுது; ஏனல் - தினைப்புனம்.
2. திருமணி - அழகிய மணிகள்; ஒளிர்வரும் - ஒளி வீசும்; பூணன் - அணிகலன் அணிந்தவன்.
3. புரவலன் - தலைவன், அரசன்; உறழ்கொள - மாறுபட்டு.
4. இரவல் மாக்கள் - எளிய மக்கள்; பணிமொழி - பணிவான சொற்கள்; பயிற்றி - கூறி.
5. கடீஇயர் - விரட்டும்; பல்மாண் - பல முறை.
6. குளிர்கொள் தட்டை - கிளிகளை ஓட்டப் பயன்படுத்தும் குளிர், தட்டை ஆகிய கருவிகள்; மதன் இல - வலிமை இல்லாத; புடையா - தட்டி.
7. சூர்அர மகளிர் - அச்சம் தரும் தெய்வ மகளிர்.
8. யாரையோ? - யாரோ?; அணங்குதல் - வருத்துதல்; உண்கு என - உன்னை நுகர்வேன் என்று.
9. சிறுபுறம் - பிடரி; கவையினன் - தழுவினன்; அதற்கொண்டு - அது கண்டு.
10. இகுபெயல் - மழை பெய்யப்பெற்ற; ஞெகிழ்பு - நெகிழ்ந்து; அஞர் - வருத்தம்.
11. உள் - உள்ளம்; உள்இல் - மனத்தொடு படாத.
12. கடிய - கடுமையான சொற்கள்; கைபிணி - கைப்பிடிப்பை; விடாஅ - அகற்றி.
13. வெரூஉம் - அஞ்சிய; ஒரீஇ - விலகி.
14. என் உரத் தகைமை - என் வன்மையான நிலை (கண்டு); பிறிது - பிறிதொரு சொல்; என்வயின் - என்னிடம்.
15. வல்லிற்று - வலிமையற்றவனாகி; அல்லாந்து - வருந்தி.
17. தோலாவாறு இல்லை -தோல்வியுறாதிரான்.

18. சாய்இறைப் பணைத் தோள் - அழகிய முன்கையினைக் கொண்ட மூங்கில் போன்ற பெரிய தோளின்; கிழமை - உரிமை; தனக்கே - அவனுக்கே.
19. மாசின்று ஆதலும் - குற்றத்திற்கு இடமின்றி உள்ளது என்பதை; ஏசற்று - வருத்தமுற்று.
20. புறனிலை முயலும் - (என்னை இரந்து) பின்புறமாய் நின்று முயலும்.
21. அண்கண் ஆளனை - கண்அண் ஆளனை - நம்முன் வந்து நிற்கும் அத்தலைவனை.

தோழி கூற்று

அகநானூறு 330 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனின் குறையை நிறைவேற்ற உடன்பட்ட தோழி தலைவியிடம் சென்று தலைவனின் வேண்டுகோளுக்கு உடன்படுமாறு கூறியது.

கழிப்பூக் குற்றும், கானல் அல்கியும்,
வண்டல் பாவை வரிமணல் அயர்ந்தும்,
இன்புறப் புணர்ந்தும், இளிவரப் பணிந்தும்,
தன்துயர் வெளிப்படத் தவறுஇல் நம்துயர்
அறியா மையின், அயர்ந்த நெஞ்சமொடு
செல்லும், அன்னோ! மெல்அம் புலம்பன்
செல்வோன் பெயர்புறத்து இரங்கி, முன்நின்று,
தகைஇய சென்றஎன் நிறைஇல் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ தானே? எய்தியும்
காமம் செப்ப, நாணின்று கொல்லோ?
உதுவ காண்;அவர் ஊர்ந்த தேரே;
குப்பை வெண்மணல் குவவுமிசை யானும்,

எக்கர்த் தாழை மடல்வயி னானும்,
ஆய்கொடிப் பாசடும்பு அரிய ஊர்புஇழிபு,
சிறுகுடிப் பரதவர் பெருங்கடல் மடுத்த
கடுஞ்செலல் கொடுந்திமில் போல,
நிவந்துபடு தோற்றமொடு இகந்துமா யும்மே!

தெளிவுரை

"தலைவி! மென்மையான அழகிய நெய்தல் நிலத்தவன், நம் தலைவன்.

"அவன் நம்மோடு உப்பங்கழியிலுள்ள பூக்களைப் பறித்தான்; கடற்கரைச்சோலையில் தங்கியிருந்தான்; வரிவரியாய்க் கிடக்கும் மணலில் வண்டல் பாவை செய்து விளையாடினான்; இன்பம் பொங்கப் பலமுறை கூடியிருந்தான்; தன் பெருமைக்குச் சிறுமை தோன்ற நம்மைப் பணிந்தும் நின்றான். அப்படியிருந்தும் நம் துயரத்தை அறிந்துகொள்ளாமல் நம்மைப் பிரிவதனால் ஏற்படும் சோர்ந்த நெஞ்சுடனும் செல்கின்றான்! அந்தோ!

"அப்படிச் செல்கின்றவன் போகும் திசையிலே, அவனிடம் இரக்கம் கொண்டு, அவனுக்கு முன்னாலே சென்று நின்று, 'செல்லாதே' என்று சொல்ல நினைத்த என் நெஞ்சம் அவனைச் சென்று சேரவில்லையா? அல்லது சேர்ந்தும் நம் காமநோயை அவனிடம் எடுத்துச் சொல்ல நாணம் கொண்டதோ?

"அவன் ஏறிச் செல்லும் தேர் அதோ போகின்றது, பார்! குவியலாய் உள்ள வெண்மணல் உச்சிகளின் மேலும், மலை மேட்டிலுள்ள தாழை மடல்கள்மீதும், அழகிய பசுமையான அடும்பங்கொடிகள் அறுபடுமாறு அவற்றின்மீது ஏறியும் இறங்கியும் செல்கிறது. அக்காட்சி, சிற்றூரில் வாழும் பரதவர்கள் பெருங்கடலுள் செலுத்திய விரைந்து செல்லும் வளைந்த மீன்படகுகள் உயர்ந்து தோன்றி, பிறகு மறைந்து போவதைப் போல் தோன்றுகிறது."

கருத்து

தலைவன்பால் தலைவி காதல் கொண்டுள்ளாள். ஆனால், அதை வெளிப்படுத்த நாணம் தடை செய்கிறது. தலைவன் வருத்தம் கண்டு

தலைவி இரக்கப்படுகின்றனள் என்பதைத் தான் அறிந்திருப்பதைத் தோழி உணர்த்தி, இனியும் மறுக்காமல் அவன் குறை நேர வேண்டுமென்கிறாள்.

விளக்கம்

"தலைவியே! நெய்தல் நிலத் தலைவன் நமது துயரை அறியாமல், சோர்ந்த நெஞ்சுடன் செல்கின்றான். அவன்பால் இரக்கங்கொண்டு, 'நீ செல்லாதே' என அவனைத் தடுக்கச் சென்ற என் நெஞ்சம் அவனை அடைந்ததும் தன் காமத்தினைக் கூற நாணி நின்றதோ? அவன் ஏறிச் செல்லும் தேரும், கடலில் செல்லும் படகுபோலச் சிறிது சிறிதாய் மறைகிறது" என்று தோழி கூறித் தலைவியின் குறிப்பறிகிறாள்.

குறிப்பு

தலைவியின் எண்ணத்தைத் தோழி தன் எண்ணமாய்ப் படைத்துக் கூறுகிறாள். தலைவனிடம் தலைவி காதல் கொண்டாள் என்பதைத் தான் குறிப்பால் உணர்ந்துகொண்டுள்ளதைக் கூறி, தலைவனின் குறையை இனியும் நீக்க மறுக்கக்கூடாதெனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கழி - உப்பங்கழி; குற்றும் - பறித்தும்; அல்குதல் - தங்குதல்.
2. வண்டல் பாவை - மணலில் செய்யப்படும் பாவை வடிவம்.
3. புணர்ந்தும் - கூடியும்; இளிவர - சிறுமை தோன்ற.

4-5. தவறில் நம் துயர் அறியாமையின் - குற்றமற்ற நம் அன்பினை அறியாமையினாலே.

5. அயர்ந்த - தளர்ந்த.
6. மெல்அம் புலம்பன் - மென்மையான நெய்தல்நிலத் தலைவன்.
7. செல்வோன் பெயர்புறத்து - அங்ஙனம் செல்கின்றவன் போகும் திசையில்; இரங்கி - இரக்கமுற்று; முன்னின்று - அவனுக்கு முன்னாலே சென்று நின்று.
8. தகைய - செல்லாதே (எனத் தடை செய); நிறைஇல் - உறுதியற்ற.
9. எய்தின்று கொல்லோ? - சென்று சேரவில்லையோ?
10. காமம் செப்ப - நம் காமத்தினைக் கூற; நாணின்று கொல்லோ - நாணியதோ.
11. உதுவ காண் - அதோ பார்.
12. குப்பை வெண்மணல் - குவியலாய் உள்ள வெண்மணல்; குவவுமிசை - உச்சிமீது.

13. எக்கர் - மணல்மேடு; மடல் வயினானும் - மடலிடத்தும்.
14. பாசடும்பு - பசிய அடும்பங்கொடிகள்; அரிய - அறுபடும்படி; ஊர்பு இழிபு - ஏறியும் இறங்கியும்.
15. மடுத்த - செலுத்திய.
16. கடுஞ்செலல் - விரைந்து செல்லும்; கொடுந்திமில் - வளைந்த மீன் படகு.
17. நிவந்துபடுதல் - உயர்ந்தும் தாழ்ந்தும்; இகந்து - நீங்கி; மாயும் - மறையும்.

தோழி கூற்று

கலித்தொகை 37 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

“நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும், புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வரூஉம், உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை”, தன்னை அவள் மறை யாமை காரணமாக, ‘மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொருள் நாட்டத்தால் தலைமகட்குத் தோழி கூறியது.

(‘நாற்றமும்.... உணர்ந்த பின்றை’ என்பது தொல்காப்பிய நூற்பா. (தொல்.பொரு. கள. 1060.) மெய்யினும் பொய்யினும் - மெய்யாகவும் பொய்யாகவும்; வழிநிலை பிழையாது - ஏதும் பின்விளைவு ஏற்பட்டு விடாதபடி; கவர்பொருள் - இருபொருள்படும் சொற்கள்.)

கூற்று விளக்கம்

தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி, அவளது மேனியின் புதுமணத்தாலும் புதுப்பொலிவாலும் மற்றும் அவளது நடைமுறை, உண்ணும் முறை, தனது செயல்களைத் தோழிக்குத் தெரியாமல் மறைத்துச் செய்தல், எந்நாளும் குறிப்பிட்ட ஒரு திசையை நோக்கியே செல்லுதல், ஒரேயிடத்தில் பயிலுதல் ஆகிய செயல்களாலும்; தலைவனது புணர்ச்சியை எதிர்பார்த்தல், சில எண்ணங்களை எண்ணிக்கொண்டிருத்தல் ஆகிய முகபாவங்களாலும் அறிந்துகொள்வாள்; தலைவியின் வாய்மொழியாகவே அவளது களவுச்செய்தியை அறியவேண்டும் என்று விரும்பி, மெய்யாகவும் பொய்யாகவும் இரு பொருள்படும் சொற்களை, மரபு முறை வழுவாமல் கூறுவாள். இங்ஙனம் தோழி கூறியது.

கயமலர் உண்கண்ணாய்! காணாய், ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன், வில்லன், வரும்;என்னை நோக்குபு,
முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான்உற்ற
நோய்உரைக் கல்லான் பெயரும்மன் பன்னாளும்;
பாயல் பெறேஎன், படர்கூர்ந்து, அவன்வயின்
சேயேன்மன் யானுந் துயர்உழப்பேன்; ஆயிடைக்
கண்நின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்;

பெண்அன்று உரைத்தல் நமக்காயின்; 'இன்னதூஉம்
காணான் கழிதலும் உண்டு'என்று ஒருநாள்என்
தோள்நெகிழ்பு உற்ற துயரால் துணிதந்துஓர்
நாண்இன்மை செய்தேன் நறுநுதால்! ஏனல்

இனக்கிளி யாம்கடிந்து ஓம்பும் புனத்துஅயல்
ஊசல்ஊர்ந்து ஆட, ஒருஞான்று வந்தானை
'ஐய! சிறிதுஎன்னை ஊக்கி' எனக்கூற,
'தையால், நன்று'என்று அவன்ஊக்க, கைநெகிழ்பு

பொய்யாக வீழ்ந்தேன் அவன்மார்பின்; வாயாச்செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்அறியா தேன்போல் கிடந்தேன்மன்; ஆயிடை,
மெய்அறிந்து ஏற்றுஎழுவேன் ஆயின்மற்று ஒய்யென
'ஒண்குழாய் செல்க'எனக் கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன்.

தெளிவுரை

"பொய்கையில் மலர்ந்த நீலமலர் போன்றதும், மை தீட்டப் பெற்றதும் ஆகிய கண்களைக் கொண்டோய்! நான் கூற விருப்பதை எண்ணிப்பார். ஒருவன் தலைமாலை அணிந்து, வில்லேந்தி, வலிய விலங்குகளின் அடிச்சுவட்டை ஆராய்பவன் போல இங்கு வந்தான். வந்தவன் என்னைப் பார்த்து, தனது மனத் துன்பத்தைக் குறிப்பால் நான் உணரும்படி காட்டினானே அன்றி, வாயால் கூறவில்லை; பல நாளும் வந்து வந்து திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். அவனோடு எவ்வகையான தொடர்பு மில்லாத நானே அவன் நிலை கண்டு வருந்தி, உறக்கமின்றித்

துயரத்தில் அழுந்தினேன். அவனோ தன் குறையை நம்மிடம் கூறத் துணியான். 'உன் வருத்தத்திற்கு நானும் வருந்தினேன்' என்று வெளிப்படையாய்க் கூறுவது நம் பெண் தன்மைக்குப் பொருந்தாது.

"இந்நிலையில், 'அவன் இப்படியே இருந்து துயருற்று ஒருவேளை இறந்துபடுவானோ' என்று எண்ணினேன். இடையில் ஒருநாள், என் தோள்கள் மெலிந்து நான் உற்ற துயரத்தால், பெண்கள் செய்யத் துணியாத நாணமற்ற ஒரு செயலைச் செய்தேன். நறுமணம் கொண்ட நெற்றியைக் கொண்ட தலைவியே! அஃது என்ன என அறிவாயா?

"கூட்டமாய் வரும் கிளிகளை ஓட்டி நாம் பாதுகாக்கும் தினைப்புனத்துக்கு அருகில், ஊஞ்சலில் ஏறி ஆடினேன். அப்பொழுது அவன் அங்கு வந்தான். நான், 'ஐயனே! சிறிது நேரம் ஊஞ்சலை ஆட்டுவாய்!' எனக் கூற, அவனும் இசைந்து, 'பெண்ணே! நீ கூறியது நன்று' என்று ஊஞ்சலை ஆட்டினான். அப்பொழுது நான், கை நெகிழ்ந்து வீழ்ந்ததுபோல அவன் கருதுமாறு, அவன் மார்பின்மீது பொய்யாய் வீழ்ந்தேன். அதனை அவன் உண்மையாய்க் கருதி, விரைந்து என்னை அணைத்தான். அப்பொழுது, அயலான் ஒருவன் மார்பில் வீழ்ந்து கிடக்கிறோமே என்ற உணர்வு என் உள்ளத்தில் ஏற்பட்டு விரைந்து எழுந்திருந்தேனாயின், 'பெண்ணே! யாரும் காணாத போதே விரைவில் இவ்விடம் விட்டுச் சென்றுவிடு' என்று கூறக்கூடிய இரக்கப்பண்பு கொண்டவனாய் அவன் காணப் பட்டான். ஆதலால், உடனே எழாமல், மெய் மறந்தவள்போல் அவன் மார்பிலேயே விழுந்து கிடந்தேன். இதுவே நடந்தது" என்று தோழி தலைவிக்குக் கூறினாள்.

கருத்து

தலைவியின் கருத்தை அறிய அனைத்தும் தனக்கே நேர்ந்ததாய்த் தோழி இட்டுக்கட்டிக் கூறுகிறாள். (படைத்து மொழிகிறாள்.) 'உறக்கம் கொள்ளேன்; நாணின்மை செய்தேன்; ஊசலைச் சிறிது ஆட்டு; அவன் மார்பின்மேல் விழுந்தேன்' என்று தோழி குறிப்பிட்ட செயல்கள் யாவும் பொய் என்பது தெளிவு. அதைக் கேட்டுத் தலைவி தன் களவை வெளிப்படுத்துவாள் என்பது கருத்து.

குறிப்பு

தலைவி, தலைவனிடம் முதன்முதலில் நடந்துகொண்ட நிலையைக் கதைபோல் கூறித் தலைவியின் நிலையைத் தான் அறிந்திருப்பதைத் தோழி புலப்படுத்துகிறாள். தலைவன் மூலமாய்த் தலைவியைப்பற்றித் தோழி அறிந்து வைத்திருந்தாள். எனினும், அதனைத் தலைவியிடம் நேரே கூறுவது பண்புடைமையாகாது; தலைவி பெருநாணினள் என்பதால் துன்புறுவள் என்று எண்ணியதால்தான் தோழி, இவ்வாறு பொய்யைப் படைத்துக் கூறினாள். தலைவனுடன் தான் கொண்டுள்ள தொடர்பைத் தோழி அறிந்துள்ளாள் என்பதைப் புரிந்துகொண்ட தலைவி, இனித் தோழியின் கருத்துக்கு உடன்படுவாள்.

சொற்பொருள்

1. கயம் - பொய்கை; காணாய் - எண்ணிப்பார்.
2. வயமான் - வலிமை வாய்ந்த விலங்கு; அடி - காலடிச்சுவடு; தொடைமாண்ட - சிறப்பாய்த் தொடுக்கப்பெற்ற.
3. கண்ணி - தலைமாலை; வரும் என்னை நோக்குபு - என்னை நோக்கி வந்தான்.
4. முன்னம் - குறிப்பு.
5. உரைக்கல்லான் - கூறமாட்டான்; பெயரும் - திரும்பச்செல்வான்; பன்னாள் - பல நாள்.
6. பாயல் - உறக்கம்; அவன்வயின் - அவனோடு.
7. சேயேன்மன் யானும் - எவ்வகையான தொடர்புமில்லாத நானும்.
8. கண் நின்று கூறுதல் - நேருக்கு நேர் நின்று சொல்லுதல்.
9. பெண் அன்று - பெண்மைத்தன்மைக்குப் பொருந்தாது.
10. கழிதல் - இறத்தல்.
11. துணிதந்து - துணிந்து.
12. நாண் இன்மை - நாணம் இல்லாத (ஒரு செயலை); ஏனல் - தினைப்புனம்.
13. கடிந்து - விரட்டி; ஓம்பும் - பாதுகாக்கும்; அயல் - அருகில்.
14. ஒரு ஞான்று - ஒரு நாள்.
15. ஊக்கு - எழுப்பு, ஆட்டிவிடு.
16. தையால் - பெண்ணே; ஊக்க - அசைத்துவிட; கைநெகிழ்பு - கை சோர்ந்து, கை நழுவி.
17. வாயாச் செத்து - உண்மை என்று கருதி.
18. ஒய்யென - விரைவாய்.

19. மெய் அறியாதேன் போல் - மெய் மறந்தவள் போல்; ஆயிடை - அப்பொழுது.
20. ஒய்யென - விரைவாய்.
21. விடும் பண்பின் - விடுவிக்கும் பண்பு வாய்ந்த.
22. அங்கண் - கண்ணோட்டம், இரக்கம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 211 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் ஆற்றாமை கண்டு, கையுறை ஏற்ற தோழி, தலைமகள் தழை ஏற்க வேண்டிக் கூறியது.

(கையுறை - தலைவன் தலைவிக்கு அன்பளிப்பாய்த் தழையாடை முதலியன கொண்டுவருதல்.)

கூற்று விளக்கம்

தலைவனின் ஆற்ற இயலாத் தன்மை கண்டு, அவன் தலைவிக்காகத் தந்த அன்பளிப்புத் தழையைத் தோழி ஏற்றுக்கொண்டு, அதனைத் தலைவியிடம் தந்து ஏற்குமாறு கூறியது.

நெய்யொடு மயக்கிய உழுந்துநூற் றன்ன
வயலைஅஞ் சிலம்பின் தலையது
செயலைஅம் பகைத்தழை வாடும் அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! கிண்டிய உழுந்து மாவைக் கம்பியாய் நூற்றாற் போலத் தோன்றுவன, வயலைக் கொடிகள். அக்கொடிகள் படர்ந்துள்ள இம்மலையின் உச்சியில் தழைத்துள்ள அசோகின் இளந்தளிரால் தொடுக்கப்பட்டுள்ள இப்பகைத்தழை இனி மேலும் காலந்தாழ்த்தினால் வாடிவிடும். (வாடிவிடுமுன் இதனைப் பெற்று அணிந்திடு.)

கருத்து

ஏற இயலாத மலையுச்சியில் ஏறி, அசோகந்தழையைப் பறித்து கையுறையாய்த் தலைவன் கொண்டுவந்திருக்கிறான். தலைவி அதனை

மறுக்காமல் ஏற்றுக்கொண்டு அவன் காதலையும் ஏற்க வேண்டும் என்கிறாள், தோழி.

குறிப்பு

அசோகந்தழை நாம் பெறற்கரியது; இதனைப் பெற்று அணிய வேண்டும்; அணியாவிட்டால் வாடிவிடும்.

சொற்பொருள்

1. மயக்கிய - கலக்கிய; நூற்றன்ன - நூற்றாற்போன்ற.
2. வயலை - ஒரு கொடி; சிலம்பு - மலை; தலை - உச்சி.
3. செயலை - அசோகு; அம் - அழகிய; பகைத்தழை - ஒன்றுக்கொன்று மாறாகிய தழை.

தோழி கூற்று

நற்றிணை 359 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தழையேற்றுக்கொண்டு நின்று, தலைமகள் குறிப்பின் ஓடியது.

கூற்று விளக்கம்

தலைவன் தந்த கையுறையை ஏற்று, தோழி அதனைத் தலைவியிடம் கொடுத்து, தலைவியின் குறிப்பினை அறிந்துகொள்ள முயல்கிறாள்.

சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்குகுலைக் காந்தள் தீண்டி, தாதுஉகக்
கன்றுதாய் மருளும் குன்ற நாடன்
உடுக்கும் தழைதந் தனனே; யாம்அஃது
உடுப்பின், யாய்அஞ் சுதுமே; கொடுப்பின்
கேளுடைக் கேடுஅஞ் சுதுமே; ஆயிடை
வாடல கொல்லோ தாமே அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை அடுக்கத்த கொயற்குஅருந் தழையே.

தெளிவுரை

சிறிய கொம்புகளைக் கொண்ட செந்நிறப் பசு, மலைமேல் மேய்ந்தபோது, காந்தள் மலரைத் தீண்டியதால் அப்பூந்தாது அதன்மேல் உதிர அதன் நிறம் மாறியது. அந்நிற வேறுபாட்டால் தாய்ப்பசுவைக் கண்ட கன்று, 'இது நம் தாய்தான்' என்று அறியாது மயங்கி நின்றது. அத்தகைய காட்சிக்கிடனான மலை நாட்டுக்குத் தலைவன் தழையாடை ஒன்றனைக் கையுறையாய்த் தந்தனன். அதனை உடுத்துக்கொண்டால், அஃது எவ்வாறு கிடைத்தது என்று கேட்டு அன்னை சினங்கொள்வாள். அதனை வேண்டா என அவனிடமே திருப்பிக் கொடுத்தால் நட்புக் கொண்ட அவன் மனம் நோகுமே என்றும் அஞ்சுகிறேன். இத்தகைய நிலையில் போரிடும் தன்மை கொண்ட மலையாடு களும் பாய்ந்து செல்ல இயலாததும் தெய்வமுள்ளதுமான மலைப்பக்கத்தே உள்ள கொய்வதற்கு அரிய தழையாலே உருவாக்கப்பட்ட இந்த ஆடையை வாட விடலாமா?

கருத்து

'தழையுடையை ஏற்று அவனை மகிழ்விப்போம்' என்பது தோழி கருத்து.

குறிப்பு

'இதனை உடுத்தினால் அன்னை சினம் கொள்வாள்; உடுத்தவில்லை யாயின் தலைவன் மனம் நோகும். இதற்கிடையே இத்தழையுடை வாடாமலிருக்க வேண்டுமே!' என்று சொல்வதன்வாயிலாய்த் தலைவியின் குறிப்பறிய முற்படுகிறாள், தோழி.

உள்ளுறை

தாதுதிர்ந்து நிறம் வேறுபட்டு வருகின்ற பசுவை அதன் கன்றே இனம் காணாது மயங்குகிறது; அவ்வாறே, வேற்றுமலைத் தழையுடையைத் தலைவி அணிந்துவரக் காணின் தாயும் பிறரும் மயங்குவர் என்பதாம்.

சொற்பொருள்

1. சிலம்பின் - மலைப்பக்கம்; சிறுகோட்டு - சிறிய கொம்புகளைக் கொண்ட; சேதா - செந்நிறப் பசு.

2. அலங்கு குலை - அசையும் பூங்கொத்து; தீண்டி - தீண்டுதலால்; தாது உக - பூந்தாது உதிர.
3. மருளும் - (தாயைப் பார்த்து) மயங்கும்.
4. தழை - தழை ஆடை.
5. யாய் - தாய்; அஞ்சுதும் - (சினங்கொள்வாள் என்று) அஞ்சுகிறேன்; கொடுப்பின் - (அவனிடமே) திரும்பக் கொடுத்தால்.
6. கேள் உடைக் கேடு - நட்புக்கொண்ட அவன் மனம் நோகும்; ஆயிடை - இவற்றிடையே.
7. வாடல கொல்லோ - வாடவிடலாமா?
8. போருடை - போரிடுதலில் சிறந்த; வருடை - மலை ஆடு; பாயா - பாய்ந்து செல்லாத.
9. சூர் - தெய்வம்; அடுக்கத்த - மலைப்பக்கத்தேயுள்ள; கொயற்கு - கொய்வதற்கு; அரும் - அரிய.

தலைவன் கூற்று

கலித்தொகை 59 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரந்து குறையுற்றுப் பின்னின்ற தலைமகன் ஆற்றானாய்த் தலைமகளை நோக்கி, 'இங்ஙனம் வருத்துவையாயின், நீ செய்த தவம் இன்றாம்' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் கண்டு காதல் கொண்ட தலைவன், அவள் தன்மீது அன்பு கொள்ளுமாறு, அடிக்கடி அவள் இருக்கும் இடத்திற்கு வந்தான். தோழி வாயிலாய்த் தலைவியுடன் ஒன்றுசேரப் பன்முறையும் வேண்டினான். தலைவி நாணத்தாலும், அச்சத்தாலும், அவனைப்பற்றித் துணிந்து முடிவெடுக்க இயலாததாலும் பாராமுகமாய் இருந்தாள். அது கண்டு துன்பம் பொறாத தலைவன், தானே தலைவியிடம், "நீ யாதொன்றும் கூறாது என்னைத் துன்புறுத்தினால், நீ மேற்கொண்ட நோன்புகள் பயன்தர மாட்டா" என்று கூறியது.

தரவு

தளைநெகிழ் பிணிநிவந்த பாசடைத் தாமரை
முளைநிமிர்ந் தவைபோலும் முத்துக்கோல் அவிர்தொடி
அடுக்கம்நாறு அலர்காந்தள் நுண்ஏர்தண் ஏர்உருவின்
துடுப்புஎனப் புரையும்நின் திரண்டநேர் அரிமுன்கைச்
சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்
விளையாட அரிப்பெய்த அழகுஅமை புனைவினை
ஆய்சிலம்பு எழுந்துஆர்ப்ப, அம்சில இயலும்நின்
பின்னுவிட்டு இருளிய ஐம்பால்கண்டு என்பால
என்னைவிட்டு இகத்தர இறந்தீவாய்! கேள்இனி;

தாழிசை

மருளியான் மருளுற, 'இவன்உற்றது எவன்—என்னும்
அருள்இலை இவட்கு'என அயலார்நின் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்து,நீ
தையில்நீ ராடிய தவம்தலைப் படுவாயோ?

உருள்இழாய்! ஒளிவாட, 'இவன்உள்நோய் யாதுஎன்னும்
அருள்இலை இவட்கு'என அயலார்நின் பழிக்குங்கால்
பொய்தல் மகளையாய்ப் பிறர்மனைப் பாடி,நீ
எய்திய பலர்க்குஈத்த பயம்பயக் கிற்பதோ?

ஆய்தொடி! ஐதுஉயிர்த்து, 'இவன்உள்நோய் யாதுஎன்னும்
நோய்இலை இவட்கு'என நொதுமலர் பழிக்குங்கால்
சிறுமுத்த னைப்பேணிச் சிறுசோறு மடுத்து,நீ
நறுநுத லவரொடு நக்கதுநன்கு இயைவதோ?

எனஆங்கு,

சுரிதகம்

அனையவை உளையவும் யான்நினக்கு உரைத்ததை
இனையநீ செய்தது,உத வாயாயில், சேயிழாய்!
செய்ததன் பயம்பற்று விடாது
நயம்பற்று விடின்இல்லை நசைஇயோர் திறத்தே.

தெளிவுரை

தலைவன் தலைவியிடம், "பொய்கை நீரில் பசிய தாமரை இலைகள் மிதக்க, அவற்றினிடையே தலைதூக்கி நிற்கும்

மொட்டவிழ்ந்த தாமரை மலரோடு கூடிய தண்டில் உள்ள வளையங்களை அடுக்கி வைத்தது போன்ற முத்து வளையல்களை அணிந்தவளே! மெல்லிய உன் முன்கை விரல்கள், மலையெங்கும் மணங்கமழும் காந்தள் மலர்போல விளங்குகின்றன. அவ்விரல்கள் கொண்ட உன் முன்கைகள் துடுப்புப் போல நீண்டுள்ளன. சிவப்பு நிறச் சாயத்தால் கோலமிடப்பட்ட மரப்பானையையும் பாவையையும் அந்தக் கைகளால் ஏந்தி, விளையாடுவதற்காக, உள்ளே பரலிட்ட அழகிய சிலம்புகள் ஒலிக்க, சிறு சிறு எட்டுகளிட்டு நடக்கிறாய். பின்னிய உன் கருங்கூந்தலைக் கண்டு என் அறிவு, நினைவு, தன்னுணர்வு முதலியவை என்னிடமிருந்து நழுவிவிட்டன. அந்த நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டு (ஒன்றும் அறியாதவள் போல) என்னைக் கடந்து போகின்றவளே! இப்போது நான் சொல்வதைக் கேள்" என்று கூறிப் பேசத் தொடங்குகிறான்.

"நான் உன் எழிலைக் கண்டு மயங்கிய நிலையில் உள்ளேன். 'இவனுக்கு என்ன நேரிட்டது; ஏன் இப்படி மயங்கியுள்ளான் என்று கேட்கும் அருளற்றவளாய் இவள் உள்ளாளே' என்று அயலார் உன்னைப் பழித்தால், கூர்மையான பற்களைக் கொண்ட உன்னையொத்த இளம்பெண்களுடன், அணிவகைகளை அணிந்து, பொலிவுடன் போய்த் தைந்நீராடிய நோன்பின் பயனை நீ பெறுவாயா? பெற மாட்டாய்!

"தலையில் கிடந்தசையும் தலைப்பாளை என்ற அணியைக் கூந்தலில் அணிந்தவளே! 'உன் அழகொளியால் என் மேனி ஒளியிழந்து வாடிவிட்டது. இதனைக் காணும் அயலவர், 'இவன் மன வருத்தம் என்ன என்று கேட்கும் கருணைகூட இவளிடம் இல்லையே!' என்று உன்னைப் பழித்தால், நீ விளையாட்டாய்ப் பிறர் மனைவாயிலில் பாடிப் பெற்று வந்த பொருள்களைத் தேவையுள்ள பலருக்கும் வழங்கிடும் நோன்பின் பயன் உனக்குக் கிட்டுமா? கிட்டாது.

"ஆராய்ந்தெடுத்த வளையல்களை அணிந்தவளே! 'இவளைக் கண்டு மெல்லப் பெருமூச்சு விட்டு நிற்கும் இவன் கொண்டுள்ள மனவருத்தம் என்ன என்று கேட்கும் இரக்கம் இவளுக்கில்லையே' என்று அயலார் உன்னைப் பழித்தால், ஆண் மரப் பொம்மைக்குப் பெண் கொடுக்கும் விளையாட்டை மேற்

கொண்டு மணற்சோறு சமைத்து, உன் தோழியருடன் விளையாடும் நோன்பின் பயன் உனக்குக் கிட்டுமா? கிட்டாது" என்றெல்லாம் அவன் அவளிடம் கூறி வருந்தினான்.

மீண்டும் அவளை நோக்கி, "சிவந்த சிறந்த அணிகளைப் புனைந்தவளே! இவற்றையெல்லாம் என் மனவருத்தத்தின் காரணமாய் உன்னிடம் சொன்னேன். நான் இவ்வளவு எடுத்துரைத்தும் நீ எனக்கு அருள் புரியாதுள்ளாய். எனக்கு நீ உதவி செய்ய மறுப்பாயானால், அத்தீமையின் பயன் உன்னை உறுதியாய்ப் பற்றும். அருளில்லாத நீ நோன்பிருப்பதால், உன்னால் விரும்பப்படுவோர்க்கு நீ செய்த நல்ல செயல்கள் பயன்தர மாட்டா" என்று தலைவியைக் குறையுற்று, இரந்து, பின்நின்ற தலைவன் கூறினான்.

கருத்து

"உன்னைக் கண்டு என் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ஆகியவை என்னை விட்டு நீங்கின. உன் எழில் கண்டு மயங்கிய நிலையில் உள்ளேன். உன் அழகொளி என் பொலிவினை இழக்கச் செய்துவிட்டது. உன்னை நினைந்து ஏக்கப் பெருமூச்சு விட்டு என் உடல் இளைத்துவிட்டது. இவற்றை நீ கண்டும் காணாதவாறு செல்வதைக் கண்டு, அயலவர்கள் உன்னைப் பழிப்பார்கள். நீ இவ்வாறு இருந்தால் நீ செய்யும் நோன்புகளின் பயன் உனக்குக் கிட்டாது" என்று தன் குறையைத் தலைவன் தலைவியிடம் பணிவுடன் கூறினான்.

குறிப்பு

தைத் திங்களின்போது கூட்டமாய்க் கூடிக் கன்னியர் நீராடுதலும், பிறர் மனை முன் நின்று பாடி ஐயமேற்று அதனைப் பலர்க்கும் ஈதலும், பாவை நோன்பு நோற்றலும் நோற்போர் மேற்கொள்ளும் செயல்கள். இந்நோன்பினைக் கன்னிப்பெண்கள் தைத் திங்களின்போது மேற்கொண்டனர்.

சொற்பொருள்

1. தளை - கட்டு; நெகிழ் - அவிழ்ந்த; பிணி - மொட்டு; நிவந்த - தலை தூக்கி, நீர் பரப்புக்கு மேலே உயர்ந்து; பாசடை - பசுமையான இலை.

2. முளை நிமிர்ந்தவை போலும் - தாமரைத்தண்டின் முனைப்பகுதியில் உள்ளது போன்ற; கோல் தொடி - வளையங்களை அடுக்கி வைத்தது போன்ற வளையல்; அவிர்தொடி - ஒளி வீசும் வளையல் (தாமரைத் தண்டில் உள்ள வளையம் போன்ற முத்து வளையல்கள்).
3. அடுக்கம் - பக்க மலைகள்; அலர் - மலர்ந்த; காந்தள் - காந்தள் பூ; ஏர் - எழுச்சி.
4. அரி - மயிர் வரிசை, துடுப்புப் போன்ற திரட்சியான மயிர் வரிசை பொருந்திய முன் கை.
5. சுடர் விரி - ஒளி வீசும்; வினை - வேலைப்பாடு; தூதை - விளையாட்டில் பயன்படும் சிறிய மரப்பானை; பாவை - விளையாட்டுப்பொம்மை.
6. அரி - பரல்கள்.
7. ஆர்ப்ப - ஒலிக்க; இயலுதல் - நடத்தல்.
8. பின்னு - பின்னல்; இருளிய - கருநிறம் கொண்ட; ஐம்பால் - ஐந்தாய் வகுக்கப்பட்ட கூந்தல்.
9. இகத்தர - நீங்க; இறந்தீவாய் - கடந்து செல்பவளே!
10. மருள் - மயக்கம்; எவன் - என்ன (என்று கேட்கும்).
12. வை எயிற்றவர் - கூரிய பற்களைக் கொண்டவர்; நாப்பண் - நடுவே.
13. தலைப்படுதல் - கூடுதல், கிட்டுதல்.
14. உருள் இழை - உருள்வதுபோல ஒளி வீசும் கூந்தல் அணிகலன் (தலைப்பாளை); உள்நோய் - மனத்துன்பம்.
16. பொய்தல் - விளையாட்டு; மகளையாய் - பெண் மகளாய்.
17. எய்திய - கிடைத்த (பிச்சை); ஈத்த - கொடுத்த; பயம் - பயன்; பயத்தல் - கிட்டுதல்.
18. ஐது உயிர்த்து - மெல்ல மூச்சு விட்டு.
20. முத்தன் - ஆண் வடிவிலுள்ள பொம்மை; மடுத்து - ஊட்டி, உண்பித்து.
21. நக்கது - மகிழ்ந்து நோற்ற நோன்பு; இயைவதோ? - பயன் தருமா?
23. உளைய - நோக.
25. பயம் - பயன்; பற்றுவிடாது - பற்றுவதை விடாது, பற்றும்.
26. நயம் - அருள்; நசைஇயோர் - உன்னால் விரும்பப்படுபவர்.

தலைவி கூற்று

கலித்தொகை 76 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'அச்சம் நீடினும்' என்றதனாற் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கு உண்மை கூறுதற்கு அஞ்சிய அச்சம் நீட்டித்துத் தலைமகள் கூறியது.

(அச்சம் நீடினும் (தொல். 1057-8).

கூற்று விளக்கம்

தலைவி ஆடவன் ஒருவனைக் கண்டு காதல் கொண்டிருக்க வேண்டும் என்று ஐயுறுகிறாள், தோழி. அவளிடம் உண்மையைக் கூறத் தலைவி பல நாள் அஞ்சி இருந்து, பிறகு ஒருவாறு பேச்சு நிகழ்த்துகிறாள்.

(தலைவி பெருநாணினள் என்பதால் தன் உயிர்த்தோழிக்குக்கூடத் தன் களவொழுக்கம்பற்றிக் கூறாதிருந்தாள்.

தான் அறிந்திருந்ததைக் காட்டிக்கொண்டால் தலைவி வருந்த நேருமோ என்று அஞ்சித் தோழி, தான் அறியாதவள்போல இருந்தாள்.

தலைவியோடு தலைவன் ஒருவனைத் தொடர்புபடுத்திச் சுட்டிக்காட்டி ஊர்வாழ் மகளிர் அலர் தூற்றத் தொடங்கினர்.

அச்செய்தியைத் தலைவிக்குத் தோழி கூறி, அஃது உண்மையா என்று வினாவினாள்.

அப்பொழுது தலைவி தோழியை நோக்கிக் கூறியது இது.)

தரவு

புனைஇழை நோக்கியும், புனல்ஆடப் புறம்சூழ்ந்தும்,
அணிவரி தைஇயும்,நம் இல்வந்து வணங்கியும்,
நினையுபு வருந்தும்இந் நெடுந்தகை திறத்து,இவ்வூர்
'இனையள்என்று எடுத்துஓதற்கு அனையையோ நீ?'என
வினவுதி ஆயின்! விளங்கிழாய், கேள்,இனி:

தாழிசை

'செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்றாய்' என்றுஅவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந்த அனைத்தற்கோ—

'கௌவைநோய் உற்றவர் காணாது கடுத்தசொல்
ஒவ்வா'என்று உணராய்நீ ஒருநிலையே உரைத்ததை?

ஒடுங்கி,யாம் புகல்ஒல்லேம் பெயர்தர, அவன்கண்டு,
நெடும்கய மலர்வாங்கி, நெறித்துத்தந்த அனைத்தற்கோ—
விடுந்தவர் விரகுஇன்றி எடுத்தசொல் பொய்யாகக்
கடிந்ததும் இலையாய்,நீ கழறிய வந்ததை?

'வரிதேற்றாய் நீ'என, வணங்குஇறை அவன்பற்றித்
தெரிவேய்த்தோள் கரும்புஎழுதித் தொய்யில்செய்த அனைத்தற்கோ—
புரிபுநம் ஆயத்தார் பொய்யாக எடுத்தசொல்
உரிதுஎன உணராய்,நீ உலமந்தாய் போன்றதை?

எனவாங்கு—

சுரிதகம்

அரிதுஇனி, ஆயிழாய், அதுதேற்றல்; புரிபுஒருங்கு,
அன்றுநம் வதுவையுள் நமர்செய்வது இன்றுஈங்கே,
தான்நயந்து இருந்ததுஇவ் ஊராயின், எவன்கொலோ—
நாம்செயற் பாலது இனி?

தெளிவுரை

தலைவி (தோழியை நோக்கி), "ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த தோழி! இந்த அண்ணல் என்னுடைய அணிகளைச் செம்மை செய்தான்; நாம் நீராடும் போது எனக்குக் காவலாய் உடன் நீராடினான்; என் மேனியில் வரிக்கோலம் (தொய்யில்) எழுதினான்; சில நாள் நம் மனைக்கு வந்து ஏவிய பணிகளைச் செய்தான்; என் நினைவாயும் உள்ளான். இவற்றைப் பார்த்து, அவனுக்கும் எனக்கும் நட்பு உண்டு என இந்த ஊர் மகளிர் பழி பேசுகின்றனர். நீ அதைக் கேட்டு, அஃது உண்மையா என்று என்னைக் கேட்கிறாய். நான் சொல்வதைக் கேள்.

"பழி சொல்வதையே தொழிலாய்க் கொண்டுள்ள மகளிர், இவ்வாறு கூறுவது தகாது என்று எண்ணிப்பாராமல், ஐயங் கொண்டு தூற்றுகின்ற பழி எனக்குப் பொருந்தாது என்று நீ உணராமல், அவர்களைப் போலவே பேசுகின்றாய். இஃது, ஒரு நாள், உப்பங்கழியில் உள்ள கோரைத்தட்டையைப் பறிப்பதற்குக்

கடுமையாய் முயன்று என் கைவிரல்கள் சிவப்புற்றதைப் பார்த்து, அவன் கருணையால், 'நெடுநேரமாய்ப் பறிக்கின்றாயே' என்று கூறி, அதைப் பறித்துக் கிழித்துப் பொம்மை செய்து தந்த அந்தச் சிறிய உதவிக்காகவா?

"அறிவற்றவர் என்று ஊராரால் ஒதுக்கப்பட்ட மகளிர் சிலர், தாம் கூறுவது தீயது என்று உணரும் உணர்வின்றித் தூற்றும் பழியை நீ பொய்யென்று தள்ளி அவர்களைக் கடிந்து கொள்ளாமல், இங்கு வந்து என்னை இடித்துரைக்கின்றாய். இஃது, ஒருநாள், நான் குளத்தில் நீந்திச் செல்லத் தயங்கித் திரும்பிவிட, அதை அவன் பார்த்துக் குளத்தில் பாய்ந்து, நீந்தி, நான் விரும்பிய மலரைப் பறித்து வந்து, வெளி இதழ்களைக் கிள்ளிவிட்டுத் தந்த அந்தச் சிறிய உதவிக்காகவா?

"நம் தோழிமார் என்னைப் பாதுகாப்பது பயனற்றது என்பது போல இந்த ஊர்மகளிர் பழி பேசுகின்றார்கள். அஃது எனக்கு உரியதா என்று ஆராயாமல் நீ அச்சப்படுகிறாய். இஃது, ஒரு நாள், அவன், என் மேனியில் எழுதுவரிக்கோலம் தீட்ட எனக்குத் தெரியவில்லை என்று கூறி, என் முன் கையைப் பற்றிக்கொண்டு தோளில் கரும்பு உருவத்தை வரைந்த அந்தச் சிறிய உதவிக்காகவா?

"ஆயிழையே! இனி இதனைத் தெளிவித்தல் அரிது. என் திருமண நாளிலே சுற்றத்தார் எங்களிருவரையும் சேருமாறு செய்வதை, இன்று இங்கே, இவ்வூர் விரும்பியிருக்கிறது எனில் அது குறித்து நாம் என்ன செய்ய இயலும்?"

கருத்து

தலைவி, தனக்கும் தலைவனுக்கும் இடையே உள்ள உறவைத் தோழிக்குக் கூறத் தயங்கி, காலம் நீட்டித்து, ஊரார் அலர் தூற்றத் தொடங்கியதும் உண்மையைத் தோழிக்குக் குறிப்பாய் உணர்த்தினாள்.

"ஊரார் என்னையும் அவனையும் தொடர்புபடுத்திப் பொய்யுரை பரப்பி விட்டனர். அதனை நீயும் நம்புகின்றாய்; உண்மையை நீ உணர்ந்துகொள்.

இனி என்னதான் நாம் கூறினாலும், இவ்வூரார் நம்மைத் தூற்றுவதை நிறுத்த மாட்டார்; நானும் அவனும் திருமணம் செய்துகொண்டாலேயே

இப்பழிச்சொல் நீங்கும். ஆகவே, அதுகுறித்து ஆராய்ந்து நீ செய்ய வேண்டியதைச் செய்'' என்று தலைவி தோழியிடம் கூறி, தனக்கு அவனுடன் உறவு உண்டு என்பதைக் குறிப்பால் புலப்படுத்தினாள்.

குறிப்பு

மருத நிலத்துக்குரிய ஊடலும் ஊடல் நிமித்தமும் கூறப்பெறாமல், புணர்ச்சியும் அதன் நிமித்தமும் கூறிக் குறிஞ்சி நில ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறும் பாடலாய் இஃது அமைந்துள்ளது.

இதனை, 'திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே' என்னும் அக விலக்கண விதியைக்கொண்டு (தொல். 958-1) அமைதி கொள்ள வேண்டும்.

சொற்பொருள்

1. நோக்கியும் - (அணிகலன்களைப்) பார்த்துச் செம்மை செய்தும்; புறம் சூழ்ந்தும் - அருகே காவலாயிருந்தும்.
2. வரி - எழுதுகோலம்; தைஇயும் - எழுதியும்; வணங்கியும் - ஏவல் செய்தும்.
3. நினையுபு - என் நினைவாய் இருப்பதைப் (பார்த்தும்); நெடுந் தகை - பெரும் பெருமைக்குரியவர் (தலைவன்).
4. இனையள் - இவள், இவனோடு தொடர்பு கொண்டுள்ளாள்; அனையையோ நீ - நீயும் அதனை நம்புகின்றாயா?
6. சிவப்பூர - சிவப்புற; சேண் செல்லுதல் - நீண்ட நேரம் முயலுதல்.
7. பௌவம் - கடல், உப்பங்கழி; சாய் - கோரை; கொழுதுதல் - கிழித்தல்; பாவை - விளையாட்டுப்பொம்மை; அனைத்தற்கோ - அந்த உதவிக்காகவா?
8. கௌவை நோய் உற்றவர் - பழிச்சொல் சொல்வதையே தொழிலாய்க் கொண்டவர்; கடுத்த சொல் - சந்தேகப்பட்டுச் சொல்லும் பழிச்சொல்.
9. ஒவ்வா - பொருந்தா.
10. ஒடுங்குதல் - தயங்குதல்; புகல் ஒல்லேம் - குளத்தில் மேலே நீந்திச் செல்ல இயலாமல்; பெயர் தர - திரும்ப.
11. நெடுங்கயம் - பெரிய குளம்; வாங்கி - பறித்து; நெறித்து - இதழ் கிள்ளி.
12. விரகு - விவேகம்.
13. கடிந்ததும் இலையாய் - நீ அவர்களைக் கடிந்துகொள்ளாமல்; கழறிய வந்தனை - என்னைக் கண்டித்துச் சொல்ல வந்துள்ளாய்.

14. வரிதேற்றாய் - நீ தொய்யில் கோலம் எழுத அறியாய்; வணங்கு இறை - வளைந்த முன்கை.
15. வேய்த்தோள் - மூங்கில் போன்ற தோள்; தொய்யில் - சாந்தினால் எழுதும் வரிக்கோலம்.
16. ஆயத்தார் - தோழியர்.
17. உலமந்தாய் - அச்சமுற்றாய்.
19. தேற்றல் - (உன்னைத்) தெளிய வைத்தல்.
20. வதுவை - திருமணம்; நமர் - நம் உறவினர்.
21. நயந்து - விரும்பி; எவன் கொல்? - என்ன இருக்கிறது?
22. செயற்பாலது - செய்யக்கூடியது.

தலைவி கூற்று

கலித்தொகை 55 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி, ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள், அருமை சான்ற நாலிரண்டு வகையின் பெருமை சான்ற இயல்பின்கண்" (தொல். 1057, 17-20) தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

ஒருமைக் கேண்மையின் உறுகுறை - தான், அவள் என்னும் வேற்றுமை இல்லாத நட்பினாலே தோழி தன்னிடம் வந்து கூறிய குறையை;

பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கித் தெளிந்தோள் - முன்னர் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியைக்கொண்டு காரணம் காட்டுவதாய்த் தலைவி கருதிக்கொண்டு;

அருமை சான்ற நால் இரண்டு வகையில் - தான் முன்பு அரியளாய் இருந்தபோது தலைவன் தன்னிடத்தில் நிகழ்த்திய மெய் தொட்டுப் பயிறல் முதலிய எட்டினாலே;

பெருமை சான்ற இயல்பின்கண்ணும் - தனக்கு உளதாம் பெருமை கூறுதற்கு அமைந்தது ஓர் இயல்பின்கண்ணும் என்றவாறு.

இதனால் போந்த பொருள், 'தலைவன் இத்துணை இளிவந்த செய்யவும், யான் நாணும் மடனும் நீங்கிற்றிலேன்' என்று தன் பெருமை கூறுவதாயிற்று.

தலைவி, தனக்கு உளதாகிய பெருமை கூறுதற்கு ஓர் இயல்பாகிய வாய்ப்பு நிகழுங்கால் தலைவன், தன்னிடம் செய்த, 'மெய் தொட்டுப் பயிறல்' முதலிய செயல்களால் தான் நாணத்தையும் மடப்பக் குணத்தையும் விடவில்லை எனத் தன் பெருமை தோன்றத் தோழியிடம் கூறுவள்.

நால் இரண்டு வகை : 'மெய் தொட்டுப் பயிறல்.... இருநான்கு கிளவியும்' (தொல். 1048)

1. மெய் தொட்டுப் பயிறல். (தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தைப் போக்குதல்.)
2. பொய் பாராட்டல். (பொய்யாய்ப் புனைந்து அவள் நெற்றி, கூந்தல் போல்வனவற்றைப் பாராட்டுதல்.)
3. இடம்பெற்றுத் தழாஅல். (அவளை நெருங்கித் தழுவுதல்.)
4. இடையூறு கிளத்தல். (அவள் நாணமுற்று விலகுவதால், தான் துன்புறுவதைச் சொல்லுதல்.)
5. நீடு நினைந்திரங்கல். (அவள் இணங்காதவள்போலக் காணப்படுவதால், 'எப்போது இசைவாளோ' என்று நீண்ட நேரம் நினைத்து இரங்குதல்.)
6. கூடுதல் உறுதல். (கூடி மகிழ்தல்.)
7. நுகர்ச்சி பெறுதல். (தான் கூடிய நுகர்ச்சியை விரைந்து பெற்றவிடத்து அவ்வின்பத்தில் திளைத்தல்.)
8. தீராத் தேற்றம். (அவளது தீராத அச்சத்தைத் தீர்த்து உறுதி கூறித் தேற்றுதல்.)

இவை எட்டும் இயற்கைப் புணர்ச்சியில் நிகழ்வன.

மின்ஒளிர் அவிர்அறல் இடைபோழும் பெயலேபோல்,
பொன்அகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
போழ்இடை இட்ட கமழ்நறும் பூங்கோதை,
இன்நகை, இலங்குஎயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்,
நல்நுதால்! நினக்குஒன்று கூறுவாம்; கேள்,இனி:

'நில்'என நிறுத்தான்; நிறுத்தே வந்து,
நுதலும், முகனும், தோளும், கண்ணும்,
இயலும், சொல்லும், நோக்குபு நினைஇ,

'ஐதேய்ந் தன்று, பிறையும் அன்று;
மைதீர்ந் தன்று, மதியும் அன்று;
வேய்அமன் றன்று, மலையும் அன்று;

பூஅமன் றன்று, சுனையும் அன்று;
மெல்ல இயலும், மயிலும் அன்று;
சொல்லத் தளரும், கிளியும் அன்று;
எனவாங்கு–
அனையன பலபா ராட்டிப் பையென,
வலையர் போலச் சோர்பதன் ஒற்றி,என்
நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணூஉப்
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலும் தொழுதான்; தொடலும் தொட்டான்;
காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம்; தொடூஉம்;அவன் தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை, தோழி!

தெளிவுரை

தலைவி தோழியிடம் கூறுகிறாள் : "மேகங்களுக்கு இடையே பிளந்துகொண்டு ஓடும் மின்னல் கொடிகள்போலப் பொன் கம்பிகளைக் கூந்தலில் அணிந்து, தாழம்பூத் துண்டங்களைக் கலந்து தொடுத்த மாலை அணிந்துள்ளவளே! புன்னகையும் இன்மொழியும் சிவந்த வாயும் அழகிய நெற்றியும் கொண்டவளே! உனக்கு ஒன்று சொல்கிறேன், கேள்.

ஒருவன் என்னைச் சந்தித்து, 'போகாதே, நில்' என்று நிறுத்தினான். என் அருகில் வந்து நின்று, எனது நெற்றியையும், முகத்தையும், கண்ணையும், சாயலையும், சொல்லையும் நோக்கி, அவற்றைப் பாராட்டி, உவமை கூறிப் பேசினான்.

அளவில் சிறியதாய், வியக்கவைக்கும் அழகுடன் உள்ளது; ஆனால், அது பிறைச்சந்திரன் அன்று. (நெற்றி.)

களங்கமின்றி விளங்குகின்றது; ஆனால், அது நிலவு அன்று. (முகம்.)

மூங்கில் அழகுற விளங்குகிறது; ஆனால், அங்கு மலை இல்லை. (தோள்.)

சுனைப்பூ இரண்டு ஒன்றையொன்று நெருங்கி உள்ளன; ஆனால், அங்குச் சுனை இல்லை. (கண்கள்.)

நடையில் மென்மை உள்ளது; ஆனால், அது மயில் அன்று. (சாயல்.)

பேச்சு, தளர்ந்து தளர்ந்து வருகிறது; ஆனால், அது கிளியன்று. (பேச்சு.)

இவ்வாறு என் நெற்றி முதலிய உறுப்புகளைப் பாராட்டினான். விலங்குகளைப் பிடிக்கும் வேடர் அவை ஏமாறும் சமயத்தைப் பார்ப்பதுபோல், எனது நெஞ்சம் அவன்பால் நெகிழ்கின்ற சமயம் பார்த்து, என்னைத் தன் கண்ணால் கொல்வதுபோல் நோக்கினான். நான் இடம் கொடாததால் கையெடுத்துக் கும்பிட்டான். நான் பேசாதிருந்தேன். துணிச்சலோடு என்னை நெருங்கித் தொட்டான். இவ்வாறு, அங்குசத்திற்கு அடங்காத யானைபோல வரன்முறையை மீறி நடந்துகொண்டான். அஃது அவன் அறியாமையைக் காட்டவில்லை; அவன் என்பால் கொண்ட அன்பினாலேயே அவ்வாறு நடந்துகொண்டான்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

இயற்கைப் புணர்ச்சியில் தனக்கும் தலைவனுக்கும் இடையே நேரிட்ட உறவைக் குறிப்பால் உணர்த்தி, குறையிரந்து நிற்கும் தலைவனுக்குத் துணை புரிய வேண்டும் என்பதைத் தலைவி தோழிக்குப் புலப்படுத்துகிறாள்.

விளக்கம்

தனக்குத் தலைவனோடு நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியைத் தலைவி தோழியிடம் வெளிப்படையாய்ச் சொல்ல அவளது நாணம் குறுக்கிட்டது; ஆயினும் தோழி, சில நாள்களுக்குள் தலைவியின் மாறுபாட்டிற்குரிய காரணங்களை நுணுகி ஆராய்ந்து, தானாகவும், தலைவன் மூலமாகவும் உணர்ந்து கொண்டாள். தலைவன் தன்னைச் சந்திக்கத் தோழியின் துணை வேண்டுவான் என்பதை உணர்ந்த தலைவி, தலைவனுக்கும் தனக்கும் உள்ள உறவைக் குறிப்பால் உணர்த்தினாள். தலைவன் தோழியை நாடிக் குறையிரந்தால் அவனுக்குத் துணைபுரிய வேண்டும் என்பதைத் தலைவி தோழிக்குப் புலப்படுத்தினாள்.

குறிப்பு

1. தலைவி தலைவனோடு இயற்கைப் புணர்ச்சி கொண்டதைத் தோழி அறிந்தவள்தான் என்றாலும், அறியாதவள்போலவே நடந்து கொண்டாள்.

2. 'வலையர்' என்றும் 'புலையர்' என்றும் கூறிய உவமையால், தலைவன் தன் பெருமிதத் தன்மையை விட்டு எளியன் ஆனான் என்பதைக் குறிக்கிறது.

3. பெண்ணிடம் பண்பாடு இன்றி நடந்துகொள்வது அறியாமை. ஆனால், அன்பு காரணமாய் அவ்வாறு தலைவன் நடந்துகொண்டான்.

4. 'பல பாராட்டி' என்னும் தொடர் மெய்தொட்டுப் பயிறலுக்குப் பின் பொய் பாராட்டலையும்,

   'சோர்பதனொற்றி' என்னும் தொடர், நெஞ்சு நெகிழ்ந்து கூடுதலையும்; 'புலையர் போல நோக்கி' என்பது இடம் பெற்றுத் தழாஅலையும்,

   'தொடலும் தொட்டான்' என்பது மெய்தொட்டுப் பயிறலையும் குறிப்பதாய் அகப்பொருளுடையார் கொள்வர்.

சொற்பொருள்

1. ஒளிர் மின் அறல் - ஒளி வீசும் மின்னற்கொடி; போழும் - பிளக்கும்; பெயல் - மழை, மேகம்.
2. அகை - வெட்டி வேறாக்கிய; தகை - அழகு; நெறி - நெறித்த மயிர்; வகிர் - தலைக்கோலம் என்னும் அணி; வகை - ஐந்து வகை; வயங்க இட்டு - விளங்கச் சூட்டி.
3. போழ் - (தாழம் பூவின்) துண்டு, துண்டம்; கமழ் - மணம் வீசும்.
4. இன்நகை - இனிய முறுவல்; இலங்குதல் - விளங்குதல்; தேமொழி - இனிய மொழி; துவர் - பவளம்.
5. நல்நுதால் - நல்ல நெற்றியைக் கொண்டவளே!
6. நிறுத்தான் - தடுத்தான்.
7. நுதல் - நெற்றி.
8. இயல் - சாயல்; நோக்குபு - நோக்கி; நினைஇ - நினைந்து.
9. ஐ - வியப்பு; தேய்ந்தன்று - கண்டார் வியக்குமாறு தேய்ந்துவிட்டது.
10. மை - களங்கம்; தீர்ந்தன்று - நீங்கியது.
11. வேய் - மூங்கில்; அமன்றன்று - அமர்ந்து - செறிந்தது, நெருங்கியது.

13. மெல்ல இயலும் - மென்மையாய் நடக்கும்.
14. சொல்லத் தளரும் - பேச்சுத் தளரும்.
15. என ஆங்கு - இவ்வாறு.
16. அனையன - அத்தன்மையதாய்.
17. வலையர் - வலை பரப்பும் வேடர்; சோர்பதன் - சோர்ந்திருக்கும் சமயம்.
18. செவ்வி - சமயம்.
19. புன்கண் நோக்கி - துயரம் கொள்ளுமாறு பார்த்து.
21. காழ் - கம்பு, குத்துக்கோல்; வரை - எல்லை, வரம்பு; கடுங்களிறு - கடுமையான களிறு; அன்னோன் - போன்றவன்.
23. ஏழைத் தன்மை - அறிவால் ஏழையுற்ற தன்மை - அஃதாவது அறிவு இல்லாத தன்மை.

தோழி கூற்று

கலித்தொகை 63 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவன் நிலைமை தலைமகட்குக் கூறி, அவள் உரைத்த மாற்றத்தால் அவள் குறிப்பறிந்து, 'இவ்வகையான் தலைவற்குக் கூறு' என அவளுடன் நகையாடி, கூட்டமுண்மை தான் அறிந்தமை தோற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவனது வேண்டுகோளை ஏற்ற தோழி, அவனது நிலைமையைத் தலைவியிடம் கூறினாள். அவள் மறுமொழி ஏதும் கூறவில்லை. ஆனால், அதற்கு உடன்படுகிறாள் என்பதைக் குறிப்பால் அறிந்த தோழி, 'இப்படித் தலைவனிடம் கூறு' என்று விளையாட்டாய்ப் பேசிச் சிரித்து, அதன்மூலம் தலைவனுக்கும் தலைவிக்கும் சந்திப்பு நடந்திருப்பதைத் தான் அறிந்திருப்பதைச் சொல்கிறாள்.

தோழி

நோக்குங்கால், நோக்கித் தொழூஉம், பிறர்காண்பார்
தூக்கிலி; தூற்றும் பழிஎனக் கைகவித்துப்

போக்குங்கால், போக்கும் நினைந்துஇருக்கும்; மற்றுநாம்
காக்கும் இடமன்று, இனி.

தலைவி

எல்லா! எவன்செய்வாம்?

தோழி

பூக்குழாய்! செல்லல் அவனுழைக் கூஉய்க்கூஉய்
விரும்பியான் விட்டேனும் போல்வல்,என் தோள்மேல்
கரும்புஎழுது தொய்யிற்குச் செல்வல்;ஈங் காக
இருந்தாயோ? என்றுஆங்கு இற.
அவன்நின், திருந்தடி மேல்வீழ்ந்து, இரக்கும்,நோய் தீர்க்கும்
மருந்துநீ ஆகுத லான்.

தலைவி

இன்னும் கடம்பூண்டு, ஒருகால்நீ வந்தை; உடம்பட்டாள்
என்னாமை என்மெய் தொட்டு.

தோழி

இஃதோ அடங்கக்கேள்:
நின்னொடு சூழுங்கால், நீயும் நிலங்கிளையா,
என்னொடு நிற்றல் எளிதன்றோ? மற்றுஅவன்
தன்னொடு நின்று விடு.

தெளிவுரை

தோழி *(தலைவனின் எண்ணத்தைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்த எண்ணித்)* தலைவியை நோக்கி, "நாம் உரையாடிக் கொண்டிருக்கும் இடத்திற்கு யாரோ ஒருவன் அடிக்கடி வந்து நம்மை நோக்கித் தொழுகிறான். இச்செயலை மற்றவர் காண நேருமே என்றுகூட அவன் ஆராய்ந்து அறியாதவனாய்க் காணப் படுகிறான். 'உன் செயல் கண்டு பிறர் எம்மைப் பழிதூற்றுவர்' என்று கையால் சைகை செய்து அவனைப் போகச் சொன்னால், போக மனமின்றி அந்த இடத்தை விட்டு அகலாமலேயே நிற் கிறான்" என்றாள்.

அது கேட்ட **தலைவி**, 'ஏடீ! நாம் என்ன செய்யலாம்' என்று (தலைவனை முன்பின் அறியாதவள்போலத்) தோழியிடம் வினவினாள்.

வினவிய தலைவியை நோக்கி, **தோழி**, "பூ வேலைப்பாடமைந்த காதணியை அணிந்துள்ள என் தலைவியே! அவன் இருக்கும் இடத்தருகே செல்வோம். 'வா, இங்கே வா' என்று உன்னை நோக்கிக் கூவிக் கூவி நான் உன்னை அவ்விடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். அங்கு நீ வந்திருப்பதை என் குரல் கேட்டு அவன் உணர்ந்துகொள்வான்.

"உன்னை அவ்விடத்தில் விட்டுவிட்டு, தோள்மேல் கரும்பு வடிவம் வரையத் தொய்யிற்குழம்பைக் கொண்டுவரச் செல்வது போல் அகன்றுவிடுகிறேன். சற்று நேரம் நான் அவ்விடம் வாராமலே இருப்பேன். என்னைத் தேடிக்கொண்டு வருவது போல நீ வா. அவன் அங்கிருப்பான். அவனைக் காணாதது போல, 'என்னடி, நீ இங்கேதான் இருக்கிறாயா?' என்று என்னிடம் கேட்பதுபோலக் கேள்.

"தற்செயலாய் நடந்ததுபோல் அவன் உன் முன் தோன்றி, திருத்தமான உன் பாதங்களின்மேல் வீழ்ந்து கெஞ்சுவான். ஏன் எனில், அவனுக்கு உண்டான நோயைத் தீர்க்கும் மருந்து நீதானே" என்று கூறினாள்.

அது கேட்ட **தலைவி**, "நீ ஒருவேளை (நான் இங்கு வருவதாய்) அவனிடம் உறுதிமொழி கொடுத்துவிட்டு வந்திருக்கலாம். அதனால், அங்கு வர 'நான் இசைந்தேன்' எனச் சொல்லவில்லை என்று என் உடல் தொட்டு உறுதி செய்" என்று கோபிப்பது போலக் கூறினாள்.

அவ்வேண்டுகோளை ஏற்ற **தோழி**, (நான் உனக்கு உதவி செய்ததற்கு என்னையே உறுதிமொழி கூறச் சொல்கிறாயா? சரி சரி) "இதோ நான் கூறுவதை முழுமையாய்க் கேள். நான் உன்னிடம் இதனைக் கூறும்போது நீ உன் கால்விரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு நிற்பாய்; (இவ்வாறு நிற்பது உனக்கு எளிய செயல்தானே.) இதுபோலவே அவன் உன்னோடு உரையாடும் பொழுதும் நீ நின்றுவிடு" என்று, எவ்வாறு தலைவனிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தலைவிக்கு அறிவுறுத்தினாள்.

கருத்து

தலைவியைத் தலைவன் சந்திக்கத் துணை செய்வதாய் அவனிடம் உறுதிமொழி கூறிய தோழி, அவ்விருவரும் கூடுதற்கு ஆவன செய்கிறாள்.

குறிப்பு

மணந்துகொள்வதற்கு முன்னர் ஒருவனுடன் ஒருத்தி உரையாடுவதை அயலார் பார்த்தால் தூற்றுவர்.

தலைவன், தலைவியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தோழி மிகவும் திறமை மிக்கவளாய் இருத்தல்வேண்டும்.

தலைவனுக்கு நோய் தந்தவள் தலைவியே; அந்நோய்க்கு மருந்தாய் இருப்பவளும் அவளே.

தலைவி தலைவனைத் தானாகவே காண உடன்பட்டாள் என்பது பெண்மைக்கு இழுக்கு.

நாணம் கொள்ளும் நங்கை நிலத்தைக் கால்விரலால் கீறிக்கொண்டு நிற்பது அவளது பண்பாடுமிக்க செயல்.

இத்தகைய கருத்துகளை இப்பாடலின்மூலம் அறிகிறோம்.

சொற்பொருள்

1. தொழூஉம் - தொழுவான்.
2. தூக்குதல் - ஆராய்தல்; தூக்கிலி - ஆராய்ந்து அறியாதவன்; கை கவித்து - கைச்சாடை காட்டி.
3. போக்குங்கால் - போகச் சொன்னால்; இருக்கும் - போகாது இருப்பான்.
4. காக்கும் இடமன்று - (அவனைத்) தடுக்க இயலாததுபோல இருக்கின்றது.
5. எவன் செய்வாம்? - என்ன செய்யலாம்?
6. செல்லல் அவன் உழை - அவன் இருக்கும் இடம் செல்வோம்; கூஉய் - கூவி அழைத்து.

7-8. தோள் மேல் கரும்பு எழுது தொய்யில் - தோளின் மேல் கரும்பு வடிவம் எழுதுவதற்கான சாந்து.

8-9. ஈங்காக இருந்தாயோ? - நீ இங்குத்தான் இருக்கிறாயா?; இற - (என்று அங்கு) நடந்து வா.

10. இரக்கும் - கெஞ்சுவான்.

12. கடம்பூண்டு - உறுதியளித்து; வந்தை - வந்தாய்.

13. என்னாமை - என்று சொல்வதில்லை என்று; மெய்தொடு - உடலைத் தொட்டு உறுதி செய்.

14. அடங்கக் கேள் - முழுமையாய்க் கேள்.

15. சூழுங்கால் - பேசும் பொழுது; நிலங்கிளையா - நிலத்தைக் கிளறுவாய்.
16. அவன் தன்னொடு நின்றுவிடு - அவனிடமும் அவ்வாறே நின்று நிலம் கிளறு.

தோழி கூற்று

அகநானூறு 310 **நக்கீரர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியை நயந்து, அவளை வாயிலாய்க்கொண்டு தலைவியைக் கூடக் கருதி அவளை வேண்ட, அவளும் அதற்கு இணங்கியவளாய்க் கூறியது.

கடுந்தேர் இளையரொடு நீக்கி, நின்ற
நெடுந்தகை நீர்மையை அன்றி, நீயும்,
தொழுதகு மெய்யை, அழிவுமுந் துறுத்து,
பல்நாள் வந்து, பணிமொழி பயிற்றலின்,
குவளை உண்கண் கலுழ, நின்மாட்டு
இவளும் பெரும்பேது உற்றனள்; ஓரும்
தாயுடை நெடுநகர்த் தமர்பா ராட்டக்
காதலின் வளர்ந்த மாதர் ஆகலின்,
பெருமடம் உடையரோ, சிறிதே; அதனால்,
குன்றின் தோன்றும் குவவுமணற் சேர்ப்ப!
இன்றுஇவண் விரும்பா தீமோ சென்று,அப்
பூவிரி புன்னை மீதுதோன்று பெண்ணைக்
கூஉம்கண் ணஃதே தெய்ய – ஆங்கண்
உப்புஒய் உமணர் ஒழுகையொடு வந்த
இளைப்படு பேடை இரிய, குரைத்துஎழுந்து
உரும்இசைப் புணரி உடைதரும்
பெருநீர் வேலிஎம் சிறுநல் ஊரே.

தெளிவுரை

“குன்றுபோலத் தோன்றுகின்ற குவிந்த மணலைக் கொண்ட நெய்தல் நிலத் தலைவனே!

“விரைந்து செல்லும் உன் தேரினை ஏவலாளருடன் தொலைவிலே நிறுத்திவிட்டுத் தனியே இங்கு வந்து நிற்கும் நீ பெருந் தன்மைமிக்க இனிய குணம் வாய்ந்தவனாய் இருக்கின்றாய்! மேலும், கண்டோர் தொழுது போற்றும் தோற்றப்பொலிவுடனும் விளங்குகின்றாய்! இத்தகைய நீ நெஞ்சம் அழிவுற்றுப் பல நாளும் வந்து பணிவான மொழிகளைப் பலமுறை எம்மிடம் கூறுகின்றாய். அதனால், கருங்குவளை மலர்போலும் மை தீட்டிய தன் கண்கள் நீர் துளிக்க என் தலைவியும் உன்னிடத்து மிகுந்த மயக்கம் கொண்டுள்ளாள். நலமுடன் பேணும் தாய் இருக்கும் பெரிய இல்லத்தில், சுற்றத்தார் பாராட்ட, அன்புடன் வளர்ந்துவரும் அழகிய மகள், அவள். ஆதலால், சிறிது காலத்திற்கு மிகுந்த நாணமுள்ளவளாய்த்தான் இருப்பாள். ஆகையால், இன்று நீ இவ்விடத்தில் இருக்க விரும்ப வேண்டா.

“உப்பு வாணிகர் கூட்டம் உப்பினை ஏற்றி வரும் தம் வண்டியில் பெட்டைக்கோழியையும் பாதுகாப்புடன் கொண்டுவருவர். இளைப்பாறியிருக்கும் அந்தப் பேடை அஞ்சியோடுமாறு இடி போன்று ஒலியை எழுப்பும் அலை மேவும் கடலை எல்லையாய்க் கொண்டது, எம் சிறிய நல்ல ஊர். அவ்வூருக்குச் செல்லும் வழியில் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் புன்னைமரம் ஒன்று தோன்றும். அதற்கு அப்பால் தோன்றுகின்ற பனைமரத்திலிருந்து கூப்பிடு தொலைவில்தான் எம் ஊர் உள்ளது. (அங்கு வருக.)”

கருத்து

தலைவி உன்னை ஏற்க இசைந்தாள். எம் ஊருக்கு நீ வந்து செல்லலாம்.

விளக்கம்

“சேர்ப்ப! இனிய குணமும் எடுப்பான தோற்றமும் கொண்ட நீ மனம் அழிந்து பல நாளும் வந்து பணிமொழி கூறுகின்றாய். அதனால் இவளும் உன்னிடம் மிகுந்த மயக்கம் கொண்டுள்ளாள்.

மிக்க நாணம் கொண்டவள், இவள். இன்று நீ இவ்விடத்தில் தங்க வேண்டா. செல்லும் வழியில் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் புன்னை மரம் ஒன்று உள்ளது. அதற்கு அப்பால் உள்ள பனைமரத்திலிருந்து கூப்பிடு தூரத்தில்தான் எம் சிறிய நல்ல ஊர் உள்ளது. அங்கு வருக" என்றாள், தோழி.

சொற்பொருள்

1. கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்; இளையர் - ஏவலாளர்.
2. நீர்மையை - இனிய குணத்தினைக் கொண்டவன்.
3. மெய்யை - தோற்றமுள்ளவன்; அழிவு முந்துறுத்து - நெஞ்சம் அழிவுற்று.
4. பணிமொழி - பணிவான மொழிகளை; பயிற்றுதல் - பலமுறை கூறுதல்.
5. கலுழ - கலங்க; நின்மாட்டு - உன்னிடம்.
6. பெரும்பேது - மிகுந்த மயக்கம்; ஒரும் - (அவளையே) நினைத்திருக்கும்.
7. நெடுநகர் - பெரிய இல்லம்; தமர் - உறவினர்.
8. காதல் - அன்பு; மாதர் - பெண்.
9. பெருமடம் - மிக்க நாணம்; சிறிதே - சிறிது காலத்திற்கு.
10. குன்றின் - குன்றைப்போல; குவவுமணல் - திரண்ட மணல்; சேர்ப்பன் - கடற்கரைத்தலைவன்.
11. இவண் - இங்கே (இருத்தலை); விரும்பாதீமோ - விரும்பாதே.
12. மீது - மேலே, அப்பால்; பெண்ணை - பனை மரம்.
13. கூஉம் கண்ணஃதே - கூப்பிடு தூரத்தே உள்ளது; ஆங்கண் - ஆங்கு.
14. உப்பு ஒய் உமணர் - உப்பு (வண்டியினை) ஓட்டி வரும் உப்பு வாணிகர்; ஒழுகை - கூட்டம்.
15. இளைப்படு - இளைப்பாறியிருக்கும்; பேடை - பெட்டைக்கோழி; இரிய - அஞ்சி ஓட; குரைத்து எழுந்து - ஒலித்து எழுந்து.
16. உரும் இசை - இடி ஓசையோடு; புணரி - அலை; உடை தரும் - சிதறி விழும்.
17. பெருநீர் - கடல்; வேலி - எல்லை.

தோழி கூற்று

அகநானூறு 200 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் குறிப்பறிந்த தோழி தலைமகற்குக் குறைநயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி ஒருத்தியிடம் காதலுற்ற தலைவன் தன் குறையை அவள் தோழியிடம் கூறி, தலைவியைத் தனக்கு இசைவிக்க வேண்டி நின்றான். தலைவி தலைவனிடம் அன்பு கொண்டிருக்கிறாள் என்பதனைத் தோழியும் அறிந்து வந்து, தலைவனிடம் சொல்லியது.

நிலாவின் இலங்கு மணல்மலி மறுகில்,
புலால்அம் சேரி, புல்வேய் குரம்பை,
ஊர்என உணராச் சிறுமையொடு, நீர்உடுத்து,
இன்னா உறையுட்டு ஆயினும், இன்பம்
ஒருநாள் உறைந்திசி னோர்க்கும், வழிநாள்,
தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி
வந்தனை சென்மோ – வளைமேய் பரப்ப!–
பொம்மல் படுதிரை கம்மென உடைதரும்
மரன்ஓங்கு ஒருசிறை பலபா ராட்டி,
எல்லை எம்மொடு கழிப்பி, எல்உற,
நல்தேர் பூட்டலும் உரியீர்; அற்றன்று,
சேர்ந்தனிர் செல்குவிர் ஆயின், யாமும்
எம்வரை அளவையின் பெட்குவம்;
நும்ஒப் பதுவோ? உரைத்திசின் எமக்கே.

தெளிவுரை

சங்குகள் திரியும் கடற்பரப்பினைக் கொண்ட தலைவ!

எம் ஊர், நிலாப் போன்று விளங்கும் மணல் நிரம்பிய தெருக் களில், புல்லால் வேயப்பட்ட குடிசைகளைக் கொண்டது; புலால் நாற்றமுள்ளது. காண்போர் இஃது ஊர் என்று சொல்ல இயலாத அளவு மிகச்சிறியது; நீரால் சூழப்பெற்றுத் துன்பம் தரும் தங்குமிடத்தினைக் கொண்டது. இருப்பினும், எம் ஊரில்

ஒருநாள் தங்கியோர், மறுநாள் தம் ஊரினை மறக்கச்செய்யு மளவிற்கு இன்பம் தரும் தன்மையினைக் கொண்டது. இத்தகைய எம் ஊருக்கு நீ வந்து செல்லலாம்.

ஒலியுடன் பொங்கி எழுகின்ற அலை, விரைவில் உடைந்து சிதறுகின்ற கடற்கரை எம்மூரில் உள்ளது. அங்கு ஒரு பக்கத்தில் உயர்ந்த மரம் ஒன்றன் அருகே உம்மை நாங்கள் பலபடப் பாராட்டி மகிழ, இன்றைய பகற்பொழுதை எம்முடன் இருந்து கழித்து, இரவு வரும்போது தேரினைப் பூட்டி நீ உன் ஊருக்குச் செல்லலாம். அவ்வாறன்றி, இரவிலும் எம் ஊரில் தங்கிச் செல்வீராயின், எம்மால் இயன்ற அளவு விருந்து பேணுவோம். இஃது உம் கருத்துக்கு இசைவானதா? கூறுக.

கருத்து

தலைவன் குறையை நீக்குமாறு தலைவியிடம் தோழி நயந்து கூற, தலைவியும் இசைந்தாள். ஆதலின், 'பகலிலன்றி இரவிலும் தங்கிச் செல்லலாம்' என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

விளக்கம்

கடற்பரப்பினைக் கொண்ட தலைவ! எம் ஊர் சிறு குடிசை களைக் கொண்டது; புலால் நாற்றமுள்ளது. ஆயினும், ஒரு நாள் தங்கியிருப்பவர்க்கு, மறுநாள் தம் ஊரையே மறக்கச்செய்யும் பண்பு நலம் மிக்கது. எம் ஊர்க்கு வந்து செல்க!

கடற்கரையின் ஒரு பக்கத்தே உம் குணங்களை யாம் பாராட்டப் பகற்பொழுதினை எம்முடன் கழித்து, இரவு வரும்போது நீ தேரில் உன் ஊர்க்குச் செல்லலாம்.

அவ்வாறன்றி இரவிலும் எம் ஊரில் தங்குவதாயின் எம்மால் இயன்ற அளவு விருந்து பேணுவோம். இஃது உம் கருத்துக்கு இசைவானதா? கூறுக.

சொற்பொருள்

1. நிலாவின் - நிலாவைப்போல; இலங்கு - விளங்கும்; மலி - நிரம்பிய; மறுகு - தெரு.
2. புலால் - புலால் (நாறும்); புல்வேய் - புல்லால் வேயப்பெற்ற; குரம்பை - குடிசை.

3. உணரா - அறியவியலாத; நீருடுத்து - நீர் சூழப்பெற்று.
4. இன்னா - துன்பம் தரும்; உறையுட்டு - இடங்களைக் கொண்டது.
5. உறைந்திசினோர் - தங்கியிருந்தவர்; வழிநாள் - அடுத்த நாள்.
6. தம் பதி - தம் ஊர்; பண்பின் - பண்பினைக் கொண்டது.
7. வந்தனை - வந்து; சென்மோ - செல்க; வளை - சங்கு; பரப்ப - கடற்பரப்பினைக் கொண்டவனே.
8. பொம்மல் - 'பொம்' என்னும் ஒலியுடன்; படுதிரை - எழுகின்ற அலை; கம்மென - விரைந்து.
9. மரன் - மரம்; ஓங்கு - உயர்ந்துள்ள; ஒரு சிறை - ஒரு பக்கம்.
10. எல்லை - பகற்பொழுதினை; கழிப்பி - கழித்து; எல்உற - இரவு வந்ததும்.
11. அற்றன்று - அதுவுமேயன்றி.
12. சேர்ந்தனிர் - தங்கி.
13. எம்வரை - எம்மால் இயன்ற அளவில்; பெட்குவம் - (விருந்து) பேணுவோம்.
14. ஒப்பதுவோ? - இசைந்ததா; உரைத்திசின் - கூறுக.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 298 — **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தியவழி, அவள் நாணத்தினால் மறைத்து ஒழுகிய அதனைக் கூறக் கேட்ட தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழியைத் தலைவன் நெருங்கித் தன் மனக்குறையைத் தீர்க்குமாறு வேண்டினான். அதற்கு உடன்பட்ட தோழி, தலைவியைக் கண்டு அவள் உடன்பாடு வேண்டினாள். தலைவி தன் நாணத்தால் தனக்கும் தலைவனுக்கும் இடையே உள்ள உறவை மறைத்தனளாயினும் குறிப்பினால் உடன்பட்டாள். அதனைத் தோழி, தலைவனுக்கு உணர்த்தியபோது தலைவன் மகிழ்ந்து கூறியது.

மழைவரவு அறியா மஞ்ஞை ஆலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி
தான்எம் அருளாள் ஆயினும்,
யாம்தன் உள்ளுபு மறந்தறி யேமே!

தெளிவுரை

மழை வரவை அறிந்து மயில்கள் ஆடுகின்ற மலைப்பக்கத்தில் அமைந்த நல்ல ஊரினைச் சேர்ந்தவள், தலைவி; அசைந்த நடையைக் கொண்ட என் காதலியாகிய அவள், எனக்கு அருள் செய்யவில்லை என்றாலும், நான் அவளையே நினைத்திருப்பதை ஒருபொழுதும் மறந்தறியேன்.

கருத்து

'அவள் அருள்வாள் என்பதை அறிவேன். ஒருவேளை, அவள் அருளாவிடினும் நான் அவளை நினைப்பதை மறந்தறியேன்' என்கிறான், தலைவன்.

குறிப்பு

மழை வரவறிந்து மயிலாடுதல்போல, தன் வரவறிந்தால் தலைவி மகிழ்வாள் என்பதைத் தலைவன் குறிப்பிடுகின்றான்.

சொற்பொருள்

1. அறியா - அறிந்து; மஞ்ஞை - மயில்; ஆலும் - ஆடும்.
2. அடுக்கல் - மலைப்பக்கம்; கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண்.
4. உள்ளுபு - நினைத்திருத்தலை.

தோழி கூற்று

குறுந்தொகை 81 **வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியிற்கூட்டம் கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

(தோழியிற்கூட்டம் - தோழி உதவியினால் கூடியது.)

கூற்று விளக்கம்

தன் வாயிலாய்த் தலைவியோடு அளவளாவித் தலைவன் பிரியுங் காலத்தில், "உன் குறையை நான் முடித்து வைத்தேன். தலைவி உன்னோடு ஒன்றினாள்; இனி அதோ தெரியும் எம் ஊரிடத்தும் நீ வந்து அருள வேண்டும்" என்று தோழி சொல்லியது.

இவளே,
நின்சொல் கொண்ட என்சொல் தேறி,
பசுநனை ஞாழல் பல்சினை ஒருசிறைப்
புதுநலன் இழந்த புலம்புமார் உடையள்;
உதுக்காண் தெய்ய, உள்ளல் வேண்டும்;
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடல்தாழ் பெண்ணைஎம் சிறுநல் ஊரே.

தெளிவுரை

"தலைவியாகிய இவள், நான் கூறிய சொற்களினால் நீ கூறியவை உண்மையென்று நம்பி, அரும்புகள் நிறைந்த பல கிளைகளைக் கொண்ட ஞாழல் மரத்தின் ஒரு புறத்தில் உன்னைச் சந்தித்தாள்; அதனால், இதுவரை இழவாத பெண்மைநலத்தை இழந்தாள்; தனிமைத் துன்பமும் கொண்டவளாயினாள்; இதை நீ உணர்தல் வேண்டும்.

எம்மூர் புலால் நாற்றம் பொருந்தியது. அங்கு அலைகளைக் கொண்ட கடற்கரை மணல், அதனைச் சார்ந்த சோலை ஆகிய இரண்டும் வெண்ணிலாவையும் கரிய இருளையும்போலத் தோன்றுவதைக் காண்! அங்கே, மடல்கள் தொங்கும் பனை

மரங்கள் நிறைந்த எம் சிறிய நல்லூர் இருப்பதைப் பார். அதனை மறந்துவிடாதே!

கருத்து

'எம்மை மறவாது எம் ஊருக்கு வந்து அருள் செய்தல் வேண்டும்' எனத் தோழி தலைவனிடம் உரைத்தாள்.

விளக்கம்

"உன்னை நான் நம்பினேன். அவள் என்னை நம்பினாள். அவள் தனிமையினள் ஆனாள். இதை நீ உணர்ந்து அவளுக்கு அருளல் வேண்டும்" என்றனள், தோழி

உவமை

'நிலவும் இருளும்போலக் கடலும் கானலும் தோன்றும்' என்பது இயற்கை எழில் காட்டும் உவமை.

குறிப்பு

'அரும்புகள் முகிழ்த்துள்ள ஞாழல் நிழலில் நீங்கள் நட்புக் கொண்டீர்கள். அவ்வரும்புகள் இனி மலர்ந்து காய்த்துக் கனிந்து பலன் தருதலைப்போல உம் உறவும் தொடர்ந்து பயன் விளைவிக்க வேண்டும்' என்பது சிறப்புக் குறிப்பு.

'மடல்தாழ் பெண்ணை' என்றது, இருவரும் பிறர் அறியாதவாறு இன்பம் நுகர ஏற்ற இடமாகும் எனக் குறியிடம் கூறுவதாயும் உள்ளது.

சொற்பொருள்

1. தேறி - தெளிந்து, நம்பி.
2. பசு - பசிய; நனை - அரும்பு; ஞாழல் - ஞாழல் மரம்; பல்சினை - பல கிளைகள்; ஒரு சிறை - ஒரு பக்கம்.
3. நலன் - பெண்மை நலம்; புலம்பு - தனிமை.
4. உதுக்காண் - இதோ பார்; உள்ளல் வேண்டும் - எம்மை மறவாது நினைத்தல் வேண்டும்.
5. புலவுத் திரை - புலால் நாற்றம் வீசும் அலை.
6. கானல் - கடற்கரைச்சோலை.
7. தாழ் - தாழ்ந்த; பெண்ணை - பனைமரங்கள்.

தலைவன் கூற்று

அகநானூறு 230 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவியை அணுகியபோது, தலைவிக்கு உண்டாகிய காம வேட்கையினை அவள் கண்ணில் எழுந்த உவகைக் கண்ணீர் புலப்படுத்தியது; தலைவி அதனை நாணத்தால் மறைத்துத் தலை கவிழ்ந்து நின்றாள். அதனைக் கண்டு மீளும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

'உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தற் கண்போல் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை இருந்த அல்குல்,
ஐய அரும்பிய சுணங்கின், வைஎயிற்று,
மைஈர் ஓதி வாள்நுதல், குறுமகள்!
விளையாட்டு ஆயமொடு வெண்மணல் உதிர்த்த
புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு,
மனைபுறம் தருதி ஆயின், எனையதூஉம்,
இம்மனைக் கிழமை எம்மொடு புணரின்,
தீதும் உண்டோ, மாத ராய்?'என,
கடும்பரி நல்மான், கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பாகன் பையென இயக்க
யாம்தற் குறுகினம் ஆக, ஏந்துஎழில்
அரிவேய் உண்கண் பனிவரல் ஒடுக்கி,
சிறிய இறைஞ்சினள் தலையே-
பெரிய எவ்வம் யாம்இவண் உறவே!

தெளிவுரை

'இளம்பெண்ணே! பெரிய உப்பங்கழிக்கு அருகில் கடல் நீரால் மலர்ந்த, கண் போன்ற சிறிய கரிய நெய்தற்பூவுடன் பெரிய

தழையுடையை உன் இடையில் அணிந்துள்ளாய்; உன் மேனியில் நுட்பமான தேமல் அரும்பியிருக்கிறது; கூரிய பல்லினையும் நீண்ட கரிய கூந்தலையும், ஒளி பொருந்திய நெற்றியையும் பெற்றுத் திகழ்கிறாய்.

'பெண்ணே! வெள்ளிய மணற்பரப்பில் புன்னை மரம் உதிர்த்த நுண்ணிய மகரந்தப்பொடிகளைப் பொன் என்று கொண்டு, உன்னைக் குடும்பத்தலைவியாய்ப் பாவித்து உன் தோழியரோடு விளையாடுகிறாய். என் வீட்டுக்கும் நீ மனைக் கிழத்தியாய் வந்து என்னோடு சேர்ந்தால் ஏதேனும் தீமை உண்டா?' என்று கேட்டுக்கொண்டு அவளை மெல்ல அணுகினோம். விரைந்து செல்லக்கூடிய நல்ல குதிரைகள் பூட்டப் பெற்ற, கொடிஞ்சி என்னும் உறுப்பைக் கொண்ட உயர்ந்த தேரை, அம்மகளிரின் விளையாட்டுப் பாதிப்புறும் என்று கருதிய என் கருத்தினை அறிந்து பாகன் மெல்லச் செலுத்தினான்.

"நெஞ்சே! நாம் இங்கே மிகவும் வருந்தி இருக்க, அவளோ, செவ்வரி பரந்த மையுண்ட அழகிய கண்களில் உவகைக்கண்ணீர் வருதலை நான் அறியாதவாறு நாணத்தால் மறைத்து, தன் தலையைச் சற்றே கவிழ்த்தாள்" என்று தலைவன் தன் நெஞ்சிடம் சொல்வதுபோலக் கூறுகிறான்.

கருத்து

"நெஞ்சே! இளமகள், தன் தோழியரோடு தன்னைக் குடும்பத்தலைவி யாய்ப் பாவித்து விளையாடிக்கொண்டிருந்தாள். நான் அவளை நெருங்கிச் சென்று, 'இந்த இல்லறத்தை என்னோடு நடத்தினால் உனக்குத் தீமை ஏதேனும் உண்டாகுமோ?' என்று கேட்டேன். அவள், நான் காமநோய் உறும்படி, தன் கண்களில் மகிழ்ச்சிநீர் ததும்புவதை மறைத்துத் தலையை மெல்லத் தாழ்த்தி எனக்குத் தன் உடன்பாட்டினை அறிவித்தாள்" என்று எண்ணித் தலைவன் மகிழ்கிறான்.

விளக்கம்

தலைவன் தலைவியை அணுகிய பொழுது அவளுக்கு உண்டான காமவேட்கையை அவள் கண்கள் உகுத்த உவகைக் கண்ணீர் புலப்படுத்தியது; தலைவி அதனைத் தலைவன்

காணாதவாறு நாணத்தால் தலை கவிழ்ந்து மறைத்து நின்றாள்; அவள் நாணி நின்ற அந்நிலை அவள் வேட்கையைப் புலப் படுத்தியது; அவளைப் பிரிந்து செல்லும் அவன் உள்ளத்தில் 'பிரிகிறோமே' என்னும் துன்பத்தைத் தந்தது.

சொற்பொருள்

1. உறுகழி - பெரிய உப்பங்கழி; ஓதம் - கடல்நீர்.
3. தழை - ஒரு வகை ஆடை, அஃது ஆம்பல் முதலிய மலர்களும் தளிர்களும் விரவி அமைய உருவாக்கப்பெற்றது.
4. ஐய - மென்மையாய்; சுணங்கு - தேமல்.
5. மைஈர் ஓதி - தாழ்ந்து தொங்கும் கருநிறக் கூந்தல்; வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
7. நொண்டு - முகந்து.
8. மனைபுறம் தருதல் - இல்லறம் நடத்துதல்; எனையதூஉம் - சிறிதேனும்.
9. புணரின் - நீ என்னுடன் கூடி இல்லறம் நடத்துவாயானால்.
11. கடும் பரி - விரைந்தோடும்; நல்மான் - நல்ல குதிரை; கொடிஞ்சி - தேரின் முன்னால் இருக்கும் உறுப்பு.
12. கைவல் - செலுத்தும் திறமை மிக்க.
13. யாம் தற்குறுகினம் - நாம் அவளை அணுகினோம்.
14. ஏந்து எழில் - மிக்க அழகு; அரிவேய் - செவ்வரி பரந்த; பனிவரல் - உவகைக்கண்ணீர் வருதல்; ஒடுக்கி - மறைத்து.
15. இறைஞ்சினள் - கவிழ்ந்தனள்.
16. எவ்வம் - துன்பம்; இவண் - இங்கே.

தலைவி கூற்று

குறுந்தொகை 13 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன், தோழியிற்கூட்டம் கூடி ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தோழியின் துணைபெற்றுத் தலைவியோடு தலைவன் கூடினான். பின்பு, அவன் பிரியவே தலைவி வருந்தினாள். அதனால் அவள் உடல் வேறு பாடுற்றது. அதனைக் கண்டு வினவிய தோழிக்குத் தலைவி, 'தலைவனது பிரிவால் என் உள்ளம், நோய் கொண்டது; கண்கள், பசலை அடைந்தன' என்று தன் ஆற்றாமையைக் கூறினாள்.

மாசுஅறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருதலை சேக்கும் நாடன்
நோய்தந் தனனே தோழி!
பசலை ஆர்ந்தன குவளைஅம் கண்ணே.

தெளிவுரை

"தோழி! உடலில் படிந்துள்ள தூசி முற்றிலும் நீங்கும் படியாகப் பாகனால் கழுவப்பட்ட யானையைப் போல, பெருமழை பெய்ததால் கழுவப்பட்ட பெரிய சொரசொரப்பான உருண்டைக்கல், பசுமை தவழும் காட்டின் ஒரு பக்கத்தே கிடக்கும். அத்தகைய மலை நாட்டுக்குரிய தலைவன் பிரிந்ததால் எனக்குக் காமநோயைத் தந்தான். அதனால், முன்பு குவளை போன்றிருந்த என் அழகிய கண்கள் இப்போது பசலை நிறத்தைப் பெற்றுவிட்டன."

கருத்து

'என்னோடு கூடிப் பிரிந்த மலைநாட்டுத் தலைவன் என் இயல்பான கண்ணழகைப் பசலையால் மறையச் செய்துவிட்டனன்' எனத் தலைவி வருந்திக் கூறினாள்.

குறிப்பு

'கல்லும் தன் மாசு நீங்கப்பெறும் நாட்டினைக் கொண்டவன், தலைவன்; ஆனால், அவனோ என் இயல்பான கண்ணழகைப் பசலை ஊர்ந்து மாசுபடச் செய்துவிட்டானே!' என்பது தலைவியின் ஏக்கம்.

சொற்பொருள்

1. மாசு - குற்றம்; கழீஇய - கழுவப்பெற்ற.
2. பெயல் - மழை; உழந்த - கழுவிய; பிணர் - சருச்சரை, சொரசொரப்பு; துறுகல் - உருண்டைக்கல்.
3. பைதல் - குளிர்ச்சி (யினைக் கொண்ட); ஒருதலை - ஒரு பக்கம்; சேக்கும் - கிடக்கும்.
5. ஆர்ந்தன - பொருந்தின.

தலைவன் கூற்று

திருக்குறள் 1105 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கியிற்கூட்டத்தின் இறுதிக்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் எனத் தலைவியோடு கூட்டம் நிகழ்ந்த பின்பு தலைவிக்கு முதன்மைத் தோழியாய் இருப்பவளை இரந்து, குறையுற்று, அவள் வாயிலாகத் தலைவியைப் புணர்ந்த தலைவன், அப்புணர்ச்சியால் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கூறியது.

வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

தெளிவுரை

பூக்கள் நிறைந்த கூந்தலைக்கொண்ட இவள் தோள்கள், எந்தெந்தப் பொருள்களை விரும்புகின்றேனோ அந்தந்தப் பொருள்கள் தரும் இன்பத்தைத் தருகின்றன.

கருத்து

(நான் விரும்பும் பொருள் தரும்) இன்பத்தை என் தலைவியின் தோள்கள் தருகின்றன.

விளக்கம்

நான் விரும்பும் பொருள்கள் தரும் இன்பத்தை அப்படியே மலர்க்கூந்தலைக் கொண்டுள்ள இவள் தோள்களும் தருகின்றன.

குறிப்பு

இவள் தோள் உலகில் உள்ள இன்பங்களையெல்லாம் தருகின்றது. அது தாராத இன்பம் உலகில் இல்லவே இல்லை.

சொற்பொருள்

2. தோட்டார் - தோடு + ஆர் - பூக்கள் நிறைந்த (தோடு - பூ); கதுப்பினாள் தோள் - கூந்தலைக் கொண்டவள் தோள் (கதுப்பு - கூந்தல்)
1. வேட்ட பொழுதில் - விரும்பிய பொழுதில்; அவை அவை போலும் - அவ்வப் பொருள்களைப் போலவே இன்பம் செய்கின்றன.

தலைவன் கூற்று

திருக்குறள் 1106 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பாங்கியிற்கூட்டத்தின் இறுதிக்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியது முதன்மைத் தோழியாய் இருப்பவள் வாயிலாய்த் தலைவியைப் புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியால் ஏற்பட்ட மகிழ்ச்சி யினைக் கூறியது.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

தெளிவுரை

இவ்விளம்பெண்ணின் தோள்களைத் தழுவும் போதெல்லாம் என் உயிர் தளிர்க்கின்றது. இவள் தோள்கள் அமிழ்தினால் அமைக்கப்பெற்றுள்ளனவோ?

கருத்து

இவள் தோள்களைத் தழுவும்போதெல்லாம் என் உயிர் தளிர்க்கிறது.

விளக்கம்

தலைவியைப் பிரிந்திருக்கும்போதெல்லாம் தலைவனின் உடல் உயிரற்ற கூடாய் உலவுகிறது. தலைவியைக் கூடித் தழுவியதும் அவன் உடல் உயிர் பெற்றுத் தளிர்க்கிறது. ஆதலின் அவள் உடல் அமிழ்தம் எனப்பட்டது.

குறிப்பு

அமிழ்தம் சாவா மருந்து. அதனால் அதனை உண்டவர்க்கு இறப்பு இல்லை. தலைவியைத் தழுவுவதால் தன் உடல் உயிர் பெற்றுத் தளிர்க்கிறது என்று தலைவன் சொல்லுவதால், அமிழ்தத்தைத் தொட்டார்க்கும் சாவு இல்லை என அறிகிறோம்.

சொற்பொருள்

1. உறுதோறு - (நான் இவளைத்) தழுவும்போதெல்லாம்; உயிர் தளிர்ப்ப - என் உடல் உயிர் பெற்றுத் தழைக்குமாறு; தீண்டலால் - அவள் உடல் என்மேல் படுதலால்; பேதைக்கு - இவ்விளம் பெண்ணுக்கு.
2. தோள் - தோள்கள்; அமிழ்தின் இயன்றன - அமிழ்தினால் அமைக்கப் பெற்றுள்ளன.

தலைவன் கூற்று

கலித்தொகை 64 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அருமை செய்து அயர்த்த தலைமகன் வந்துழி, தலைமகள் எள்ளின இடத்து, தலைமகன் அவளோடு உறழ்ந்து கூறி நகையாடிக் கூட்டத்திற்கு உடம்படுவித்தது. (இதற்கு விதி 'உயர்மொழிக் குரிய உறழுங் கிளவி' என்பதனுள் 'தலைமகன் உயர்மொழிக்குத் தலைமகள் உறழ்ந்து கூறும்' என்றாம்.)

(உயர்மொழி ... கிளவி (தொல். 1184-1); உறழ்ந்து கூறுதல் - எதிராய்ச் சொல்லுதல் (எதிர் உரை). (இது தலைவன், தலைவி ஆகிய இருவர்க்கும் உண்டு.)

கூற்று விளக்கம்

தலைவனும் தலைவியும் களவில் கண்டு சில நாள் பழகினர். ஒரு சமயம், தலைவன் தொடர்ந்து சில நாள் வாராதிருந்தான். பின்னர் அவன் வந்தபொழுது தலைவி தன் வருத்தத்தைக் காட்ட, அவனைப் பாராதவள் போல் இருந்தாள். அது தீருமாறு தலைவன் நகைச்சுவைபட அவளுடன் உரையாடி, அவளுடன் காதலுறக் கலந்தது.

தலைவன்

அணிமுகம் மதிஏய்ப்ப, அம்மதியை நனிஏய்க்கும்
மணிமுகம், மாமழை,நின் பின்ஒப்ப, பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி
அரவுக்கண் அணிஉறழ் ஆரல்மீன் தகையொப்ப,
அரும்படர் கண்டாரைச் செய்தாங்கு இயலும்
விரிந்துஒலி கூந்தால்! கண்டை; எமக்குப்
பெரும்பொன் படுகுவை பண்டு.

தலைவி

ஏஎ! எல்லா, மொழிவது கண்டை, இஃதுஒத்தன்; தொய்யில்
எழுதி இறுத்த பெரும்பொன் படுகம்;
உழுவது உடையமோ யாம்?

தலைவன்

உழுதாய்!

கரும்புஇமிர் பூங்கோதை அந்நல்லாய்! யான்நின்
திருந்துஇழை மென்தோள் இழைத்தமற்று இஃதோ?
கரும்பெல்லாம் நின்உழவு அன்றோ? ஒருங்கே
துகளறு வாள்முகம் ஒப்ப மலர்ந்த
குவளையும் நின்உழ வன்றோ? இகலி
முகைமாறு கொள்ளும் எயிற்றாய்! இவையல்ல
என்உழுவாய் நீமற்று இனி?

தலைவி

எல்லா! நற்றோள் இழைத்த கரும்புக்கு நீகூறு,
முற்றெழில் நீல மலரென உற்ற,
இரும்புஈர் வடிஅன்ன, உண்கட்கும், எல்லாம்,
பெரும்பொன்உண்டு என்பாய் இனி.

தலைவன்

நல்லாய்! இகுளை! கேள்:
ஈங்கே தலைப்படுவன் – உண்டான் தலைப்பெயின்,
வேந்துகொண் டன்ன பல;

தலைவி

'ஆங்கு ஆக!' –

தலைவன்

'அத்திறம் அல்லாக்கால், வேங்கை வீ
முற்றுஎழில் கொண்ட சுணங்குஅணி பூண்ஆகம்
பொய்த்துஒருகால் எம்மை முயங்கினை சென்றீமோ
முத்துஏர் முறுவலாய்! நீபடும் பொன்எல்லாம்
முத்தி எறிந்து விடற்கு.'

தெளிவுரை

தலைவன் : தலைவியே! உன் அழகிய முகம் முழு நிலவைப் போல இருக்கிறது. நீலமணியைப் போலக் கருமையாய் உள்ள மேகத்தினைப் போல் உன் கூந்தல் உள்ளது. பின்னித் தொங்க விடப்பட்ட கூந்தல் கரும் பாம்புபோலக் காட்சி தருகிறது. நூலால் கட்டப்பட்டுக் கூந்தலில் சூட்டப்பட்ட மலர்கள் கார்த்திகை என்னும் விண்மீனைப் போன்று ஒளியுடையனவாய் விளங்குகின்றன. என்னை எள்ளி நகைப்பதைக் கைவிட்டுச் சற்று

ஆராய்ந்து சிந்தித்துப் பார்! முன்பு உன்னை நான் சந்தித்த பொழுது நீ என்னிடம் பொன் பெற்றுள்ளாய். ('என்னிடம் பொன் கடன் பெற்றவளன்றோ நீ' என்று நகைச்சுவை தோன்ற இரு பொருள்படும் சொற்களைக் கையாண்டு அவளுக்கு ஏற்பட்டிருந்த துன்பத்தினை நீக்க முற்பட்டான்.)

(தலைவன் பிரிந்து செல்லுமுன் தலைவியைப் பல முறையும் கூடி மகிழ்ந்ததால் தலைவி பொலிவு பெற்றிருந்தாள் என்பதை, 'எமக்குப் பெரும்பொன் படுகுவை பண்டு' என்று இருபொருள்படக் கூறினான். 'பொன்' என்னும் சொல்லுக்குத் தங்கம், பொலிவு என இருபொருள் உண்டு. 'படுகுவை' என்பது 'கடன்பட்டனை' என்னும் பொருளையும், 'பொலிவுற்றனை' என்னும் பொருளையும் தந்து நிற்கிறது. பொன் என்பது பொன்னிறப் பசலையையும் குறிக்கும். தலைவன் தலைவியைக் கூடியிருந்தபோது பொலிவுடன் விளங்கினாள் என்றும், அவனைப் பிரிந்தபோது ஒளி மங்கிப் பசலை படர்ந்து, பொலிவிழந்து காணப்பட்டாள் என்றும் கூறி, மீண்டும் தன்னுடன் கூடி மகிழ்ந்தால் பொலிவைப் பெற்றுவிடுவாள் என்றும் தலைவன் தலைவிக்கு உணர்த்தினான்.

தலைவி தன்னோடு கூடியதால் அவள் பொலிவு பெற்றாள் என்பதை, 'அவள் தன்னிடம் பொன் பெற்றுள்ளாள்' என்கிறான், தலைவன்.)

தலைவி, *'இப்படியும் ஒருவன் சொல்வதை இப்போதுதான் கேட்கிறேன். இவனால்தான் நான் புத்தழகு பெற்றேன் எனச் சொல்வதைப் பார்!' என்று தன்னுள் கூறிக்கொண்டாள். பின்னர்த் தலைவனிடம், " என் தோளில் தொய்யில் எழுதி, ஏதோ கனவுபோல, எப்பொழுதோ சிறிது நேரம் இருந்தாய். அந்த மகிழ்ச்சியால் பொலிவு பெற்றிருப்பேன். அதனைக் கூறுகிறாயா? அஃதன்றி உன் மார்பாகிய நிலத்தில், என் மார்பகங்களாகிய கலப்பையினால் நான் உழுதது உண்டா? (உன்னைத் தழுவினேனா?) தொய்யில் எழுதியதால் பொலிவு பெற்ற தோளை உன்னால் அழகு பெற்றது என்றா சொல்கிறாய்?" என்று கூறித் தலைவன் கூறியவற்றை மறுத்துரைத்தாள்.*

தலைவன் *(மறுத்துக் கூறிய தலைவியை நோக்கி,) "வண்டு பாடும் கண்ணியைச் சூடியவளே! நீ என்னைத் தழுவினாய்! நான்*

எழுதிய கரும்புச்சித்திரத்தால் ஏற்பட்ட உன் தோளின் புத்தழகு, என்னை நீ தழுவியமையால் வந்ததன்றோ? உன் ஒளிமுகமும், குவளை மலரனைய கண்ணும் புதுப்பொலிவு பெற்றது, நீ உழுததால் (தழுவியதால்) தானே! முல்லை மலருடன் போட்டியிடும் பல்வரிசை கொண்டவளே! இவையல்லாமல் இதற்கு மேல் நீ என்ன உழுதுவிடப்போகிறாய்?"

(" 'உழுதல்' என்னும் சொல் தலைவி தலைவனைத் தழுவக்கூடிய நிகழ்வை உணர்த்தும். புணர்ச்சி காரணமாய்த் தலைவியின் பொலிவு மிகுந்தது என்றும், கண்கள் சிவந்து அழகுற்றன" என்றும் தலைவன் தலைவிக்கு உணர்த்தினான்.)

தலைவி : "தோளில் எழுதிய கரும்பும், அத்தோளும் அழகு பெற்றதுபற்றி நீ கூறியது சரி. ஆனால், முழு அழகு வாய்ந்த நீல மலரை ஒத்த - வாளால் இரண்டாய் வகிரப்பட்ட மாவடுவைப் போன்ற - என் கண்கள் நீ வாராததால் ஒளி மங்கிப் பசலை படர்ந்து நீலமலர் போன்று விளங்குகின்றன. அப்பசலையும் நீ எனக்குக் கடனாய்க் கொடுத்த பொன் என்று சொன்னாலும் சொல்வாய். என் உறுப்புகள் யாவுமே, உன்னைக் கூடியபோது நீ எனக்களித்ததால் எழில் பெற்றன என்று கூறி என் இயற்கை எழிலை மறைக்க முயல்கிறாய்" என்று கூறி, தலைவன் பிரிந்து சென்றதால் தன் நலத்தைக் குறைத்துவிட்டான் என்று குறை கூறினாள்.

தலைவன் (அது கேட்டு, தலைவியை நோக்கி,) "என்மீது அன்பு கொண்டவளே! அரசனால் நியமிக்கப்பட்ட ஒருவன் அரசுப் பணியில் திறமையோடு செயற்பட்டால், அந்த அரசனின் செல்வத்தை நுகர்வதோடு அரசனின் அன்புக்குரியவனும் ஆவான். தன் செல்வத்தை நுகர்ந்தவனிடம் காணப்படும் திறமைகளை அந்த அரசன் பயன்படுத்திக்கொள்ளத் தவற மாட்டான். அதனால், விளையும் பல பயன்களையும் அரசன் பெறுவதுபோல, நான் இங்கே பெறுவேன்" என்றான்.

(தலைவனிடம் காதல் கொண்டு கூடி, எழில்நலம் பலவும் பெற்றவள், தலைவி. அத்தலைவியை விரைவில் மணம் கொண்டு அவளால் அடையக்கூடிய இன்பங்கள் பலவற்றையும் தலைவன் அடைவான் என்பது தலைவன் எண்ணம் என்பதை உணர்ந்தாள்.

அரசன், தன்னிடம் செல்வம் பெற்றவனை எப்படிப் பயன் படுத்திக் கொள்வானோ அதுபோலத் தலைவன் தலைவியைப் பயன்படுத்திக் கொள்வான் என்பது தலைவன் கூற்றிலுள்ள குறிப்பு.)

தலைவி *(அக்குறிப்பினை உணர்ந்துகொண்டு தலைவனிடம் கொண்டிருந்த வருத்தம் நீங்கப்பெற்று,) 'அவ்வாறே ஆகட்டும்' என்று கூறித் தன் உடன்பாட்டைத் தெரிவித்தாள்.*

தலைவன் : *முத்துப் போன்ற பற்களைக் கொண்டவளே! உன் சினம் நீங்கும்போது, உன் மேனியில் படர்ந்த பசலையெல்லாம் மீண்டும் தலைகாட்டாதபடி நீங்குவதற்கு, அணி புனைந்து வேங்கை மலரன்ன தேமலுடன் அழகாய் விளங்கும் உன் மேனியால் ஒரு முறை பொய்யாகவேனும் என்னைத் தழுவிச் செல்.*

(தலைவனிடம் தலைவி கடன்பட்ட பொன்னை - அஃதாவது, பசலை நிறத்தை - அவன் மார்பில் அவள் ஒற்றி நீக்குவாள். அதனால் அவள் பட்ட கடன் நீங்கும்.)

கருத்து

தலைவன் சிறிது காலம், தலைவிக்குத் தன்னை அரியனாக்கிக்கொள்ள எண்ணித் தலைவியைக் காண வாராமலிருந்தான். மீண்டும் அவன் தலைவியைக் காண வந்தபோது, தலைவி தலைவனை எள்ளி நகை யாடினாள். அவளுக்கு மறுமொழி தந்த தலைவனும் அவளொடு உறழ்ந்து, இருபொருள்படச் சொல்லாடி, நகைச்சுவை தோன்றப் பேசி, அவள் தன்னை விரும்பிக் கூடுமாறு செய்தான்.

சொற்பொருள்

1. நனி ஏய்க்கும் - மிகவும் ஒத்திருக்கும்.
2. மாமழை - கரிய மேகம்; பின் - பின்னிவிடப்பட்ட கூந்தல், பின்னல்.
3. ஈரிதழ் அலரி - ஈரமான இதழ்களைக்கொண்ட மலர்.
4. அரவு - பாம்பு; ஆரல் மீன் - கார்த்திகை மீன்.
5. படர் - துன்பம்; இயலும் - விளங்கும்.
6. கண்டை - காண், ஆராய்ந்து பார்.
7. பொன் - தங்கம், பொலிவு (இரு பொருள்); படுகுவை - கடன் பெற்றனை, பொலிவு பெற்றனை (இரு பொருள்).

10. உழுவது உடையமோ யாம்? - இடைவிடாது என் மார்பு உன் மார்பினை உழுத நல்வினை எனக்கு உண்டா?
12. சுரும்பு இமிர் - வண்டுகள் ஒலிக்கும்.
13. திருந்திழை - திருத்தமான அணிகலன்; இழைத்த - அணிந்த.
14. கரும்பு - தோளில் உள்ள கரும்பு உருவத் தொய்யில்; கரும்பெல்லாம் நின் உழவு அன்றோ? - இதோ என் தோளில் காணப்படும் கரும்பு உருவத் தொய்யிலெல்லாம் நீ இடைவிடாமல் தழுவியதனால் விளைந்தன அல்லவா? நீ இறுக்கமாய்த் தழுவும்போது உன் தோளில் இருந்த தொய்யில் என் தோளில் படிந்துவிட்டது.
15. வாள்முகம் - ஒளி மிக்க முகம்.
16. குவளையும் நின் உழவன்றோ? - உன் குவளையாகிய கண்ணும் திளைப்பால் மலர்ந்திருக்கிறது; இதுவும் என்னோடு நீ புணர்ந்ததால் ஏற்பட்டது அன்றோ?
17. முகைமாறு கொள்ளும் - முல்லை மலருடன் போட்டியிடும்; இவை அல்ல - இவை அல்லாமல்.
18. என் உழுவாய் நீ மற்று - இதற்குமேல் நீ என்ன புதிதாய் உழுதுவிடப் போகிறாய்; (இவை தவிர உன் பிற உறுப்புகள் பொலிவு பெற, நீ என்னைத் தழுவிக்கொள்.)
19. நற்றோள் இழைத்த கரும்புக்கு நீ கூறு - என் அழகிய தோளில் கரும்பு வடிவில் எழுதிய தொய்யில்பற்றி நீ சொல்வது சரிதான்.
21. இரும்பு ஈர் வடிவன்ன உண்கண் - இரும்பாலான அரிவாளால் வெட்டப்பெற்ற மாவடுபோல் விளங்குகின்ற கண் உன் (தலைவன்) பிரிவால் பசலை (பொன்னிறம்) ஊர்ந்துவிட்டது.
22. பெரும் பொன் உண்டு என்பாய் - பசலை பூத்ததைக்கூட உன்னோடு சேர்ந்தமையால் மிகுந்த பொன் விளைந்துவிட்டதாய்ச் சொல்லுவாய் போல் தோன்றுகிறது.
23. இகுளை - தோழி.
28. பொய்த்து ஒருகால் - பொய்யாகவாவது ஒரு தடவை.
29. நீ படும் பொன்னெல்லாம் - நீ கொண்டுள்ள பசலையெல்லாம், நீ கொண்ட கடன் (பொன்) எல்லாம்.
30. முத்தி - கடன் நிறைவேறி; முத்துதல் - கடனை நிறைவேற்றுதல்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல்களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
8183 797672

Vol-1
ISBN: 978-81-8379-768-9
9 788183 797689

விலை ரூ. 720